# அனுமந்த மகரந்தம்



# HANUMANTHA MAHARANTHAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிம்பஸ்தாபனத்தன்று .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமந்த மகரந்தம்

*ரம்பொடை வெவண்டன் மலையுறை*

## அருள்மிகு ஸ்ரீ பக்த அனுமன் ஆலய
## மஹா கும்பாபிஷேக
## சிறப்பு மலர்

கொழும்புத் தமிழ் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/திருமதி/செல்வி
ஓர் அன்பர்
அவர்கள் நன்கொடையாக அளித்தது
திகதி 20/02/2017

இஃது
உலகச் சின்மய இயக்க ஆன்மீகத் தலைவர்
தவத்திரு பூஜ்ய குருஜி
சுவாமி தேஜோமயானந்தா
அவர்களினால் மேற்படி ஆலய
மஹா கும்பாபிஷேகத் தினமான
08.04.2001
அன்று வெளியிட்டு வைக்கப்பெற்றது.

*வெளியீடு :*
இலங்கை சின்மய மிஷன்

*21/1, டி கிரெட்சர் பிளேஸ்,*
*கொழும்பு – 04,*
*இலங்கை.*

*ஸ்ரீ பக்த அனுமன் ஆலயம்,*
*வெவண்டன் மலை, ரம்பொடை,*
*இலங்கை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HANUMANTHA MAHARANTHAM

## Special Souvenir

issued to commemorate the

**MAHA KUMBHABISHEKAM**

**of Rambodha Sri Baktha Hanuman Temple**

*Released by*

Param Pujya Guruji

***H. H. Swami Tejomayananda***

*(Head, Chinmaya Mission - Worldwide)*

on the holy occasion of the above

**Maha Kumbhabishekam**

**held on 8th April, 2001**

at Rambodha


*Published By:*

*Publication Division*

***The Chinmaya Mission of Sri Lanka***

21/1, De Kretser Place

Colombo - 04, Sri Lanka

T. P. : 586618

Fax : 074-519530

E-mail : cmsl@sol.lk.

Internet : www. bhaktahanuman.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குருதேவர் சுவாமி சின்மயானந்தா இமய மலைச்சாரலிலுள்ள சித்தபாரி ஆச்சிரமத்தில் நிறுவியுள்ள பிரம்மாண்டமான ஆஞ்சநேயரின் திருவுருவை, 1996 ல் அங்கு சென்ற இலங்கை சின்மய மிஷன் உறுப்பினர்கள் தரிசித்துப் பக்திப் பரவசமெய்தினர். அவர்களின் எண்ணத்தில் அப்போது உதித்த கரு – இவ்வளவு விரைவாக ஸ்ரீ பக்த அனுமன் ஆலயமாக உருப் பெற்று விட்டமை ஒவ்வொருவருக்கும் பெருமிதமும் பேரானந்தமும் தருகின்ற விடயமாகும்!

இலங்கையிலே ஆஞ்சநேயப் பெருமானுக்கென எழுந்த பெருங்கோவில் இது. இதிகாசப் பெருமை கொண்ட வெவண்டன் மலை, தனது புனிதத்தையும் பொலிவையும் மீண்டும் பெற்று, ஆன்மீக அருள் பரப்பும் நிலையமாக விளங்குகின்றது.

அனைத்துத் தெய்வங்களின் ஆற்றல்களையும் பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள ஆஞ்சநேயப் பெருமான், உளப்பூர்வமாக அவரைத்துதிக்கும் பக்தர்களுக்கு அருளை வாரிவழங்குவதில் பெரும் வள்ளல் என்பது அடியார்களின் அனுபவ உண்மை.

பெருமானின் குடமுழுக்குப் பெரு விழா நடைபெறும் இப்புனித நாளில் மலருகின்ற, இம்மலரில் அடங்கியுள்ள ஆலய வரலாறு, ஆஞ்சநேய வழிபாட்டுப்பெருமை, அருளாற்றல்கள், சிறப்புகள், இந்துப் பண்பாட்டின் மேன்மைகள் முதலியவற்றை விளக்கும் ஆய்வுக்கட்டுரைகள், அருள் மணமும் அறிவு மணமும் வீசுகின்றன.

இம்மலருக்குத் தேவையான ஆக்கங்களை எழுதி அனுப்பிய அறிஞர்களுக்கும், வாழ்த்துரைகள் வழங்கிய அருளாளர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கிய சுவாமி ஸ்ரீ தரானந்தாஜி அவர்களுக்கும், சின்மய மிஷன் நிர்வாகக் குழுவினருக்கும் நன்றி தெரிவித்து, குருஜி அவர்களின் அருளாசியுடன் , எல்லாம் வல்ல பெருமானின் திருப்பாதங்களில் இம்மலரை மிக்க மகிழ்ச்சியுடனும் பணிவுடனும் சமர்ப்பிக்கின்றோம். வாசகர்கள் இதனைப் பெருமானின் பிரசாதமாகக் கருதி பெற்றுப் பயன் பெறுவரென நம்புகிறோம்.

வணக்கம்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தியானேஸ்வரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீதா, லக்ஷ்மண சமேத கோதண்டராமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருதேவர் சுவாமி சின்மயானந்தர்
சின்மய இயக்க ஸ்தாபகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி தேஜோமயானந்தர்
உலகச் சின்மய மிஷன் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

# MESSAGE

From

*Param Pujya Guruji*

***H. H. Swami Tejomayananda***

*Head - Chinmaya Mission - Worldwide*

It is most heartening that Chinmaya Mission of Sri Lanka has completed the construction of Shri Bhakta Hanuman Temple at Ramboda in this Golden Jubliee year of Chinmaya Movement. Now the holy Kumbhabhishekam Ceremony will be performed on 8th of April, 2001 - on the auspicious day of Hanuman Jayanti. This indeed is a great achievement, made possible by hard work put in by all mission members blessed by the Lord and Pujya Gurudev. Hearty congratulations to one and all!

Shri Hanuman is the very embodiment of Knowledge, devotion, dispassion, humility and selfless service. As such, all those who worship Him are also blessed with those noble virtues to make their lives fulfilled. Such devotees bring joy and prosperity in the world around them.

May this Temple become a source of inspiring devotion, a seat of learning and a place of Selfless service to humanity. I invoke blessings of Lord Hanuman and Pujya Gurudev on all members of Chinmaya Mission, Sri Lanka.

*Jai Hanuman! Jai Gurudev!!*

March 2, 2001. ***Swami Tejomayananda***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின் வாழ்த்துச் செய்தி

சின்மயா மிஷன் (இலங்கைக் கிளை) மூலம் ரம்பொடையில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ பக்த ஆஞ்சநேய சுவாமி திருக்கோயிலின் கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

"கையில் எண்ணெயைப் பூசிக்கொண்டு பலாப்பழத்தை அறுத்தால், அதன் பிசின் கையில் ஒட்டாது. அவ்வாறே, இறை பக்தியை வளர்த்துக் கொண்டு விட்டால், கவலைகள் மனதை அண்டாது" என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

இறைபக்தியை வளர்த்துக் கொள்ள நமது முன்னோர்கள் ஆலயங்களை அமைத்து, அங்கு தினசரி, விசேஷ பூஜைகளுக்கும் ஏறபாடு செய்தனர். அந்த உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் இன்று எந்த ஒரு சிற்றூரிலும் கூட ஒரு கோயில் அமைந்திருப்பதைக் காணலாம்.

பக்தியும் தூய்மையுமே இறை வழிபாட்டின் அடிப்படை அம்சங்களாகும். "ஒருவன் பக்தியுடன் ஒரு இலை, பூ, கனி அல்லது சிறிது நீரைப் படைத்தாலும் போதும், நான் அதை மகிழ்ச்சியோடு ஏற்கிறேன்" என பகவான் கீதையில் கூறுவதை மனதில் கொள்ளல் அவசியம். நாம் இறைவனுக்கு எதைப் படைக்கிறோம் என்பதைவிட எப்படிப் படைக்கிறோம் என்பதே முக்கியம்.

ரம்பொடையில், ரம்மியமான இயற்கைச் சூழலில், அமைதி நிறைந்த குன்றில், ஸ்ரீ பக்த ஆஞ்சநேய சுவாமி கோயில் அமைந்துள்ளது. மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்யவும், தியானம் செய்வதற்கும் மிக உகந்த இடம் இது. இக் கோயிலுக்குச் செல்வோர், இப்புனித இடத்தை மிக்க பயனுள்ள முறையில் அமைக்க, அமைதி காத்தல் அவசியம் எனக் கூறத் தேவையில்லை.

நமது சாஸ்திரங்களில் புதைந்திருக்கும் உயர்ந்த ஆன்மிக உண்மைகளை மக்களிடையே பரவச் செய்வதில் சின்மய மிஷன் ஆற்றிவரும் சேவை மிகவும் போற்றத்தக்கது என்பதில் ஐயமில்லை. இக்கருத்துக்களைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கவும், சாதனைகளில் ஈடுபடவும், இந்த ஆஞ்சநேயர் கோயிலுக்கு அருகில் சில தங்குமிடங்களையும் அவர்கள் அமைக்க உள்ளனர். ஆன்மிக சாதகர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

மிகுந்த பிரயாசையுடன் இக்கோயிலை அமைத்ததோடல்லாமல் பின்னர் சில குடில்களையும் அமைக்க உள்ள சின்மயா மிஷன் அங்கத்தவர்கள் அனைவரும் பகவானது திருவருளுக்குப் பாத்திரமானவர்கள். அவர்களுக்கு எங்கள் இதயபூர்வ நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆஞ்சநேயப் பெருமானது திருவருளைப் பிரார்த்திப்போமாக!

சுவாமி ஆத்மகனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஆஞ்சநேயர் துணை

# ரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் ஆலய மகா கும்பாபிஷேகப் பிரதமகுரு 'பிரதிஷ்டா சிரோன்மணி', 'கிரியா கிரமஜோதி', 'சுவானுபூதி', 'சிவாச்சார்ய துரந்தரர்' நவாலியூர் சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி

ஆஞ்சநேயர் அன்பின் வடிவம், அருளின் வடிவம், தொண்டின் வடிவம், மிகப் பழைமையான காலத்திலிருந்தே இவர் போற்றி வழிபடப்பட்டு வருகின்றார். தேவலோகாதிபதி இந்திரன் மனைவி இந்திராணி ஒரு சமயம் ஆஞ்சநேயரை வழிபட்டுப் பெரும் பேறுபெற்றதாக இருக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே வேத காலத்திலேயே ஆஞ்சநேயர் வழிபடப்பட்டிருக்கின்றார். தென்னிந்தியாவில் பல இடங்களிலும் ஆஞ்சநேயர் ஆலயம் இருப்பதைப் காணலாம். மேலும் அங்கு ஆஞ்சநேய ஜெயந்தி விழாவை ஸ்ரீ இராம நவமியன்று தொடங்கி ஒரு வாரத்திற்கு கொண்டாடி அன்னதானமும் வழங்கி வழிபடுவார்கள். ஆஞ்சநேயர் அருணோதய வேளையில் சூரியனுடைய பொன்னிறக் கிரணங்கள் ஆகாயத்தில் பரவும் சமயம் பறவைகள் இனிமையாகக் கூவி மனிதர்களைத் துயில் எழுப்பும் வேளை பிறந்தார். அதனால் அதிகாலையில் நாமும் ஸ்நானம் செய்து சுத்தமான உடை உடுத்தி அனுதினமும் வழிபட்டு வந்தால் அவரது அனுக்கிரகத்தைப் பெறலாம்.

அது மட்டுமல்லாது ஆஞ்சநேயர் எப்போதும் ராம தியானத்தில் இருப்பவர். அவரைத் தியானத்திலிருந்து கலைப்பது கஷ்டம். ஆகவே நாமும் ராம நாம ஜெபஞ் செய்தால் எங்கோ ராம நாமம் கேட்கிறதே என்று அவர் நினைவு இவ்வுலகம் பற்றி வரும். அந்த ராம ஜபத்துடன் அவருக்கு வடை மாலை சாத்த வேண்டும். ஆஞ்சநேயருக்கு வெண்ணெயும் வெற்றிலை மாலையும் சாத்தி வழிபடுவது மிகவும் விஷேசமாகும். இத்தனை சிறப்புக்கள் பொருந்திய அந்த ஆஞ்சநேயப் பெருமான் எமது இலங்கைத் திருநாட்டிலும் மத்திய மாகாணத்தின் உச்சியில் றம்பொடை வெவண்டன் மலையில் புதிதாக அமைந்துள்ள ஆலயத்தில் ஸ்ரீபக்த அனுமனாக விளங்குகின்றார். இப் பெருமானுக்கு விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 26ம் திகதி (08.04.2001) ஞாயிற்றுக்கிழமை மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஆஞ்சநேயரது அனுக்கிரகம் அகில உலகமெங்கும் வாழும் அனைத்து மக்களுக்கும் அமைதி, சாந்தி, சமாதானம் கிடைக்க ஆஞ்சநேயரது பாதக் கமலங்களை வணங்கி ஆசி வழங்குகின்றேன்.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'

சாமி விஸ்வநாதக் குருக்கள்
(நவாலியூர் – கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சின்மய மிஷன் தலைவர்
## திரு. தெ. ஈஸ்வரன்
## அவர்களின் செய்தி

ரம்பொடை வெவண்டன் மலையில் அனுமன் கோவில் கொண்டது பெருங்கதை. அனுமனுக்கு கோவில் கட்ட எண்ணிய பொழுது பல தடைகள் வந்தன. எண்ணங்கள் பல மனித மனத்தில் அலைபோல் உற்பத்தி ஆகின்றன. எல்லா எண்ணங்களும் நிறைவேறுவது இல்லை. எல்லாம்வல்ல இறைவன் எதை நடத்த வேண்டுமென்று நினைக்கின்றானோ அது மாத்திரமே நிறைவேறுகிறது. அவன் நினைத்து விட்டால் மலைபோன்ற தடையும் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விடுகிறது.

இந்தக் கோவில் எண்ணங்களில் உருப்பெறும் பொழுது இலங்கை சின்மய மிஷனுக்கு இருந்த வருட வருமானம் ஒரு லட்சம் மாத்திரமே. என்ன இது இதை வைத்துக் கொண்டு பல கோடி ரூபாவுக்கு கோவில் கட்ட முடியுமா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது. முதன் முறையாக எங்கள் குருஜி உலக சின்மய மிஷன் தலைவர் இலங்கை வந்தார். அவர் முன் அனுமனுக்கு கோவில் அமைக்கும் கருத்து வைக்கப்பட்டது. "அனுமனுக்கு ஆலயம் அமையுங்கள் அனைத்து வசதிகளும் அமையும்" என்று சுவாமி தேஜோமயானந்தர் ஆசீர் வதித்தார். அவர் அன்று தந்த ஆசியின் விளைவே இந்தக் கோவில். ஸ்ரீராம தொண்டனுக்கு தொண்டு செய்யும் வாய்ப்பினை தந்த அந்தப் பெருந்தகையின் தாள் பணிகின்றோம்.

வந்த தடங்கல்கள்தான் எத்தனை. ஒரு தடவை கட்டட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. நிந்தனைகள், நிதியின்மை, எத்தனையோ இன்னல்கள், மானிடனே உன்னால்தான் எல்லாம் நடக்கிறது என்று நினைத்தனையோ" என்று அனுமன் கேட்டான். "அவனின்றி அணுவும் அசையாது" என்பார்கள். "எல்லாம் அவன் செயல்" என்று சொல்வார்கள். நம்மில் எத்தனை பேர் இதை முழுமையாக நம்பிச் செயல்படுகிறோம். இந்த உண்மையைப் பரிபூரணமாக அனுமன் உணர்த்தினான். அனுமன் தன் கோவிலைத் தானே கட்டிக் கொண்டான்.

இந்தப் புண்ணிய கைங்கரியத்தை நிறைவேற்ற தோள் கொடுத்தவர்கள் ஆயிரக்கணக்கானோர். ஐயா உங்கள் எல்லோரினதும் தாள் பணிகின்றேன்.

சஞ்சீவ மலையைத் தகர்த்துக் கொணர்ந்த அனுமனுக்குச் செய்ய முடியாததை செய்பவன் என்று பெயர். இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் முக்கியமாக அயலில் இருக்கும் மலையக மக்களுக்கு கல்வியையும், செல்வத்தையும், செழிப்பையும் எல்லாவற்றிற்கும் மேலாக நிலையான அமைதியையும் தருவான் அவன் என்பதில் சந்தேகமில்லை.

அஞ்சனை மைந்தனுக்கு இன்று கும்பாபிஷேகம், இந்த வாயுபுத்திரன் கோவில் எதிர்காலச் சந்ததியினருக்கு இன்றைய சந்ததியினர் எடுத்துக் கொண்ட காப்புறுதி.

*ஜெய் அனுமன்*

தெ. ஈஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரம்பொடை ஸ்ரீ பக்த அனுமன் ஆலயக் கட்டடத் திருப்பணிக் குழுவின் தலைவர் திரு. பொ. பாலசுந்தரம் அவர்களின் செய்தி

ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் ஆலயக் கட்டடத் திருப்பணிகளில் முக்கியமானவை நிறைவேற்றப் பெற்று, திருக் குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவது எமது நாட்டின் ஆன்மீக நாட்டமுள்ள அடியார்களுக்கு பெருமகிழ்ச்சி தருகின்ற நிகழ்ச்சியாகும்.

கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகப் பெருமானின் பணிகளில் ஈடுபட்டிருந்த என்னை, தனது திருப்பணியிலும் ஈடுபட வைத்த ஆஞ்சநேயப் பெருமானின் திருவருளை நினைந்து வியக்கின்றேன்.

குருஜி அவர்களின் ஆசீர்வாதமும், வழிகாட்டல்களும், திருப்பணிக் குழுவினரின் அயராத முயற்சிகளும், பொதுமக்களின் ஆதரவுமே விரைவாகத் திருப்பணி வேலைகளை முடிப்பதற்கு துணை நின்றன.

ஸ்ரீ பக்த அனுமன் நாட்டில் சமாதானம், இனங்களுக்கிடையில் ஒற்றுமை, எல்லோருக்கும் சுபீட்சமான வாழ்க்கை, மன அமைதி, நாட்டில் செழிப்பு அனைத்தையும் ஏற்படுத்தி அருள வேண்டுமென இப்புனித நாளில் பிரார்த்திப்போமாக.

பொ. பாலசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை சின்மய மிஷன்
## பொதுச் செயலாளர்
## திரு. கே. வி. சோமசுந்தரம்
## அவர்களின் செய்தி

குருதேவர் சின்மயானந்தர், இமய மலைச் சாரலில் உள்ள சித்தபாரியில் நிறுவியுள்ள சாந்தீபனி போன்று 'லங்கா சாந்தீபனியை வெவண்டன் மலையில் நிறுவ வேண்டுமென விரும்பினார். அதற்காக இலங்கை சின்மய மிஷன் ரம்பொடையில் 10 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்வதற்கு அருளாசி புரிந்தார்.

அந்த மகானின் எண்ணம் நிறைவேறுவதற்கு முன்னோடியாக ஸ்ரீ பக்த அனுமனின் ஆலயம் இப்போது உருவாகிவிட்டது. திருவருளோடு இப்பெரும் பணியின் பின்னணியில் நின்று எமக்கு ஊக்கமும் உதவிகளும், வழி காட்டலும் வழங்கியவர் குருஜி அவர்களே.

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் அநேக ஆஞ்சநேய அடியார்கள் புரிந்த நிதி உதவி, நமது மிஷன் உறுப்பினர்களின் அயராத உழைப்பு, ஆலயத்தைச் சூழ வாழும் அன்பர்கள் காட்டிவரும் முழுமையான ஆதரவு முதலியவற்றை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

கட்டடக் கலைஞர் துரைராஜா, ஸ்தபதி முத்தையா, பொறியியலாளர் விஜேரத்தினா, வதிவிட சுவாமி, ஆலய அர்ச்சகர், கட்டிட மேஸ்திரி உமாபதி, நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளப் பெருமக்கள் உட்பட பெரியார்கள் தொண்டர்கள் யாவருக்கும் எமது நன்றி.

பெருமானின் கும்பாபிஷேகம் நடைபெறும் இவ்வேளையிலே இதன் சிறப்புக்குப் பல வகைகளில் உதவிய பெருமக்களையும் உழைத்த தொண்டர்களையும் நினைவு கூர்ந்து, அவர்களுக்குப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கே. வி. சோமசந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Chinmaya Mission of Sri lanka*
## *Executive Committee - 1999/2000*

*CCMT Representatives* : H. H. Swami Sreedharananda
Br. Ramana Chaitanya

| | | |
|---|---|---|
| President | : | Sri D. Eassuwaren |
| Vice President | : | Sri P. Balasundaram |
| General Secretary | : | Sri K. V. Somasundaram |
| Asst. Secretary | : | Smt. Mala Sabaratnam |
| Treasurer | : | Sri S. Sockalingam |
| Asst. Treasurer | : | Sri V. Kasilingam |
| Members | : | Smt. Sunita Jiwatram |
| | | Sri N. Somakanthan |
| | | Sri S. Mahenthiran |
| | | Smt. Sugirtha David |

Co. opted Members : Smt. Madhuri Mody
*Coordinator - Mission Centre Committee*
Sri. S. Suriyadeva
*Co-ordinator - Temple Committee*
Sri D. Veerabahu
*Co-ordinator - Temple Constructions*
Sri P. Vimalendren - Co-ordinator
*Major Festival Arrangements.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TEMPLE CONSTRUCTION COMMITTEE

| | |
|---|---|
| Chairman | : Sri P. Balasundaram |
| Secretary | : Sri S. Suriyadeva |
| Co-ordinator<br>*(Rituals & Programmes)* | : Sri N. Somakandhan |
| Co-ordinator<br>*(Construction Project)* | : Sri D.Veerabahu |
| Co-ordinator<br>*(Major festival arrangements)* | : Sri P. Vimalendran. |
| Members | : Sri R. P. Sritharasingh<br>Sri N. Arumugam<br>Sri K. Sivadas<br>Sri S. Karuppiah<br>Sri V. Kasilingam<br><br>Smt. Mala Sabaratnam<br>Smt. Padma Somakandhan<br>Smt. Sunita Jiwatram<br>Smt. Sugirtha David<br>Sri T. Marimuttu Chettiyar<br>Sri S. Muththiah<br>Sri M. Sathyamoorthy<br>Sri M. Logeswaran<br>Sri P. Rajendran |
| Ex. officio Members | : President, Secretary, Treasurer and Resident Acharyas. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Maha Kumbabishekam Organizing Committee

| | | |
|---|---|---|
| Chairman | : | Sri D. Eassuwaren |
| Dy. Chairmen | : | Sri P. Balasundaram |
| | | Sri K.V. Somasundaram |
| Secretary | : | Sri N. Somakandhan |

**Members :**

Sri S. Suriyadeva
Sri D.Veerabahu
Sri R.P. Sritharasingh
Sri K. Sivadas
Sri M. Segar
Sri S. Muththiah - Kandy
Sri P. Balasubramaniam - Kandy
Sri M. Sathyamoorthy - Digana
Sri M. Logeswaran - Pusellawa
Sri K. Chandrakumar - Ramboda
Sri G. Mahendran - Katukitulla
Sri S. Elangovan - Glenloch
Sri K. Ketheeswaran
Sri Henry Wickramasinghe
Sri S. Chandrasekar
Sri N.R. Rajagopalan
Smt. Mala Sabaratnam
Smt. Daya Mahinda
Smt. Madhuri Mody
Smt. Mangai Kandiah

Sri V. Kasilingam
Sri P. Vimalendran
Sri N. Arumugam
Sri S. Karuppiah
Sri T. Marimuttu Chettiyar-Matale
Sri K.V. Ramasamy - Kandy
Sri V. Shanthakumar-Peradeniya
Sri A. Chandraraja - Punduloya
Sri R. Ravichandran - Delta
Sri P. Rajendran - Pusellawa
Sri G. K. Rajendran - Helboda
Sri S. Shivarajah - Wattala
Sri K. Kamalasekaran
Sri S. Jeyakumar
Sri T. Sounderaj
Smt. Sunita Jivatram
Smt. Sugirtha David
Smt. Padma Somakandhan
Smt. Jayanthi Vinodhan

Ex. Officio Members : Resident Acharyas.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHINMAYA MISSION PLEDGE

We stand as one family
bound to each other with love and respect.

We serve as an army
courageous and disciplined
ever ready to fight against
all low tendencies and false values
within and without us.

We live honestly
the noble life of sacrifice and service
producing more than what we consume
and giving more than what we take.

We seek the Lord's grace
to keep us on the path of virtue,
courage and wisdom.

May Thy grace and blessings flow
through us to the world around us.

We believe that the service of our country
is the service of the Lord of Lords
and devotion to the people
is the devotion to the Supreme Self.

We know our responsibilities
give us the ability and courage to fulfil them.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **Hanuman The Ideal** | - | 01 |
| ஆலயம் உருவான கதை | – *தெ. ஈஸ்வரன்* | 03 |
| குருதேவரும் சின்மயானந்தரும் | | |
| இலங்கைத் திருநாடும் | – *பத்மா சோமகாந்தன்* | 07 |
| கூப்பிய கை | – *டாக்டர் திருமதி சக்திப் பெருமாள்* | 11 |
| அஷ்ட பலன்கள் அருளும் அனுமன் | – *கீதா தெய்வசிகாமணி* | 14 |
| தொண்டன் தலைவனானான் | – *ந. இராமலிங்கம்* | 17 |
| கவிக்கு நாயகன் | – *டாக்டர் சரஸ்வதி இராமநாதன்* | 20 |
| உயிர் காத்த தொண்டன் | – *முனைவர் பூ. சொல்விளங்கும் பெருமாள்* | 22 |
| யார் கொல் இச்சொல்லின் செல்வன் | – *வித்துவான் க. சொக்கலிங்கம்* | 25 |
| கம்பன் அனுமனைத் துதித்தது ஏன்? | – *மு. இராமசாமி* | 28 |
| அனுமன், தூதன், தொண்டன், தெய்வம் | | |
| எனும் பரிணாமம் பற்றிய சில இலக்கியச் | | |
| சிந்தனைகள் | – *வாகீசகலாநிதி, கனகசபாபதி நாகேஸ்வரன்* | 30 |
| கண்டேன் அனுமனை | – *திரு. க. சந்திரசேகரன்* | 40 |
| கோயிலும் குடமுழுக்கும் | – *கலாசூரி பேராசிரியர் சி. தில்லைநாதன்* | 42 |
| ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கண்ட | | |
| இராமபிரான் | – *பேராசிரியர் வி. சிவசாமி* | 46 |
| மகா கும்பாபிஷேகக் கிரியைகள் | – *பிரம்மஸ்ரீ சோ. பாலசுப்பிரமணியக் குருக்கள்* | 51 |
| ஆலய வழிபாடு | – *திருமதி லலிதா நடராஜா* | 56 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆலய வழிபாடும் ஆத்மீக வழிபாடும் | – *திருமதி பார்பதி கண்மணிதாசன்* | 59 |
| மலையகத்தில் ஆன்மீகம் | – *தமிழ்மணி கே. வெள்ளைச்சாமி* | 66 |
| கோயிற் கலைகள் | – *பேராசிரியர் அ. சண்முகதாஸ்* | 69 |
| இந்துமதம் அன்றும் இன்றும் | – *பேராசிரியர் க. அருணாசலம்* | 76 |
| இந்து சமயக் கல்வி மரபு | – *பேராசிரியர் சோ. சந்திரசேகரன்* | 85 |
| சமயமும் சமுதாயமும் | – *பேராசிரியர் சாரதா நம்பிஆரூரன்* | 87 |
| அனுமன் என்னும் அறிவுக்கடல் | – *எல். கே. சுபாஸ்சந்திரபோஸ்* | 89 |
| பக்தி போகிற பாதை | – *தென்கச்சி சுவாமிநாதன்* | 91 |
| பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க | – *மு. பாரிவள்ளல்* | 93 |
| விநாயகர் அகவல் | – | 94 |
| ஸ்ரீ குரு ஸ்தோத்திரம் | – | 95 |
| ஸ்ரீ லிங்காஷ்டகம் | – | 96 |
| ஸ்ரீராம ஸ்தோத்திரம் | – | 97 |
| ஸ்ரீ ஆஞ்சநேய நாமாவளிகள் | – | 98 |
| ரம்பொடை பக்த ஆஞ்சநேயர் புகழ்மாலை | – | 99 |
| மங்கள ஸ்லோகங்களும் சாந்தி பாடல்களும் | - | 100 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# HANUMAN, THE IDEAL

Living in this world, it is almost an impossibile task for any individual to lead a life that is above criticism-just or unjust. If we study the great epic, the Ramayana, we find that even Bhagavan Rama could not escape criticism, though unjust, from his own subjects. The only person in the Ramayana who succeeded in accomplishing this difficult task is Veer Hanuman-the greatest devotee of the Lord. We do not find even a single incident wherein Hanuman has made any mistake and got blamed for it. He is the very embodiment of wisdom, devotion and service. This noble son of Vayu and Anjana has innumerable virtues, and it is just not possible to do full justice to his great, grand personality in the short space of an article. However, we shall deal with a few aspects of his noble character.

We all very easily recognise the importance and the services of the Sun because it is not available to us all the time. But Vayu, the wind, remains with us all 24 hours, serving all beings without any desire for recognition and appreciation of its services. That is why we take its existence for granted, without paying much attention to it. Hanuman has imbibed from his father Vayu this rare and noble virtue of serving all without a trace of pride in the heart. He crossed the ocean, entered the formidable Lanka and burnt it, discovered Mother Sita, killed the Rakshasa forces of Ravana and served Lord Rama in such numerous ways that the Lord Himself felt overwhelmed with extreme love and gratitude for Hanuman and he gave expression to his feelings as well. But on hearing his own praise, the true devotee, Hanuman, fell at the feet of the Lord with tears in his eyes, giving all credit for his achievements to Bhagawan Rama alone. What a noble and inspiring ideal of service with utmost humility!

It is generally advised to all of us that we should imbibe from Hanuman's character this rare quality of serving our master with unswerving faith and devotion. But little do we realise that before doing so it is of extreme importance to know who should really be our Master. He who is the Lord of the total universe and in serving whom our potential divinity comes to shine forth, He alone can be our true Master. This truth is seen revealed in the life of Hanuman. Before meeting Sri Rama he was in the services of Sugriva but his powers remained dormant all the time and Sugriva was not able to bring them out as Lord Rama did by his sheer Grace. We see that Sugriva himself was fraught with mortal fear of death at the hands of his own brother Vali, and was depending



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

on Hanuman for his own protection. How could such a person ever be true Master of anyone? On the other hand when Hanuman saw Sri Rama for the very first time he recognised his Master immediately and, there after, not only himself became His loyal and devoted servant but also made Sugriva follow his example. Sugriva did follow it and got the good fruit as well soon after he surrendered himself at the lotus feet of Bhagavan Rama. There in Lanka also the Rakshasi Lankini and Vibhishana were serving Ravaṇa - the mighty but atrocious king under the same notion that they should serve their Master whoever he may be. It is only Hanuman who made them realise their mistake, after recognising which they both became devotees of Lord Sri Rama. Thus we see that neither a weakling like Sugriva nor a mighty person like Ravana can ever be a true master. Sri Rama alone can be that Master who is great not because he keeps all beings under His control like Ravana but because he makes his devotees even greater than himself!

May we all come to recognise Bhagawan Sri Rama as our Master and serve Him in the attitude of His great devotee Veer Hanuman, ever revelling in singing the Holy Name of the Lord - Sri Rama, Jai Rama, Jai Jai Rama.

**-Br. Vivek Chaitanya.**

*Author of this article is now H.H. Swami Tejomayananda, Present Head of Chinmaya Mission World-wide. This article is reproduced from "Hanumat Vibhuti" Souvenir published during the Sacred anoinment of the Hanuman Murti in Siddhabari in 1983 - Ed.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் உருவான கதை

தெ. ஈஸ்வரன்

எப்படி அந்த நிகழ்ச்சியை மறக்க முடியும்? இப்போதுகூட எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. அது 1996 மே மாதம் 14ம் திகதி ...... அதிகாலை இரண்டுமணி. அந்த ஒடுக்கமான மலை ரோட்டில் நாம் பயணஞ் செய்த பஸ் வண்டி மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. ஒரே இருட்டு பாதைகளில் தெரு விளக்குகளே இல்லை. முடக்குகளில் கொஞ்சம் சரிந்தாலும் அந்த பஸ் வண்டியும் அதில் பயணஞ் செய்தவர்களும் அதல பாதாளத்துக்குள் விழவேண்டியதுதான்! முதல் நாள் அதிகாலை டெல்லியிலிருந்து புறப்பட்ட பயணம் அன்று இரவு எட்டு மணிக்கு முன்பு இமயமலை அடிவாரத்திலுள்ள சித்தபாரி ஆச்சிரமத்தைச் சென்றடைந்திருக்க வேண்டும். 20 மணித்தியாலமாகியும் இன்னும் இடத்தை அடைய முடியவில்லை. சாரதி சரியான பாதையைத் தவறவிட்டு விட்டதால், திக்குத்திசை தெரியாமல் அந்தப் பழைய பஸ் தடுமாறிக் கொண்டிருந்தது. அலுத்துக் களைத்துப் போய்ப் பலர் உறங்கிக் கொண்டிருந்தனர். நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்த எம்மில் சிலர் திக்குத் திக்கென்று இதயம் துடிக்க கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டிருந்தோம். விசாரிப்பதற்கு வழியில் ஆளரவமே இல்லை.

சித்தபாரி ஆச்சிரமத்தில் நடைபெற்ற ஆன்மீக ஏழுச்சி முகாமில் கலந்து கொள்வதற்காக இலங்கை சின்மய மிஷனைச் சேர்ந்த சுமார் 35 பேர் ஆண்களும் பெண்களுமாக அந்த பஸ்ஸில் சென்று கொண்டிருந்தோம்.

அந்த பஸ் வண்டியை ஏற்பாடு செய்து தந்த டெல்லியில் உள்ள பயண முகவர் – அது புது வண்டி, பஞ்ச கல்யாணிக் குதிரை போலப் பறக்கும் எனப் புழுகியிருந்தான். ஆனால் அது தெனாலிராமன் குதிரை என்பதைப் பின்னர்தான் உணர முடிந்தது.

ஒடுக்கமான மலைப் பாதையில் அந்தக் கசை இருட்டில் பிரகாசமில்லாத 'ஹெட்லாம்ப்' வெளிச்சத்தில் அந்த பஸ் ஊர்ந்து கொண்டிருந்தது. எமது பயணம் நீண்டு கொண்டிருந்தது. எந்த இடத்தில் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை அறிய வழியில் ஒரு பெயர்ப் பலகைகூட இல்லை. நிலமையைக் கிரகித்துக் கொண்ட எம்முடன் பயணஞ் செய்த பெண்மணி ஒருவர் எழுந்து வந்து, முன்வரிசை ஆசனத்தில் இருந்த என்னிடம் மெல்லிதாகக் கூறிவிட்டு, ஹனுமான் சாலிசாவைப் பாடத் துவங்கினார். ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றும் ஆபத்பாந்தவர் ஆஞ்சநேயர். திக்குத்திசை தெரியாமல் தட்டுத் தடுமாறு பவர்களுக்குக் கைக்கொடுத்துக் கரை சேர்ப்பவர் ஆஞ்சநேயர். மகான் துளசிதாசரின் அந்த ஆஞ்சநேயர் புகழ் மாலை எமது மனங்களுக்கு ஆறுதலை அளித்தது. உறக்கத்திலிருந்து பலரும் விழித்துக் கொண்டு பாடுவதில் இணைந்து கொண்டனர். சில மணிநேரம் கழிந்தது. என்ன ஆச்சரியம்! ஆச்சிரமத்துக்குச் செல்லும் வழி என ஒரு பெயர்ப்பலகை கைகாட்டியது! ஆச்சிரமத்தை அண்மித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி மனதில் கூத்தாடியது. ஆனால், அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அந்த வழியால் திரும்பியபோது மற்றொரு சோதனை! சில்லு உடைந்த லொறிவண்டி ஒன்று பாதையை அடைத்துக் கொண்டு படுத்துக் கிடந்தது. எமது பஸ் வண்டியைப் பின்னோக்கி 'றிவேர்சில்' எடுக்கலாமோ என்றால், அருகில் பள்ளத்தாக்கு ஆவென்று வாய் பிழந்து கிடந்தது. அந்த லொறியைத் தாண்டி முன்னுக்கும் செல்ல முடியாது. இரு கொள்ளிவாய்ப்பட்ட எறும்பாகத் துணுக்குற்று நின்றபோது எப்படி அந்த எண்ணம் உதித்ததோ? ஆண்கள் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கினோம். பனிக்குளிர் உடம்பை வெட வெடக்க வைத்தது. அந்தத் தைரியமும் வலிமையும் எமக்கு எப்படி வந்தது! 'ஜெய் ஆஞ்சநேயா!' என்ற கோஷம் எழுப்பியப்படி அந்த லொறி வண்டியைத் தூக்கி ஒரமாக ஒதுக்கிவைத்து, எமது வண்டி செல்வதற்கு வழி அமைத்தோம். ஆச்சிரம வாசலைச் சென்றடைந்த போது காலை 5 மணி. இருள் இலேசாக விலகிக் கொண்டிருந்தது. பஸ் வண்டியில் இருந்து இறங்கிய எம்மை முதலில் வரவேற்றவர் வேறு யாருமல்ல: எந்த இடர்வந்தாலும் களைவதற்கு நான் இருக்கிறேன் என உணர்த்துவது போல, கையில் கதாயுதத்தை ஏந்திய கம்பீரக் கோலத்தில், 30 அடி உயரத்தில் ஆச்சிரமத்தில் அமைக்கப் பெற்றிருந்த பிரம்மாண்டமான ஆஞ்சநேயர் சிலை எம்மை வரவேற்றது!

அப்பனே ஆஞ்சநேயா! உன் திருவருளுக்கு நிகர் ஏது?

எம்மை அறியாமலே அக்கணமே மனதில் ஒரு அரும்புமுளை கொண்டுவிட்டது!

ஆறு நாள் பயிற்சி முகாமில் தியானப் பயிற்சி, ஆன்மீக எழுச்சிக்கான உரைகள், கலந்துரையாடல்கள் என நாட்கள் கழிந்ததே தெரியவில்லை. ஆனால் அங்கு நின்றிருந்த நாட்களில், ஒவ்வொரு காலையிலும் அந்த ஆஞ்சநேயப் பெருமானுக்கு நடைபெற்ற பூஜையில் கலந்து கொள்வதும் அவரின் காலடியில் உட்கார்ந்து, அந்தப் பிரமாண்ட உருவத்தை அண்ணார்ந்து பார்த்து, அதில் மனதைப்பறி கொடுப்பதும் எமது வழக்கமாகி விட்டது. அது மனதுக்குப் புதிய தெம்பைக் கொடுத்தது.

அங்கு நீண்ட காலமாக வசித்து வரும் சில பெரியவர்களை, எம்மில் சிலர், இரவு நேரங்களில் சூழ்ந்து கொண்டு அச்சிலையின் விருத்தாந்தங்களை விசாரித்தோம்.

இயற்கை எழிலும், முகில்களால் சூழப்பெற்ற குளிர்மையும், அமைதியும் தவழும், அம்மலைப் பிரதேசத்தில், குருதேவர் சுவாமி சின்மயானந்தா அந்த ஆச்சிரமத்தை அமைத்த ஆரம்ப காலத்தில், வருணனும் வாயுவும் இணைந்து அடிக்கடி ஊழிக் கூத்தாடினராம். அப்பகுதி மலை ஜாதி மக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகினாராம். ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டை செய்வதற்கான கிரியைகள் 1982ல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் கூட, சீறியெழுந்த புயலும் மழையும் அம்மலையிலிருந்து பலரைத் தூக்கி வீசினவாம். குருதேவர் அவர்களோ எந்த எதிர்ப்பையும் கண்டு அஞ்சாத நெஞ்சுரம் மிக்கவர். பிரதிஷ்டை முடிந்த கையோடு, இயற்கையே பணிந்துவிட்டது! இன்றுவரை எவ்வித இன்னலும் அப்பகுதியை எட்டிக் கூடப் பார்ப்பதில்லை என அவர்கள் கூறிய போது.......

இனப் பகை , வன்முறை, போர், இரத்த ஆறு, உயிர் அழிவுகள் முதலியவற்றில் சிக்குண்டு, அமைதி இழந்து தவிக்கும் எமது நாட்டிற்கு ஐக்கியத்தையும், சாந்தியையும், சமாதானத்தையும், சுபிட்சத்தையும் அளிக்க வல்லவர் ஆஞ்சநேயப் பெருமானே என்ற எண்ணம் எமது மனதில் அழுத்தமாகப் பதிந்தது.

ரம்பொடை வெவண்டன் மலையில் ஆன்மீக நிலையம் அமைப்பதற்கென 1981ல் இலங்கை சின்மய மிஷன் 10 ஏக்கர் நிலத்தை அரசிடம் இருந்து கொள்வனவு செய்திருந்தது. ஆனால், அதில் எந்த முன் முயற்சியையும் எடுப்பதற்கான வேளை வெகுகாலமாகியும் வரவில்லை. அதில் சித்தபாரியில் அமைந்திருப்பது போன்றதொரு சிலையை அமைக்க வேண்டும் என்ற எண்ணக்கரு சித்தப்பாரியில் எமக்கு உதித்தது.

தாம் எந்தக் கோலத்தில் இருக்க வேண்டும்? எங்கு எப்போது எழுந்தருள வேண்டும். என்பதைத் தீர்மானிப்பவர் அவரே. நாமோ கனவு காணும் வெறும் மனிதர்களே. நாம் ஆசைப்படலாம்; தீர்மானிக்கும் சக்தி அவரன்றோ?

சித்தபாரியிலிருந்து கொழும்புக்குத் திரும்பும் வழியில் எம்மில் சிலர் சென்னையில் சில நாட்கள் தரித்திருந்தோம். புகழ்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்காநல்லூர் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அங்கு சென்றபோது, நாம் கைக்கூப்பித் தொழுவதற்கு முன்னரே, தாம் கைகூப்பித் தொழுது எம்மை வரவேற்று அருள் சொரியும் கோலத்தில் 32 அடி உயரத்தில் பெருமான் காட்சி அளித்துக் கொண்டு நின்ற பக்தித் திருக்கோலம் கண்டு உள்ளம் சிலிர்த்தது!

எல்லாத் துயர்களையும் அவர் காலடியில் வைத்துவிட்டு அருள் நிறைந்த உள்ளத்தினராக, அகத்தில் திருப்தியும் முகத்தில் மகிழ்ச்சியும் மலர ஆயிரம் ஆயிரம் பக்தர்கள் நாளிலும் பொழுதிலும் அங்கு குழுமுவது என்ன அற்புதம்!

சில காலத்துக்கு முன்புவரை சென்னையை ஒட்டிய ஒதுக்குப்புறமான பொட்டல் வெளியாக இருந்த அப்பகுதி, ஆஞ்சநேயர் கோவில் அமைக்கப்பெற்றபின், எண்ணற்ற சிறந்த குடிமனைகள், கடைகள் முதலியவற்றை அடக்கிய புகழ் பெற்ற பக்தித் திருத்தலமாக மாறியிருப்பது அவரின் அருட் திறத்தினாலன்றோ?

சுவாமியின் உட்பிரகாரத்தை நாம் வலம் வந்தபோது, வெவண்டன் மலையில், இவ்வாறான கோலத்தில் பெருமானுக்குக் கோவிலமைத்தால், நாடெங்கும் அருள் மாரி பொழியும் என்ற நம்பிக்கை வளர்ந்தது.

இலங்கைச் சின்மய மிஷன் செயற் குழுவில் இவ்விசயம் ஆலோசிக்கப் பெற்று போது, திட்டத்துக்குப் பெரும் ஆதரவு கிடைத்தது.

இலங்கைக்குத் தமது முதலாவது விஜயத்தை 1996ன் பிற்பகுதியில் மேற் கொண்டிருந்த உலகச் சின்மய மிஷன் தலைவர் குருஜி சுவாமி தேயோமயானந்தா அவர்கள், இடத்தை நேரில் தரிசித்து, திட்டத்துக்குத் தமது இணக்கத்தையும் ஆசியையும் அருளினார்கள்.

குருவருளும் திருவருளும் இணைந்து வழிநடத்த காரியங்கள் மளமளவென்று நிகழ்ந்தன! மலைக்குச் செல்வதற்கான பாதை போடப்பட்டது. ஆலயம் அமைய வேண்டிய நிலம் சமப்படுத்தப் பெற்றது. அதனைத் தொடர்ந்து சென்னை சின்மய மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி சுவபோத்சைதன்யர் (இப்போது சுவாமி மித்திரானந்தா) தலைமையில் நூற்றுக் கணக்கான பக்கத்தர்கள் ஹனுமான் சாலிசா பாராயணம் செய்து அப்பூமிக்குப் புனிதம் சேர்த்தனர். 27.4.97ல் நடைபெற்ற பூமி பூஜை நிகழ்ச்சியில் இலங்கை இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகணானந்தா அவர்கள் ஆலயத்துக்கான அடிக்கல் நாட்டினார். இவ்வைபவத்தில் சென்னை நங்காநல்லூர் தர்மகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாருமான ஸ்ரீரமணிஐயர் தமிழ் நாடு அரசின் ஆஸ்த்தான ஸ்தபதி பத்மஸ்ரீ கலைமாமணி ஸ்ரீ முத்தையா மற்றும் சமூக, அரசியல் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர். இரண்டாயிரத்துக் கூடுதலான பக்த்தர்களும் பங்குபற்றினர்.

ஸ்ரீ முத்தையா ஸ்தபதி ஆலயத்துக்கான வரைபடத்தைத் தயாரித்துத் தந்ததுடன் ஆலயத்தின் மூலமூர்த்தியாகிய ஸ்ரீ ஆஞ்யநேயர் விக்கிரகத்தையும் வடித்துத் தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

பல பெரியார்கள் புண்ணிய சீலர்களின் நன்கொடைகளினால் ஆலயக் கட்டடப்பணி வளர்ந்தது. மகாபலிபுரம் சொர்ணம் சிற்பக் கூடத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பத்ம பீடத்துடன் கூடிய 18 அடி உயரமான ஆஞ்யநேயர் விக்கிரகத்தை ரம்பொடைக்குக் கொண்டு செல்வதற்கு முன் கொட்டாஞ் சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய முன் வாசலில் சில மணி நேரம் தரிசனத்துக்கு வைத்த போது வாய்வழி செய்தி பரவி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வந்து தரிசித்தனர்.

25. 7. 99 அன்று ரம்பொடையில் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற விஷேட சமயக் கிரியைகளைத் தொடர்ந்து விஷேடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமைக்கப் பெற்ற தடாகத்தில் ஜலாதி வாசம், க்ஷீராதி வாசம், துளசி, வில்பபத்திரவாசம், புஷ்பாதி வாசம், தானியாதி வாசம் என்பவற்றில் சயனித்த கோலத்திலிருந்த ஆஞ்சநேயர் விக்கிரகத்தைத் தரிசிக்க 11.09.99 வரை நாளிலும் பொழுதிலும் தூர இடங்களில் இருந்து வந்து திரண்ட பக்தர்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாதது!

12. 9. 99 அன்று ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானை நிமிர்த்தி கர்ப்பக்கிரக நிலையத்தில் நிறுத்துவதற்கான உத்தாபன நிகழ்ச்சியைக் காண்பதற்குப் பல்லாயிரக் கணக்கில் குழுமிய அடியார் கூட்டத்தின் பக்தி வெள்ளத்தில் ரம்பொடை நகரே தோய்ந்து வழிந்தது! பக்தர்கள் எழுப்பிய அரோகரா! ஆஞ்சநேயா! கோஷம் விண்ணைத் தொட்டது. வானவர்கள்கூட இவ்வரிய காட்சியைக் கண்டு மகிழ்ந்து அங்கிருந்து பன்னீர் தெளித்து வாழ்த்தினர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் ஆஞ்சநேயப் பெருமானின் அடியார்கள் பலர் காட்டிய வள்ளன்மையினால் ஆலயக் கட்டடப் பணி படிப்படியாக முன்னேறியது. மனதில் சோர்வும், வேலைகளில் சுணக்கமும் ஏற்பட்ட வேளைகளில் குருஜி அளித்த உற்சாகமும் ஊக்குவிப்பும் இப்பணி நிறைவேற ஊக்க சக்தியாகப் பின்னணியில் நின்று எம்மை வழிநடத்தி இயக்கின. ஆலயத்துக்குக் கீழே அமைதியான தியான மண்டபம், உறுதியான கற்சுவர்கள், அதன் மீது கொங்கிறீட் கூரை கர்ப்பக்கிரகத்தின் மீது 29 அடி உயர அழகிய ஸ்தூபி, கருங்கல் பதித்த விசாலமான மண்டபத் தரை, வேலைப்பாடுகளமைந்த தேக்கு மரக் கதவுகள், ஆலயத்துள் அலங்கார விளக்குகள், செப்புத் திருவாசி, பரிவார மூர்த்திகளாகத் தியானேஸ்வரர் பளிங்குச் சிலை, சிவலிங்கம், சீதாலட்சுமண சமேத ஸ்ரீ ராமர் விக்கிரகங்கள், மலையடி வாரத்தில் ஸ்ரீவரதராஜ விநாயகருக்குத் தனிக்கோவில், மடப்பள்ளி, ஆலய அலுவலகம், நூல் விற்பனை நிலையம், அஞ்சல் நிலையம், முகாமையாளர் வதிவிடம், மலசலக் கூட வசதிகள் என்பன இதுவரை நிறை வேறியுள்ளன. ஆலயத்தைச் சூழ இன்னும் பல அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எமது ஆவல். ஆலய வளாகத்தில் அமைய வேண்டிய கட்டடங்களின் வரைபடத்தைத் தயாரித்து தந்துதவியுள்ள புகழ்பெற்ற கட்டடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா இப்பணிகளுக்கு எமக்கு வழிகாட்டி வருகின்றார்.

குடமுழுக்குப் பெருவிழாக் காணும் ஸ்ரீ பக்த அனுமனின் அருள் மாரியில் நனைந்து திழைத்து நாமனைவரும் நல்வாழ்வு பெறுவோமாக!

ஐயன் வந்து விட்டார்! ஆஞ்சநேயத் தெய்வம் இங்கு வந்துவிட்டார். எல்லோரின் வாழ்வும் இனிச் சிறக்கும். சாந்திக்கும், சமாதானத்துக்கும், சுபிட்சத்துக்குமான வழி பிறக்கும் என்ற உறுதியான உணர்வும் நம்பிக்கையும் அடியார்கள் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதேவரும் சின்மயானந்தரும் இலங்கைத் திருநாடும்

பத்மா சோமகாந்தன்

இந்து சமயம் அநாதியானது. எவரால் எப்போது தோற்றுவிக்கப்பட்ட தென்பதை எவரும் குறிப்பாகச் சொல்ல முடியாது. காலத்துக்குக்காலம் இந்து மதத்தில் பல ஞானிகளும் மகான்களும் தோன்றி இந்துமத தத்துவ சாஸ்திரங்களுக்கு விளக்கமும் தெளிவும் அளித்து அதனை ஓங்கச் செய்துள்ளனர்.

*"தெட்சணாமூர்த்தி சமாரம்பாம்*
*சங்கராச்சாரிய மத்தியமாம்*
*அஸ்மத் ஆச்சாரிய பரியந்தாம்*
*வந்தே குரு பரம்பராம்"*

பின்னர் தோன்றிய சமயங்கள் புராதன இந்து மதத்துக்கு மாறான கருத்துக்களை முன்வைத்து முனைப் பெடுத்தபோது அவற்றில் மக்கள் மயங்கித் தடுமாறியபோது சங்கராச்சாரியார் இந்து மதத்தின் உண்மைகளையும், மேன்மையையும் நிலைநாட்டிப் பாரதத்தில் பல பகுதிகளுக்கும் யாத்திரை மேற்கொண்டு பல ஆன்மீக மடங்களை நிறுவி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்து மத வளர்ச்சிப் பாதையில் அது மிகமுக்கியமான பங்களிப்பாகும். அவருக்குப் பின் வந்த பல ஞானியரும் அதனைத் தொடர்ந்த போதிலும் மேலைநாடுகளில் பிறமதத்தவர்களும் வியக்கும் வண்ணம் இந்து மதத்தின் மாண்பை விளக்கிப் புரியவைத்த பெருமை சுவாமி விவேகானந்தரைச் சாரும். விவேகானந்த ருக்குப் பிறகு, உலகெங்கணும் தனது நாவாலும் பேனாவாலும் இந்து சமய வேதாந்த உண்மைகளைப் பரப்பியவர் இருபதாம் நூற்றாண்டின் புகழ்பூத்த ஆத்மீக ஞானி சுவாமி சின்மையானந்தா அவர்களாவர்.

1916 ஆம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி தென்னிந்தியாவிலுள்ள கேரளத்தில் எர்ணா குளம் நகரில் செல்வமும் செல்வாக்கும், இறை பக்தியும் மிகுந்த குடும்பத்தில் சுவாமி சின்மயானந்தர் அவதரித்தார். அவர் பெற்றோர் இட்ட பெயர் பாலகிருஷ்ணன். சாதனைகள் புரிய வந்த குழந்தை என்பதனைத் தனது ஞான திருஷ்டியினால் உணர்ந்த, இறையனுபவமும் யோகவலிமையும் மிக்கவரான சட்டம்பிச் சுவாமிகள் குழந்தையைத் தூக்கி விளையாடி, ஸ்பரிச தீட்சையை குழந்தைப் பருவத்திலேயே அளித்துவிட்டார்!

23 வயதுக்குள் அறிவியல், அரசறிவியல் ஆகிய வற்றில் பட்டதாரியாகி, இலக்கியம், சட்டம் ஆகிய துறைகளில் எம். ஏ. பட்டங்கள் பெற்றுக்கொண்டபின், 'நேஷனல் ஹெரால்ட்' பத்திரிகாசிரியர் குழுவில் பணியாற்றினார். இந்திய விடுதலைப் போராட்டத்திலீடுபட்டமைக்காக இருட்டுச் சிறையில் சில காலம் அடைக்கப்பெற்றார். சிறை வாசத்தின்போது, கடுஞ் சுகவீன முற்றதால் வெளியே வந்தார். போதிய ஓய்வெடுத்து உடல்தேறியபின் பத்திரிகை யாளன் என்ற வகையில் பல இடங்களுக்கும் பயணம் மேற்கொண்டிருந்தார். இமாலயத்தில் யோகிகளின் வாழ்க்கையைப் பற்றிச் சுவாமி சிவானந்தர் எழுதிய கட்டுரை மனதைக் கவர்ந்தது மன அமைதி பெற முடியாமல் மக்கள் இருப்பதற்கான காரணம் என்ன? அதனைத் தேடி பாலகிருஷ்ணனின் மனமும் அலைந்தது.

ஒரு தடவை புகைவண்டியில் சென்று கொண்டிருந்தபோது திருவண்ணமலையில், தம்முடன் பயணித்தவர்கள் எழுந்து நின்று அந்த உயர்ந்த மலையைத் தரிசிக்க முண்டியடிப்பதை அவதானித்தார். அங்கே இறங்குமாறு அவரது உள்ளுணர்வு தூண்டியது. ரமணாச்சிரமத்தை நோக்கிக் கால்கள் நடைபோட்டன. அங்கே மகான் ரமணமகரிஷி கண்களை மூடி நிஷ்டை யிலிருந்தார். இவர் அவரை நெருங்கி அமர்ந்ததும் மகான் திடீரெனக் கண்களை விழித்து இவரை உற்றுப் பார்த்தார். இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் பொறிதட்டுவது போலிருந்தது. மகான் அருளியது நயன தீட்சையா? அப்போது அதை இவர் உணரவில்லை.

பல நூல்களைப் படித்து, ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபட்டதால், இந்து சாத்திரங்களை நன்கு கற்றுத் தெளிய வேண்டும் என்ற ஆர்வம் உந்தியது. இமயமலையில் வசிக்கும் சந்நியாசிகளின் வாழ்க்கையினாலும், செயற் பாடுகளினாலும் சமுதாயத்துக்கு ஏதாவது பலன் ஏற்படுகின்றதா? அதனை ஆராய்ந்து உள் இரகசியங்களை அம்பலப்படுத்த வேண்டு மென்ற ஆவலில் சுவாமி சிவானந்தரின் ஆசிரமம் அமைந்துள்ள ரிஷிகேஷம் சென்றார். அங்கு சுவாமிகள் ஆற்றிவரும் சமுதாய, ஆன்மீகப் பணிகள் அவரைக் கவர்ந்தன. 1949 செப்டம்பர் 25 மகாசிவராத்திரி அன்று சுவாமி சிவானந்தரிடம் சந்நியாச தீட்சையும் சுவாமி சின்மயானந்தா என்ற தீட்சா நாமமும் பெற்றுக் கொண்டார்.

இந்து சமய நூல்களை ஐயந்திரிபறக்கற்க வேண்டுமென்ற அக்கறையும் ஆவலும் கொண்டிருந்த சின்மயானந்தரை, அக்காலத்தில் மகா ஞானியாக விளங்கியவரும் இமயத்தின் குளிரில் உத்தரகாசியில் வசித்தவருமான தபோவனம் சுவாமிகளிடம் சுவாமி சிவானந்தர் அனுப்பிவைத்தார். அவருடன் தங்கியிருந்து தொண்டுகள் புரிந்து கற்க வேண்டிய அனைத்தையும் கற்றுத் தெளிந்து கொண்டார். சமயமோ தத்துவமோ மக்களின் வாழ்க்கைக்குப் பயன் தருவதாகவும் சமூகப் பயன் பாடுள்ளதாகவும் அமைய வேண்டு மென்ற உறுதியான எண்ணம் அவர் மனதில் உறைந்தது.

செத்த பிறகு சொர்க்கத்திலேதான் பேரானந்தம் பெறவேண்டுமென்பதில்லை. இல்லற வாழ்க்கையிலிருந்தபடியே கடமை களைப் புரிந்தபடி மனதில் ஆனந்தத்தைப் பெறலாம். அறிவையும் மனவலிமையையும் வாழ்கின்ற காலத்திலேயே அன்பையும் மன அமைதியுடனான ஆனந்தத்தையும் பெற மக்களுக்கு வழிகாட்டுவது வேதாந்தம். இதனை மக்களிடம் பரப்பும் உறுதியான நோக்கத்துடன் 1951ம் ஆண்டு மே மாதம் இமயமலையிலிருந்து கீழே இறங்கி, தமது இலட்சியப் பயணத்தைத் துவங்கினார்.

அந்நிய கலாசார மோகத்தில் மூழ்கியிருந்த மக்களிடம் ஆன்மீக விழிப்புணர்வையும், புராதன கலாசார மேன்மையையும் பரப்புவதற்காக – அதன் மூலம் இந்துமத மறுமலர்ச்சியை ஏற்படுத்து வதற்காக இந்துக்களை "இந்துக்களாக" ஆக்குவதற்காக இந்தியாவிலுள்ள நகரங்கள், கிராமங்கள் எனச் சென்று, தமது சிம்மக்குரலில் – பல எதிர்ப்புகளையும் முறியடித்து – அவர் புரிந்த பேருரைகள் புதிய விழிப்பை ஏற்படுத்தின. எதிர்த்தவர்கள்கூட அவரின் கருத்துக்களின் தெளிவைக் கண்டு தம்மையும் அவருடன் இணைத்துக் கொண்டனர்.

அவரின் உயர்ந்த தோற்றம், அறிவை உமிழும் கண்கள், நிமிர்ந்த நடை, அஞ்சா நெஞ்சம், கம்பீரமான குரல், ஆணித்தரமான கருத்துக்கள் யாவும் ராஜரிஷியாக மக்களை ஈர்த்தன. "சின்மய மிஷன்" என்ற அமைப்பும் உருவானது. 'தபோவன் பிரசாத்' என்ற சஞ்சிகையைத் தொடங்கி அதில் பல விளக்கங்களைத் தொடர்ந்து எழுதினார். இந்துமத அடிப்படைச் சாஸ்திர நூல்களான வேத உபநிஷதங்களுக்கு அவர் எழுதிய வியாக்கியானங்களுக்கு ஈடெதுவுமில்லை. கீதை வாழ்க்கையின் வழிகாட்டி என்பதை மக்களிடம் பரவச் செய்து நிறுவினார்.

இந்தியாவுக்கு வெளியே பல உலக நாடுகளிலும் அவர் கருத்துக்கள் பரவின. வெளிநாடுகளிலுள்ளவர்களின் அழைப்பை ஏற்று உலக நாடுகள் பலவற்றிலும் பல தடவைகள் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். அவரைத் தலை சிறந்த இந்து மகான் என உலகம் போற்றியது.

குருதேவரின் இலங்கைக்கான முதலாவது விஜயம் 1979ம் ஆண்டு ஜூன் மாதம் 25ந் திகதி அன்று நிகழ்ந்தது. கீதையின் 12ம் அத்தியாயமான பக்தியோகம் பற்றிப் 10 நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான யக்ஞம் நடத்தினார். இலங்கை அன்பர்களின் வேண்டுகோளின்படி அடுத் தடுத்த ஆண்டுகளில் வருடத்துக்கு ஒரு தடவையாவது இங்கு வந்து ஞான அறிவைப் பரப்பிய அந்தமகானின் ஞானயக் ஞங்கள் 1982க்குப் பின்னர் இலங்கையில் இடம் பெறவில்லை.

இலங்கை அன்பர்களின் கோரிக்கைக்கு இணங்கி இங்கு "இலங்கை சின்மய மிஷன்" கிளையை ஸ்தாபிப்பதற்கு ஆசியளித்தார்.

1980 ஜுன் 25ம் திகதி அன்று இலங்கை சின்மய மிஷன் தோற்றம் பெற்றது. அவரது இலங்கை விஜயத்தின் போது சில அன்பர்கள் அவரை நுவரெலியாவுக்கு அழைத்துச் சென்றனர். போகும் வழியில் ரம்பொடை என்ற சிற்றூரின் குளிர்மை, அதனைச் சுற்றியுள்ள பசுமை போர்த்த தேயிலைத் தோட்டங்கள், நெடிதுயர்ந்த மலைகள், அவற்றிலிருந்து பாய்ந்து குதிக்கும் நீர் வீழ்ச்சிகள் அவர் மனதைப் பெரிதும் கவர்ந்தன. வெவண்டன் குன்றை நிமிர்ந்து பார்த்தார். அங்கு ஏதோ ஒரு சக்தி இருப்பது போன்ற ஈர்ப்பு. அவர் இறையருள் பெற்ற மகா ஞானி அல்லவா? ஈர்ப்பின் காரணத்தைத் தனக்குள் விளங்கிக் கொண்ட அவர் அங்கே ஓர் ஆன்மீக நிலையம் அமைக்க வேண்டுமென விரும்பினார். அவரின் திருவுளப்படி இலங்கை சின்மய மிஷன் அரசிடமிருந்து வெவண்டன் மலையில் 10 ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்தது. "ராம்போத" என அக்காணிக்கு குருதேவர் நாமகரணமிட்டார்.

1982ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறுதியாகக் குருதேவர் இலங்கைக்கு வருகை புரிந்த நிகழ்ச்சிகள் மனதில் இன்றும் பசுமையாக மலர்கின்றன. கட்டு நாயக்க விமானத்தளத்தில் அவரை வரவேற்கவும் ஒரு வார காலம் அவரின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ளவும், நிகழ்ச்சிகளை நிறைவு செய்தபின் அவரை வழியனுப்பி வைக்கவும் எம்மில் சிலருக்கு வாய்ப்புக் கிடைத்தமை பெரும் பேறாகும்.

அம்முறை குருதேவரின் கீதை ஞானயக்ஞம்பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மாலையில் எட்டுத்தினங்கள் நடைபெற்றன. காலையில் கைவல்ய உபநிடதம் பற்றிய விளக்கவுரை. இரண்டிற்கும் மண்டபம் கொள்ளாத கூட்டம். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே தூர இடங்களில் உள்ளவர்கள்கூட வந்து குழுமிவிடுவார்கள். நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு ஐந்து நிமிடம் இருக்கும்போது– குருதேவர் மேடையில் ஏறி அமருவார். கப்சிப் என்ற அமைதி மண்டபம் எங்கும் நிலவும்!

குருதேவரின் தெய்வீகப் பொலிவான தோற்றம், அருட்பார்வை அருளும் தீட்சண்யம் மிக்க விழிகள், கேட்பவர்களின் புலன்கள் வேறு திசை செல்லாமல் சொல்லும் விஷயத்திலேயே ஊன்றிப் பதியுமாறான வெண்கலக் குரலின் கம்பீரம் – கருத்துக்களைத் தெளிவுற வெளிபடுத்தும் மொழிவளம், இடை இடையே தெறிக்கும் நகைச்சுவை – மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல, சிலைமாதிரி உட்கார்ந்து குருதேவரின் உரைகளைச் செவியுற்ற அந்த நாட்களை என்றுமே மறக்க முடியாது. சபையில் மூன்றில் ஒரு பகுதிக்கும் மேல் பிற மதத்தவர்களாயிருப்பர். ஊசி விழுந்தால் கூடக் கேட்கக் கூடியதான அமைதியில் குருதேவரின் சிம்மக்குரல் அலைஅலையாக மிதந்து வந்து உள்ளத்தை நிறைவிக்கும்.

குருதேவரின் அந்த விஜயத்தின் போது பிலியந்தலையிலுள்ள நிழல் கவிந்த பெருந்தோட்டப் பங்களா ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நாள் ஆன்மீக எழுச்சி முகாமில் பங்குபற்றுவதற்காக அதிகாலை 4 மணிக்கே குருதேவருடன் புறப்பட்டுச் சென்றிருந்தோம். மலைக்குன்றின் சாரலில் பெருவிருட்சமொன்றின் நிழலிலே குருதேவர் உட்கார்ந்திருந்தப்படி, எமது சந்தேகங்களுக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்த தோற்றம், குருந்தை மர நிழலிலே மாணிக்கவாசகருக்கு ஞானத்தை உபதேசித்தருளிய ஆதிகுரு தெட்சணாமூர்த்தியை நினைவூட்டியது. தான் காவியணிந்து துறவியாக மாறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தையும் வரலாற்றையும் அவருக்கே யுரித்தான அமுத மொழியிலே நகைச்சுவை மிளிரச் சொன்னார். எந்தக் கோணத்தி லிருந்து எத்தகைய கேள்விகளைக் கேட்டாலும், அவற்றிற்கு அந்தந்த மட்டத்திலுள்ளவர்களின் அறிவு நிலைக்கேற்ப, உதாரணங்களையும் சம்பவங்களையும் கோர்த்து, மனத்தெளிவு ஏற்படும் வகையில் விளக்கம் அளிக்கும் வித்தகர் அவர். வாழ்க்கையில் வெற்றிப் படிகளில் ஏறுவதற்கு முயற்சியுடன் ஒழுங்கும் ஒழுக்கமும் மட்டுமல்ல, நேரந்தவறாமையும் மிகமிக முக்கியமானவை என்பதை ஒவ்வொரு சொல்லிலும் வற்புறுத்தி வந்ததுடன் தாமும் அவற்றுக்கு உதாரண புருஷராக வாழ்ந்து காட்டியவர்.

மகான்கள், ஞானிகளின் எண்ணங்களும் விருப்பங்களும் அவர்களின் காலத்திலேயே நிறைவேறாவிட்டாலும் அவை கனவாகிவிடுவதில்லை. பின்னர் எப்படியும் நிறைவேறியே தீரும் என்பதற்கும் சான்றாக – ரம்பொடை வெவண்டன் மலையில் ஆன்மீக நிலையத்துக்கு முன்னோடியாக இன்று ஸ்ரீ பக்த அனுமன் ஆலயம் எழுந்து நிற்கிறது!

8. 4. 2001 அன்று புனித குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெறுகின்றது. இது தற்செயலான நிகழ்வல்ல.

''நாடிக்கிரந்தங்கள்' என்ற பழைய சுவடிகளில் மானிடர்களின் வாழ்க்கையைப் பற்றிய சுருக்கமான குறிப்புக்க ளிருக்கின்றனவாம். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நிகழக்கூடிய முக்கிய அம்சங்களை அவற்றிலிருந்து அறியலாம் எனக் கருதப்படுகிறது. குமாரசாமி நாடி வாசிப்பு முறையில் பயிற்சி பெற்றுள்ளவரான சென்னையைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் என்பவர் குருதேவரின் ஜாதகத்தை வைத்துப் 12 விடயங்களை சுக்காலத்தில் சுருக்கமாகக் கூறியுள்ளார். குருதேவரரைப் பற்றிக் கூறியவற்றில் பல விடயங்கள் நிறை வேறியுள்ளன. அவர் கூறிய பின்வரும் விடயத்தைப் பற்றி அக்காலத்தில் பலர் எதிர்பார்த்திருக்க முடியாது. ''சுவாமிகள், ஆஞ்சநேயர் ஆலயங்களை அமைப்பாரெனவும், அவரால் வெளிநாடுகளில் அமைக்கப்படும் ஆஞ்சநேயர் ஆலயங்களிலொன்று மேற்குத் திசையைப் பார்த்ததாக அமைந்து இருக்குமெனவும், அவ்வாலயம் அமைக்கப் பெற்றதும், பஞ்சமுகி ஆஞ்சநேயரின் சக்தியினால் அந்நாட்டில் கொடிய யுத்தம் நின்றுவிடும், குண்டுகள் வெடிக்காது, இயற்கை அழிவுகள் நேராது. அங்கு அமைதியும் செழிப்பும் சிறந்தோங்கும்'' என்பதும் ஒன்று. (ஆதாரம் : *தபோவன் பிரசாத் – டிசம்பர் 1982 இதழ்)*

அதிக தொகையான மக்களுக்கு அதிகமான காலத்துக்கு மிக அதிக மகிழ்ச்சியைக் கொடுப்பதென்ற இலட்சியத் தோடு சுவாமி சின்மயானந்தர் தோற்றுவித்த சின்மய இயக்கம் என்ற விருட்சத்தின் விழுதுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கை சின்மய மிஷன் சுவாமிகளின் விருப்பப்படி அன்மீக நிலையம் அமைக்க 1981ல் கொள்வனவு செய்த காணியில், சுமார் இரு தசாப்தங்கள் கழித்து இப்போது 2001ல் இனப் பிரச்சினைப் போர் காரணமாக இரத்த ஆறும் உயிரழிவுகளும் குண்டு வெடிப்புகளும் தொடர்ந்து நிலவுகிற எமது நாட்டில் மேற்குத் திசை பார்த்தபடி ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் எழுந்தருளிவிட்டார்.

இனி –

எம்மை போர்ப் பயம் அணுகாது, இன்னல்கள் ஓடோடி மறைந்து விடும். சகல மக்களின் வாழ்க்கையில் அமைதியும், செழிப்பும், மகிழ்ச்சியும், சுபீட்சமும் பூத்துக்குலுங்கப் போகின்றன.

ஆலயத்தைச் சூழ ஆன்மீகப் பயிற்சி வகுப்புகள், அறநெறிப் பாடசாலை, கல்விச் சாலைகள், சுயதொழிலுக்கான பயிற்சிக் கூடங்கள், மருத்துவசிகிச்சை நிலையம், நூலகம், வேதாந்த ஆய்வு மையம் முதலிய பணிகளை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ள இலங்கை சின்மய மிஷனின் பணிகள் விரைவில் நிறைவேறக் குருவருளும் திருவருளும் துணைநின்று வழிகாட்ட வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூப்பிய கை



டாக்டர் திருமதி சக்திப் பெருமாள்

நாம் வழிபடும் தெய்வங்கள் 'அஞ்சேல்' என்று அபயக் கரம் காட்டி நிற்கின்றன. ஆனால் ஒரே ஒரு தெய்வம் மட்டும் கூப்பிய கைகளோடு இராமபிரானை வணங்குவதோடு, நம்மையும் வணங்கி வரவேற்பது போன்ற திருக்கோலத்தில் நிற்பதைக் காண்கிறோம்.

அனுமன் அன்பின் வடிவம்; தொண்டின் திருவுருவம்; அளப்பரிய ஆற்றலின் மொத்தஉரு. அந்த ஆற்றல்கள் அனைத்தையும் அடக்கிப் பணிவுடைய பண்பாளனாக விளங்கியவன். சொல்லின் செல்வன் என்று இராமபிரானால் பாராட்டப் பெற்றவன். 'தன் பெருங் குணத்தால், தன்னில் தானலாது ஒப்பிலாதான்' என்றும், 'தருமத்தின் தனிமை தீர்ப்பான்' என்றும் கம்பனால் போற்றப் பெறும் பெருந்தகையாளன். சுருக்கமாகக் கூறு வதானால், கம்பன் காப்பியத்தில் காப்பிய நாயகனுக்கு அடுத்த படியாக நம் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்று நிற்பவன், இராமபக்த அனுமன். நாம் வழிபடும் தெய்வம் அனுமன்; நமக்கு வாழ வழிகாட்டுமாறு வாழ்ந்து காட்டிய அனுமனின் பண்புகளில், சிறந்து நிற்கும் பணிவு, தன்னடக்கம் என்பவற்றை ஒரிரு சான்றுகளைக் கொண்டு இக்கட்டுரையில் காணலாம்.

கம்பன் காப்பியத்தில், கிட்கிந்தா காண்டம் அனுமப் படலத்தில், அனுமன் நம் கண்முன் முதன் முதலாகக் காட்சி யளிக்கின்றான். 'காலின் மா மதலை!' என்ற மூன்றே சொற்களால் முதன் முதலாகக் கம்பர் அவனை நமக்கு அறிமுகம் செய்கிறார்.

காப்பியத்தில் அனுமன் தன்னைத் தனே அறிமுகம் செய்து கொள்கின்ற இடங்கள் நான்கு. ஒவ்வோரிடத்திலும் அவன், பணிவுடையன், இன்சொலனாகப் பண்பாட்டின் உறைவிடமாகக் காட்சியளிக்கின்றான்.

கிட்கிந்தையில், முதன்முதலாக, இராம இலக்குவரைத் தொலைவில் கண்டபோதே, சுக்கிரீவன் அஞ்சி ஒடி ஒளித்துக் கொள்ளுகிறான். வாலியின் ஏவலால் வந்தவர்கள் இவர்கள்; பகைவர்களாக இருக்கக் கூடுமெனக் கருதி நாம் பிழைத்துக் கொள்வோம் என்று ஓடுகிறான். 'அஞ்சனைக்கு ஒரு சிறுவனாமனுமன்' வீரமும் விவேகமும் நிறைந்தவன்; சிந்தித்துப் பார்க்கிறான்; இவர்தாம் மானுடர் அல்லர்; ஏதோ ஒரு பொருளை இழந்து தேடும் நிலையில் உள்ளனர் என்று ஆராய்ந்து அவர்களைக் காண வருகிறான்.

மாணியாம் படிவம் தாங்கி, அஞ்சனக் கிரியனைய மஞ்சனை அடைகின்றான். அருகில் சென்று இராம இலக்குவரைப் பார்த்துக் 'கவ்வை இன்றாக நும் வரவு' என்கிறான். புதியவன் வரவு கண்டு வியந்த கருணையின் வள்ளல் இராமனும் 'யார் நீ' எனக் கேட்க, அனுமன் பேசுகின்றான். 'கார்மேக வண்ண மேனியனே! மகளிர்க்கெல்லாம் நஞ்செனத்தகையவாகி, அன்றலர்ந்தது போலிருக்கும் செந்தாமரைக் கண்ணனே, 'யான், காற்றின் வேந்தர்க்கு, அஞ்சனை வயிற்றின் வந்தேன், நாமமும் அனுமன் என்பேன்' என்கிறான்.

"இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மலுக்கு ஏவல் செய்வேன், நாமமும் அனுமன்" என்கிறான். சுக்கிரீவனுக்கு அமைச்சனாக, ஆற்றல் மிக்க வீரனாக, அஞ்சேல் என்று ஆறுதல் கூறி இராமபிரானின் நட்பைப் பெறும் அஞ்சா நெஞ்சனாக விளங்கியவன் அனுமன்; ஆனால் அவனோ தன்னைச் சுக்கிரீவனின் ஏவலன் என்று பணிவுடன் கூறிக் கொள்கிறான். இந்த விடத்துக் கம்பரே அனுமனை வியந்து போற்றுகிறார். இதனைக் கம்பர் "உலகின் எல்லா மலைகளும் தாழ்ந்து போகும்படிப் புகழைச் சுமந்து எழுந்த தோளையுடையவன்" என்று குறிப்பிடுவதன் மூலம் நாம் உணரலாம்.

*"எம்மலைக் குலமும் தாழ*
*இசை சுமந்து எழுந்த தோளான்"*

என்கிறார் கம்பர்.

அடுத்ததாக அனுமன், அசோக வனத்தில், சிறையிருந்த செல்வியை, அறத்தின் நாயகியைக் காணக் காத்திருந்த நிலையைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனைப் பிரிந்து, தவம் செய்த தவமாக வீற்றிருந்தாள் சீதா பிராட்டி, விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்புதல், வெருவுதல், எழுதல், ஏங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித் தொழுதல், சோருதல் அன்றி அயலொன்றும் அறியாதவளாக இருந்தாள் சீதை.

இந்த நிலையில் சீதை இருந்தபோது, இராவணன் அவளை நாடி 'ஆசையால் உயிர் ஆசழிவானாக' வந்ததை அனுமன் கண்டான். அரக்கனைக் கண்டதும் கூசிக் கூசி ஆவி குலைந்தாள் சீதை. இராவணன் சீதை மீது கொண்ட காதலால் காமமிக்க சொற்களைக் கக்க, அவை சுடும் நெருப்பாக அவள் மீது வீழ்ந்தன. சீறியெழுந்தாள் சீதை. அவளுடைய வெஞ்சொற்களைக் கேட்டு இராவணன் மீண்டதையும் அனுமன் மரத்தின்மீது இருந்தவாறே பார்த்துக் கொண்டிருந்தான்.

இராவணன் சென்ற பிறகு பல்வேறு துயர எண்ணங்களால் அலைப்புண்ட சீதை 'இறத்தலே அறத்தின் ஆறு' என்ற முடிவுக்கு வந்தாள், மாதவிப் பொதும்பரில் கொடி யொன்றைத் துணித்துத் தன் கழுத்தில் சுற்றிக் கொம்பினில் பூட்டியதை அனுமன் கண்டான்.

சீதையின் செயலைக் கண்ட அனுமன் அவளுடைய கருத்தை உணர்ந்தான். துணுக்கம் கொண்டான். உடனடியாக அவளுடைய செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஒரு நொடி தாழ்த்தினாலும் எல்லாம் அழிந்துவிடும் என நினைத்தான். உடனே சீதையின் முன்னே தோன்றினான். இராம இராம என்று இராம நாமத்தைச் சொல்லியவாறே அவள் முன் நின்று 'அண்டர் நாயகன் அருள்தூதன் யான்' என்று கூறி வணங்கி நின்றான்.

வேறு எதைச் சொல்லியும் அனுமன் சீதையைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியாது என்பதை உணர்ந்தவன் அனுமன். ஆகவே தான் இராம நாமத்தைச் செப்பினான். "அடைந்தனன் அடியேன் இராம நாமத்தால் என்றான்".

சீதை ஒரு நொடி சிந்தித்தாள். இது இராவணனின் சூதாக இருக்குமோ? இவன் அரக்கனாக இருப்பானோ? அல்லது இவன் அமரனோ? அல்லது இவன் காட்சியளிப்பது போலக் குரங்கினத் தலைவன்தானோ? யாராய் இருந்தாலும் சரி, இங்கு வந்து எம்பிரான் நாமம் சொல்லி என் உணர்வை உருக்கிவிட்டான். எனக்கு உயிரும் தந்தான் என்று நினைத்தாள்.

கண்ணீர் மல்க அனுமனைப் பார்த்து "வீரனே நீ யார்?" என்றாள். அனுமன் இராமபிரான் எவ்வாறு வாலியைக் கொன்று தன் மன்னன் சுக்கிரீவனுக்கு அரசை நல்கினான் என்பதைச் சீதையிடம் சுருக்கமாகக் கூறினான். கூறி முடித்து "மன்னவன் தனக்கு நாயேன் மந்திரத்து உள்ளேன், வானில் நன்னெடுங் காலின் மைந்தன் நாமமும் அனுமனென்பேன்" என்றான். தன்னை 'நாயேன்' என்றும் சுக்கிரீவனின் 'ஏவலன்' என்றும் அனுமன் பணிவுடன் கூறிக் கொள்ளுகிறான். இது இரண்டாவது அறிமுகம்.

காப்பியத் தலைமக்களாம் இராமன், சீதை ஆகியோரிடம் மட்டுமின்றி, இராவணனிடமும் தன்னை இராமனின் அடிமையாகவே கூறிக் கொள்ளுகிறான்.

இராவணனின் முன் பிரம மாத்திரத்தால் கட்டுண்டு நிற்கின்றான் அனுமன். அதிகாயன், அகம்பன், அக்ககுமாரன் என்று எண்ணற்ற வீரர்களைக் கொன்று குவித்தவன் அனுமன். அவனைக் கண்டதும் இராவணனே வியக்கின்றான். திருமாலோ, சிவனோ, நான்முகனோ, ஆதிசேடனோ இவருள் எவரேனும் உருவம் கரந்து மறைந்து வந்தனரோ? என நினைக்கிறான்.

"யார் நீ? நீ இங்கு வந்த காரணம் யாது? யார் உன்னை விடுத்தார்?" என வினவுகிறான்.

"இராவணனே, நீ நினைத்த அந்த வலியற்றவர்களின் ஏவல் பூண்டவன் அல்லன் நான், 'அல்லியங்கமலமேயனைய செங்கணோர் வில்லி தன் தூதன் யான்" என்கிறான். அத்துடன் 'மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் முதல்வனாம் இராமனின் சிறப்புக்களை யெல்லாம் எடுத்தோதி,

"*அன்னவர்க்கு அடிமை செய்வேன், நாமமும் அனுமன் என்பேன்*" என்கிறான்.

இவ்வாறு வாய்ப்புக் கிடைக்கிற போதெல்லாம் தன்னை இராமனுக்கு அடிமை என்று சொல்லிக் கொள்வதிலேயே பெரு மகிழ்வு கொள்பவனாகக் காட்சியளிக்கிறான் அனுமன்.

நான்காவதாக, அனுமன் தன்னைப் பரதனிடம் அறிமுகம்செய்து கொள்ளுகிற பகுதியிலும் அவனுடைய பணிவை நாம் காண முடிகிறது.

நந்தியம் பதியிடைப் பதினான்கு ஆண்டுகளாகத் தவம் இருந்த பரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் வரவு நோக்கிக் காத்திருக்கிறான். உரிய காலமாகியும் அவன் வரவில்லை என்று வருந்திய பரதன் எரி மூட்டி அதில் விழ இருக்கிறான். அந்த நேரத்தில் அனுமன் ஒரு மறையவன் உருக் கொண்டு வருகிறான். "அய்யன் வந்தனன் ஆரியன் வந்தனன்" என்று கூறி எரியைக் கரியாக்குகிறான். பரதனுக்கு அனுமன் ஆறுதலும் கூறுகிறான். அவனுடைய ஆறுதல் மொழிகளால் மகிழ்வுற்ற பரதன் "முத்திறந்தவருள் ஒருவன், மூர்த்தியை ஒத்திருக்கிறாய், நீ யார்?" என வினவுகிறான்.

மறுமொழி கூறுகின்ற அனுமன் "காற்றினுக்கு அரசன் என் தந்தை, கவிக்குலத்துள் தோன்றிய அஞ்சனை வயிற்றில் பிறந்தேன், நும் முன்னவனாம் இராமபிரானுக்கு "ஏற்றிலா அடித்தொழில் ஏவலாளன்". நான் உருமாற்றி இங்கு வந்தனன்'. என்று வணங்கிக் கூறினான்.

அனுமன் இராமனிடம் அளவிலா அன்பு கொண்டவன். அனுமனுடைய தந்தை வாயு "இவ்வுலகம் யாவையும் ஈன்றான் தனக்கு அடிமை செய், தவம் உனக்கு அதுவே" என்று கூறியிருந்தான். உலகம் ஈன்றானை எப்படி அறிவது? என்று கேட்ட அனுமனுக்கு அவன் தந்தை "அவனைப் பார்த்த மாத்திரத்தில் உன் நெஞ்சத்தில் எழும் அன்பே சான்றாகும்" என்று கூறியிருந்தான்.

இராமனை முதன் முதலில் கண்ட போதே அவனை இறைவன் என்று கண்டு கொண்டவன் அனுமன். "என்பு நெக்குருகுகின்றது, இவர்கின்றது அளவில் காதல்" என்றவன் அந்நொடி முதல் இராமனைத் தன் நெஞ்சில் தாங்கலானான்.

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பார் திருவள்ளுவர், அடக்கத்தின் ஒட்டுமொத்த உருவமாக விளங்கியவன் அனுமன்.

பொறி புலன்களை அடக்கி வென்று விலங்கு நிலையினின்றும் மனித நிலைக்கு உயர்ந்து, தன்னையுணர்ந்து பணிவும் அடக்கமும் மேற்கொண்டொழுகிய காரணத்தால் அனுமன் தெய்வ நிலைக்கு உயருகிறான். ஆகவே தான் இராமனைத் தன் நினைவிலும், நெஞ்சிலும்' சுமந்த அனுமன் இராம பக்த அனுமன் என்று உலகத்தார் எல்லோராலும் இன்றும் போற்றப்பட்டு வருகிறான்.

அனுமன் இராமனைத் தன் நெஞ்சில் மட்டுமின்றித் தோளிலும் சுமந்து திரிந்த தொண்டன். அவ்வாறு சுமந்து செல்வதையே தன் கடன் என அனுமன் கொண்டதால், உலகம் இன்றும் அவனைச் சிறிய திருவடி என்று கொண்டாடிப் போற்றி மகிழ்கிறது.

இராம இராவணப் போரில், இராமன், இலக்குவன் இருவரையுமே தன் தோளில் தாங்கிக் களத்தில் போரிட்டவன் அனுமன் அவ்வாறு தாங்கிச் சுமந்து திரிந்த போது "ஈன்ற கன்று தாங்கிய தாயென" மகிழ்ந்தான் என்று குறிப்பிடுகிறார் கம்பர். இந்தத் தொண்டின் காரணமாகவே அனுமன் அன்னை யிடமிருந்தும், இராம பிரானிடமிருந்தும் சிரஞ்சீவித் தன்மையை வரமாகப் பெறுகின்றான்.

இராமனுக்கு அடியவர் பலர் தொண்டு செய்தவர் உள்ளனர். எனினும் தன்னை அடிமை என்று கூறிக்கொள்வதில் மகிழ்ந்த தொண்டன் அனுமன் ஒருவனே. "யான் அவர் தம் பண்ணைக் கொருவன் எனப் போந்தேன். ஏவல் கூவல் பணி செய்வேன்" என்று பிராட்டியிடம் கூறியது போல ஏவலனாகப் பணி செய்த காரணத்தால் இராமபிரானே அனுமனின் அன்புக்கு அடிமை ஆகிறான். அனுமனின் அன்பின் பிடிக்குள் அகப்படும் மலை ஆகிறான்.

அன்பின் மிகுதியால் தந்தை தான் மகனை ஆரத் தழுவிக் கொள்வதுண்டு. பெரியோர்கள் சிறியோர்களைத் தழுவி மகிழ்தல் மரபு. இராமன் முடி சூட்டிக் கொண்டபோது, இராமன் தன் அடியவர், அன்பர்நண்பர் தமக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையாகப் பரிசளித்தான். இறுதியில் அனுமனுக்கு இராமன் என்ன கொடுப்பது என்றறியாது தவித்தான் பின்னர், இராமன் தன்னையே அவனுக்கு அளித்தது போல "மைம்பூண் போருதவிய திண் தோளால் பொருந்துறப் புல்லுக" என்றான்.

"நின்னை என் தலையினால் தொழவும் தகும் தன்மையோய்" என்று சீதா பிராட்டியினால் பாராட்டப்பெற்ற அனுமன் இப்பொழுது இராமனைத் தந்தைபோல் இருந்து தழுவும் பேற்றினையும் பெறுகிறான்.

இவ்வாறு, அனுமன் தொண்டினால், தன் பக்தியினால், பணிவினால், அடக்கத்தினால், தெய்வ நிலைக்கு உயருகின்றான். கூப்பிய கைகளோடு நின்று தன்னை வணங்குவோர்க்கு, அனுமனே கூப்பிய கைகளோடு காட்சியளித்து, என்றும் அருள் வழங்கிக் கொண்டிருக்கிறான். அவனைத் தொழுபவர் எல்லா நிலைகளிலும் மேம்படுவர் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ட பலன்கள் அருளும் அனுமன்



கீதா தெய்வசிகாமணி



சிரஞ்சீவி எழுவரில் பேரும், பெருமையும், சீரும், சிறப்பும் பெறுபவர் ஸ்ரீ இராமபக்த ஆஞ்சநேயர். திரேதாயுகத்தில் சஞ்சீவி மலையைக் கொணர்ந்த சிரஞ்சீவியான இவரது புகழ், துவாபரயுகத்தில் மேலோங்கி, கலியுகத்தில் காணுமிடமெங்கும் கண்கண்ட தெய்வமாக தனது பக்தர்களுக்குப் பரிபூரண அருளை வாரி வழங்கி வருகிறார்.

ஆஞ்சநேயரின் பெயர்களில் உள்ள சிறப்புகளைப் பார்ப்போமா?

பூமியின் அம்சமான அஞ்சனா தேவிக்கும் வாயு தேவனுக்கும் பிறந்தவர் அனுமான். அஞ்சனையின் மைந்தனாகப் பிறந்ததால் "ஆஞ்சநேயன்" எனவும், மருதம் (காற்று) பெற்றெடுத்ததால் "மாருதி" எனவும் வழங்கப்படுகிறார். வற்றிய கன்னங்களை உடையதால் "அனுமன்" எனவும் வாசனையை (சஞ்சீவி) தாங்கிப் பறந்ததால் "கந்த வாஹாத்மஜ" எனவும் அழைக்கப்படுகிறார்.

"யார் உன்னை முதன்முதலில் சந்தித்ததும் அனுமான் என்றழைக்கிறாரோ அவரே ஸ்ரீ இராமன் என்று அறிந்து கொண்டு அவருக்குச் சேவை செய்" என்று அஞ்சனா தேவி ஆஞ்சநேயருக்குச் சொல்லியிருந்தாள். அவ்வாறே சீதையைத் தேடிக் கொண்டு வந்த இராமபிரானால் சித்ரகூட மலைச்சாரலில் "அனுமான்" என்று அழைக்கப்பட்டவர் ஆஞ்சநேயர்.

*"புத்திர் பலம் யசோதைர்யம் நிர்பயத்வமரோ கதா*
*அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனுமத் ஸ்மரனாத்பவேத் – ஆஞ்சநேய தியான மந்திரம்.*

நல்லறிவு, தேகபலம், புகழ், தைரியம், பயமின்மை, நோயற்ற வாழ்வு, சோம்பலின்மை, வாக்குவன்மை ஆகிய எட்டு நற்பலன்களையும் தன்னைத் துதிப்பவர்களுக்கு அருளக் காத்திருக்கிறார் ஸ்ரீமத் ஆஞ்சநேய ஸ்வாமி.

தன்னை மனமுருகி வேண்டுபவர்களுக்கு இந்த நற்பலன்களை வாரி வழங்கும் பேராற்றலை ஆஞ்சநேயர் பெற்ற விதத்தினைப் புராணங்கள், இதிகாசங்கள் வாயிலாக அறியலாமா?

புத்தி : சூர்ய தேவனையே தன் குருவாகக் கொண்டு வேத சாஸ்திரங்களைக் கற்க விரும்புகிறார் அனுமன். அதற்குச் சூரிய பகவான் "கண் இமைக்கும் நேரம்கூட நிற்காமல் சுழன்று கொண்டே இருக்கும் என்னிடம் நீ பாடம் கேட்பது சாத்தியமா? என்று வினவ, சற்றும் தயங்காத ஆஞ்சநேயர் "தாங்கள் ரதத்தில் சென்று கொண்டே இருங்கள். நான் பின்னோக்கி தாங்கள் செல்லும் வேகத்திற்கு இணையாக வந்து தங்களிடம் வேதம் கற்றுக் கொள்கிறேன்" என்று கூறி தன் கல்வியறிவைத் தனது கடின உழைப்பாலும், அபார குரு பக்தியாலும் பெறுகிறார் ஆஞ்சநேயர். கல்வி ஞானத்தை, நல்ல புத்தி அறிவைப் பெற ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது முற்றிலும் பொருத்தமானதாகும்.

தேகபலம் : அனுமார் நைஷ்டிக பிரம்மச்சாரி. இந்திரியங்களை அடக்கி ஆள்பவர். பூமியின் அம்சமான அஞ்சனா தேவியின் மகன் ஆதலால் வலுவான உடலைப் பெற்றிருந்தார். ஆஞ்சநேயர் குழந்தையாக இருந்தபோது சூரியனைப் பழம் என்று எண்ணி பிடிக்கச் சென்றார். அப்போது இந்திரன் ஆஞ்சநேயரைச் சரியாகப் பாராமல் ஏதோ அரக்கன் என்று அவசரமாக முடிவு செய்து, தன் வஜ்ராயுதத்தைத் தூக்கி ஆஞ்சநேயர் மீது எறிந்தான். இதனால் அனுமான் பிரக்ஞையற்று பூமியில் விழுந்தான். வாயுதேவன் இந்திரன் மீது சினம் கொள்ள தன் செயலுக்காக வருந்திய இந்திரன் தான் செய்த தவறுக்குப் பரிகாரமாய் தன் வஜ்ராயுதம் பட்ட ஆஞ்சநேயரின் மேனியை, அழிக்க முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஜ்ர தேகமாக இருக்க அனுக்கிரகித்தான். உடல் வலிமை, பலம், வேண்டுவோர் "ஜெய் வஜ்ரங்காயா" என ஆஞ்சநேயரைத் தொழ, உடலானது உறுதி பெற்று வஜ்ரம் போல் திகழும் என்பதில் ஐயமில்லை.

புகழ் : "நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவன். உயிர் தந்த உத்தமன்" என்றெல்லாம் சீதா பிராட்டியால் பாராட்டப் பெற்றுத் தனக்கென வாழாப் பிறருக்குரியவனாய் வாழ்ந்த அனுமனது ஆற்றல் எல்லையற்றது. சீதையைப் பிரிந்த இராமனின் துயர் தீர்க்க முயன்று அதில் வெற்றியும் கண்ட ஆஞ்சநேயரது புகழ் அளவிடற்கரியது. அறிவு, அன்பு, ஆற்றல், தியாகம் இவற்றின் உருவமான அனுமனைச் சிரஞ்சீவியாக்கியதன் கருத்து இப் பண்புகளுக்கு உலகில் என்றென்றும் அழிவில்லை என்பதைக் குறிக்கவேயாகும். இதனால் கம்பன் தனது காப்பியத்தில் வேதங்கள் உள்ளவரையில் அனுமனும் புகழுடன் இருப்பான் எனும் பொருளில்,

"வேத நன்னூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஓங்க நிற்பான்" என்று ஆஞ்சநேயரைக் குறிப்பிடுகிறார். எனவே ஆஞ்சநேயரை உள்ளன்போடு துதிப்பவர்கள் வாழ்வில் 'புகழ்' பெற்று விளங்குவர் என்பது திண்ணம்.

தைரியம் : இராமயணத்தில் சுந்தர காண்டத்தைப் படித்தால் நன்மையும் செல்வமும் பெருகும் என்பது பன்னெடுங் காலமாக வழக்கத்தில் இருந்துவரும் நம்பிக்கை. அசோகவனம் சென்று சீதாதேவியின் மனதில் நம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டிய நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் காண்டம் இது. அசோகவனத்தில் உயிர்த்தியாகம் செய்ய இருந்த நேரத்தில் அன்னை சீதையைக் காப்பாற்றி அவளுக்கு ஆறுதல் தந்தவர் ஆஞ்சநேயர். வாழ்வில் நம்பிக்கையிழந்து மனஉறுதி இழந்த நேரத்தில் மனோதைரியத்தைப் பெற வழிபடத் தகுந்த தெய்வம் ஆஞ்சநேயர் என்பதில் சந்தேகமுண்டோ?

பயமின்மை : இராமபிரானுக்காகச் சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க அனுமன் கடலைத் தாண்டி சென்று வந்தார் அல்லவா? அப்போது அனுமனின் வல்லமையைச் சோதிக்க விரும்பிய தேவர்கள் "சுரசி" என்கிற அரக்கியை அனுப்பி வைத்தார்கள். சுரசி அனுமன் செல்லும் பாதையில் தடையாகத் தனது குகை போன்ற வாயைத் திறந்து வைத்துக் கொண்டு இருந்தாள். "இராம காரியமாக நான் போய்க் கொண்டிருக்கிறேன், என்னைத் தடுக்காதே" என்று அனுமான் சொன்னபோதும் கேளாமல் 'என் வயிற்றுக்கு நீ இரையாகியே தீர வேண்டும் என்று சொல்லி, தன் வாயைத் திறந்து கொண்டுஅனுமனிடம் சென்றாள். உடனே அனுமன் சற்றும் அஞ்சாதவராய் வாயினுள் புகுந்து வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டார். மீண்டும் அங்காரதாரை என்ற பெரிய பூதம் பிடித்து இழுத்த போது இராம நாமத்தை ஜெபித்தபடியே அவளிடம் போரிட்டு வெற்றி அடைந்தார். வாழ்வில் பயமின்மையைப் பெற ஆஞ்சநேயர் வழிபாடு செய்வது சாலப் பொருத்தம் அல்லவா?

நோயற்ற வாழ்வு : சீதாதேவி மகளிருக்கெல்லாம் தான் எவ்வாறு சிறந்து விளங்குமாறு இருந்தாளோ அவ்வாறே மனைவியைப் பெற்ற ஆடவர்களுக்கெல்லாம் இராமன் சிறந்தவன் என்னும் பெருமையை இராமனுக்குத் தன் ஒழுக்கச் சிறப்பினால் உவந்தருளியவள் சீதை. இத்துணை பெருமை வாய்ந்த சீதையைத் தேடிக்கண்டு இராமனிடம் தெரிவித்த அனுமனுக்கு நிகர் அனுமனே எனும் சிறப்புப் பெற்றவர் ஆஞ்சனேயர்.

*"ஊழி ஓர் பகலாய் ஓதும் ஆண்டெல்லாம் உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி"*

என்று சீதை மனமுவந்து சிரஞ்சீவிப் பட்டத்தை அளிக்கத் தகுந்த பேறு பெற்றவர் ஆஞ்சநேயர். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா? நோயற்ற பெருவாழ்வு வாழச் சிரஞ்சீவி ஆஞ்சநேயரை வழிபாடு செய்வதே சாலப் பொருத்தமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோம்பலின்மை :** அரசன் சுக்ரீவனின் நம்பிக்கைக்கும் அறத்தின் நாயகனாகிய இராமன் அருளுக்கும் பாத்திரமான ஆஞ்சநேயர் தன் சேனைகளுடன் சீதையைத் தேடும் பணியில் ஈடுபடத் தென்திசை நோக்கிப் புறப்படுகிறார். விந்தியமலைச் சாரல் நர்மதை நதி தீரம், ஹேமகூட பர்வதம் முதலிய பல இடங்களில் தேடியும் சீதை தென்படவில்லை. மேலும் தென்திசை நோக்கியே சென்றபோது ஒரு பாலைநிலத்தை வந்தடைந்தனர். வெப்பம் தாளமாட்டாமல் அனைவரும் தவித்தனர். கால்களைத் தரையில் ஊன்றி நடக்க முடியாது சுட்ட சட்டியிலிருந்து தெறித்துவிழும் நெற் பொரிகள் போன்று துள்ளித் துள்ளிக் குதித்தனர். செய்வதறியாது தவித்தபோது ஒரு குகைவாயில் தெரிகிறது. அனைவரும் அதனுள் நுழைய ஒரே காரிருள். அனுமனைத் தவிர அனைவரும் அஞ்சி நடுங்கினர். அந்த நிலையிலும் அனுமன் சோர்வடையாததுடன் தன் சேனைகளுக்கு அபயம் அளித்து 'என் வாலைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்' என்று உள்ளே அழைத்துச் செல்கிறார். நீண்ட தூரம் நடந்து சென்ற பிறகே ஒளிமயமான நகரம் ஒன்றை தூரத்தில் கண்டனர். எத்துணை தடைவைகள், துன்பங்கள் நேர்ந்த போதிலும் மனம் சோர்வடையாமல் தனது பணியைத் தொடர்ந்து மேற்கொண்ட ஆஞ்சநேயரை வழிபாடு செய்தால் "சோம்பலின்மை" எனும் ஆற்றலைப் பெறலாம்.

**வாக்குவன்மை :** இராமபிரானை முதன் முதலாக நோக்கிய ஆஞ்சநேயர் தன்னை "அஞ்சனை புதல்வன், சுக்ரீவன் ஏவலாள்' என்று அறிமுகம் செய்து கொண்டதோடு, இராமனை விளிக்கும்போது "மஞ்சு எனத் திரண்டகோல மேனிய" என்னும் பாடலில் "இராமனின் கண்களை, தாமரை மலரை ஒத்த கண்கள். ஆனால் தாமரை மலர்கூடப் பனிக்குக் குவிந்துவிடும். ஆனால் இராமனுடைய கண்களாகிய தாமரை மலரோ பனிக்கும் வாடாது" என்று குறிப்பிடுகிறார்.

"நளிர் இரும்பனிக்குத் தேம்பாக் கஞ்சும் ஒத்து அலர்ந்த செய்ய கண்கள்" அதே சமயம் மகளிர்க்கு எல்லாம் நஞ்சு, அதாவது தம்மை நோக்குகிற மகளிர் மனதில் காம உணர்ச்சி எழா வண்ணம் நஞ்சு போன்ற கண்கள்" என்றும் குறிப்பிடுகிறார். தன் முதல் கூற்றிலேயே தன் வாக்குவன்மையைப் பளீரென ஒளிவிடப் பேசிய அனுமனது உரையைக் கேட்ட இராமன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆஞ்சநேயர் மிக்க நாநலம் உள்ளவர் என்பதால்தான் அவர் இராம தூதராகச் செயல்பட முடிந்தது. இதனைக் கம்பர்,

*இல்லாத உலகத்தெங்கும் ஈங்கு இவனிசைகள் கூற*
*கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி*
*சொல்லாலே தோன்றிற்றன்றே யார் கொல் இச் "சொல்லின் செல்வன்"*
*வில்லார் தோள் இளைய வீர விரிஞ்சனோ! விடை வல்லானோ!*

என வர்ணிக்கிறார். வாக்குவன்மை பெற ஆஞ்சநேய வழிபாடு செய்வது மிகவும் சிறப்பு அன்றோ!

தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தகைமை கொண்ட ஆஞ்சநேயரை நாமும் உள்ளன்போடும் உள்ளத் தூய்மையோடும் வழிபட்டு வாழ்வில் புத்தி, பலம், புகழ், தைரியம், பயமின்மை, நோயற்ற வாழ்வு, சோம்பலின்மை, வாக்குவன்மை முதலான நல்லாற்றல்களை அடைவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன் தலைவனானான்!

த. இராமலிங்கம், சென்னை.

தன்னிடம் இருக்கும் திறமைகளுக்கு ஒருவன் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடும்.

அடுத்தவரை வெல்லும் ஆற்றலை, தோள் தட்டிப் பேசிக்கொள்ளமுடியும்.

ஆனால், தன்னிடம் உள்ளது என்று நினைக்கவும் கூடாத ஒன்று உண்டு. 'அடக்கம்' தான் அது!

'நான் மிகவும் அடக்கமானவன் தெரியுமா?' என்று சொன்னாலே, அது வேடிக்கையாகிவிடும். நீ தூங்குகின்றாயா என்ற கேள்விக்கு, 'ஆமாம்' என்ற பதிலைப் போல!

என்னிடம் இருக்கிறது என்று சொல்லும் போதே அடக்கம் இல்லாமல் போய்விடுகிறது.

எத்தச் சூழலிலும் தன்னிடம் மாற்றம் இன்றி அடங்கி இருப்பவர்களின் பெருமையை மலையுடன் ஒப்பிட்டு உயர்த்துகிறான் வள்ளுவன்.

*'நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது'*

என்ற குறளுக்கு அனுமன் மூலம் வடிவம் கொடுத்தான் கம்பன். அவன் படைத்திருக்கும் அனுமனை மட்டுமே உணர்ந்து பின்பற்றினால்கூட, வாழ்க்கை வெற்றிகரமானதாக அமைந்துவிடும்.

கடலைத்தாண்டி இலங்கைக்கு யார் போவது என்று சிந்தித்தார்கள், தென்திசை நோக்கி வந்த வானர வீரர்கள்.

தகுந்த காரணங்களைக் காட்டி 'அனுமனே தக்கவன்' என்று முடிவெடுத்தார்கள்.

*"நல்லவும் ஒன்றோ, தீயவும் நாடி, நவைதீரச்*
*சொல்லவும் வல்லீர் ; காரியம் நீரே துணிவுற்றீர்;*
*வெல்லவும் வல்லீர்; மீளவும் வல்லீர்; மிடல் உண்டே*
*கொல்லவும் வல்லீர்; தோள்வலி என்றும் குறையாதீர்"*

நல்லவை மட்டுமே அறிந்திருப்பவனால் சரியான தீர்வுக்கு வர இயலாது. தீயவை யாவை என்ற தெளிவும் இருக்க வேண்டும்! குறையற்ற சிந்தனையுடன், அச்சமின்றிப் பேச அப்போதுதான் முடியும்.

வெல்லவும் வல்லான்; மீளவும் வல்லானாம் அனுமன்! அதுதானே முக்கியம்! ஊக்கம் காரணமாக எதிரிகளுக்கிடையில் நுழைந்து சவால் விட்டுவிட்டு, மீண்டும் வர முடியாமல் தவிப்பதிலே என்ன பெருமை? ஆத்திரத்தால் அழிந்த நிலைதான்!

*"அடங்கவும் வல்லீர்; காலம் அது அன்றேல்; அமர் வந்தால்*
*மடங்கல் முனிந்தாலன்ன வலத்தீர். . . . "*

என்கிறான் கம்பன்.

காலமல்லாத காலத்தில் வீரத்தைக் காட்டுவது சிறுபிள்ளைத் தனமாக அமையும். அடங்கும் நேரத்தில், ஒன்றும் தெரியாதவனைப் போலத்தான் நடந்து கொள்ள வேண்டும். பொங்கியெழும் நேரத்தில் அடங்கிப் போவது தவறு. இந்த வேறுபாடுகளைத் தெரிந்தவன் தான் சிறந்த வீரன்; அப்படிப்பட்டவனாம் அனுமன் இந்தப் பாராட்டுரைகளைக் கேட்டவுடன், தலையைத் தாழ்த்தி, சிறுமுறுவலுடன், கை குவித்தானாம் அனுமன்.

*". . . . . . தாழுவதனத் தாமரை நாப்பண்*
*ஆம்பல் விரிந்தாலன்ன சிரிப்பன், அறிவாளன்*
*கூம்பலொடும் சேர்கைக் கமலத்தன. . . . "*

'மலர்ந்த தாமரை குனிந்திருக்க, அதில் செவ்வாம்பல் மலர்ந்தாற்' போல் 'நாணித் தலை கவிழ்ந்து கை குவித்துப் புன்னகைத்த அனுமன், 'கிழக்குச் சூரியன் இன்று வடக்கில் உதித்தான்' என்று எண்ணுமாறு விரைந்து விண்ணில் எழுந்து போனான்.

அவன் போன வேகத்தில் எழுந்த காற்றால் வானில் தேவர்கள் போய்க் கொண்டிருந்த புட்பக விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கடலில் வீழ்ந்தனவாம்!

இலங்கையில் அவன் நுழைந்ததை, 'குடத்துப் பாலில் ஒரு துளி மோர் விழுந்தது.' என்று வர்ணித்தான் கம்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான்! தனது தனித் தன்மையால் இலங்கை நகரத்தின் தன்மையையே மாற்றிவிட்டான் அனுமன்.

ஒரு வேறுபாடு உண்டு! பாலைத் திரித்துமாற்றி விடும் ஒரு துளிமோர். தானும் அத்துடனே கலந்து விடுகிறது. ஆனால் அனுமன் தன் கடமையை முடித்துத் திரும்பினான். அவன்தான்

*'வெல்லவும் வல்லான்; மீளவும் வல்லான்' ஆயிற்றே!*

வானிடை மீண்டுபறந்து வந்த அனுமன் மயேந்திர மலையில் வந்து குதித்தான். உடலில் இருந்த விழுப்புண்கள் போரையும், முகத்தில் இருந்த மகிழ்ச்சி அவன் சீதையைக் கண்ட செய்தியையும் வானரர்க்குச் சொல்லி விட்டன.

'உங்கள் அனைவர்க்கும் சீதை வாழ்த்துத் தெரிவித்தாள்; என்றான் அனுமன். மகிழ்ச்சியில் திளைத்த வானரர்.

"..........

*சென்றது முதலா, வந்தது இறுதியாச் செம்பாற் பாலை*

*வன் திறல் உரவோய.... (6014)*

என்றனர்!

அனுமன் கிளம்பியது முதல் திரும்பிய நேரம் வரை நிகழ்ந்த அனைத்துச் செய்திகளையும் அறிய ஆவல் அவர்களுக்கு!

சீதையின் பெருமையை, அவளின் கடுமையான தவத்தை விரித்துச் சொல்லி, சூடாமணியை அடையாளமாகப் பெற்று வந்ததையும் கூறி, அத்துடன் நிறுத்திக் கொண்டான் அனுமன்.

*"ஆண் தகை தேவி உள்ளத்து அருந்தவம் அமையச் சொல்லி,*

*பூண்ட பேர் அடையாளம் கைக்கொண்டதும் புகன்று போரில்*

*நீண்டவாள் அரக்கரோடு நிகழ்த்தும், நெருப்பைச் சிந்தி*

*மீண்டதும், விளம்பான் – தான் தன் வெற்றியை உரைப்பவெள்கி" (6015)*

என்றான் கம்பன்.

போரில் நிகழ்ந்தவற்றையோ தான் இலங்கையை எரித்ததைப் பற்றியோ ஒரு வார்த்தை கூறவில்லை. தன் வெற்றியைத் தானே உரைப்பதா என்று நாணினானாம்!

அவன் உடலிருந்த புண்கள் போர் நிகழ்ந்தது என்பதனையும், போர் முடிந்தது என்பதனை அவன் மகிழ்வுடன் மீண்டதும், இலங்கையை அவன் எரித்ததை மூண்டெழுந்த புகையும் கூறியனவே தவிர, அனைத்திற்கும் காரணமான அனுமன் அதைப் பற்றிப் பேசவே இல்லை!

அடக்கத்தின் எல்லையில் நின்ற அனுமனால் தனது பெரும் செயலைப் பெருமையுடன் எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை.

அவனது வீரச் செயல்களை வீடணன் சொல்லித்தான் தெரிந்து கொண்டான் இராமனே! நேரிடையாகவே இராமனிடம் சொன்னான் வீடணன்,

*"காந்தும் வாளியின் கரன் முதல வீரரும், கவியின்*

*வேந்தும் என்று விளிந்தவா அன்று, அவ் இலங்கை*

*உந்தவா கண்டும், அரக்கரைச் செருவிடை முடுக்கிப்*

*போந்தவா கண்டும், நான் இங்குப் புகுந்தது – புக ழோய்.*

"அனுமன் அரக்கரை அழித்த ஆற்றலையும் இலங்கையை எரித்து மீண்டதையும் கண்டு தான் நான் இங்கு வரத்துணிந்தேனே தவிர, இராமா, உனது வில்லில் கரன் முதலியோரும், வாலியும் வீழ்ந்ததைக் கேட்டு அன்று" என்று வீடணன் சொன்ன போது இராமன் மிகவும் மகிழ்ந்து போனானாம்!

அனுமனின் அடக்கத்தைவிட இராமனின் இந்த மகிழ்ச்சிதான் பெரும் வியப்பைத் தருகிறது தமக்கு!

'உனது ஆற்றலை வியந்து அன்று உன் தொண்டனின் ஆற்றலை வியந்து தான் நான் வந்தேன்' என்று ஒருவன் தன்னிடம் சொல்லக் கேட்டும், 'இவனை எப்படியும் ஓரங்கட்ட வேண்டும், 'அப்போதுதான் நமது பெருமை நிலைக்கும்' என்று எண்ணவில்லை அந்தத் தலைவன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையைப் பிரிந்ததால் மெலிந்திருந்த தோள்கள், அனுமனின் பெருமையைக் கேட்டதால் வீங்கிவிட்டனவாம்!

"இனி நாங்கள் இலங்கையில் என்ன பெரியதாகச் சாதித்துவிடப் போகிறோம்! என் வலிமையும் இராவணன் வலிமையும் சேர்த்து உன் வலிமை ஆக்கிக் கொண்டாய்" என்று இராமன் பாராட்ட எழுந்து நின்று தலைவணங்கி நாணி நின்றானாம் அனுமன்!

தலைவனுக்கு இலக்கணம் இராமன் என்றால், தொண்டனுக்கு இலக்கணம் அனுமன்தான்!

இடமறிந்து காலமறிந்து செயல்பட்டு 'இராகவன் புகழினை செவிக்குத் தேன்' எனத் திருத்தினவன் அவன்.

போரில் வென்று சீதையை மீட்டுத் திரும்பும் வழியில் பரத்துவாசன் ஆச்சிரமத்தில் விருந்துக்கு தங்கிய இராமனுக்கு பரதன் நினைப்பு வந்தது.

"சொன்ன கால அளவு முடிவதால் பரதன் தீக்குளிப்பான் அத் தீமையை விலக்கி, நாங்கள் வருவதைப் போய்ச் சொல்" என்று அனுமனை அனுப்பினான்.

மோதிரத்தை அடையாளத்துக்கு வாங்கிக் கொண்டு விண்மிசை ஏறிப் பறந்தான் அனுமன். காற்றை விடவும், இராமன் விடும் அம்பை விடவும் வேகமாகப் போனான்.

கங்கையாற்றை நெருங்குகையில் குகனின் எண்ணம் வந்தது அவனுக்கு! ஆமாம் இராமன் வந்தாயிற்று என்கிற செய்தியை குகனுக்கு யார் சொல்வார்கள்?

இந்த எண்ணம் வந்தவுடன், போன வேகத்தில் கங்கையாற்றின் கரையில் இறங்கி, 'இராமன் வந்தாயிற்று' என்று குகனிடம் சொல்லிவிட்டு, அதே வேகத்தில் மேலேறிப் பறந்தானாம்! பரதன் தீயில் வீழ்வதைத் தடுக்க வேண்டுமே!

*"தந்தை வேகமும், தனது நாயகன் தனிச் சிலையின்*
*முந்து சாயகக் கடுமையும் பிற்பட முடுகி,*
*சிந்தை பின் வரச் செல்பவன், குகற்கும் அச் சேயோன்*
*வந்த வாசகம் கூறி, மேல் வான் வழிப் போனான்.*

என்றான் கம்பன்!

இத்தனைக்கும் அனுமன் குகனைச் சந்தித்ததுகூட இல்லை, வெறும் செவி வழிச் செய்திதான்!

'பரதனுக்குச் சொல்' என்ற கட்டளையில் 'சொல்ல வேண்டியவர்களுக்குச் சொல்' என்பது தான் உட் பொருள். இராமன் பிரிவால் பரதன் வாடுகிறான் என்றால் குகன் மட்டும் வாட மாட்டானோ?

'குகனுக்கும் சொல்' என்ற ஆணை தேவை இல்லையே!

அந்த உட்பொருளைப் புரிந்து கொண்ட அனுமன் தானாகவே குகனிடம் சொல்லிவிட்டுப் போனான்!

குறிப்பறிந்து செயல்படும் இந்தத் தொண்டனையும் மகிழ்ந்து பாராட்டும் தலைவனையும் ஓர் இடத்தில் சேர்த்து பெருமைப்படுத்தி விடுகிறான் கம்பன்.

முடிசூட்டு முடிந்தபின் எல்லோர்க்கும் பரிசளித்து அனுப்புகிறான் இராமன். அனுமனுக்கு என்ன பரிசுதருவது?

"அனுமனே ! உனது உதவிகட்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும் ? தயவு செய்து நீ என்னைத் தழுவிக் கொள்" என்றானாம் இராமன்.

யார் யாரைத் தழுவுவது? தலைவன் தொண்டனைத் தழுவிப் பாராட்டுவது தானே நியாயம் ?

தொண்டில் சிறந்த அனுமனை மிக உயர்ந்தவனாக்கி, தன்னைத் தாழ்த்திக் கொண்டு 'பொருந்துறப் புல்லுக' என்று பேசும் இராமன் தன்னையும் உயர்த்தி அனுமனையும் உயர்த்தி விடுகிறான்.

உண்மையாக உழைக்கும் தொண்டனும் அந்த உழைப்பை அங்கீகரித்துப் போற்றும் தலைவனும் இணைந்தால், வெற்றி நிச்சயம் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக்கு நாயகன்

டாக்டர் சரஸ்வதி இராமநாதன்

செவிக்குத்தேன் என இராகவன் புகழினைத் திருத்திய கவிக்கு நாயகன் "கம்பன்" அவனது கவிக்கு – நூலுக்கு – நாயகன் ஸ்ரீ இராமன். அவன் புகழை அற்புதமாக உலகில் நிலைபெறச் செய்த கவிக்கு (குரங்கினத்து) நாயகன் அனுமனே! கம்பனின் காவியக் கடலில் முத்தும் பவளமுமாக எண்ணற்ற கதை மாந்தர்கள் வருகின்றனர். காவிய நாயகன், இரவிகுல கோமகன், தசரத இராமன்தான். காவியத் தலைவியோ செங்கமலச் செல்வி சீதையே! இவர்களுக்கு அடுத்தபடி நம் அன்புக்குரியவன் நெஞ்சில் நிற்பவன், அனுமனே! அனுமன் கடந்த கடல் போல, நீண்டு நிமிர்ந்த அவன் உருவம் போல, அவன் புகழும் மிகப் பெரியது.

## சிறந்த படைப்பு

மனிதனுக்கு அடுத்தபடி உயிரின வளர்ச்சியுடைய விலங்கு குரங்கே! விலங்கு நிலையிலிருந்து உயர்ந்து, மனிதனாகி, மனிதன் உயர்ந்து தெய்வமாக வேண்டும். இந்தப் பண்பு வளர்ச்சியை அனுமன் பாத்திரம் மூலமாகக் கம்பன் உணர்த்துகிறான். நூலில் 62 இடங்களில் அனுமனைக் குரங்கு என்று குறிப்பிட்ட கம்பன், அவன் குரங்கின் சலன புத்தி சிறிதும் இல்லாதவன், சரியான முடிவு எடுக்கும் துணிவுடையவன், மாதர் நலத்தை மனத்தாலும் நினையாதவன் என்கிறான். அவனைக் கம்பன் காட்டும் அற்புதத் தொடர்கள் பின்வருவன:

1. எண் உடை அனுமன்
2. பழியை வென்றவன்
3. செற்றம் நீக்கிய மனத்தினன்
4. பொய்யில் மாருதி
5. கருணையோன்
6. செம்மை சேர் உள்ளத்து அண்ணல்
7. தருமம் காப்பான்
8. நிறை நன்னூல் கற்றுணரும் மாருதி.
9. தருமத்தின் தனிமை தீர்ப்பான்
10. புகழொடும் ஓங்கி நிற்பான்
11. நுணங்கிய கேள்வியான் இப்படி

ஓர் அஷ்டோத்தர சதநாமம். (108) சொல்லலாமே!

## அறிமுகம்

1. தன்னை அனுமன் அறிமுகம் செய்து கொள்ளும் திறம் அழகானது. முதல் மூன்று காண்டங்களில் காணப்படாத இம்மாணியை, கிட்கிந்தா காண்டத்தில் இராமலக்குவர் காணும் போது நாமும் காண்கிறோம். எவ்வழி நீங்கிப் போய், யார் நீ? என்று அண்ணல் இராமன் வினவ 'மஞ்செனத்திரண்ட கோல மேனிய' என்று ஸ்ரீ இராமனை அழைக்கின்றான். "ஆறாதபாப தாப வெப்பம் போக்கும் கருணை மழை முகிலே" என்று பொருள்.

"பிறமகளிருக்கு உன் கண்கள் நஞ்சு. சீதை ஒருத்தியே நின் நெஞ்சு நேர்பவள், நீ ஏக பத்தினி விரதன் ! பனிக்கு (துன்பத்திற்கு) வாடாத தாமரை உன் கண்கள். நீ பரம் பொருளின் அவதாரம், நான் உனக்குத் துணை வந்த குரங்குகளில், அஞ்சனை வயிற்றில் வந்த வாயு புத்திரன். என் பெர் அனுமன்" என்ற இந்த அறிமுகம் இராமனுக்கு அவன் யார் என்பதை உணர்த்தி விடுகிறது. அவதார இரகசியமும் புரிகிறது. ஆகவே 'சொல்லின் செல்வன்' என்ற பட்டத்தை அனுமனுக்கு அளிக்கிறான்.

2. இதே அனுமான்தான், கற்பின்கனலியாம் சீதையிடம் வேறுவிதமாக அறிமுகம் செய்து கொள்கிறான். ஸ்ரீ இராமனின் பிரிவு, தசகண்டனின் கொடுமை, தனது தனிமை இவற்றை எண்ணி உயிர் துறக்கத் துணிந்த சீதையிடம், "அண்டர் நாயகன் அருள் தூதனாக" அறிமுகம் செய்து கொள்கிறான். சீதையின் உயிருக்காக, உடனடியாக இராம நாமத்தைச் சொல்லும் பேரறிவாளன் அனுமன்.

3. பரதன், நந்திக் கிராமத்தில் எரியும் நெருப்பின் முன்னால் துடித்துக் கொண் டிருக்கும் போது "ஐயன் வந்தனன், ஆரியன் வந்தனன்" என்று கையால் எரியைக் கரி ஆக்குகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உன்னை நான் பார்த்ததில்லையே ! யார் நீ?"* என்ற பரதனுக்கு, விநயமும் விபரமும் உடைய பதில் தருகிறான் அனுமன்.

*"காற்றினுக் கரசன் பால் கவிக்குலத்துள்*
*நோற்றனள் வயிற்றில் வந்துதித்தேன் நும்முனாற்கு*
*எற்றிலா அடிமை செய்வேன்"* என்பதுதான் எத்துணை அழகான விடை!

வேண்டியவர்களிடம் பரிவும் பணிவும் கொண்டு பதில் தரும் அனுமன், பகைவனிடம் பெருமிதம் தோன்றப் பேசுகிறான். 'நேமியோ, குலிசியோ– நெடுங்கணிச்சியோ

தாமரைக் கிழவனோ? உன்னை அனுப்பியவன் யாவன்?' என்று தசமுகன் கேட்கிறான்.

"சொல்லிய அனைவரும் அல்லேன்; சொன்ன அப்புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்" என அவர்களைப் புல்லிய வலியினோர் என்று சொல்லி நான் அவர்களுக்குத் தூதன் அல்லன்;

*'அல்லியங் கமலமேயனைய செங்கண் ஏர்*
*வில்லிதன் தூதன் யான்'* என்று தன் பெருமிதம் தன்னை அனுப்பியவன் சிறப்பு அனைத்தையும் காட்டுகிறான்.

"வாலியின் புதல்வன் அனுப்பிய தூதன்" என்று அனுமன் குறிப்பிடுவதே இராவணனைக் கலக்குவதற்காகத்தான். 'வாலியின் வாலை நினைத்தே நடுங் குபவனாயிற்றே தசமுகன்' அறிவு, உரு, ஆராய்ந்த சொல்வன்மை அனைத்தும் கொண்ட நல்லமைச்சனாக தூதனாக அனுமனைக் கம்பன் சித்தரிக்கிறான்.

## "இனத்தலைவன்"

தாரத்தைப் பிரிந்து தனித்திருக்கும் சுக்ரீவன், தாரத்தைப் பிரிந்து தேடிவரும் ஸ்ரீ இராமன், இருவரையும் நட்பாக்கிச் சேரவகை செய்யும் நல்லமைச்சன் அனுமனே! வலிமிகு வாலி வதம் அனுமனால்தான் நடக்கிறது. சுக்ரீவனுக்கு தாரமும் தலைமையும் கிடைக்க உதவுகிறவன் அனுமனே! கார்காலம் முடிந்தும் வானரப்படை வராததால் சினந்து இலக்குவனை அனுப்பினான் இராமன். அப்போது தாரையை இலக்குவனுக்கு எதிரே அனுப்பி, இலக்கு வனுக்குத் தாய்மாரை நினைவூட்டச் செய்து, கோபத்தை மாற்றும் நுண்ணறிவுடைய அனுமனே குரங்கினத் தலைவன்.

## "உயிர்காக்கும் தூயோன்"

குரங்கினத்தை இலக்குவனின் சீற்றம் அழித்து விடாமல் காத்தான் அனுமன். உயிர் விடத் துணிந்த தேவி சீதையின் உயிர் காத்த உத்தமன் அனுமன். சஞ்சீவி பர்வதம் கொண்டுவந்து அனைத்துயிர்களையும் காத்துநின்று, "நீ என் தந்தை, மறுபிறவி தந்தாய்" என ஸ்ரீ இராமனால் நன்றியுடன் பாராட்டப் பெற்ற நல்லவன் அனுமன். நந்தியம் பதியிடைப் பரதன் உயிர்காத்த நவையில் குணத்து அனுமன் அனைத்து உயிர்களாலும் தொழப்படுகிறான்.

## "அரியணை தாங்கிய அஞ்சனை புதல்வன்"

சீதை உயிர் வாடாமல் காத்த சிறிய திருவடி தான் தன் அரியணை ஆடாமல் காப்பான் என்று அனுமனையே தன் அரியணையைத் தாங்க வைத்தான் பட்டாபிராமன். தொண்டன், அமைச்சன், ஒற்றன், தூதன், பக்தன், தியாகி என்ற எல்லா நிலையிலும் அனுமன் ஈடிணையற்றவன், அஞ்சாமை, அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், இன்முகம், ஈர நெஞ்சம், உரம், ஊக்கம், ஒப்பரவறிதல், கடமை, உணர்வு, தியாகம், துணிவு, தூய்மை, தொண்டுள்ளம், விவேகம், வீரம், பணிவு, பக்தி இத்தனை பண்புகளும் பட்டைகளாத் திகழும் வைரம் அனுமனே! அதனால் தான் அனுமன் தெய்வமாக வழிபடப் பெறுகிறான். ஸ்ரீமத்வரும் வியாசகரும் அனுமன் வழிபாட்டைப் பரப்பினர். "நாடு முற்றும் அனுமன் வழி நடக்க வேண்டும்" என்றார் நாமக்கல் கவிஞர். அர்ச்சுனன் கொடியில் அனுமன் திகழ்கிறான். உலகோர் உயர்ந்தோர் உள்ளம் எல்லாம் கோவில் கொண்டுள்ளான் அனுமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காத்த தொண்டன்

முனைவர் பூ. சொல்விளங்கும் பெருமாள்

கம்பன் காப்பியத்துள் அனுமன் சொல்லின் செல்வனாக, மெய்மையின் வேலியாக, தருமத்தின் தனிமை தீர்ப்பானாக, சுக்கிரீவனின் நல் அமைச்சனாக, இராமனின் நலம் நாடும் தூதனாக, இணையற்ற போர் வீரனாக, ஏற்ற இடத்தில் உயிர் காக்கும் தொணடனாக, இறுதியில் எல்லோராலும் தொழத் தகும் தெய்வமாகக் காட்சியளிக்கிறான்.

மாருதியை முதன் முதலில் இராமன் கண்டவுடனேயே,

*"ஆணி இவ் வுலகுக் கெல்லாம் என்னலாம் ஆற்றற்கு ஏற்ற*
*சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன்"* என்று தன் தம்பி இலக்குவனிடம் கூறுகிறான்.

"இவ்வுலகுக்கு அச்சாணி இவன். இவனுடைய பெருமையை நான் உணர்ந்தேன். நீயும் காணப் போகிறாய்" என்று இராமன் கூறுகிறான்.

இராமபிரான் கூறியது போலவே அனுமன் உலகிற்கு அச்சாணியாகத் திகழ்கிறான். இராமாயண நிகழ்ச்சிகள் அனைத்தும் நடைபெறுதற்கு ஏற்ற துணையாகவும் இருக்கிறான். அது மட்டுமன்று. சுக்கிரீவன், சீதை, இலக்குவன், வீடணன் போன்றோரின் உயிர்களைத் தக்க தருணத்தில் காத்து, இறுதியில் தானும் சாகா வரம் பெறுகிறான்.

இராவண வதத்திற்குப் பெருந் துணையாக அமைவது இராம சுக்கிரீவ நட்பு. அந்த நட்பினை உருவாக்கித் தந்தவன் அனுமன். வாலியினால் தாரம் இழந்து, நாடு இழந்து, உயிரையும் இழக்க நேருமோ என்று சுக்கிரீவன் அஞ்சிக் கொண்டிருந்தான். சீதையைத் தேடி வந்து கொண்டிருந்த இராம இலக்குவரைத் தொலைவில் கண்டதுமே சுக்கிரீவன் ஓடி ஒளிக்கத் தொடங்கினான். அனுமன் அவனைத் தடுத்து நிறுத்தி, 'இவ்விடத்து அஞ்சாது இனிது இருமின். நான் அவர்களைக் கண்டு வருகிறேன்' என்று சொல்லிச் சென்றான்.

இராமனிடம் சென்று, தன் பணிவு தோன்ற உரையாற்றி, இராமனின் உள்ளம் கவர்ந்தான். 'யார் கொல் இச் சொல்லின் செல்வன்?' என்று இராமனே வியந்தான்.

"ஆற்றலும் நிறைவும் கல்வி அறிவும் அமைதியுமென்னும் வேற்றுமை இவனோடு இல்லை" என்று இராமனையே சிந்திக்க வைத்தான். சுக்கிரீவனின் இரங்கத் தக்க நிலையை, இராமனுக்கு எடுத்துக்கூறி அவனுக்கு அருளுமாறு இராமனை வேண்டினான்.

*"கொடுங் குலப் பகைவனாகிக் கொல்லிய வந்த கூற்றை*
*நடுங்கினர்க் கபயம் நல்கும் அதனினும் நல்லது உண்டோ"* என்று மொழிந்து இராமன் அருளையும் பெற்றான்.

சுக்கிரீவனிடம் மீண்டு சென்று 'யானும் உன் குலமும் இவ்வுலகும் உய்ந்தனம் வாலி என்ற வரம்பிலா வலியினான் உயிர் தெறக் காலன் வந்தனன் இடர்க் கடல் கடந்தனம்'' என்று கூறி மகிழ்ந்தான், அனுமனால் இராம சுக்கிரீவ நட்பு உருவாகி மலர்ந்தது. வாலி கொல்லப்பட்டான், சுக்கிரீவனும் உயிர் பிழைத்தான். கிட்கிந்தை அரசையும் பெற்றான்.

இராமனுக்கும் இந் நட்பினால், நீலன், சாம்பன் போன்ற தலைவர்களைக் கொண்ட எழுபது வெள்ளம் வானரச் சேனை கிடைத்தது. இராவணவதம் எளிதாயிற்று. இவ்வாறு மறம் அழிந்து அறம் தழைக்க, இராமனின் செங்கைத் தனுவென விளங்கவிருந்த அனுமன், தன் தலைவனாம் சுக்கிரீவனின் உயிர்காத்த தொண்டனாக விளங்கியதைக் கண்டோம்.

சுக்கிரீவனின் உயிரைக் காத்த தொண்டனாம் அனுமன், அடுத்து, சீதையின் உயிரையும் காப்பாற்றுகிறான்.

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற பிறகு அவளுடைய இருப்பிடம் அறியாத நிலையில் இராமன் அனுமன் உதவியை நாடுகிறான், 'எனக்கு உரியதாய கருமம் இயற்ற ஒத்த சான்றவர் நின்னின் அல்லது இல்லை' என்கிறான். அத்தலைவனின் கூற்றைத் தன் தலை மேல் ஏற்று, அனுமன் சீதையைத் தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகிறான். சம்பாதியின் மூலம் சீதை இலங்கையில் சிறையிருப்பதை அறிந்து கொள்ளுகிறான். துணிவுடனும் திறமையுடனும் இலங்கை முழுவதும் தேடி அலைந்து, இறுதியில் இலங்கையில் அசோக வனத்தில் சீதை சிறையிருந்த நிலையில் அவளைக் காண்கிறான். அவள் தன்னுயிரை மாய்க்க முயன்று கொண்டிருந்தபோது, அவளைக் காப்பாற்றத் துடிக்கிறான், இராம நாமமே அவளைக் காப்பாற்ற முடியும் என்பதை உணர்ந்தவனாக இராம இராம என்று இராம நாமத்தைச் சொல்லியவாறே அவள் முன்னர்த் தோன்றுகின்றான். 'அண்டர் நாயகன் அருட் தூதன் யான்' என்ற அமுதச் சொற்களை அள்ளி வீசி அவளது உயிரைக் காப்பாற்றுகிறான். சீதையும் "எம்பிரான் நாமம் சொல்லி உருக்கினன் உணர்வைத்தந்தனன் உயிர்" என்கிறாள்.

இராமபிரானின் புகழ்பாடி, இறுதியில் அவன் கொடுத்து அனுப்பிய கணையாழியைச் சீதையின் கையில் கொடுக்கிறான். உவகையால் உள்ளம் பூரித்த சீதை அனுமனைப் பார்த்து, 'மும்மையால் இவ்வுலகம் தந்த முதல்வனுக்கு முதல்வனாம் எம்பெருமான் தூதாய் வந்தாய்; என்னுயிர் தந்தாய். உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும்? அம்மையே, அத்தனாய அருளின் வாழ்வே, இம்மையே மறுமை தானும் எனக்கு இசையோடு நல்கினாய்; நீ ஊழி தோறும் ஊழி தோறும், உலகம் ஏழும் அழிந்தபோதும் நீ இன்று போல் என்றும் இருப்பாயாக" என்று வாழ்த்துகிறாள்.

சீதை இராமனுக்குத் தன் கணையாழியைக் கொடுத்து அனுப்பிய போதும் சீதை அனுமனைப் பார்த்து, "நாடி வந்து என்னுயிர் நல்கிய நம்பா" என்று அன்புடன் அழைக்கிறாள். இவ்வாறு அனுமன் தன்னுயிரைக் காத்தமையைச் சீதை இறுதிவரை மறக்கவேயில்லை.

இவ்வாறு சீதையின் இன்னுயிர் காத்த அனுமன், இராவணனுடன் நிகழ்ந்த போரில், இலக்குவன், வானர வீரர்கள் ஆகியோரின் உயிரையும் காப்பாற்றுகிறான்.

இந்திரசித்துடன் நிகழ்ந்த போரில், அவன் பிரம்மாத்திரத்தைப் பயன்படுத்தியபோது, களத்திலிருந்த அத்துணை வானர வீரர்களும் உணர்விழந்து வீழ்ந்தனர். இலக்குவனும் உணர்விழந்து வீழ்ந்தான்.

நிகழ்ந்தது அறியாது, பூசனை முடித்து மீண்ட இராமன், களத்தில் இலக்குவன் மடிந்து கிடந்தது கண்டு தாங்கொணாத் துயரில் துடிதுடித்தான். அப்போது வானர வீரர்களுக்கு உணவு கொண்டு வந்த வீடணன் நிலைமையை ஆராய்ந்து உணர்ந்தான். காய் சின அனுமன் எங்கே என்று தேடினான். அனுமனும் மயங்கிக் கிடந்தான். அவனுடைய உடலில் உயிர் இருந்தது கண்டு, அவனுடைய முகத்தில் நீர் தெளித்து மயக்கம் தெளிவித்தான் வீடணன். அனுமன் மெல்ல மெல்லக் கண்களை விழித்தான். இராம நாமம் சொல்லி எழுந்தான். அனுமன் எழுந்ததும் 'அனைவரும் இனிமேல் உய்ந்தனர்' என்று அமரர்கள் ஆர்த்தனர் என்கின்றார் கம்பர். அனுமன் மீது அனைவரும் கொண்டிருந்த நம்பிக்கை இதனால் வெளியாகிறது.

வீடணனும் அனுமனும் சாம்பனை அடைந்து இனிச் செய்வது யாது என வினவினர். சாம்பனும் மருந்து மலையினின்றும் மருந்து கொண்டு வந்தால் அனைவரும் பிழைப்பர் என்றான். அத்துடன் அம் மருந்து மலை பற்றிய விவரங்களையும் கூறினான். இறந்தாரை உயிர்ப்பிக்கும் மருந்து, பிளந்த உடலை ஒருங்கிணைக்கும் மருந்து, உடலில் புதைந்த படைக்கலம் வெளிப்படுத்தும் மருந்து, மீண்டும் தன் மெய்யுருவைத் தரும் மருந்து என்று வெவ்வேறு வகை மருந்துகள் அம்மலையில் உள்ளன. இம் மருந்தினைக் காக்கும் தெய்வங்கள் யாரையும் நெருங்க வொட்டாதன. இம் மருந்து மலையினின்றும் மருந்தினைக் கொணரும் ஆற்றல் அனுமனுக்கே உண்டு என்றும் சாம்பன் கூறினான்.

இதனைக் கேட்ட அனுமனும் உடனடியாக மருந்தினைக் கொண்டு வர இமயம் கடந்து நாற்பதினாயிரம் யோசனை தாண்டி, மருந்து மலையைச் சென்றடைந்தான்.

இலக்குவன் மாய்ந்து கிடந்ததைக் கண்ட இராமன் துயர மிகுதியால் தம்பியோடு தானும் மாய்வேன் என்று புலம்பிக் கொண்டிருந்தான். சாம்பனும் அவனைத் தடுத்து நிறுத்தி அனுமனின் வீரச் செயல்களை எடுத்துரைத்து, அவன் மருந்தொடு வந்து இலக்குவன் உயிரைக் காப்பாற்றுவான் என்று உறுதி கூறிக் கொண்டிருந்தான். அந்நிலையில் அனுமனின் ஆர்ப்பொலி கேட்டது. ஒவ்வொரு மருந்தாகத் தேடுவதற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் மிகுதியாகும் என்று கருதிய அனுமன் மருந்து மலையையே பெயர்த்து வந்து கொண்டிருந்தான். வஞ்சக அரக்கர் வாழ்ந்த ஊருக்கு வரத் தெய்வ மருந்து மலை அஞ்சியது. இதனை உணர்ந்த அனுமன் மலையை வானிலேயே நிறுத்தினான். அவ்வாறு வானில் நின்ற மலையினின்றும் காற்று வீசியதும், களத்தில் உணர்விழந்து கிடந்த அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். தேவர்கள் மகிழ்ந்து வாழ்த்தத் தொடங்கினர், வாழ்த்தொலி கேட்ட இலக்குவனும், யோக நீங்கினான் என விழித்தெழுந்தான். இராமபிரானும் இலக்குவனை ஆரத் தழுவித் தன் துயர் நீங்கினான். கண்களில் நீர் ததும்ப இராமன் அனுமனைக் கட்டித் தழுவி, அவனைப் புகழ்ந்து பாராட்டினான். 'எங்கள் குல முன்னோர் முறையினின்றும், நான் வழுவாததால் என் தந்தை தாங்காத் துயர் கொண்டு தன்னுயிர் துறந்தான். அத் தந்தையிடமிருந்து தோன்றிய நாங்கள் இன்று பிரம்மாத்திரத்தினால் மாண்டு போனோம். இன்று மீண்டும் உன்னால் பிறந்தவர்களானோம் என்றான்.

"*முன்னிற் றோன்றினோர் முறையி னீங்கலாது*
*என்னிற் றோன்றிய துயரி னீறு சேர்*
*மன்னிற்றோன்றினோம் முன்னம்மாண்டுளோம்*
*நின்னிற் றோன்றினோம் நெறியிற்*
*றோன்றினாய்*" (மருந்து. 110.) என்றான். 'என் தம்பியோடு உயிரனைத்தும் வாழ்வித்தாய் நீ; எவ்வகை இன்னல் நோயும் இல்லாது நீ என்றும் வாழ்வாயாக' என்றும் வாழ்த்தினான்.

"*ஒன்றும் இன்னல் நோயுறு கிலாதுநீ*
*என்றும் வாழ்தியால் இனிதென் ஏவலால்*" என்றான்.

இது போன்றே, இலக்குவனை மற்றொரு முறை காப்பாற்றும் வாய்ப்பும் மீண்டும் அனுமனுக்குக் கிடைத்தது. போரில் ஒரு முறை, இராவணன் வீடணனை நோக்கித் தன் வேலை விட்டெறிந்தான். அவ்வேலை இலக்குவன் தன் பொன் துஞ்சு மார்பில் எதிர்கொண்டான். வேலேற்று மயங்கி விழுந்த இலக்குவனின் நிலை கண்டு வருந்திய வீடணன் தன்னுயிரை மாய்க்க எண்ணினான். அருகிலிருந்த சாம்பன் அவனைத் தடுத்து நிறுத்தி" அனுமன் நமக்கு அருகில் இருக்க இளவல் உயிர்க்காக நாம் ஏங்க வேண்டாம்" என்றான். அனுமனும் அவ்வாறே இரண்டாம் முறையாக மருந்து மலையினைக் கொண்டு வந்து இலக்குவன் உயிரைக் காப்பாற்றினான்.

இராமபிரான் அறியாத சூழலில் இந்நிகழ்ச்சி நடந்து முடிந்தது. இதனைப் பின்னர் இராமன் அறிய நேர்ந்தபோது, இராமன் அனுமனின் அருமையையும் பெருமையையும் எடுத்துக் கூறி மேலும் பாராட்டினான். அந்தமில் அனுமனை இராமன் ஆரத் தழுவி' பெற்றனன் உன்னை; இனிப் பெறாதன என்ன? பெரியோய்! ஆறு இடை ஈறு செல்லா ஆயுளை ஆக நீ" என்று வாழ்த்தினான். இவ்வாறு இலக்குவனின் இன்னுயிர் காத்து இராவண வதம் நிகழப் பெரிதும் துணை புரிந்தவன் அனுமன்.

இவ்வாறு சீதை, இலக்குவன் ஆகியோர் உயிர் காத்து இராமனிடம் பாராட்டுப் பெற்ற அனுமன், இறுதியில் பரதனின் உயிரையும் காப்பாற்றுகிறான்.

பதினான்கு ஆண்டுகள் நந்தியம் பதியிடைத் துறவு பூண்டு இராமனுக்காகக் காத்திருந்தான் பரதன், இராமன் தன்னிடத்தில் குறிப்பிட்டிருந்த காலத்திற்குள் வரவில்லை என்று வருந்திய பரதன் உயிர் விடத் துணிந்தான் எரியை மூட்டினான் எவர் தடுத்தும் கேளாது அவன் நெருப்பில் விழுந்து உயிர் விட முனைந்தபோது அனுமன் வந்து குதித்தான். பரதனைத் தடுத்து நிறுத்தி 'ஐயன் வந்தனன் வந்தனன்; ஆரியன் வந்தனன்' என்று கூறித் தன் கைகளால் எரியைக் கரியாக்கினான். "இன்னும் நாழிகை எண்ணைந்து உளது; ஆரியன் வருவான். அவ்வுரையின்படி அவன் வந்து சேரவில்லையென்றால் உனக்கு முன்னம் நானே இவ்வெரியில் விழுந்து என்னுயிர் மாய்ப்பேன்" என்று கூறிப் பரதன் உயிரையும் காப்பாற்றினான். இவ்வாறு பரதனைக் காப்பாற்றியதன் மூலம் அனுமன் அயோத்தியையே காப்பாற்றினான் என்றுகூட நாம் கொள்ளலாம்.

இவ்வாறு அனுமன் தன்னைச் சுற்றியுள்ள இராமன், இலக்குவன், சீதை, பரதன், சுக்கிரீவன் மற்றும் வானர வீரர்கள் அனைவரின் உயிரையும் காத்த தொண்டனாக விளங்குகிறான். தானும் சாகா வரம் பெறுகிறான், மஞ்சனையின் சிறுவனாம் அவனும், தன்னை அண்டி வருவோர்க்கு என்றும் அபயம் நல்கிக் கொண்டிருக்கிறான் எல்லோரையும் காக்கும் கடவுள் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யார்கொல் இச் சொல்லின் செல்வன்?'

வித்துவான் க. சொக்கலிங்கம் எம். ஏ.
(சொக்கன்)

வாயுவுக்கு அஞ்சனை வயிற்றிலே அவதரித்தவன் அனுமன். வடமொழித் தத்திதாந்த இலக்கணத்துக்கு அமைய இவனுக்கு ஆஞ்சநேயன் என்ற பெயரும் அமைந்தது. குழந்தைப் பருவத்திலே ஒரு நாள் வானில் வலம் வந்த சூரியனைச் சிவப்புப் பழம் என்று கருதி அதனைப் பிடிக்கத் தாவிய பொழுது சினங்கொண்ட இந்திரன் தனது வச்சிராயுதத்தால் இவனது கன்னத்திலே அடித்தான். அதனாலே இவனுடைய கன்னம் சிதைந்தது. இவ் வரலாற்றைப் புலப்படுத்த அமைந்த பெயரே 'ஹனுமன்' (ஹநு – கன்னம்). மருத் ஆகிய வாயுவின் புதல்வனாதலால் மாருதி எனவும் இவன் பெயர் வழங்கும். இவை கம்பராமாயண உரை மூலம் (வை. மு. கோபால கிருஷ்ணமாசார்யர் உரை) தெரிய வருபவை. கம்பராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்தின் 'அனுமப் படலம்' அனுமனை முதலில் அறிமுகஞ் செய்கின்றது. அந்த அறிமுகத்தின் அறிமுகமே இந்தக் கட்டுரை.

அனுமன் குரங்கினத்தைச் சேர்ந்தவன். 'மழை காலத்திலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பது பழமொழி. பேச்சு வழக்கிலே, தான் பிடித்த கொள்கை யிலிருந்து எக்காரணத்தாலும் விடாத இயல்புடையவனைக் 'குரங்குப் பிடி' பிடிக்கிறான் என அழைப்பது மரபு. இறைவனைப் பற்றி நிற்கும் உறுதியான பக்தி வழி 'மர்க்கட மார்க்கம்' எனப்படும். அனுமன் ஸ்ரீஇராமபிரானைப் பற்றி எக்காலத்திலும் விடாது அவனே கதி என்று இருந்த வகையிலும் அவனை, மர்க்கடம் என்ற குறிப்புப் பொருளிலும் நினைவு கூர்வது பொருத்தமே. (மர்க்கடம் – குரங்கு).

திருமாலின் அவதாரம் ஸ்ரீஇராமன், திருமாலின் பதியிலே ஆழ்ந்து பேரின்பப் பதியாகிய வைகுண்டத்தை நிலையாகப் பெறுவது பிரபத்தி மூலம் கிட்டுவதாகும். (பிரபத்தி – சரணாகதி) பரம்பொருளான ஸ்ரீஇராமனைப் பிரபத்தி மூலம் சிக்கெனப் பிடித்தவன் அனுமன். இவ்வாறு சிக்கெனப் பிடித்தோரை 'ஆழ்வார்' என அழைப்பது வைணவ மரபு. இவ்வகையில் அனுமனை ஆஞ்சனேயாழ்வார் எனக் கொண்டு வைணவ அடியார்கள் வழிபட்டு வருகின்றனர்.

துவிதம் என்ற இருமைத் தத்துவத்தை நிறுவியவர் மத்துவர் என்னும் வைணவப் பெரியார். "இறைவன் வேறு, ஆன்மா வேறு. இவை தமக்குரிய இரண்டு என்னும் நிலையிலிருந்து என்றும் மாறுபடுவ தில்லை; ஒன்றுஆவதில்லை" என்ற உறுதியான கோட்பாடு மத்துவருக்கு உண்டு. இவரின் கருத்துப்படி "அனுமன் இறைவனின் புத்திரன். அனுமனின் துணையின்றி இறைவனை அடைய முடியாது". சைவ சித்தாந்தத்தில் திருவருள் பெறும் இடத்தை, மத்துவ சித்தாந்தத்தில் அனுமன் பெறுகின்றான்.

கம்பஇராமாயணத்தினூடாக அனுமனை நாம் பல இடங்களில் தரிசிக்கின்றோம். அவன் ஸ்ரீஇராமன் மீது கொண்ட பத்தியின் அளவு எம்மைப் பிரமிப்பில் ஆழ்த்துகின்றது. அந்தப் பத்தி இராமா வதாரத்தின் பின்புதான் ஏற்பட்டது என்று கூறவியலாது. 'என்று நீ அன்று நான் உன் அடிமையல்லவோ?' என்றாங்கு, அநாதியான திருமாலோடு அநாதியாகத் தொடர்புற்றவன் அனுமன். சுக்கிரீவனின் தூதனாய், மாணவன் (பிரமசாரி) வடிவுதாங்கி இராமனை நோக்கி அவன் வந்தகாலை, இவ்வுண்மை அவன் நின்ற நிலையும் உணர்வும் கொண்டு குறிப்பாகப் பெற வைக்கப்படுகின்றது.

'............ ஆர்வத்தோரை
முன்பிரிந்து அனையர்தம்மை முன்னினான்
என்ன நின்றான்'

(கிஸ்கிந்தா காண்டம் அனுமப் படலம் 54–3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பர்களை (ஆர்வத்தோரை) முன் ஒரு காலத்தில் விட்டுநீங்கி, அவர்களைத் திரும்பவும் எதிர்ப்பட்டுக் கண்டவன் போல நின்றான்" என்பது இவ்வடிகளுக்கு வை. மு. கோ. தந்துள்ள உரை.

சூரியன் செல்கின்ற திசையெல்லாம் அவனைத் தொடர்ந்து சென்று அவன் வாயியாக எல்லாக் கலைகளையும், வேதங்கள் சாத்திரங்களையும் அனுமன் கற்றுப் பெருங் கல்விக் கடலாய் விளங்குகின்றான். இராமலக்குமணரைத் தரிசித்த முதற் சந்தர்ப்பத்திலேயே அவர்கள் இத்தகைய வர்களாகவே இருப்பர் என்று தனது அனுமானத் திறங்கொண்டு அவன் முடிவு செய்வது நூற்றுக்கு நூறு சரியாகவே உள்ளது. நூற் கல்வியோடு அமைந்து விடாது பட்டறிவும் பரந்த அளவில் அவனுக்கு அமைந் திருந்ததாகக் கம்பன் காட்டுவது நயம் மிக்கதாகும்.

இராம இலக்குமணருக்கு முன்பு சென்று அவர்களுக்குத் தன்னை அறிமுகப்படுத்திய நுட்பமும் அந்நுட்பத்திற்குச் சான்றாக அமைந்த எண்பொருளவாகச் செலச் சொல்லும் உரையாற்றலும், அவ்வுரையிற் கையாண்ட சொல்லாட்சியும் சொல்லின் செல்வனாகிய ஸ்ரீஇராமனையே வியப்பில் ஆழ்த்திவிடுகின்றன. அனுமனின் பாண்டி த்தியம், சொற்றிறம் என்பவற்றை இராமன் இலக்குமணனுக்குப் பின்வருமாறு வெளிப் படுத்துகின்றான்:

*இல்லாத உலகத்து எங்கும் ஈங்கு இவன் இசைகள் கூரக்*
*கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னுங் காட்சி*
*சொல்லாலே தோறிற் றன்றே யார்கொல்இச் சொல்லின் செல்வன்?*
*வில்லார்தோள் இளையவீர விரிஞ்சனோ? விடைவல் லானோ?*

"சகல கலைகளையும் வேதக் கடலையும் கரைகண்டுணர்ந்த இவனது அறிவுத் திறம் இவனுடைய சொற்களால் புலனாகின்றதன்றே? இவன் பிரமதேவனோ? விண்டமூர்த்தியான சிவபெருமானோ? என்பது மேலேயுள்ள பாடலின் பொழிப்பு. அனுமன் (பிராமண) பிரமசாரியாய் உருக்கொண்டு தோன்றியதாலும், அவனுடைய பேச்சிலே வெளிப்பட்ட அறிவுச் சுடரின் ஒளியினாலும் ஸ்ரீ இராமன் இம்முடிவுக்கு வருகிறான். "பாம்பின் கால் பாம்பு அறியும்" என்பது பொய்ம்மொழி அன்று! வேதங்களின் உட்பொருளையும் மனுவின் நீதிக்கு உரைகல்லாயும் விளங்கிய ஸ்ரீஇராமன், அநுமனை அவன் அறிவெல்லையை அளந்தறிந்து கொண்டதில் வியப்பில்லை.

மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் வேண்ட வாமனவடிவெடுத்துச் சென்ற திருமால் வானம் கடந்து வளர்ந்து இரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் (சுவர்க்கம், மத்யமம், பாதலம் ஆகிய ஞாலம் முழுதும்)நயந்து அளந்தான். இராம இலக்குமணர் முன்பு சிறிய தொரு வடிவில் வந்த அனுமனும் தனது முழுமையான விசுவரூபத்தினை வெளிப்படுத்தித் தன்னை இராமலக்குமணருக்கு யாவன் எனப் புலப்படுத்தியதும் குறிப்பிடத்தக்கதாகும். திரிவிக்கிரம வடிவெடுத்த திருமாலின் அவதார மூர்த்தியான ஸ்ரீஇராமனே அத் திருப்பெரு வடிவுகண்டு வியப்பில் ஆழ்ந்தான் என்பதிலிருந்தும் அநுமனின் மகத்துவம் நன்கு புலனாகின்றது.

"*தருமத்தினது தனிமையைத் தீர்ப்பவனான* (போக்குபவனான) அனுமன், மின்னல் போன்ற ஒளி நிறைந்த வில்லேந்திய இராமஇலக்குமணர் வியப்படையும் படியாகவும், வேதங்களாலும் நல்ல சாத்திரங்களாலும் பெரிய ரூபங்கள் எனக் கொண்ட பொருள்கள் யாவும் தனது ரூபத்தின் முன்னே சிறுத்துத் தோன்றும் படியாகவும், பொன்மலையான மகாமேருதம் தன் புயத்துக்கும் உவமை போதா என்னும் படியாகவும் தன்னுடைய விசுவ ரூபத்தைக் கொண்டு நின்றான்.

"உலகம் மூன்றையும் தன் திருவடிகளால் அளந்து தனதாக்கிக் கொண்ட தாமரை போலும் திருவிழிகளையும் சக்கரா யுதத்தையும் உடைய காத்தற் கடவுளான ஸ்ரீ இராமபிரான், பொன்னொளிரும் குண்டலங்கள் அணிந்த அனுமனின் முகத்தைக் காண மாட்டாதவன் ஆனான்! அவ்வாறெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமையான சாத்திரங்கள் யாவற்றையும் கதிரவன் கற்பிக்கக் கற்றவனாகிய அனுமனது பெருவடிவம் நம்மால் எடுத்துக் கூறத்தகும் தன்மையுள் அடங்குவனவா? (அனுமம் படலம் 77,78).

ஸ்ரீ இராமன் தனக்கு ஏற்பட்ட வியப்பினை இலக்குமணனுக்கு எடுத்துக் கூறியவகை இது:

*தாட்படாக் கமலம் அன்ன தடங்கணான் தம்பிக்கு அம்மா*
*கீட்படா நின்ற நீங்கிக்கிளர்படா தாகி எங்கும்*
*நாட்படா மறைக ளாலும் நவைபடா ஞானத் தாலும்*
*கோட்படாப் பதமே ஐய குரக்குருக் கொண்டது"*

என்றான்.

"முக்குணங்களிலே தாழ்வானவை இராஜசம், தாமசம் ஆகிய குணங்கள். இவற்றிலும் மிக்குயர்ந்த மேன்மைக் குணம் சாத்துவிகம். அனுமன் கொண்ட உருவமோ சாத்துவிக குணத்தின் ஒளியைத் தன்னுட்கொண்டு எழுந்து நிற்கிறது. நாட்செல்லாத வேதங்களாலும் குற்றமற்ற தவ ஞானத்தாலும் அறியப்படாத மோட்ச உலகமே என் முன்னால் குரங்கு உருக்கொண்டது" என்பது மேற்குறித்த பாடலின் உரைச்சாரம். ஸ்ரீ இராமன் தனக்கு நிலையான அடிமையாகிவிட்ட அனுமனை இவ்வாறு அதிசயித்துப் புகழ்வது, அப்பெருமானது அடியார்க்கு எளியனாகும் திறத்தினை நன்கு புலப்படுத்துகின்றது. கண்ணொடு கண்ணினை கௌவி ஒன்றை ஒன்று உண்ணுமாறு உணர்வொன்றி மெய் மறந்து மிதிலையிலே ஸ்ரீ இராமனும் சீதையும் நின்றனர். அங்குப் பிறந்த தெய்விகக் காதலுக்குச் சற்றும் குறையாத பேரின்பக் காதல், ஸ்ரீ இராமனுக்கும் அனுமனுக்குமிடையே முகிழ்த்தமைக்கு அனுமனின் விசுவரூபக் காட்சியும் அதில் ஈடுபட்ட ஸ்ரீ இராமனின் வியப்புரையும் நல்ல எடுத்துக் காட்டுக்கள் எனலாம்.

ஸ்ரீ இராமன் மனுதர்மம் உலகிடை நிலவவும், தீயோர் அழிந்து நல்லோர் வாழவும், அநீதி ஒழிந்து நன்மை தழைக்கவும் மானிட வடிவம் கொண்டு இந்த மண்ணிடை வந்தவன். தருமத்தின் திரண்ட வடிவாய்க் காட்சி தந்தவன். சுருங்கச் சொல்வதாயின் அவனே தருமம். தருமமே அவன்! அந்தத் தருமத்தின் தனிமையைப் போக்கிட அவனுக்குக் கண்ணாய், கவசமாய், உறுதுணையாய் நின்றவர் இருவர். ஒருவன் இலக்குமணன். மற்றவன் அனுமன். இலக்குமணனோ இராமனின் உடன்பிறப்பாளன் என்ற உறவுரிமை கொண்டிருந்தான். அனுமனுக்கு அவ்வுரிமைப்பாடு இல்லை. ஆனால் இலக்குமணனுக்குச் சமமாகவும், சில சந்தர்ப்பங்களில் அவனுக்கு மேலாகவும் இராமனாகிய தருமத்துக்குத் தனிமை தீர்த்து வைத்த வகையில் தனக்கு நிகரில்லாத வனாகவும் அனுமன் விளங்கினான்.

(i) சீதையைப் பிரிந்து சோகமே வடிவாய் உயிர்தாங்கிய நடைப்பிணமாய் நின்ற ஸ்ரீராமனுக்குச் சீதையைக் கண்டுவந்த செய்தியைச் சொல்லி அவனை இயங்கவைத்து அவனது திருவவதார நோக்கத்தை நிறைவேற்ற உதவியவன் அனுமன்.

(ii) இராமன் குறித்த நாளில் வராவிடில் உயிர் துறக்கவிருந்த சீதைக்கு, இராமனின் செய்தி உரைத்து அவளது இன்னுயிர்க்கு மருந்தானவனும் அனுமனே.

(iii) இந்திரஜித்துவின் நாகபாசத்தால் கட்டுண்டு மயங்கிக் கிடந்த இலக்குமண னாதியர்க்குச் சஞ்சீவி கொணர்ந்து அளித்து சாவு போக்கியவனும் அனுமனே.

இவை யாவும் இராமனின் அவதார தருமத்தின் தனிமையைப் போக்க அனுமன் உறுதுணைபோன நிகழ்ச்சிகள்.

இவற்றை யெல்லாம் தொகுத்து நோக்குகையில் அனுமனைப் போன்ற ஒரு வைராக்கிய அடியவனை, ஆண்டாளின் கண்ணும் கவசமும் ஆனவனை, மர்க்கட மார்க்கத்தின் மகத்துவ குறிக்கோளனைப் போல் வேறு ஒருவனை இந்து சமய இதிகாச, காவியங்களிலே எங்கும் காணுதல் இயலாது. உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

அனுமன் சாகா வரத்தினன். சிரஞ்சீவி! அவன் நினைவுகளும், வழிபாடும் வைணவ சமய உலகிலே என்றும் சிரஞ்சீவிகள்!

*ஆஞ்சனேய நமஹ!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் அனுமனைத் துதித்தது ஏன்?

மு. இராமசாமி, ராசிபுரம்

கவிச் சக்கரவர்த்தி பாடிய அனுமன் துதிப்பாடல் இராம பக்தர்கள் அனைவர் உள்ளத்திலும் நிலை கொண்டிருக்கும்.

*"அஞ்சிலே ஒன்று பெற்றான்,*
*அஞ்சிலே ஒன்றைத் தாவி,*
*அஞ்சிலே ஒன்று ஆறு ஆக,*
*ஆர் உயிர் காக்க ஏகி,*
*அஞ்சிலே ஒன்று பெற்ற*
*அணங்கைக் கண்டு அயலார் ஊரில்*
*அஞ்சிலே ஒன்று வைத்தான்,*
*அவன் எம்மை அளித்துக் காப்பான்.*

இந்த அனுமத் துதிப் பாடலை நினைவில் நிறுத்தாதார் யார்? நிறுத்தாதார் உலகில் தம்மை நிலை நிறுத்தாதவரே! இதனை மறந்தார் தம்மை மறந்தாரே? அவ்வளவு ஏற்றத்துக்கு உரியது இப்பாடல்.

இராமாயணக் கதாபாத்திரங்களுள், அனுமச் செல்வனை மட்டும், கவிச் சக்கரவர்த்தி காப்பியத் தொடக்கத்தில் துதிப்பது ஏன்? இதனை ஆய்வதே இக்கட்டுயின் நோக்கம்.

## பஞ்சபூதங்களின் தொடர்பு :

இந்த உலகம் ஐந்து இயற்கை நிலைகளால் உருவானது. இதனைத் தொல்காப்பியம், 'நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்று தெளிவாகப் பேசும். இவைகள் எவ்வாறு இயங்குகின்றன? இவைகளை உலகத்தில் எவ்வாறு யார் இயக்குகின்றார்? இவ்வினாக்களுக்குத் தெளிவான விடையளிக்கின்றது திருவாய் மொழிப்பாசுரம். திட விசும்பு, எரிவளி, நீர் நிலம் இவைமிசை படர்பொருள் முழுவதும் ஆகியவை அவைதோறும், உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன். சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே, (1.1.7) என்று பஞ்ச பூதங்களின் இயக்கத்தைத் தெளிவு படுத்துகின்றார் நம்மாழ்வார்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து இயற்கை நிலைகளோடு கலந்து கிடப்பவன் இறைவன். உடலில் உயிர் தாங்கி அதனை எவ்வாறு இயக்குகின்றதோ, அதைப் போலவே, இறைவனும் பஞ்சபூதங்களையும் தனக்கு உடலாகக் கொண்டு, அவைகளுக்கு உயிராக நின்று அவைகளை இயக்குகின்றான். *'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது'* என்ற ஆத்மீகத் தத்துவப் பழமொழி இக்கருத்தின் அடிப்படையில் அமைந்ததே.

இறைவன் பஞ்ச பூதத் தொடர்பினன். இதனை ஞானிகளே உணர்வர். சாதாரண மக்களுக்கு இத்தத்துவப் பொருள் புலனாகாது. அனுமன் பஞ்ச பூதங்களோடு தொடர்பு கொண்டுள்ளது அனைவர்க்கும் எளிதில் புலனாகும். இராமாயணக் கதையைக் கேட்பவர் யாராயிருந்தாலும், அவர் அனுமன் பஞ்ச பூதங்களோடு எப்படித் தொடர்பு பெற்றுள்ளான் என்பதை உணர்வர்.

அனுமனது வாழ்க்கை வரலாறே ஐந்து நிலைகளோடு இயைந்ததாகும். இந்த வீர அனுமச் செல்வனது பஞ்ச பூதத் தொடர்பு, இராம காதையில் உயிராக நின்று உலவுகின்றது என்று சொல்லலாம்.

அனுமனது பிறப்போ, எது ஒன்று இல்லையேல் உலக இயக்கம் இல்லையோ. அந்தக் காற்றின் அம்சத்தைப் பெற்றது. வாயுபுத்திரன் அல்லவா அனுமன்? அஞ்சிலே ஒன்று காற்று.

வாயுவை (காற்றை) மேன்மேலம் வளர்ப்பது அதற்கு நெருக்கமாக இருப்பது எது? நெருப்புத்தானே! அந்த நெருப்பை, அதர்மம் வளர்ந்து வரும் அயலாரது (பகைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் வைத்தான் இந்த வீரன். தனக்கு வைத்த தீயைக் கொண்டே அதர்மம் பெருகிய நாட்டை அழித்தான் இவன். *'சுட்டது குரங்கு எரி சூறை ஆடிட'* என்று இலங்கை மன்னன் இராவணன் மனம் நொந்து போகும் வண்ணம், அஞ்சில் ஒன்றாகிய தீ வைத்துக் கொளுத்தப்பட்டது அந்த அதர்ம நகர்.

நெருப்புடன் தொடர்பு கொள்வதற்கு அனுமனுக்கு வாய்ப்புக் கிட்டியது எப்படி? இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதா பிராட்டியைக் கண்டு வர, இராம தூதனாய்ச் செல்லும் பாக்கியம் கிடைத்தது அனுமனுக்கு. அந்தச் சீதா பிராட்டியோ, அஞ்சிலே ஒன்றாகிய பூமியில் (நிலத்தில்) உதித்தவள். பிராட்டியைத் தரிசித்ததன் மூலம் அனுமன் பூமித் தொடர்பினனாகவும் ஆகின்றான்.

நிலத்தில் நிற்பது நீர். நீர் நிறைந்த கடலைத் தாண்டுகின்றான் அனுமன். அஞ்சிலே ஒன்றைத் தாவியதன் மூலம், இந்த வீரன், நீரோடு தொடர்பு கொண்டவன் ஆகின்றான்.

இந்த நான்குக்கும் அப்பாற்பட்டு, மேலே நிற்பது ஆகாயம். வான் வழியாகத் (அஞ்சிலே ஒன்று ஆறு ஆக) தான் கடலைக் கடந்தான் இந்த அனும வீரன்.

இவ்வாறு, அனுமன் பஞ்ச பூதங்களோடு தொடர்பு கொண்டு இயங்கியதால் தான் இராமகாதை இயக்கம் நடைபெறுகின்றது. இவ்வாறு பஞ்ச பூதங்களோடு தொடர்பு கொண்ட கதா பாத்திரம் அனுமன் ஒருவனே. அதனால் கவிச்சக்கரவர்த்தி அனுமனுக்குத் துதி பாடினான் எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அனுமன், தூதன், தொண்டன், தெய்வம் எனும் பரிணாமம் பற்றிய சில இலக்கியச் சிந்தனைகள்"

வாகீச கலாநிதி, கனகசபாபதி நாகேஸ்வரன், எம், ஏ.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் படைத்த இராமன் எனும் பெரும் பாத்திரம், தூதுவனான அனுமன் பாத்திரத்தைப் பார்த்து "நீயார்" என வினவ, அக் கேள்விக்கு அனுமன் இறுத்த பதிலினை இரண்டு பாடல்களிலே இராமாயணத்திற் காணுகிறோம்.

*"மஞ்சு எனத் திரண்ட கோல மேனிய! மகளிர்க்கெல்லாம்*
*நஞ்சு எனத் தகைய ஆகி நளிர் இடும் பனிக்குத் தேம்பாக*
*கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண! யான் காற்றின் வேந்தற்கு*
*அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அனுமன் என்பேன்"*

*"இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்*
*செம்மலுக்கு ஏவல் செய்வேன் தேவ நும் வரவு நோக்கி*
*விம்மல் உற்று அனையான் ஏவ வினாவிய வந்தேன் என்றான்*
*எம் மலைக் குலமும் தாழ இசை சுமந்து எழுந்ததோளான்"*

(அனுமப்படலம், செல் 15, 16)

அனுமன் பற்றிச் சிந்திக்கும் போது, இக்கட்டுரையில் வரும் கருத்துக்கள் அவனைத் தூதன், தொண்டன், தெய்வம் என்ற மூன்று நிலைகளிலேயும் கண்டு கொள்வதாக அமையும். இலக்கிய நோக்கிலே தூதும், தொண்டும் செய்த அனுமனைப் பக்தி நோக்கில் 'தெய்வம்' எனும் கருத்து நிலைக்கு உயர்த்திப் பார்ப்பது இன்றைய காலகட்டத்தின் அத்தியாவசிய தேவையாகவும் உள்ளது. ஏனெனில் 'தெய்வம்' எனக் 'கருணை' காட்டுவோர் நம்மத்தியிலே அருந்தலாகி வருவதனாலே நமது கருத்துக்களும் அனுமத் தெய்வத்தைக் காண முற்படுகிறது. 'சிவனடியார்' 'சிவனே' என்னுங் கருத்தின் அத்தனை கோலங்களையும் சிந்தனைகளையும் இங்குபொருத்திப் பார்ப்பது மிகமிக அவசியமாகும். "சிவகைங்கர்யம்", "பகவத் கைங்கர்யம்" இரண்டுமே தொண்டுப் பயனாய் விளைவனவேயாம். பக்தியும் பக்தன் அன்பும் "பரம்பொருளின்" திருவருளாகவே நமது சமயம் பாவனை பண்ணிவந்துள்ளது. எனவே அடியார்க்கு அன்பிலாதோர் ஆண்டவனுக்கும் அன்பு காட்டமாட்டாதவர்கள் என்ற கருத்து உளங் கொளத்தக்கது. சமய வரலாறும் இலக்கிய வரலாறும் நமக் குணர்த்தும் தெளிவு தான் பக்தி நடைமுறை; பயனளிக்கவல்லதும் அஃதே எனவே தான் இக்கட்டுரைக் கருத்துக்கள் வெறும் பாத்திரம் (Character) சார்ந்தது என்று மட்டும் வாசகர்கள் கொள்ள வேண்டியதில்லை. மாறாக 'வாழ்வின் வெற்றிக்கு' வாழ்வின் செம்மைக்கு வாழ்வின் அமைதிக்கு வழிகாட்டும் பாங்கிலே நோக்கியமைவது மிக்கபெரும் பயன் தரும்.

'பக்த அனுமன்' இராமனை விழித்து, தான் வாயு தேவனுக்கு அஞ்சனைவயிற்றில் பிறந்தவன் என்றும், தன் பெயர் அனுமன் என்றும் சொல்வதாக அனுமப் படலத்தின் முதற்பாடல் கம்பராமாயணத்தில் அமைந் துள்ளது. அனுமன் இராமனை விழிக்கும் போதே அவனுடைய மூன்று தனித் தன்மைகளை எடுத்துக் கூறி விடுகிறான். இப்போது தான் முதன் முறையாக இராமனைப் பார்க்கும் அனுமன் மனதில், அவனுடைய தோற்றம், தன்னை நோக்கும் அவனுடைய கண்ணும் அழுத்தமாகப் பதிந்து விடுகின்றன. எனவே நீ, "மஞ்சு எனத் திரண்ட கோல மேனியன்" என அவனை வர்ணிக்கிறான். நீர் கொண்ட காளமேகம் போலத் திரண்ட அழகிய மேனி அவனுடைய மேனி. அம்மேனி, நிறத்தாலும், குளிர்ச்சி யினாலும், கவர்ச்சி யினாலும் நீல மேகத்தினை உவமையாகச் சொல்லத் தருவதாயிற்று. இராமனுடைய கண்களோ கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்கள் . அதாவது தாமரையை ஒத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்திருக்கும் சிவந்த கண்கள். அந்தத் தாமரையோ சாதாரணமான தாமரையன்று. பனிக்குக் குவிந்து பகலவனைக் கண்டுமட்டும் மலர்கின்ற தாமரை. ஆனால் இராமனுடைய கண்களுக்கு ஒப்புமையாகச் செய்யப்பட்ட தாமரையோ பனிக்கும் வாடாது. என்றுமே செவ்வி பெற்று மலர்ந்திருக்கும் தாமரை. இதைத்தான் 'நளிர் இரும்பனிக்குத் தேம்பாக் கஞ்சம் ஒத்து' என்று அனுமன் கூறிச் சிறப்புச் செய்கிறான். இரண்டாவது பாடல், அனுமன் தான் சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன் என்றும், அந்தச் சுக்கிரீவன் இராம இலக்குவருடைய வரவைக் கண்டு கலக்கமடைந்து ஏவியதனால் தெரிந்து போக வந்ததாகவும் சொல்வதாக அமைந்திருக்கிறது.

அனுமனுடைய தோற்றமும் அவனுடைய மறுமொழியும் இராமனை வெகுவாகக் கவர்ந்து விடுகின்றன. அவன் தோற்றத்தையும் சொல்லையும் ஆராய்ந்து அனுமனை நிதானிக்க முற்படுகிறான். இராமன் "இவனை விடச் செவ்வியோர் இலர்" என்றும் "ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லையாம்" என்னும் முடிவுக்கு வந்து, தன் தம்பியாகிய இலக்குவனிடத்து அனுமனைப் பற்றிச் சில சொல்கிறான். அனுமன் கல்லாத கலையும் வேதக் கடலும் உலகத்து எங்குமில்லையென்பதை இவன் சொல்லே காட்டிற்றல்லவா? யார் கொல் இச் சொல்லின் செல்வன்? பிரம்மனோ? சிவனோ? இவனுடைய படிவம் மாணியாடம் படிவம் அன்று. இவ்வுலகுக்கெல்லாம் ஆணி எனத்தருபவன். ஆற்றலுக்கேற்ற சேணுயர் பெருமை தன்னைச் சிக்கு அறத் தெளிந்தேன். இவ்வுலகத்திலுள்ள முனிவர், வானவர், ஆகியவர்களிடையே இவனையொத்த சொல்திறம் உடையார் யார் உளர்? சுருதியின் தொகுதியாகவும் முற்றுற அறிந்த இடம் மாணியின் மொழிக்கு எதிரே திரிமூர்த்திகளுடைய ஆற்றலும் அரிதாகும் என்று இராமன் இலக்குவனிடத்துக் கூறிய பின்னால் அனுமனது பெரிய வானர உருவத்தைக் கண்ட இராமன்,

*"கீழ்ப்படா நின்ற நீக்கி கிளப்ப அரிது ஆகி என்றும்*
*நாட்படா மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும்*
*கோட்படாப் பதமே ஐய! குரக்கு உருக்கொண்டது "*

என்று வியந்துரைக்கின்றான்.

(அனு. செய் : 33)

அனுமனைத் துணையாகப் பெற்றதன் காரணமாகத் தனக்கு நம்பிக்கை பிறப்பதாகவும். தன்னுடைய துன்பமெல்லாம் தீர்ந்து தான் இன்பம் எய்திவிட்டதாகவும் சொல்கிறான்.

*"நல்லன நிமித்தம் பெற்றோம் நம்பியைப்பெற்றோம் நம்பால்*
*இல்லையே துன்பம் ஆனது இன்பமும் எய்திற்று'* என்று சொல்கிறான்.

முதற் சந்திப்பிலேயே இராமன் அனுமனை ஒப்பற்ற ஆற்றல் பெற்றவனாகவும், கலைக்களஞ்சியமாகவும், வேதக் கடலாகவும் அறிவின் ஊற்றாகவும், சிறந்த ஞானியாகவும் சொல்லின் செல்வனாகவும் ஒப்பாரும் மிக்காருமற்ற செவ்வியோனாகவும் கணித்து அவனிடத்து எல்லை யில்லா நம்பிக்கையும் அன்பும் வைத்து விடுகிறான். அவனைப் பெற்றமையினால் தன் துன்பங்களெல்லாம் தீர்ந்து விட்டதாகவும் தனக்கு இன்பம் வந்துள்ளதாகவும் எண்ணமிடுகிறான். இந்த நம்பிக்கை தான், பின்னர் வானர வீரர்கள் சீதையைத் தேடிப் பல திசைகளிலும் சென்ற போதுதென் திசைக்குச் செல்லவிருந்த அனுமனைத் தனியே அழைத்துச் சென்று, சீதையின் அங்க அடையாளங்களைக் கூறித்தன் மோதிரத்தையும் அளித்து, "அறிஞ! இனிதின் ஏகுதி, நின் வினையெல்லாம் முடிக" என்று விடை கொடுத்தனுப்புமளவுக்கு இராமனை இட்டுச் செல்கிறது. இராமனின் இச்செயல், அவன் அனுமனுடைய திறமையில் வைத்திருந்த மதிப்பையும் அவனால் தான் சீதையைக் கண்டு திரும்பமுடியும் எனக் கொண்டிருந்த நம்பிக்கையும் நன்றாகக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்குச் சென்று சீதையைக் கண்டு திரும்பிவந்த அனுமன் அதனை முதலில் இராமனுக்குக் குறிப்பினால் உணர்த்துகிறான். பின்னர், தான் கண்டு வந்த சீதையைப் பற்றியும் அவளுடைய கற்பு நிலைபற்றியும் விரிவாகப் பேசுகிறான். சீதை உயிருடன் இருக்கிறாள் என்பதையும் தெரிந்த இராமன், மகிழ்ச்சியடைகிறான்.

எழுபது வெள்ளம் வானரச் சேனைகளும் சீதை இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதற்காகப் பல திசைகளிலும் செல்லுகின்றன. அங்கதன் முதலியவரோடு அனுமன் தென் திசை நோக்கிச் செல்கிறான். அப்போது அனுமனைத் தனியே அழைத்துச் சென்று சீதையை அடையாளம் கண்டு கொள்வதற்காக அவளுடைய அவயவங்களை இராமன் வருணித்துக் கூறுகிறான். அனுமன் பிரம்மச்சாரி, திருமணமாகதவன். அத்தகை யவனிடத்தில் அடியிலிருந்து முடிவரையில் சீதையை வருணித்து இராமன் வெளிப் படையாகக் கூறுவானானால் அனுமனுடைய தூய்மையிலும் திறமையிலும் இராமன் கொண்டிருந்த பெரும் நம்பிக்கையையே இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

அரக்கியர் கூட்டத்தினிடையே அவள் வருந்தியிருக்கிறாள். புலிக் கூட்டத்தினிடையே அகப்பட்ட மானின பேடை போல இருக்கிறாள். விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்புதல், வெருவல், எழுதல், எங்குதல், இரங்குதல், இராமனை எண்ணித் தொழுதல், சோருதல் துளங்குதல், துயருழந்து உயிர்த்தல், அழுதல் அன்றி மற்று அயல் ஒன்றும் செய்குவது அறியாள். இடையறாது நீர் ஒழுகுவதன் காரணமாக அவள் கண்கள் மழைக் கண்களாகவே இருந்தன. சுருதிநாயகன் வரும் வரும் என்பதென்ற துணிவால் அவ்வகையை எதிர்நோக்கி எல்லாத்திக்குகளையும் அளாவிப்பார்க்கிற கண்களை உடையவளாக இருக்கிறாள். கண்ணீரால் குளித்தன்றி வேறு குளித்து அறியாதவள்.

சீதையினுடைய தூய்மையைக் கண்டு அனுமன் பெருமிதம் கொண்டு தன்னுள்ளே பேசிக் கொள்கிறான். அருந்தவம் செய்பவர்களும் கற்புநிலை தவறாத இந்தச் சீதைக்கு ஈடாகார் என்கிறான். சீதை தோன்றியதால் உயர் குடிப் பிறப்பும் பெண் பிறப்பும் நாணமும் தவம் செய்து சிறந்தன. இங்கே சீதை செய்யும் மாட்சிமையுடைய தவத்தைக் காண இராமன் நோற்றிலன் என்கிறான். இத்தகைய தவத்தை வேறுயார் ஆற்றுவார் என்று ஆச்சரியப்படுகிறான். அதற்கான காரணத்தையும் அவன் எடுத்துக்காட்டத் தவறவில்லை. இராவண னுடைய ஐஸ்வரியமோ எல்லையற்றது. அரக்கர் தீமையோ அளவற்றது. இரவும் பகலும் அவர்கள் அரக்கர் கோனுக்கு அடிமைத் தொழில் செய்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் கற்புத் தவறாதிருத்தல் எந்தப் பெண்ணுக்கும் கூடுமோ என்று தன்னைத் தானே கேட்டு "வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்" என்கிறான்.

இந்த நிலையில் அரக்கர் கோனான இராவணன் அலங்காரத்துடனும் ஆடம்பரத்துடனும் சீதையிடம் வந்து தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள் கிறான். சீதை இராவணனை நிந்தித்து அவனுக்கு அறிவுரை கூறுகிறாள். இராவணன் சீதையை அச்சுறுத்திச் சென்று விடுகிறான்.

இராவணன் சென்ற பிறகு சீதை பலவாறு புலம்புகிறாள். தான் இறப்பதே தகுதி என்று தீர்மானிக்கிறாள். உலகம் என்னைப் பழிக்கும் படி உயிர் வாழ்ந்திருப்பது சுவர்க்கம் பெறவோ என்கிறாள். மாயமானுக்குப் பின்னால் கணவனை அனுப்பிவிட்டு இலக்குவனைக் கடுஞ் சொல் கூறி அவனைத் தேடிப் போகும் படி செய்து விட்டு நஞ்சனையானாகில் இராவணன் அகம் புகுந்த பெண்ணாகிய நான் பிழைத்திருத்தலையும் உலகம் ஏற்றுக் கொள்ளுமோ என்கிறாள். இராமன் அரக்கர் கூட்டத்தை அழித்துத் தன்னைச் சிறை மீட்டபோதிலும் தான் இலங்கையில் வதிந்த காலத்துக் கற்பு நிலையை அவனுக்கு நிரூபித்துக் காட்டுவேன் என்றெல்லாம் எண்ணித் தன் உயிரைமாய்த்துக் கொள் ளுதலே செய்யத் தக்கதென்று முடிவுக்கு வந்து, தற்கொலை செய்து கொள்வதற்காக 'மாதவிப் பொதும்பர்' புகுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சமயத்தில் 'அண்டர் நாயகன் அருள் தூதன் யான்' எனச் சொல்லிக் கொண்டு அவள் முன் அனுமன் தோன்றுகிறான். பல செய்திகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இராமனுடைய கணையாழியைச் சீதையிடம் கொடுத்து விட்டு அவளுடைய சூடாமணியைப் பெற்றுக் கொண்டு இலங்கையைக் கொளுத்திவிட்டு இராமனிடம் அனுமன் திரும்புகிறான் தான் தற்கொலை செய்து கொள்வதினின்றும் அனுமனால் தடுக்கப்பட்ட சீதை ஒரு திங்களில் இராமன் வந்து தன்னைச் சிறைமீட்காவிட்டால் தன் உயிரை மாய்த்துக்கொள்வேன் என்று சொல்லி அனுப்புகிறாள். தென் திசையிலிருந்து திரும்பிய அனுமன் தனது முடிவைக் குறிப்பினால் உணர்த்துகிறான். இராமன் முன்னிலையில் தலை தாழ்ந்த வனாகவும் வாய் புதைத்தவனாகவும் எப்போதுமே இருப்பது அனுமனின் வழக்கம். இராமனிடம் அனுமனுக்கு அத்துணைப் பக்தி.

அனுமன் இப்போது இராமனது திருவடிகளைத் தொழவில்லை. மாறாகச் சீதை இருக்கும் தென் திசையை நோக்கித் தன் தலையைத் திருப்பிக் கைகளைத் தூக்கி கொண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்குகிறான். தன்னுடைய பாதங்கள் இராமனை நோக்கி நீட்டப்பட்டுத் தென் திசையிலிருக்கும் சீதையை நோக்கி அனுமன் வீழ்ந்து வணங்குகிறான். இராமனுக்கெதிரே தன்னுடைய பாதங்கள் இருக்க அனுமன் சீதையை விழுந்து வணங்குகிறான் என்றால் சீதையினுடைய கற்பையும் தூய்மையையும் எந்தளவுக்கு அனுமன் போற்றினான் என்பது தெற்றென விளங்கும். இத்தகு செயலினால் இராமனை விட உயர்வாகச் சீதையைத் தான் கருதுவதாக அனுமன் காட்டி விடுகிறான். கற்பினுக்கு அணியைக் கண்களினாலே கண்டதாகக் குறிக்கிறான். "என் பெருந்தெய்வம்" என்று அவளைக் குறிப்பிடுகிறான்.

*"உன் குலம் உனதாக்கி உயர்புகழ்க்கு ஒருத்தி ஆய*
*தன் குலம் உனதாக்கி தன்னை இத் தனிமைசெய்தான்*
*வன் குலம் கூற்றுக்கு ஈந்துவானவர் குலத்தைவாழ்வித்து*
*என்குலம் எனக்குத் தந்தாள்"*

என்று கூறுகிறான்.

*"வீங்குநீர் இலங்கை வெற்பில்*
*நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்*
*இற்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்*
*கற்பெனப்பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்"* என்று அனுமன் சீதையின் உயர் நிலையைக் கூறுகிறான்.

*"கண்ணினும் உளை நீ; தையல் கருத்திலும் உளை நீ*
*வாயின் எண்ணினும் உளை நீ"*

சீதையின் மேனியைத் தீண்ட அஞ்சித்தான் இராவணன் சீதையை மண்ணோடும் பெயர்த்துக் கொண்டு போனான். ஒரு பெண்ணின் எண்ணத்திற்கு மாறாக அவளைத் தொட்டால் அவன் தலை தெறித்து விடும் என்ற சாபத்தின் காரணமாகச் சீதையை இராவணன் தீண்டிலன். என்பதையும் இராமனுக்கு உணர்த்துகிறான். இங்கு இராவணனின் சிவ பக்தித்திறன் உள்ளார்த்தமாகப் பேசப்படுகிறது. இராவணன் மாண்ட செய்தியை அனுமன் சீதையிடம் சென்று சொல்கிறான்; ஆடுகிறான்; பாடுகிறான்; சோபனம் கூறுகிறான். செய்தி கேட்ட சீதை பூரிக்கிறாள். களிப்பு மிகுதியால் ஒன்றும் சொல்லமாட்டாமல் வாளா விருக்கிறாள். சீதை வாளாவிருப்பதற்குக் காரணம் கேட்ட அனுமனுக்கு, எப்படி நன்றி சொல்வது என்று தெரியாததாலேயே வாளாவிருப்பதாகச் சீதை சொல்கிறாள்.

*"கடல் கடந்தது எப்படி?'* எனச் சீதை கேட்க அனுமன் தன்னுடைய பேருருவைக் காட்டுகிறான். அப்பேருருவைக் கண்ட சீதை "அரக்கர்கள் அழிந்தனர்" என உவகை கொள்கிறாள். "இவ்வுருவைக் கண்டு அஞ்சினேன் அடங்கிக் கொள்" என அனுமனை வேண்டுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுடைய அருளும் புகழும் அழிவின்றி "ஊழிபலவும் நிலை நிறுத்தற்கு ஒருவன் நீயே உளையானாய்" என்று கூறுகிறாள். அனுமனுடைய உரு, அறிவு, ஆற்றல், ஐம்புலச் செறிவு, செயல்: தேற்றம், தேற்றத்தின் நெறி, நினைவு ஆகியவற்றைப் பார்க்கும் போது விரிஞ்சன் முதலியோரும் அவன் முன்னே வெறுமையர் அன்றோ என்று வியக்கிறாள்.

"அரக்கருடைய எண்ணிக்கையும் பலத்தையும் பார்த்து இலக்குவனையன்றி இராமனுக்கு வேறெவரும் துணையாக இல்லையே என்று மனம் கலங்கி நான் கொண்டிருந்த ஐயம் இப்போது ஒழிந்தது. ஆபத்தினின்றும் உயிர்பெற்று விட்டேன். எனக்கு இனி என்ன குறை இருக்கிறது? நீயே இராமனுக்குத் துணையாக இருக்கும் போது அரக்கருடைய கதியைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?" என்கிறாள். "உயிர் தந்தாய்" என்று அனுமனைவிழித்தாள். " என் தோள் மேல் ஏறிக் கொள்" என்று அவளை வேண்டினான். இக்கட்டத்தில் சீதையைக் கம்பன், அறிவு, அனுபவம், அன்பு மனிதப் பண்பு மனோத்தத்துவ உணர்வு எல்லாம் வாய்க்கப் பெற்ற உத்தம பத்தினிப்பெண்ணாகக் காட்டுவான். இவ்விடத்திலே அனுமன் தொண்டின் சிகரனாக மிளிர, சீதை தமிழ்ப் பண்பாட்டின் பெருஞ் சிகரமென விளங்குகிறாள்.

சீதை பதிலுக்கு,

"நீ சொன்ன செயல் உனக்கு அரியதன்று: உன் ஆற்றலுக்கு ஏற்றதே: நீ சொன்னதைச் செய்து முடிக்கும் வல்லமையுள்ளவனும் கூட, ஆனால் என்னுடைய பெரிய பேதமைச்சில் மதிப் பெண்மையில் நீ சொல்வது உரியது அன்று ஓர்கின்றது உண்டு" என்று சொல்கிறாள்.

சீதை 'நிராகரித்து உரைக்கும்' கருத்துக்கள் இன்றும் நமது தமிழ்ச் சமுதாயத்தினர் குறிப்பாகப் பெண்கள் கற்றறிந்து பின்பற்றுவது பொருந்துவதாகும்.

I. நீ என்னைத் தூக்கிக் கொண்டு கடலைக் கடக்கும்போது அரக்கர் உன்னைத் தொடர்ந்து வந்து வளைத்துக் கொண்டு உன்மேல் அம்புகளைத் தொடுத்துப் போர் செய்வார் களேயானால், தனியாகவிருக்கின்ற நீ என்னைக் காக்க வேண்டிய நிலையிலும் அரக்கர்களோடு போர் செய்ய வேண்டிய நிலையிலும் தடுமாறக்கூடும்.

II. நீ என்னைத் தூக்கிக் கொண்டுபோய் இராமனிடத்துச் சேர்த்துவிடுவாயானால் இராமனுடைய வென்றி வஞ்சினம் மாசுறும். நான் இச் சிறையிலிருந்து மீள்வது மாத்திரம் முக்கியமாக இருந்தால் இந்த இலங்கையை மட்டுமன்று

*"எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்*
*சொல்லினால் சுடுவேன்: அது தூயவன்*
*வில்லின் ஆற்றற்கு மாசென்று*
*வீசினேன்"*

(சுந்தரகாண்டம்: 13)

III. அரக்கர்கள் எங்களை வஞ்சித்தல்லவா என்னை இங்கே சிறை எடுத்து வந்தவர்கள்? அவ்வரக்கர்களோடு போர் செய்து அவர்களை வெற்றி கண்டு நான் சிறைமீட்கப்படாமல் உன்னால் தூக்கிச் செல்லப்படுவோமேயானால் அவர்களுடைய வஞ்சனையையும் கீழ்மை யையும் நாமும் செய்தவர்களாக மாட்டோமா?

"வஞ்சித்த நாய்களின் நின்ற வஞ்சனை நீயும் நினைத்தாயோ?" – என்பது

IV. என்னுடைய கணவனாகிய இராமனது மேனியைத் தவிர வேறு எந்த ஆடவனுடைய மேனியையும் நான் தீண்டுதல் கூடுமோ? நீயும் ஓர் ஆண் அல்லவா? எனக் கூறத் தொடங்குகிறாள். இப்படிக்கூறும் போது அனுமனுடைய உள்ளம் புண்படுமோ? என்னும் எண்ணமும் உடனே தோன்றுகிறது. எனவே அனுமன் உள்ளம் புண்படக்கூடாது என்னும் நோக்கில் "மெய்ம்மைபோய்" என்று பஞ்சேந்திரியங்களையும் அடக்கியிருக்கிற உன்னையும் ஆண் என்று தானே உலகம் கூறும்" எனக் கூறுகிறாள் என்பது.

உலகம் என்னசொல்லுமோ என உன்னுகிறாள். அனுமனையும் ஓர் ஆண் என்றே உலகம்கொள்ளும் என்பதையும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனைத் தவிர வேறோர் ஆடவனைச் சீதை தீண்டினாள் என உலகம் சொல்லும் என்பதையும் எண்ணுகிறாள். அனுமன் சீதையைப் 'பெருந்தேவி' எனக் குறித்தான் மேலும் இராமனிடம் சொல்லுமாறு சீதை மனம் கசந்து சொல்லிய செய்திகள் சிலவற்றைக் கேட்டு அனுமன், அவளைப் பலவும் கூறித் தேற்றுகிறான். அவனுடைய உரையால் உளம் தேறிய சீதை, இராமனுக்குச் சில அடையாளங்கள் சொல்லுமாறு கூறுகிறாள். அப்போது தான் சூடாமணியையும் அவனிடம் கொடுக்கிறாள்.

இனி, அனுமன் பெருமைகளிலே மற்றொன்று,

வேதங்களனைத்தும் கற்று எல்லாக் கலைகளிலும் சிறந்து விளங்குபவர் சூரியபகவான். கல்வி வல்ல கதிரவனையே குருவாகக் கொண்டு அவர் செல்லுமிட மெல்லாம் தானும் உடன் சென்று அவரைத் துதித்து அவரருளால் அனைத்துக் கல்வியினையும் கற்றவன் அனுமன். ஆழ்ந்து கற்று அகல உணர்ந்து தன் அறிவைப் பெருக்கிக் கொண்டவன். "சொல்லின் செல்வன்" எனும் அரிய தமிழ்ப் பட்டத்தை யடைந்தவர் அனுமன்.

மேலும், அனுமன் புகழ் உரைக்கின்,

உற்பாதங்களைக் கண்டு நடக்கவுள்ளதை உணர்வதிலும் வல்லவன் அனுமன். ஊகித்தலில் வல்லவர்; சிந்தனைச் செல்வர்; கும்பன், மண்டோதரி, இராவணன் முதலியோரைக் கண்டவுடன் வெஞ்சினங் கொண்டாலும் உடனே அனுமன் செயலாற்றுவ தில்லை. தீரச்சிந்தித்தே செயலாற்றுகிறான். சித்தர்களைப் போல் சில சித்திகளைக் கைவரப்பெற்றவன் அனுமன். வேண்டிய பொழுது உடலைச் சுருக்கவும், பெருக்கவும் வாய்ப்புள்ள அரிய சித்திகளை அறிந்தவன். தனதுடலைச் சுருக்கியும் பெருக்கியும் கொள்ளத்தக்கவர்.

தன் சுற்றத்தாரைக் காக்கவும், கடலைக் கடக்கவும் இலங்கை மாமதிலைத் தாண்டவும், பின்னர் சீதையின் ஐயத்தைப் போக்கவும் வானரங்களிருக்குமிடம் திரும்பி வரவும் போரிடவும் மருத்துமாமலையை எடுத்து வரவும் இது போன்ற வேறு சில சமயங்களிலும் அனுமன் தன் உருவத்தைப் பெருக்கிக் கொள்கிறார். கடலைக் கடக்கும்போது எதிர்வரும் அரக்கியிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளுகையிலும் இலங்கையில் சீதையினைத் தேடுகையில் சில சமயங்களிலும் அனுமன் தன் உடலைச் சிறு உருவாகச் சுருக்கிக் கொள்கிறார்.

அனுமன் கடல் கடந்த போது,

நீரில் காணப்படும் அனுமரது நிழல் "கடலைக் கடந்து இலங்கை நகரில் சென்றடைந்தது" என்பான் கம்பன். பேருருத் தாங்கி வேகமாகச் செல்லும் அனுமனைச் 'சுரசை' என்னும் அரக்கி கடலினைடையே தடுக்கிறாள். அவள் அனுமனைத் 'தின்பேன்' என்று அச்சுறுத்த "அவ்வாறு செய்ய வல்லவளாயின் செய்" என்று கூறுகின்றான்.

அனுமனின் பிறிதொரு சாணக்கியம்,

சுக்கிரீவனின் அமைச்சரான அனுமனது அறிவாற்றலும் அன்பும் அவனை ஒரு நல்லமைச்சராகக் காட்டுகிறது. சுக்கிரீவனும் இராமனும் நண்பர்களாய்த் திகழ முதற் காரணமாக அவர் அமைகிறார். இராம லக்குவணரின் ஆற்றலை முதற் பார்வையிலேயே உணரும் அனுமன் அவர்களைக் கொண்டு தன் அரசனின் துயரைப் போக்க வழியுண்டாயிற்று என மகிழ்ந்தவர் போல இருவரையும் சந்திக்க வைத்து நட்பையுண்டாக்கக் காரணமாகிறார்.

இனி இன்றைய அரசியற் சூழலை ஞாபகமூட்டும் இலக்கியச் சம்பவம் காணுவோமாயின்,

ஓர் அரிய செயலை இருவர் சேர்ந்து செய்யும்படி நேரிடும் போது ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கைவைத்தல் வேண்டும். மற்றவர் ஆற்றலை இன்னொருவர் ஐயுறக்கூடாது. அவ்விருவருக்கிடையில் ஐயம் இருந்தால் அவர்கள் மேற்கொண்ட செயலை வெற்றி கரமாகச் செய்து முடித்தல் இயலாது. இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தவன் அனுமன். சுக்கிரீவன் இராமனது ஆற்றலை மனதில் ஐயுற்று நிற்கையில் அதை உணரும் அனுமன் அதனை அறவே நீக்க வேண்டும் என்று கருதுகிறார். எனவே ஏழு (07) மராமரங்களை இராமருக்குக் காட்டி, ஒரே அம்பால் அவற்றைத் துளைக்கச் செய்வித்துச் சுக்கிரீவன் ஐயத்தைப் போக்குகிறார். அவ்வாறே துந்துபியின் மலைபோன்ற எலும்புக் கூட்டைக் காலின் விரலால் தூர எத்துவித்து இலக்குவனின் ஆற்றலையும் உணர்த்துகிறார். சுக்கிரீவனின் ஐயம் அறவே நீங்கி, வாலியை வதைக்கும் வல்லமை அவர்களுக்கு உள்ளதென நம்பிக்கைக் கொண்டு புத்துணர்ச்சியைப் பெறுகிறான்.

இனி, அனுமனின் அரசியற் தந்திரம் பற்றி நோக்குவோமாயின் ,

அரசுரிமை பெற்ற சுக்கிரீவன் உலகை மறந்தவனாய்க் குடியிலும் போகத்திலும் ஈடுபட்டு ராமருக்கு அளித்த வாக்குறுதியை மறந்துவிடுகிறான். ராமனின் ஆணைப்படி இலக்குவன் மிகுந்த சினத்துடன் சுக்கிரீவன் இருக்குமிடத்திற்கு வருகிறார். சுக்கிரீவன் குடிபோதையில் மெய்மறந்து கிடக்கிறான். செய்வதறியாது அங்கதன் அனுமனை நாடுகிறான். நல்லமைச்சரான அனுமன் உடனே தாரையை இலக்குவன் முன் சென்றுஅவர் சினத்தைத் தடுக்குமாறு வேண்டுகிறார்.'ஓர் உணர்ச்சி(யை) உச்ச நிலையில் இருக்கும்போது வேறு ஓர் உணர்ச்சியைக் கொண்டு தாக்கினால் முதல் உணர்ச்சி குறையும். அவ்வாறே கோப உணர்ச்சிமேலோங்க ஊடுருவிவரும் இலக்குவனைத் துயர உணர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய விதவைவடிவில் தாரை சென்று வழிமறித்தால் மட்டுமே இலக்குவனின் கோபம் தணியும் என்று அனுமன் கருதுகிறான்.

அனுமன், மாற்றார் கூறும் கருத்தில் தவறைக்காணின் அல்லது தன் அரசருக்குத் தீங்கு ஏற்படும் என்று கருதினால் அதை மறுத்துக்கூறும் வல்லமையுள்ளவன்; மற்றவர்களோடு கருத்து மாறுபட அஞ்சாதவன்; நல்லதென்றால் அனை வருடனும் ஒத்துப்போவதில் தவறில்லை. ஆனால் தவறாகத் தோன்றின் தன் மனதிற் தோன்றுவதை அச்சமின்றி விருப்பு வெறுப்பின்றிக் கூறத் தயங்காதவன். அனுமனது அறிவு கூர்மையானது.

சிறந்த தூதுவன் தூது வந்த அரசரின் கோபச் சொல்லையோ பார்வையையோ கண்டு சிறிதும் அஞ்சான். சொல்ல வேண்டுபவற்றை அச்சமின்றி எடுத்துரைப்பான்.

"கற்றுக்கண் அஞ்சான் சொல்லச் சொல்லிக் காலத்தால்
தக்கதறிவதாந் தூது"

(திருக்குறள் : 586)

என்பது குறள் வகுக்கும் தூதிலக்கணம். இராவணன்முன் அனுமன் சற்றும் அச்சமின்றித் தான் கூறவேண்டியதை எடுத்துச் சொல்கிறார். இராவணனின் கோபச் சொல்லையோ, தீப்பார்வையையே அச்சுறுத் தலையோ கண்டு அனுமன் நிலை குலைவதில்லை முதலில் நன்மொழி மூலம் நல்வழிப்படுத்தமுயன்று முடியாதபோது இலங்கையை அனலாய் அழித்துவிட்டு இராமனிடம் திரும்புகிறான்.

இனி அனுமன் பணிவுடைமை வாய்க்கப்பெற்றவன் என்பது,

ஆற்றல்களிடையே செருக் கடைந்துளோர் பலர், தனது பலம் என்பதனாலே தலைதடுமாறியோர் இன்னும் பலர்,நட்பினால் பெருமை பெற்றுள்ளோர் சிலர், தன்னை வெளிக்காட்டி நின்று ஆணவச் செருக்குறுவோர் இன்னும் பலர்,

எனினும் அனுமன் தனது வலிமையையும் பெருமைகளையும் அறியாத வரல்லர் ஆயினும் அதனால் ஆணவமடையாது அமைதியுடன் விளங்குகிறார். இவரது பெருமைகளை மதித்துப் போற்றிப் பிறர் வேண்டும் வரையிலும் இவரது கருத்துக் களைக் கூறுமாறு கேட்குமட்டும் அனுமன் தானாக முன்வருவதையோ தன் கருத்துக் களை வலியுறுத்துவதையோ காண இயலாது.

அனுமன் அன்பின் இருப்பிடம், பேரன்பு ஊற்று. இலங்கைக்குக் கடல் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுகையில் மைநாகமலை எனும் மலையொன்று கடலினின்று மேலெழும்பி தான் வாயு பகவானிடத்திற்பெற்ற உதவியைக் கூறி வாயுபுத்திரனாதலால் அனுமரைத் தன்மீது சற்று நேரம் தங்கி இளைப்பாறித் தன்விருந்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறது. அன்பின் இலக்கணமான அனுமன் அதன் அன்பழைப்பை ஏற்றுக் கொண்டு இலங்கை யிலிருந்து திரும்புகையில் தவறாது அம்மனையில் தங்கி அதன் விருந்தை ஏற்பதாகக் கூறிச் செல்கிறார். சொன்ன சொல்லைக் காப்பாற்றுதலில் வல்லவரான அனுமன் பிறகு சீதையைக் கண்டபின்னர் அச்செய்தியை இராமருக்கு உடனே தெரிவிக்கவேண்டும் என்ற ஆவல் ஒரு புறம் அலைக்கழித்தாலும் அங்கதன் முதலான வானரர்களுக்கு அச் செய்தியைத் தெரிவிக்க வேண்டும் என்ற கடமையுணர்ச்சி ஒருபக்கம் கட்டுப்படுத்தினாலும் போரிட்டதால் குருதி சோரக் களைப்புற்றிருந்தாலும் முன்பு சொன்ன சொல்லை மறவாமல் மைநாகமலையில் தங்கி அதன் மனதைக் குளிர்விக்கிறார். இங்கும் நாம் அனுமனது அன்புள்ளத்தையே காணலாம். இன்னும் தான் கீழிறங்கி வந்து அருள் காட்டி அன்பைச் சொரிவதனாலேயே அனுமன் கடவுட்டன்மை பெற்றுத் திகழ்கிறார்.

தனதரசனான சுக்கிரீவன் பால் பக்தியும் அன்பும் கொண்டவர் அனுமன். சுக்கிரீவன் வாலிக்குப்பயந்து ருசிய முகமலையில் மறைந்து வாழும் நாட்களில் அவரது அமைச்சரான அனுமர் நகரிலேயே தங்கியிருக்காமல் சுக்கிரீவனுடன் தங்கி அவரது துயரத்தில் பங்குகொள்கிறார்.

பகைவரும் பாராட்டும் வீரம் கொண்டவன் அனுமன். இராவணனுடைய கணைகள் பத்தையும் தாங்கும் வலிமைபெற்றவன் அனுமன் கும்பகர்ணனை ஒரே குத்தில் தளரவைக்கிறான். கும்பகர்ணன் இலக்குவன் மீது எறிந்த வேலை ஒடிப்பிடித்து ஒடிக்கும் வல்லமை பெற்றவன் அனுமன் அத்தகு வீரமிகுந்த அனுமனைக் கண்ணுறும் வானரவீரர்கள், சுக்கிரீவன் இராமலக்குவர் விபீடணன் முதலியோர் வியந்ததில் கூட வியப்பில்லை. கும்பகர்ணன், இராவணன் இந்திரசித்து முதலிய அரக்கர்களும் வாலியும் கூட அனுமன் வீரத்தைப் பெரிதும் புகழ்வதைக் காணலாம்.

அனுமன் கருணைக் கடலென்பத னாலே தெய்வமாகிறான் அனுமன் கருணை வெகு பிரசித்தம். தன்னை எதிர்த்து வந்து போரிடும் சம்புமாலி போர்க்களத்தில் தனித்து நிற்கும் நிலையைக் காண்கிறார் அனுமர் உடனே கருணையுடன் "தனியாக உள்ள நீ திரும்பிச் செல்வாய்" என்று கூறுவதைக் காணலாம். இங்கே அனுமன் தெய்வப்பண்புக்கு உயர்கிறார்.

ராம நாமத்தின்மீது பேரன்பு பூண்டவர் அனுமன் திருமாலே பூவுலகில் இராமராக அவதரித்துள்ளார் என்றுணர்ந்த அனுமன் ராமநாமமே அனைவரையும் பாவச் சூழலிருந்து விடுவித்து உய்விக்கும் தாரகமந்திரம் என்பதையும் ஐயமற நம்புகிறார். இராம நாமத்தின் துணையால் அதன் உச்சரிப்பினால் பெறும் தெளிவால் எத்தனை துயரங்கள் தடைகள் வரினும் அவற்றைப் போக்கிக் கொள்ளலாம் என்பதை அறிந்தவர் அவர். "எங்கெல்லாம் இராம நாமம் ஒலிக்கிறதோ அங்கெல்லாம் அனுமன் இருப்பார்" என்பர்.

அனுமனுடைய செயல்கள் ஒப்புயர் வற்றன, வேறு யாராலும் செய்ய முடியாதன. இதன் காரணமாகத்தான் அனுமனை உலகம் தலை சிறந்த இராம பக்தனாகவும் இராமனுடைய தொண் டனாகவும், சேவகனாகவும் 'கொண்டாடுகிறது. போற்றுகிறது; புகழ்கிறது; வணங்குகிறது; "இராமனுடைய தொண்டன் அடிமை" என்பதைத் தவிர வேறு எந்தவிதமான உறவையும் இராமனோடு கொள்ளாதவன் அனுமன்.

"புண்டரிக மலரதன்மேல் புவனி யெல்லாம் படைத்தவனே திண்டிறலாற் தாடகைதன் உரமுருவச் சிலைவளைத்தாய் கண்டவர் தம் மனம் வழங்கும் கணபுரத்தென் கருமணியே எண்டிசையு மாளுடையாய் இராகவனே! தாலேலோ" என்றும், "பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

என்றும்,

*"குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்*
*படுதுயராயின வெல்லாம்*
*நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்*
*அருளொடு பெருநில மளிக்கும்*
*வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற*
*தாயினு மாயின செய்யும்*
*நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்*
*நாராயணவென்னும் நாமம்"*

என்றும்,

*"பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்*
*பதங்களும் பதில்களின் பொருளும்*
*பிண்டமாய் விரித்த பிறங் கொளியனலும்*
*பெருகிய புனலொடு நிலனும்*
*கொண்டல் மாமருதமும் குரைகடலேழும்*
*ஏழுமாமலைகளும் விசும்பும்*
*அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்*
*அரங்கமா நகரமர்ந் தானே"*

*"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
*அருக்கன் அணிநிறமும் கண்டேன் – செருக்கிளரும்*
*பொன்னாளி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்*
*என்னாழி வண்ணன் பால் இன்று."*

*"நாக்கொண்டு மானிடம் பாடேன், நலமாகத்*
*தீக்கொண்ட செஞ்சடையான் சென்று என்றும் – பூக்கொண்டு*
*வல்லவா றேத்த மகிழாத வைகுந்தச்*
*செல்வனார் சேவடி மேல் பாட்டு"*

*"நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்*
*சீரார் சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனானாய்*
*கூரார் ஆழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால்*
*வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே"* என்றும்

காத்தற்கடவுளான திருமாலின் பெருமைகளைச் சுட்டுகிறது நாலாயிரத் திவ்ய பிரபந்தம்.

இறுகப்புல்லித் தழுவும் ராமரும் அனுமரும் கடவுள் தொண்டன் எனும் நிலைப்பட்டதா? அல்லது பரிபக்குவமடைந்தவனுக்குக் கடவுள் கொடுக்கும் பதமா? அல்லது தொண்டன் பெருமையினாற் பெறும் சான்றிதழா? அல்லது சாணக்கியமிக்க, சாதுரியமிக்க செயல்கட்குக் கிடைக்கும் நற்சாட்சிப் பத்திரமா? அல்லது தவவலிமை கொடுத்த பெருவரமா! உலகம் இன்று. இத்தழுவலைப் பலமாகச் சிந்திக்கிறது. பல்கோணப் பார்வையுடன் பார்க்கிறது. அவரவர் புலமைக்கும், தகைமைக்கும், மனப்பரிபக்குவங்களுக்கு மேற்பச்சிந்திக்கத் துவங்கியுள்ளது. இன்னும் தழுவுதல், தடவுதல், பார்த்தல், பகிர்தல் எல்லாம் கடவுட் தன்மையின் அம்சமா? என்றெல்லாம் கேட்டு நிற்கிறது உலகம். 'உலகம் யாவையும் தாமுளவாக்கி அலகிலா விளையாட்டுக் காட்டுகிறான் ஆண்டவன். அதனால் இன்றும் கடவுளா? மனிதனா? அதிசயம் என்று நினைத்து ஆய்வு செய்கிறது சிற்றறிவு. பேரறிவு நம்பிக்கை, நடைமுறை, அனுபவத்தினால் அடங்கி நிற்கிறது. சிந்திக்கச் சிந்திக்கச் சிந்தனையை மேலும் துண்டும் 'சூக்குமம்' இவ்விடயத்தில் உண்மையாகிறதல்லவா அதுதான் 'தெய்விகம்.'

இராமனாகிய பரம்பொருள் பக்தனாகிய அனுமனுக்குத் தன்மார்பை அணைத்துக் கொள்ள வரமளிக்க முன்வருவார் எனின் அப்பக்தன் எவ்வளவு பேரன்புடையவனாக, பாக்கியவானாக இருக்கவேண்டும்!! அத்தகுபெரும் பேறு பெற்றவன் அனுமன். இராமன் அரசுரிமை பெற்று மணிமுடி கவித்தாளும் தருணத்தில் அனுமனுக்குத் தன்னை நெஞ்சு பொருந்த அணைத்துக் கொள்ள வரமளிக்கிறான். என்னே! அனுமன் பெற்றபேறு! தேவியே (சீதை) கலைமகள் தனக்களித்த பருமுத்து மாலையை அனுமனுக்குப் பரிசளிக்கிறாள். இத்தகு பெரும் பேறுகளை அடைய அனுமன் எத்துணை தவம் இயற்றியிருக்க வேண்டும்! என்று எண்ணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகிறதல்லவா? தெய்வமே தழுவியதால் அனுமனையும் தெய்வமெனக் கொள்வதிலே தவறுளதாமோ? அருள் அன்பைத் தழுவிய தென்றால் தெய்வத்துக்கு இழுக்காகுமோ?

இனிச் சிறிது ஒப்பாய்விலே நோக்குவோம், வான்மீகி அனுமனை ஒரு சிறந்த தொண்டராகப் படைத்திருக்கிறார். தமது காலத்திற்குள் அனுமன் ஒரு முக்கிய கடவுளாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் துளசிதாசர் அனுமனை ஒரு அவதார புருஷராகப் படைத்துள்ளார். கம்பன் இடைக் காலத்தில் இன்னொரு விதத்தில் அனுமனை அமைத்துள்ளார். காலத்தின் போக்கிலேற்பட்ட இந்திய சமுதாய வளர்ச்சியினையும் மக்கள் மனப் பான்மையையும் அறிய இவ் விலக்கியங்கள் ஏதுவாகின்றன.

கம்பன் காட்டும் அனுமன் மற்ற இருவர் படைப்பினில் உள்ளதைக் காட்டிலும் அறிவுச் செல்வராகப் படைக்கப்பட்டுள்ளார் (தூது). வான்மீகர் மற்றும் துளசி படைத்துள்ள அனுமன் சுக்கிரீவன் கேட்டுக் கொண்ட தன் பேரில் அவரது ஆணைக்கேற்ப இராம இலக்குவணர்களை இனங்கண்டு வரச் செல்கிறார். கம்பனோ, சுக்கிரீவன் அச்சத்தைக் கண்டு அவரைத் தேற்றிவிட்டு, தானாக அதுதன் கடமை என்பதை உணர்ந்தவராகச் செல்வதைக் காணலாம். இராமரிடம் அனுமர் ஒரு பிச்சைக்கார வடிவில் சென்றதாக வான்மீகரும் அந்தணர் உருவில் சென்றதாகத் துளசியும் அமைத்திருக்க. அறிவிற் சிறந்த மானி (பிரமச்சாரி) உருவில் சென்றதாகக் கம்பன் அமைத்துள்ளான். கம்பன் காட்டும் அனுமன் மட்டுமே கார்காலம் முடியும் வரையிலும் கூட இராமருடன் இருந்து தொண்டுபுரிய விரும்புவதாகக் கூறுகிறார். மற்ற இருவரின் படைப்பில் அத்தகைய குறிப்பில்லை. 'அனுமன் அமைப்பை'க் கம்பன் சிறப்பித் துள்ளமை போன்று வான்மீகியோ, துளசியோ சிறப்பிக்கவில்லை. 'அனுமரசம்', 'அனுமப் பிரபாவம்', 'அனுமகார்யம்', 'அனுமசாணக்யம்', 'அனுமன் தூது', 'அனுமன் தொண்டு', 'அனுமன் பக்தி', 'அனுமன் சொல்நுட்பம்', 'அனும தந்திரம்', 'அனுமனின் சொல்லாற்றல்', 'அனுமனின் தீர்க்கதரிசனம்', 'அனுமன் கருணை', 'அனுமனின் திட்டமிடல்' என்று இன்னும் எத்தனையோ துறைகளிலேயும் சிறப்பித்து ஆராயமுடியும்.

முடிவாக, இந்திய நாட்டிலேயும், ஈழத்திலேயும் பிற தென்னாசிய, தென் கிழக்காசிய நாடுகளிலேயும் ஏன் உலகு தழுவிய நிலையில் 'அனும வழிபாடு' இன்று செழித்து வளர்ந்து வருகிறதைக் காண முடிகிறது. சமுதாயம் வாயுவேகத்திலே சென்று கொண்டிருப்பதையே இப்போக்கு எடுத்துக் காட்டு வதாகிறது என்று பார்க்கினும் தவறில்லை. மனம்போன வேகத்திலே வாழ்க்கைபோக, வாழ்க்கை வேகத்துக் கேற்பவே வழிபாடும் கைகூடுகிறதென்பது உண்மைச் செய்தியாகிறது. 'தெய்வம், சமூகம் வேண்டும் போதும் வரும். என்பதற்குத் தக்கதொடு எடுத்துக்காட்டு – ஆஞ்சநேயர் றம்பொடை வெவண்டன் ஆலயம் – அனுமனின் அருள் அகிலமெங்கும் அமைதி தருவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டேன் அனுமனை !



தி. க. சந்திரசேகரன்

*மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், தமிழகம் - இந்தியா*

**வா**ன விமானத்திற்கென ஒரு நோக்கம் உள்ளது. அது விண்ணில் பறக்கவேண்டும். கடலில் மிதக்கும் கப்பலுக்கு ஒரு நோக்கம் உண்டு; அது ஒரு கரையிருந்து மறுகரைக்குச் செல்லக் கடலைக் கடக்க வேண்டும். தரையில் நிற்கும் பேருந்துக்கும் ஒரு நோக்கம் உண்டு; அது மக்களை ஏற்றிக் கொண்டு பல்வேறு நகரங்களுக்குச் செல்ல வேண்டும். ஒரு சிறிய பொம்மைக்குக் கூட அதனை வைத்து விளையாடும் குழந்தையை மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கம் உண்டு.

இறைவனால் படைக்கப்பட்ட, மனிதனால் உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் ஒரு நோக்கம் உண்டு. உயிரற்ற பொருட்களுக்கே இப்படிப் பல நோக்கங்கள் இருக்கும் போது, ஆறறிவு படைத்த மனிதனின் படைப்பில் எத்தனை நோக்கங்கள் இருக்கவேண்டும் ?

நாம் யார்? எதற்காக நாம் இம்மண்ணுலகில் பிறந்தோம்? நாம் எதை உருவாக்கப் பிறந்தோம்? எதைச் சாதிக்கப் பிறந்தோம்? நாம் இந்த மண்ணைவிட்டுப் போகும் போது, விலங்குகளைப் போல் நம் சந்ததியினரை மட்டுமே விட்டு விட்டு போகப் போகிறோமா?

*'வெந்ததை உண்போம்*
*விதி வந்தால் சாவோம் !'*

என்று வாழும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையா?

படைப்பின் இரகசியத்தைப் புரிந்து கொண்டவர்கள் மிகக் குறைவு ! அப்படிப் புரிந்து கொண்டபின் அதற்கேற்ப தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டு, வாழ்வாங்கு, வாழ்பவர்கள் ஒரு சிலரே ! அந்த ஒரு சிலர்தான், இலங்கை சின்மயா மிஷன் பொறுப்பாளர்கள், அவர்களுடைய பெரும் சாதனையின் விளைவாகத்தான் நான் கண்டேன் அனுமனை !

## ஏன் அனுமனுக்கு ஆலயம்?

நம் இந்து மதத்தில் எத்தனையோ கடவுள்கள் ! அவர்களுள் சிவன் – விஷ்ணு – முருகன் – கண்ணன் போன்ற கடவுளர் சிறப்பான நிலையில் உள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இக் கடவுளருக்குத்தான் அனேகக் கோயில்களும் உள்ளன. ஏன் இலங்கையில் இவ்வளவு அற்புதமான, 'இலங்கையின் திருப்பதி' என்ற பெயரைப் பெற இருக்கின்ற இத்திருத்தலத்தில் அனுமனின் சிலையை சின்மய மிஷன் நிறுவவேண்டும்.?

மிக எளிதில் கிடைக்கும் ஒரு விடை – 'சீதை சிறையிருந்த பகுதியான அசோகவனம்' நுவரெலியா பகுதியில் உள்ளது. அனுமன் சீதையைத் தேடி காலடி எடுத்து வைத்த மலைப்பகுதி இங்குதான். எனவே இங்கு அனுமனுக்குச் சிலை வைப்பது பொருத்தமானது'.

ஆனாலும் என் மனதில் நெருக்கடி கொண்டிருந்த கேள்வி இந்த அழகான இடத்தில் வெங்கடாஜலபதிக்கு ஒரு கோயில் வைத்திருந்தால் அடடா! ஒரு திருப்பதியையே இங்கு கொண்டு வந்திருக்கலாமே? வேண்டுமென்றால் கூடவே அனுமனுக்கும் ஒரு சிலை வைத்திருக்கலாம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!

ஆழமாகச் சிந்தித்த போதுதான் என் மனதில் பல எண்ணங்கள் தோன்றின. என்கேள்விக்கு விடை எனக்கே கிடைத்தது!

2000மாவது ஆண்டின், மார்ச் மாதத்தில் நானும், நண்பர்கள் திரு. பாரிவள்ளல், திரு. நாகராஜன் அவர்களும் கொழும்பு வந்தபோது, மிஷனின் தலைவர் எங்களை மிக்க ஆர்வத்துடன் றம்பொடைக்கு அழைத்து வந்தார். அவருடைய ஆர்வமும், ஈடுபாடும், அர்ப்பண உணர்வும் எங்களைத் தொத்திக் கொண்டன.

மிக, மிக அழகான, கம்பீரமான, உயரமான, தூய்மையான காற்றைச் சொந்தம் கொண்டாடிக் கொண்டிருந்த அந்த இடத்தில் அனுமனின் சுந்தர வடிவத்தைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தோம். இலங்கையின் வரலாற்றில் இடம் பெற்று விட்ட, புண்ணிய திருத்தலத்தை நெஞ்சம் ததும்பிய மகிழ்ச்சியில் தாள் பணிந்து, தரையில் வீழ்ந்து வணங்கினோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றம்பொடை அனுமன் ஆங்கே கால காலமாய் நிற்பார் ! மனிதர்கள் வரலாம் – போகலாம் – ஆனால் அனுமன் நீடித்து நிற்பார்.

தோட்டத்தில் நாளெல்லாம் தேயிலை பறித்துவிட்டு, வாட்டத்தில் நிற்கும் ஆயிரக் கணக்கான தமிழர்களுக்கு ஆதரவாய் நிற்பார். பல நூறு மைல் பயணம் செய்து, தாள் பணிய வரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு, நாளெல்லாம் அருள் புரிய அனுமன் அங்கே அழகாக நிற்பார். சிறுமை உணர்வுகளுக்குள் சிக்கி, சீரழிந்து கிடக்கும் சின்ன இதயங்களை உடைத்துச் சீராக்கிப் பேராற்றல் – பெரிய மனச் செம்மல்களை உருவாக்க அங்கே அனுமன் அழகாக நிற்பார்!

அனுமனோடு அங்கே சின்மய மிஷன் செயற் குழுவினரும் காலம் காலமாக, அங்கே வரலாற்றுச் சுவடிகளில் நிற்பார்கள். அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கு கின்றேன் !

சிறந்த மனிதர்களை அடையாளம் கண்டு கொள்வதற்காகவே, இறைவன் அளித்த வாய்ப்பால் நான் 'கண்டேன் அனுமனை!'

★ இன்றைக்கு நாடு முழுக்கத் தலைவர்கள், அதுவும் முழுக்க முழுக்க சுயநலம் பிடித்த தலைவர்கள். தன்னலம் கருததாத உண்மையான தொண்டர்கள் கிடைப்பது அரிது. அனுமன் போன்று எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் பணியாற்றிய தொண்டன் உண்டா?

★ எனவே 'நாம் நல்ல தொண்டர்களாக இருப்போம்' என்ற உணர்வை ஊட்டவே அனுமனுக்கு ஓர் ஆலயம்.!

★ இராமபிரானால் செய்ய இயலாத காரியங்களைக் கூடச் சிறப்பாகச் செய்து முடித்தவன் அனுமன்.இ ஏன் இராம, இலக்குவர்களைக் காத்ததும் அனுமனே ! எனவே தொண்டர்கள் செயலாற்றலால், தலைவனையும் விஞ்சி நிற்க முடியும் என்பதை உணர்த்திக் காட்டுகிறான் அனுமன்.

★ அனுமனுக்குத் தன் வலு – ஆற்றல் தெரியவில்லை ; தெரிந்து கொண்டபின் அவனால் கடலையே தாண்ட முடிகின்றது. ஆகவே, கம்பீரமான அனுமன் சிலையைக் காணும் போதெல்லாம் 'உன்னிடம் நிறைய ஆற்றல்கள் ஒளிந்து கிடக்கின்றன. புரிந்து கொண்டால் நீ உலகையே வெல்லலாம்' என்பதை அனுமன் சொல்லுவதாகத் தோன்றவில்லையா?

★ அனுமன் கடவுளல்ல; மனிதனுமல்ல; குரங்கினம் – விலங்கினம். ஆனால் இன்று நாமெல்லாம் கைகூப்பி வணங்கும், உயரிய தெய்வீக நிலையை அடைந்து விட்டான். ஆக எந்த இனத்தையும் சார்ந்த, எந்த நிலையிலும் உள்ளவரும், கடுமையான உழைப்பு, பணிவு, அர்ப்பண உணர்வுடன் உயரிய நிலையை அடையலாம்' என்று தூண்டுபவன் அனுமன்.

★ சீதை சிறைப்பட்டிருக்கிறாள். அவளை விடுவிக்க வேண்டுமானால் அனுமன் முயற்சி மேற்கொள்ள வேண்டும். இந்த முயற்சி இறுதியில் வெற்றியில் முடிந்தது. சற்று சிந்தனை செய்து பாருங்கள். இன்று சிறைப்பட்டிருப்பது மனித நேயம் என்கிற சீதை. உலகெங்கும் மனித நேயம் சிறையிலிருக்கிறது, எங்கு பார்த்தாலும் – துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், அணுகுண்டுகள், போராட்டம் – மரண ஓலம்; காரணம் மனிதனை மனிதன் நேசிக்க மறுப்பதே ! இனி நாம் அனுமன்களாக மாறி, மனித நேயத்தை விடுவிக்க வேண்டியதுதான். அனுமன் போல ஒருவர் கிளம்பினாலும், வானர சேனைகளாக மற்றவர் சேர்ந்து கொள்வார்கள். வெற்றி உறுதி! எனவே 'அனுமன் நம்மைப் பார்த்து முதலடி எடுத்து வையுங்களேன்' என்று கூறுவதாகத் தோன்றவில்லையா?

★ நம்மை நாமே குறுக்கிக் கொண்டு, நம் உணர்வுகளாலும், சிந்தனைகளாலும் அடக்கிக் கொண்டு வாழும் வரை ஒன்றையும் சாதிக்க முடியாது. சின்னச் சின்ன வலைகளைப் பிய்த்து எறிந்து விட்டு, சிலிர்த்தெழுந்து விஸ்ரூபம் எடுத்தால்தான் நாம் வானையும் வசப்படவைக்க மடியும்! அனுமன் விஸ்வரூபம் எடுத்ததால்தான் எத்தனை சாதனைகள் "ஏ, மூட மனிதா – முடங்கிக் கிடக்காதே ! எடு விஸ்வரூபம் ! உடை பல தடைகளை ! அடை பல நூறு வெற்றிகளை !" என்று முழக்கமிடும் அனுமனுக்கு ஆலயம். இப்படி 'அனுமன்' என்ற சொல் எத்தனையோ உணர்வுகளைக் கிண்டி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலும் குடமுழுக்கும்

கலாசூரி பேராசிரியர் சி. தில்லைநாதன்

'ஐயனாரே' என்று விழித்துக் கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள எனது கிராமமான சுன்னாகத்து மக்கள் பலர் துயில் நீங்கி எழுவார்கள். அக்கிராமத்திலே சிவனுக்கும், அம்மனுக்கும், பிள்ளையாருக்கும், ஐயனாருக்கும், வைரவருக்கும் கோயில்கள் உள்ளன. பல கோயில்களிலும் சென்று வழிபட்டவிடத்தும், ஒவ்வொரு தெய்வத்தைத் தம் வாழ்வோடு சிறப்பாகப் பிணித்துக் கொள்வது பல மக்களுடைய வழக்கமாகும். ஒரு விடயத்தை உறுதிப்படுத்த வேண்டிய விடத்து 'ஐயனாரறிய உண்மை' என்பார்கள். ஐயமோ வாதமோ எழுந்தவிடத்து 'ஐயனாரைக் கொண்டு சத்தியம் பண்ணு' என்பார்கள். சுன்னாகச்சந்தையில் வியாபார கருமங்கள் நிகழும் போது ஐயனார் நாமத்தை அடிக்கடி கேட்கக் கூடியதாக இருக்கும்.

அங்கு கோயில் கொண்ட ஐயனாரின் விக்கிரகம் தாழைமரப் பற்றைக்குட் கண்டெடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டதாலும் கோயிலின் பின்னால் தாழை மரங்கள் நிறைந்திருந்ததாலும் 'தாழைக்குள் அப்பனே' என்று அத்தெய்வத்தை விழிப்பதும் பெரு வழக்கமாயிற்று. ஐயனார் பெயரில் தோத்திரப் பாடல்களையும் ஊஞ்சற் பிரபந்த மொன்றினையும் மயிலணியில் வாழ்ந்த வரகவி முத்துக்குமார கவிராசர் இயற்றியுள்ளார். ஆதரவற்றவர்களுக்கு உதவிய அத் தெய்வத்தின் மகிமைகள் பலவாறாகப் பேசப்பட்டன. இரு விவசாயிகளுக்கிடையில் இடம் பெற்ற சண்டையில் ஒருவன் மற்றவனைக் கொன்று ஒருவரும் காணாத வகையில் வயல் வரம்புக்குட் புதைத்து விட்டானாம். ஐயனார் வயோதிபக் கோலத்தில் நீதிமன்றம் புகுந்து சாட்சி சொல்லிக் குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்தாராம். இப்படியான வரலாறுகளும், கோயில் கொண்டுள்ள தெய்வத்தின் வல்லமைகளையும் அருட் சிறப்புக்களையும் உறுதிப்படுத்தும் கதைகளும் அனேக ஆலயங்கள் சம்பந்தமாகவும் வழக்கிலிருப்பதை அவதானிக்கலாம். அவை சாதாரணமக்கள் மனதில் இறைபயத்தை உண்டு பண்ணவும், தகாதவற்றை அஞ்சித் தக்கவற்றை உவக்கும் மனப்பாங்கினை வளர்க்கவும் உதவியமை மனங் கொள்ளத்தக்கது.

கிராமங்கள் நகரங்கள் எங்கணும் மலிந்துள்ள கோயில்கள் எமது மக்களின் வாழ்வில் முக்கியமானதோர் இடத்தினை வகிக்கின்றன. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியும் வெகுபிரசித்தமானது. கடவுள் குடிகொண்ட இடம் கோயில் என்றும் மக்கள் வழிபடும் பொருட்டு அமைக்கப்படுவது அதுவென்றும் கொள்வர். என்றும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன் எனக்கருதப்படும் இறைவனுக்குப் பல்வேறு தோற்றங்களும் கோயில்களும் எதற்கு என்ற கேள்வி எழுவதுண்டு.

"உள்ளது ஒன்று அதனை ஞானிகள் பல்வேறு பெயர்களால் அழைப்பர்" என்று இருக்குவேதம் கூறிற்று. "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலான் " என்றார் மாணிக்கவாசகர் "கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே" என்றும் "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்றும் சிவவாக்கியர் பாடினார். உருவச் சிலை எதற்கு, கோயில் எதற்கு, குடமுழுக்கு எதற்கு என்ற கேள்விகள் இன்று நேற்று எழுந்தவை அல்ல. உருவ வழிபாட்டின் வரலாற்றைக் காட்டிலும் உருவ வழிபாட்டு மறுப்பின் வரலாறு நீண்டது. ஆயினும், உருவ வழிபாடும் கோயில் வழிபாடும் நிலைத்துப் பெருகியுள்ளன. மனதை ஓரிடத்தில் நிறுத்தி ஒரு முகப்படுத்தப் பெருவாரி மக்களுக்கு உதவுவன என்ற முறையில் கோயில்கள் வேண்டப்படுகின்ற வென்பர். அத்தகையதொரு தேவையினை அவை நிறைவேற்றுகின்ற காரணத்தினால் ஏராளமான மக்கள் கோயில்களை நாடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தால் உணர்வதென்பதும் உயர் ஞானம் ஈட்டுவதென்பதும் ஒரு சிலருக்குச் சாத்தியமாகலாம். ஆனால் பெரும்பாலான மக்களுக்குத் தேவைப்படுவது உலகியல் வாழ்விலே பிடிப்பு, நம்பிக்கை, ஆறுதல், கலகலப்புப் போன்றவை என்றே தோன்றுகின்றது. சொல்லப்படுவனவாயினும் சரிசெய்யப்படுவனவாயினும் சரி, யாருக்காக எனபதைப் பொறுத்து அவற்றின் தன்மை அமையும். விக்கிரகங்களிலும் கோயில்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைதி கண்ட மக்கள் தம் வாழ்விடங்கள் தோறும் கோயில்கள் அமைத்தனர். இயற்கைச் சக்திகளை ஒரு காலத்தில் வழி பட்டவர்கள் இயற்கை அழகு பொருந்திய ஆற்றங்கரைகளிலும், குளக் கரைகளிலும், குன்றுகளிலும் கோயில்களைக் கட்டலாயினர். காலகதியிலே தூர இடங்களி னின்றும் கண்டு தரிசிக்கக்கூடிய உயர்ந்த கோபுரங்களையும் அமைத்துக் கொண்டனர்.

ஆகம விதிகளுக்கமைய விக்கிரகங் களையும் கோயில்களையும் அமைத்துக் கிரியைகளையும் வழிபாடு களையும் நடாத்த வசதியற்றவர்கள் சிறுகுடில்களிலும் மரநிழல்களிலும் தங்கள் இஷ்ட தெய்வங்களை நாட்டி வழிபட்டனர். மன்னர்களாற் கட்டப்பட்டனவும் வேதாகம முறைப்படி பூசைகள் நடைபெறுவனவுமான கோயில்களிற் கூடுபவர்கள் மிகச் சிலராயும் சிறு தெய்வங்கள் எனப்படும் ஐயனார், வைரவர், காளி, முத்துமாரி முதலான தெய்வங்களின் கோயில்களில் கூடுபவர்கள் மிகப்பலராயும் இருப்பதைப் பலவிடங்களிற் பார்க்கலாம். கால மாற்றங்களைப் பொறுத்து, சிறு தெய்வங்கள் என ஒரு காலத்தில் ஒதுக்கப்பட்டவை கூடிய அங்கீகாரத்தைப் பெறுவதையும், வைதீக புரோகிதர்கள் அவற்றுக்குப் பூசைகளை நிகழ்த்த உடன்பட்டு முன்வருவதையும் அவதானிக்கலாம்.

எவ்வாறாயினும், இந்தியாவில் மிகப் பழங்காலந்தொட்டே கோயில் அமைத்து வழிபடும் வழக்கம் இருந்தமை தெளிவாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் சங்க காலத்திலேயே கோயில்களில் வழிபாடு நிகழ்த்தினர். மண் மரம் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட கோயில்கள் நிலை பெற முடியாது போனதால், பல்லவர் காலத்திற் அமைக்கப்பட்டனவே இன்று இருப்பவற்றுட் காலத்தால் முந்தியவையாக உள்ளன.

சமண பௌத்த மதங்களுக் கெதிரான பக்தி இயக்கம் இந்து மதத்தின் பால் மக்களைக் கவரப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட பல்லவர் காலத்திலே ஏராளமான சைவ. வைணவக் கோயில்கள் எழுந்தன. பல்லவ அரசர்கள் மலைகளைக் குடைவித்துக் குடைவரைக் கோயில்களையும், குன்றுகளைச் செதுக்குவித்து ஒற்றைக்கற் கோயில் களையும், வேறு பல கட்டடக் கோயில்களையும் உருவாக்கினர். நாயன்மார்களும் ஆழ்வார் களும் பாடியுள்ள தலங்களை நோக்குமிடத்து நூற்றுக்கணக்கில் அவை இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது திருநாவுக்கரசர், பெருங்கோயில், திருக் கோயில், மணிக்கோயில், இளங்கோயில் ஆலக்கோயில், ஞாழற்கோயில் முதலான பல்வகைக் கோயில்களைப் பாடியுள்ளார். அக்காலப் பக்தி இலக்கிய வளர்ச்சிக்குக் கோயில்கள் தூண்டுகோலாக அமைந்தமையும் கோயில்களின் பெருமை பரவி நிலைபெறத் திருமுறைகளும் திவ்யப் பிரபந்தங்களும் உதவியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தின் தென்பகுதியை ஆட்சி புரிந்த பாண்டியர் மண்டபக் கோயில்களையும் குடைவரைக் கோயில்களையும் அமைத் துள்ளனர். பெருஞ் சாதனைகளில் முனைந்து நின்ற சோழப் பேரரசர்காலம் கோயில் வரலாற்றிலும் பொற்காலமாகும். சிறந்த சிற்பங்களுக்கான புகழ் பல்லவரைச் சேரும் என்றால் சிறந்ந கட்டடக் கலைக்கான புகழ் சோழரைச் சேரும். சோழப் பேரரசருக்குப் பின் தமிழகத்தை ஆண்ட விஜயநகர அரசர்கள் சமயப் பணிகள் மூலமாகவே மக்கள் ஆதரவைப்பெற விழைந்து வானளாவிய கோபுரங்களையும் பெருமண்டபங்களையும் அமைத்தனர். அத்தகைய பணிகளைப் பின்வந்த நாயக்கர்களும் தொடர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கோயில்களைக் கட்டுவதற்கும் பழைய கோயில்களைப் புனருத்தாரணம் செய்வதற்கும் விக்கிரகங்களை அமைப்ப தற்கும் பூசைகள், விழாக்களை நடாத் துவதற்குமான விதிமுறைகளை ஆகமங்கள் விரிவாகக் கூறுமாற்றை நோக்குமிடத்து கோயில் வழிபாடு சமுதாயத்திற் பெற்றுள்ள முக்கியத்துவம் விளங்கும் . வட இந்தியக் கோயில்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தென்னிந்தியக் கோயிற்கிரியைகள் விரி வாக்கம் மிகுந்தவையாகவும் சமூக நடவடிக்கைகளோடும் வாழ்க்கை நிகழ்வு களோடும் கூடிய சம்பந்த முடையனவாகவும் மிளிர்வதை அவதானிக்கலாம்.

சிவாகமங்கள் கூறும் கிரியைகளுள் மிக முக்கியமான தென்றும் அருளுக்கு அடிப்படையானதென்றும் கருதப்படுவது கும்பாபிஷேகம் ஆகும். கும்பாபிஷேகம் என்றால் குடத்து நீரை ஈட்டுதல் என்ற பொருள்படும். அதனைக் குடமுழுக்கு என்றும் பிரதிஷ்டை என்றும் குட நன்னீராட்டு விழா என்றும் குறிப்பிடுவர். திருவுருவத்திலும் திருக்கோயிலிலும் வெளிப்பட நின்று அருள் புரியுமாறு மூர்த்தியை நிலை நிறுத்தலையே பிரதிஷ்டை என்பது குறிக்கும். பிர என்றால் நன்கு புலனாகும் படி என்றும் திஷ்ட என்றால் நிற்றல் என்றும் பொருள்படும். எங்குமுள்ள இறைவனை ஓரிடத்திற் சிறப்பாக எழுந்தருளச் செய்யும் இக்கிரியை தரிசனத்துக்கு அடிப்படையான தென்று கருதப்படுவது புதிதாக விக்கிரகமோ கோயிலோ அமைக்கப்படுமிடத்து அல்லது பழைய இடத்தில் புனர் நிர்மாணம் நிகழுமிடத்து அல்லது காலகதியில் விக்கிரகங்கள் வர்ணங்கள் போன்றவற்றிற் பழுது நேருமிடத்து அல்லது நித்திய கருமங்களுக்குத் தடையான அசுத்தமேற்படுமிடத்துக் குட முழுக்கு விழாக்களை நடாத்துவர். ஒருவன் தன் நலன்கருதி வாழ்நாளில் செய்து கொள்ளும் சாந்திக் கிரியைகளைப் போலன்றி, எல்லா உயிர்களும் குறைவிலாது வாழ்தற் பொருட்டு நிகழ்த்தப்படுவதாற் குடமுழுக்கானது பெருஞ்சாந்தி என்று போற்றப்படுகிறது.

நம்பிக்கை என்பது வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவும் முயற்சிகளுக்கு அடிப்படையாகவும் உள்ளது. இறை நம்பிக்கையையும் குறிப்பிட்ட இடத்தில் அவன் எழுந்தருளியுள்ளான் என்ற திருப்தியையும் ஊட்டுவதாகக் குடமுழுக்கு விழா அமைவது குறிப்பிடத்தக்கது. சமுதாயம் ஒன்று தன்னிடத்துப் பற்றினையும் பணிவினையும் வலிமையினையும் ஒற்றுமையினையும் பேணி வளர்க்க வேண்டுமாயின் அடிக்கடி திரும்பத் திரும்ப அதன் ஒருமைப்பாட்டுணர்வு தூண்டப்பட வேண்டும் என்றும், கிரியைகளும் விழாக்களும் அக்கைங்கரியத்தைச் சிறப்பாக நிறைவேற்றவல்லன என்றும் சமூகவியலாளர் கூறுவர். அந்த வகையில், ஒரு குடமுழுக்கு விழா நம்பிக்கையினையும் ஒற்றுமையினையும் புதுப்பித்து உறுதிப்படுத்த எவ்வகையில் உதவும் என்பதை எண்ணிப் பார்த்தல் பயனுடைத்தாகும்.

ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்று கூடி அடங்கிப்பணியவும் வாழ்வில் நம்பிக்கை யினையும் குதூகலத்தையும் வளர்க்கவும் உதவுகின்ற வகையிற் கோயில்களும் விழாக்களும் சமுதாய வாழ்வுக்கு வளமூட்டுவனவாம். கோயில்களில் இடம்பெறும் நித்திய பூசை நிகழ்ச்சிகளும் விழாக்களும் சமய உணர்வையும் பக்தியையும் வளர்ப்பனவாக மட்டுமன்றிச் சமூக மயப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் பங்களிப்பு நல்குவனவாகவும் அமைவதை அவதானிக்கவியலும். என்னைப் பொறுத்த வரையில் கதிர்காமம் திருக் கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் போன்ற தலங்களைத் தரிசிப்பதற்கு விரும்பு வேனாயினும், சுன்னாகம் ஐயனார் கோவில் தேர்த்திருவிழாவுக்குச் செல்வதே எனக்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தருவதாக இருக்கும். ஏனெனில் என் ஊரவர்களோடும் உற்றார் உறவினர்களோடும் சிறுவயது முதற் பழகியவர்களோடும் அளவளாவும் வாய்ப்பினை அது வழங்குவதாகும்.

தமிழர் நாகரிகத்தைக் கோயில் நாகரிகம் என்று குறிப்பிடுமளவுக்கு எமது சமூக பொருளாதார வாழ்விற் கோயில்கள் பிரதானம் பெற்றன. கிராமத்து மக்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குக்கூடத் திருவிழாக்களை எதிர் பார்த்திருந்ததுண்டு. கோயிற் கொண் டாட்டங்கள் சிறுவர்களுக்குக் குதூகலத்தைக் கொண்டு வந்தன. பதினைந்து நூற் றாண்டுகளுக்கு மேலாகச் சமுதாயவாழ்வில் கோயில்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் பலவாகும்.

கல்வி அறிவு வளர்ச்சிக்குக் கோயில்கள் உதவின. கல்வி நிலையங்களை நடாத்தியதோடு அமையாது பிரசங்கங் களையும் உபந்நியாசங்களையும் பட்டி மன்றங்களையும் அவை ஏற்பாடு செய்தன அங்கீகாரமும் மதிப்பும் வேண்டிய கல்விமான்களும் புலவர்களும் கோயில் அவைகளில் தம் ஆக்கங்களை அரங் கேற்றினர். வேதங்களும் திருமுறைகளும் திவ்வியப் பிரபந்தங்களும் அங்கு கற்றுத் தரப்பட்டன. கோயில்களை மையமாகக் கொண்ட இலக்கிய வளர்ச்சி விரிவாக நோக்கத் தக்கது. இசை, நடன, சிற்ப, சித்திர ஓவியக் கலைகளின் வளர்ச்சிக்கு அவை ஆற்றிய பங்களிப்பும் அத்தகையதே. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இன்னும் பல இடங்களிலும் எழுந்துள்ள கோயில்கள் அவற்றை உருவாக்கியவர்களின் சமயப் பற்றுக்கு மட்டுமன்றி அழகியல் உணர்வுக்கும் சான்றாக மிளிர்கின்றன.

நிலைபேற்றுணர்விற்கும் நம்பிக் கைக்கும் அடையாளமாக எழுந்து நிற்கும் கோயில்கள் 'மண்ணில் நல்லவண்ணம் வாழ' வேண்டிய சமூக ஒழுக்க விழுமியங்களைப் பேணவும் ஆதாரமாயுள்ளன. வறியவர்களுக்கும் ஆதரவற்றவர்களுக்கும், உணவளிக்கும் தர்மகாரியங்களும் கோயில்களில் இடம் பெறு வதுண்டு. நோயாளர்களுக்கும் வலது குறைந் தவர்களுக்கும் சிகிச்சையும் ஆதரவும் வழங்கும் பணிகளும் கோயில்களில் நடைபெற்றன. யாத்திரிகர்களுக்கும் பக்தர்களுக்கும் தங்குமிட வசதிகளையும் கோயில்கள் அளித்தன குழப்பங்களும், போர்களும் இடம் பெற்றவிடத்து ஊர்மக்களுக்குப் புகலிட மளிப்பவை கோயில்களே. நெருக்கடி நேரங்களில் கடன் வசதிகளையும் கோயில்கள் செய்து கொடுத்ததுண்டு. பலருக்குத் தொழில் வாய்ப்புக்களையும் அவை வழங்குகின்றன.

இவ்வாறு பல சமுதாய நடவடிக்கை களுக்கும் பணிகளுக்கும் மையங்களான கோயில்கள் விழாக் காலங்களில் மட்டுமன்றி ஏனைய காலங்களிலும் புளகாங்கிதத்தையும் நம்பிக்கையையும் பலருக்கு ஊட்டுவனவாக விளங்குகின்றன. ஒரு கோயிலின் தோற்றம் சுற்றாடலுக்கு இங்கிதமான வனப்பையும் பரவசத்தையும் தருவதாகும். எல்லாவற்றுக்கும் மேலாகக் குறிப்பிடப்படவேண்டியது. ஏராளமான பேர்களுக்கு நெருக்கடி வேளைகளில் தேறுதலும் ஆறுதலும் அளிக்கும் தன்மையாகும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார், திக்கற்றவர் களுக்குத் தெய்வமே துணை என்பன போன்ற பழமொழிகள் பெருவழக்கில் உள்ளன. பாரபட்சமின்றி அருள் பாலிப்பது தெய்வமே என்று பெரும்பாலான மக்கள் தம் உலகியல் வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படையில் நம்புகிறார்கள். அதனிடம் தம் குறைகளை முறையிடவும் அருள்பெறவும் வேண்டிக் கோயிலை நாடுகிறார்கள். எல்லோரும் நலம்பெற வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் குடமுழுக்கு விழா எடுக்கிறார்கள். எளிய மக்கள் இன்று எதிர்பார்க்கும் அமைதி அவர்களுக்கு வாய்க்குமாயின் எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை உருவாகலாம். கோயிலை நாடுவதும் குடமுழுக்கு விழா எடுப்பதும் நம்பிக்கையை இன்னும் நாம் இழந்து விடவில்லை என்பதையே காட்டுவதாகும்.

*"நம்பினோர் கெடுவதில்லை;*
*நான்கு மறைத் தீர்ப்பு"*

*- மகாகவி பாரதியார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கண்ட இராமபிரான்

*பேராசிரியர் வி. சிவசாமி*

தென்னாசிய அரசியல், சமய, பண்பாட்டு மரபுகளிலே இராமரின் கதை முக்கியமான ஓரிடத்தினை வகித்து வந்துள்ளது. பன்னெடுங் காலமாகத் தென்னாசிய மக்களின் உள்ளங்களைக் கவர்ந்ததாய், நாடோடி மரபுகளில் இருந்து வந்த இராம கதைக்கு கி. மு. 4ம் நூற்றாண்டளவிலே வால்மீகி எனும் பெரிய கவிஞன் இலக்கிய வடிவம் அளித்து வடமொழியில் 'ஆதிகவி' எனும் சிறப்புப் பெற்றார். இவருடைய இலக்கியப் படைப்பான இராமாயணம் ஆதிகாவியமாகவும், இதிஹாஸமாகவும் மிளிர்ந்து வந்துள்ளது. இது ஒரு குறிப்பிட்ட இசைமரபிற்கேற்ப இசைக்கப்பட்டுவந்தது. ஆனால் இவ்இசை காலப்போக்கிலே மறைந்து விட்டது. ஆனால் இராமர் கதை தொடர்ந்து வடமொழியிலுள்ள மகாகாவியம், நாடகம் முதலிய செந்நெறி இலக்கிய வடிவங்களிலும், பல இடங்களிலே நிலவி வந்த நாடோடி மரபுகளிலும் முக்கியமான ஓரிடத்தை வகித்து வந்துள்ளது. பிராந்திய மொழிகளிலே தமிழிலே கம்பர், ஹிந்தியிலே துளசிதாசர் முதலியோர் இக்கதையை இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் ததும்பப் பாடியுள்ளனர்.

இராமபிரான் இலட்சிய புருஷனாகவும், சிறந்த அவதார புருஷனாகவும், மேலான பரம் பொருளாகவும் போற்றப்பட்டு வந்துள்ளார். இந்திய இசை, நடன, நாடக மரபுகளில் மட்டுமன்றி கட்டிடக் கலை, சிற்பம், ஓவிய மரபுகளிலும் இராமர் கதை முக்கியமான ஓரிடத்தை வகித்து வந்துள்ளது. பலரின் கவனத்தை யீர்ந்துள்ளது. பண்டிதரும் பாமரரும், போற்றும் கதையாக இராம கதை விளங்கி வந்துள்ளது. தென்னாசியாவில் மட்டுமன்றி தென்கிழக்காசிய நாடுகளிலும் இராம கதை பல கலை வடிவங்களில் பிரபல்யமடைந்து வந்துள்ளது.

தமிழகத்திலே பல்லவர் – பாண்டியர் கால ஆழ்வார்களைத் தொடர்ந்து சோழப் பெருமன்னர் கால கம்பராமாயணம் மிகச் சிறந்த இராம இலக்கியப் படைப்பாகும். இதற்குப் பின்பும் நாயக்க மன்னர், பிரித்தானியர் ஆட்சிக் காலங்களிலே இராம கதையைச் சிறப்பித்துக் கூறும் இசைப்பாடல்கள், நாடகம் முதலியன தோன்றின. இவை தமிழில் மட்டுமன்றி, சம்ஸ்கிருதம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் இயற்றப்பட்டன.

கி. பி. 17,18,19 ஆம் நூற்றாண்டுகளிலே குறிப்பாகத் தமிழகத்திலுள்ள காவேரியாற்றுப் பிரதேசத்தில் சமய, ஆன்மீக, கலைப் புத்துயிர்ப்பு ஏற்பட்டு வந்தது. நாராயண தீர்த்தர் சதாசிவபிரேமேந்திரர், ஸ்ரீதர வேங்கடேசர் (அய்யாவாள்) இறைவனின் நாம சித்தாந்தக் கோட்பாட்டினை வலியுறுத்தினர். வாலிமீகியும் அவரைத் தொடர்ந்து பல மகான்களும் ஞானிகளும் இராம பக்தியை வலியுறுத்தி வந்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட சூழ்நிலை நிலவிய காலத்திலேதான் தமிழகத்திலுள்ள சமய, பண்பாட்டு மையங்களிலொன்றான திருவாரூரிலே கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் 1767 – 1847 வரை வாழ்ந்தவர் எனக் கூறப்படுகின்றது. இவர் ஒரு பெரிய இசை மேதை, திருவையாற்றிலே பல ஆண்டுகள் வாழ்ந்தவர். தெலுங்கினைத் தாய் மொழியாகக் கொண்ட அந்தணர் குடும்பத்தைச் சேர்ந்தவர்; தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்தவராயினும், தமிழில் ஒரு பாடலாயினும் இயற்றிலர். இவர் வால்மீகியைப் பின்பற்றி 24,000 இசைப்பாடல்கள் இயற்றினர் எனவும் இவற்றுள் சுமார் 1,000 வரை கிடைக்கின்றன எனவும் கூறப்படுகிறது. இவற்றைவிட இரு இசை நாடகங்களும் இவர் இயற்றியுள்ளார். பெரும்பாலான இசைப் பாடல்களைத் தாய்மொழியான தெலுங்கிலும் சிறிதளவு சமஸ்கிருதத்திலும் இவர் இயற்றியுள்ளார்.

இவர் பிரபல இசைக் குடும்பத்திலே பிறந்தவர். இவரின் தாய் வழிப் பாட்டனார் வீணைகாளஹஸ்தி அய்யாவும், தகப்பனார் இராமப்பிரமமும் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னையவர் இராமாயணப் பிரசங்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில் நிபுணர்; சமகாலத் தங்சாவூர் மன்னரிடமிருந்து மானியங்கள் பெற்றவர். தகப்பனார் மகனுக்கு இளம் வயதிலேயே இராமதாரக மந்திரத்தை உபதேசித்தார்; ஆரம்ப இசையையும் கற்பித்தார். மேலும், இராம கிருஷ்ணானந்தர் எனும் துறவி இவருக்கு ராமஷடாக்ஷரி மந்திரத்தை உபதேசித்தார்; தந்தை பகவானுக்கு ஆராதனை செய்யும் வேளைகளில் மகன் அவருக்கு உதவி செய்துவந்தார். எனவே, இளம் பிராயத்திலிருந்து சிறந்த இராம பக்தராக விளங்கினார். சமகாலத்திலே வாழ்ந்த பிரபல இசைச் கலைஞர்களிலொருவரான ஸொண்டி ரமணய்யா என்பவரிடம் குருகுல வாசம் செய்து இசையை நன்கு கற்றார்.

இவர் இயல்பாகவே இராமபிரானிடத்து மிக்க பற்றுள்ளவர். சமகாலத்திலே நிலவிய நாமசித்தாந்தம், பஜனை, இசை, நடனம் முதலியனவற்றிலும் சிறந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இறைவனிடத்துக் கொண்ட பேரன்பே பக்தி (பரமபிறேம) என நாரத பக்தி சூத்திரம் கூறும். பக்தி ஒருதலைச் சாய்வானதன்று. அது இறைவனிடத்து ஆன்மா கொண்டுள்ள பேரன்பை மட்டுமன்றி ஆன்மாவிடத்து இறைவன் கொண்டிருக்கும் பேரன்பையும் குறிக்கும். எனவே பக்தி நெறி அன்பு நெறியே. இது பற்றிப் பல ஞானிகள் சிறப்பித்துக் கூறியுள்ளனர். தியாகராஜ சுவாமிகளும் பக்தி மார்க்கத்தையே நன்கு வலியுறுத்தியுள்ளார். இவர் இராமபக்தியையே பெரும்பாலும் வலியுறுத்தினாலும் கணபதி, சிவபிரான், அம்மன், சுப்பிரமணியர், அனுமான், கருடன் முதலியோர் பற்றியும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் பக்தியே உலக துன்பங்களினின்றும் ஒருவரைக் காக்கும் எனவும், பக்தியில்லாத எதனாலும் பலனில்லை எனவும் கூறியுள்ளார். "ஸ்ரீ இராமபிரானிடத்துப் பக்தியில்லாவிடில் ஒருவன் மனிதப் பிறவி எடுத்தாலும், எடுக்காவிட்டாலும் பலனில்லை" என்பது இவரின் கருத்து. இராமபிரானை முழுமனத்துடன் தியானிப்பதே (புனித) கங்கையில் நீராடலிலும் சிறந்தது (தியானமே வரமைன கங்காஸ்நாநமே: மனஸா) எனவும், 'நல்ல ராஜபாதை (இங்கு இராம பக்தி) இருக்க ஏன் சிறு குறுக்கு வழிகளைப் பயன்படுத்த வேண்டும்? (சக்கனி ராஜமார்கமுலுண்டக, சந்துலதூலநேல ஓமனஸா) எனவும் கூறியுள்ளமை கவனித்தற்பாலன. "முழு மனதுடன் தேவரீரின் (இறைவன் – இராமன்) தாமரை போன்ற திருவடிகளை இடையறாது தியானிப்பதே உண்மையான பாக்யமாக விரும்பவேண்டும் " எனவும், அவர் இறைபக்தியை வலியுறுத்தியுள்ளார். மேலும் "இராமபக்தியே ஒருவர் விரும்பக்கூடிய சாம்ராஜ்யம்; அடையக் கூடிய பேரின்பம் (இராமபக்தி சாம்ராஜ்ய மேமானவுலகப் பேநோ மானஸா, ஆமநவுல சந்தரிசந மத்யந்த ப்ரஹ்மாநந்தமே) எனவும், "இப்பேரின்பத்தைச் சொற்களால் வருணிக்க முடியாதெனவும் இதை ஒருவர் சுய அனுபவத்தினாலேயே உணரலாம்" எனவும் "எங்கள் அன்புக்குரிய தந்தையாராகிய இராமபிரானுக்குரிய பக்தியானது எவ்வளவோ பெரிதே" எனவும் அவர் கூறியுள்ளமை கவனித்தற்பாலது. இராம பக்தியை சாம்ராஜ்யம் எனவும், இராம கதையை ராஜ்யம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளமை உபநிஷத் பிரமன் என்பவராலும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

தியாகராஜ சுவாமிகள் சமகால ஞானிகளில் ஒரு சாரார் போல இறைவனின் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபாடு உடையவர். எனவே நாம மகிமை பற்றியும் சிறிது குறிப்பிடலாம். எல்லாமே பெயர்தான். பெயரே புகழ். ஒருவரின் பெயராலேதான் ஒருவரை அறியமுடிகின்றது. ஒருவர் மிகவும் மகிழ்வுற்ற போதோ அல்லது கோபிக்கும் போதோ, புகழும் போதோ, தூற்றும் போதோ அவர் பெயர் அல்லது பெயர்களைத்தான் குறிப்பிடுவார்.

ஒரு பெயர் அவரின் இயல்பையோ அல்லது அவ்வியல்பைக் குறிக்கும் அடைமொழியையோ குறிக்கும். இருக்கு வேத காலம் தொடக்கம் இறைவனைப் பெயர்களால் அழைத்துவரும் மரபை ஓரளவு அறியலாம். யசுர் வேதத்திலுள்ள சதருத்திரீயம் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மேலும் ஒருவர் வேறொருவர் அல்லது வேறொரு பொருளைத் தொடர்ந்து கூறும்போது, அவரிடத்தோ அல்லது அப்பொருளிடத்தோ பற்று ஏற்படுகிறது. படிப்படியாக அவர் மற்றவருடனோ, பொருளோடோ ஒன்றித்துவிடுவர். "இராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமத்தினை இடையறாது கேட்டதால் உள்ளத்தில் அப்பெயரின் வடிவம் நிலைபெறச் செய்து, அன்பினால் உள்ளத்தை நிரப்புகிறது (ராமநாமஸ்ரவணமு வல்லநாம ரூபமே, ஹ்ருதய முனிண்டிப்ரேமபுட்ட ஜெயகலேடா) எனவும், என்னுடைய ஜெபத்தில் நான் மீண்டும் மீண்டும் கூறும் பெயரின் எழுத்துக்கள் இத்தகைய வடிவமெடுத்துள்ளனவா? (நா, ஜெபவர்ண ரூபமா) எனவும் அவர் கூறியுள்ளமை நோக்கற்பாலது. பெயர் மூலமே ஒருவரையோ, ஒரு பொருளையோ வேறொருவர் நினைவுகூர முடியும்.

ஒருவரை மூன்று வகைகளிலே புகழ்ந்து கூறலாம். முதலாவது பல விதமான கவிதை வடிவில் நாடப்படுவோரின் சிறப்பினை வருணிக்கலாம் . கவிதைகள் அனைத்தும் இவ்வகையிலடங்கும். இரண்டாவதாக ஒருவரின் இயல்புகள், சிறப்புகள் பற்றிய பல பெயர்களால் புகழ்தலாகும். அஷ்டோத்தர சதநாமாவளிகள், சஹஸ்ர நாமாவளிகள் போன்றவை இதிலடங்குவன. மூன்றாவது சிவ, ராம என ஒரு பெயரையே நாம பாராயணமாகத் திரும்பவும் திரும்பவும் கூறலாகும்.

பக்தி மார்க்கமே இன்றைய கலியுகத்திற்கு உகந்ததாகக் கருதப்படுகிறது. எனவே பக்தியோடு கூடிய நாம வழிபாடு இக்கால கட்டத்திற்கு உகந்ததாகும். நாமமே பண்டிதரையும் பாமரரையும் ஒருங்கே தூய்மைப்படுத்துமென முத்துசுவாமிதீக்ஷிதர் "பாமரபண்டிதபாவன கரநாமதேய" என இராமரைப் பற்றிய கீர்த்தனை ஒன்றிலே குறிப்பிட்டுள்ளார். கலிசந்தரணோப நிஷத்தின்படி, நாரதருக்கு அவரின் தந்தையாகிய பிரமா "ஆதிபுருஷனாகிய நாராயணனின் நாமத்தைத் தொடர்ந்து பாராயணம் செய்து கலிகாலத் தீமையினை நீக்கலாம்" எனக் கூறியதாகக் கூறப் படுகின்றது. "எல்லாவிதமான யஜ்ஞங்களிலும் நான் ஜபயஜ்ஞமே (யஜ்ஞானாம் ஜபயஜ்ஞோஸ்மி) எனக் கிருஷ்ணபகவான் பகவத்கீதையிலே குறிப்பிட்டுள்ளார். பக்தர்கள் பகவானின் நாமத்தை ஒன்று சேர்ந்து உரத்துப்பாடும் போது ஏற்படும் மகிழ்ச்சி (நாம – கோஷ – ஜனித சந்தோஷ) பற்றித் தியாகராஜர் குறிப்பிட்டுள்ளார். நாம யஜ்ஞத்தின் சிறப்பை ஆதிசங்கரர் விஷ்ணுசஹஸ்ர நாம உரையிலே சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது "இந்த ஜபவேள்வி செய்வதால் எந்த உயிருக்கும் தீங்கு ஏற்படாது. இஃது ஒரு அஹிம்ஸா யாகம். இதைச் செய்வதற்கு மக்கள் கூட்டமோ, பணமோ, பொருளோ தேவையில்லை. குறிப்பிட்ட நேரம், காலம், நடைமுறை போன்றவற்றை அவதானிக்கத் தேவை யில்லை" என்பதாம். "கிருத யுகத்திற்குத் தியானமும், திரேதா யுகத்திற்கு யாகங்களும், துவாபர யுகத்திற்கு வழிபாடும், கலியுகத்திற்கு நாம சங்கீர்த்தனமும் பின்பற்றப்பட வேண்டியவை" என விஷ்ணு புராணம் கூறும்.

எனவே, ஏற்கனவே குறிப்பிட்டவாறு கலியுகத்திற்கு இறைவன் நாமத்தை அல்லது நாமங்களைத் தொடர்ந்து கூறுவதே சிறந்த வழியாகும். இராமபிரானின் பெயரை 96 கோடி தரம் பாராயணம் செய்வதால் ஒருவர் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையடைவர் என இராமரஹஸ்ய உபநிஷதத்திலே இராமபிரானே கூறியுள்ளார். தியாகராஜரும் இதைப் பின்பற்றியதாகக் கூறப்படுகிறது.

இராம எனும் பெயர் நாராயண சடாக்ஷரியிலிருந்தும்(ரா), சிவ பஞ்சாக்ஷரியி லிருந்தும் (ம) பெறப்பட்டதாகத் தியாகராஜர் 'எவரனி' எனத் தொடங்கும் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். இராமநாமம் அமிர்தரசம் போன்றதெனவும், உபநிடதங்களின் மஹா வாக்கியமான 'தத்துவமஸி' யின் சாரமாக, பரப்பிரமமாக இராமபிரான் உளர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவருக்கு 'இராம' என்பது மிகத் தூய்மையான நாமம். அவரின் விருப்பத்திற் குரிய இஷ்டதெய்வம் இராபபிரானே. இராமபிரான் மிகுந்த அழகன் (அதிலா வண்யராம). அவரைப் போன்ற தெய்வம் வேறெவருமிலர். அவர் ஏழை எளிய மக்களைக் காப்பவர் (தீனஜாநாவந). அவரே ஆதிமூல நாயகன். சுவாமிகளுக்கு "இராமனின் திருவடிகளும் கருணையும் போதும். தமது உள்ளத்தில் வருமாறு தியாகராஜர் (ஸ்ரீராமபாதமா நீக்ருப ஜாலுநே, சித்தாகினிராவே)" என வேண்டுகிறார், இராமன் மீது காதல் கொண்டு பக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கத்தைப் பின்பற்றி வரும் தம்மீது 'ஏன் சிறு கோபம்' என இராமபிரானை அவர் கேட்கிறார். இதே போன்ற கருத்து "மோஹனராம" எனத் தொடங்கும் கீர்த்தனையிலும் வேறு சிலவற்றிலும் காணப்படுகின்றது. ஒருவகையான நாயக – நாயகி பாவம் இங்கு காணப்படுகின்றது. இறைவனை நாயகனாகவும். ஆன்மாவை நாயகியாகவும் பாவனை செய்யும் பாங்கு ஏற்கனவே பல நூற்றாண்டு முதலாகச் சைவ, வைஷ்ணவ மரபுகளில் நிலவி வந்துள்ளது.

இறைவன் நாத வடிவானவன். அவன் உருவமற்றவன். எனினும் வழிபடுவோனின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உருவம் தாங்கியவனாக சிவன், திருமால், இராமன், சக்தி, விநாயகர், சுப்பிரமணியர் எனப் பலவாறு அழைக்கப்படுகிறான். தியாகராஜ சுவாமிகள் மேற்குறிப்பிட்ட இரு நிலைகளிலும் இறைவனைக் கண்டவர். சங்கீத ரத்னாகரம் போன்ற முற்பட்ட கால சங்கீத சாஸ்திர நூல்களிலே பிரமா, சிவன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் நாதவடிவமாக உள்ளனர் எனவும், இதனால் அவர்களை நாதோபாசனை மூலம் வழிபடுவதே உண்மையாக அவர்களை வழிபடுவதாகக் கருதப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதே கருத்து "ஓசை ஒலியெலாமானாய் நீயே" எனத் திருநாவுக்கரசரின் தேவாரத்திலும், இவரின் கீர்த்தனைகளிலும் விரவிக் காணப்படுகின்றது.

"மனமே, நாதத்தில் ஆசை கொண்டு அதிலேயே திளைத்துப் பிரம்மானந்தம் அடைவாயாக. இஃது இனிய பலன்களைத் தரும் ஸப்தஸ்வரங்கள், ராகக் கூட்டங்கள் முதலியவற்றுடன் கூடியது. திருமால், சிவன், பிரம்மா, இந்திரன், சுப்பிரமணியர், கணபதி முதலியோர் உபாசனை செய்ததே இந்நாதமாகும்" என "நாதலோலுடை ப்ரஹ்மானந்த மந்தவே மனஸா" எனத் தொடங்கும் கீர்த்தனையிலிவர் நாதமகிமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்; ராமபிரான் நாத வடிவினன் (நாதபுருட) எனக் கூறப்படுகிறார். நாதமெனும் அமுதரஸமே ராமவதாரமாக உருவெடுத்துள்ளதை ஒரு கீர்த்தனையில் அழகாகக் குறிப்பிட்டு அதனை உபாஸனை செய்வதே பெரிய பாக்கியம் என்பதை ஆரபிராக, ரூபக தாளத்திலுள்ள கீர்த்தனையிலே

"நாத ஸுதாரஸம்பிலநு
நராக்ருதியாயே; மனஸா – (நா)
வேத புராணா கமசாஸ்த்
ராதுல காதாரமௌ – (நா)
ஸ்வரமுலாருன்னோகடி கண்டலு
வரராகமு கோதண்டமு
துரநயதேச் யமுத்ரி குணமு
நிரதகதிசரமுரா
ஸரஸ ஸங்கதி ஸந்தர்பமு
கலகிர முலுரா
தரபஜநே பாக்யமுரா
த்யாகராஜுஸே விஞ்சு –(நா)

(மனமே! வேதம், புராணம், ஆகம சாத்திரங்கள் இவற்றிற்கு ஆதாரமான நாதமென்னும் அமுதரசமே இவ்வுலகில் மானிட உருவத்துடன் அவதார மெடுத்துள்ளது. ஏழு சுரங்களும் (வில்லிலே கட்டப்பெற்ற) சிறுமணிகளாகும். சிறப்புற்ற ராகம் கோதண்டமென்ற வில், கனம், நயம், தேசியம் ஆகிய மூவகை வேறுபாடுகள் அவ்வில்லின் நாண் கயிறாகவும், தாளகதிகள் அம்புகளாகவும், ரஸம் நிறைந்த சங்கதிகள் சமயத்திற்கு உசிதமான மொழிகளாகவும் அமைவன. தியாகராஜன் சேவிக்கும் (நாதரூபமான) இவ்வவதாரத்தைப் பஜனை செய்வதே நமது பாக்கியமாகும்) என அவர் நயம்பட நன்கு வருணித்துள்ளார். மேலும் நாதோபாசனையால் (நாத வழிபாட்டினால்) சிவன், விஷ்ணு, பிரமா ஆகிய மும்மூர்த்திகளும் ஒளி பெற்று விளங்கினர். (நாதோபாஸநசே சங்கர நாராயண விதுலுவெலஸிரியோ மனஸா) என அவர் ஏற்கனவே குறிப்பிட்ட கருத்தினை வலியுறுத்தியுள்ளார். சிவபிரானைப் பற்றிய சமஸ்கிருதக் கீர்த்தனையில் "நாததநுமனிசம் சங்கரம் நமமாமிமே மனஸாசிரஸா" (நாத வடிவமாக உள்ள சிவபிரானை மனத்தாலும் சிரசாலும் வணங்குகிறேன்) எனச் சுவாமிகள் பாடியுள்ளார்.

அவருக்குப் பொதுவாக எல்லாம் இராமபிரானாகவே காட்சியளித்தன; உணரப்பட்டன. சீதாராமராகிய அவர் மீது தமக்குள்ள ஆசை என்றும் அகலாது எனவும், "என் மனம் உன் திருவடிகளையே நாடுவதும், கண்கள் உன் திவ்விய திருவடிவத்தை விரும்புவதும், நான் கேட்கும் உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமங்களைச் செபிக்க என் நாவு ஊறுவதும், உன் கருணையல்லவா? களங்கமில்லாதவனே தாய், தந்தை, தோழர்கள், மற்றோர், செல்வம், பொன், குரு, தெய்வம் முதலியன நீயேயென்று நான் தினந்தோறும் கூறும் மொழிகளே என் அணிகளாகும். போகங்களை நான் அனுபவிக்கும்போதும் என் புத்தி உன்னிடமே லயிக்கிறது. இத்தியாகராஜன் இதயத்தில் பிரமானந்தம் பிறக்கிறது. உன் மாயை என்னவோ அறியேன் என "ராமாநீபை தநகுப்ரேமபோது ஸீதா" எனத் தொடங்கும் கீர்த்தனையிலவர் கூறியுள்ளார்.

இராமபிரானுக்குத் தாம் செய்து வந்த மானச பூசையினைச் சுவாமிகள் "பரிபாலய பரிபாலய பரிபாலய ரகுநாத" எனத் தொடங்கும் ரீதிகௌளைராக, ஆதி தாளக் கீர்த்தனையில் மிக அற்புதமாக வருணித்துள்ளார். அதாவது "ரகுநாதனே என்னை நன்கு காத்தருள்வாயாக! எனது தேகமே உனக்குகந்த கோயிலாகும். உறுதிகொண்ட என் மனமே நீ அமரும் பொற்பீடம். உன் பொன்னடித் தியானமே வானுலக கங்கையின் புனித தீர்த்தம். யானையைக் காத்தவனே! என் அபிமானமே உனக்குச் சுபமான நல்லாடை உன் புகழைப்பாடும் எனது வாக்கே நறுமணம் கமழும் வாசனைப் பொருள். நான் புரியும் ஹரிநாம ஸ்மரணங்களே நன்மலர்கள். முன்பு நான் செய்த தீவினையின் பயனே (நான் எரிக்கும்) சாம்பிராணித் தூபம். உன் திருவடி மீது நான் பூண்ட பக்தியே உனக்கு நாடோறும் ஒளி காட்டும் விளக்கு. நான் செய்துவரும் பூசையின் பலனே உனக்குச் சிறந்த நைவேத்தியம். நான் கணந்தோறும் உன்னைத் தரிசிப்பதே உனக்கு அகண்ட தீபாராதனை. நிரந்தரமாக எனக்கு ஏற்படும் ஆத்மானந்தமே உனக்குத் தாம்பூலம். இவையனைத்தும் தியாகராயன் உனக்கு இயற்கையாகச் செய்யும் பூசையின் நியமமாகும்" என்பதாம். சுவாமிகள் இராமபிரானையே தம் இஷ்ட தெய்வமாக, பரப்பிரமமாகப் பாவனை செய்து வழிபட்ட போதும் ஏற்கனவே குறிப்பிட்டவாறு மற்றைய தெய்வங்களைப் பற்றியும் பாராட்டியுள்ளார். இவற்றால் இவரின் சமரசநோக்கு – இந்து சமயத்திற்குரிய இயல்பான சமரசநோக்கு நன்கு புலப்படுகின்றது.

முற்பட்ட காலத்திலே வால்மீகி, காளிதாசன், கம்பன், துளசிதாசர் முதலிய பல அருட்கவிஞர்கள் இராமபிரானைப் பலவாறு நோக்கியுள்ளனர்கள். முற்பட்ட காலக் கருத்துக்களை உள் வாங்கியும், தமது அருட் கவித்துவ நிலையில் கண்டவற்றையும் சேர்த்து மெருகு ஊட்டித் தமது கருத்துக்களைச் சுவாமிகள் உயரிய இசைப் பாடல்கள் வடிவிலே வெளிப்படுத்திச் சமய, ஆன்மீகக் கருத்துக்களை இசைநயம்படக் கூறி அனைவரையும் ஈர்க்கும் வகையில் செயற்பட்டுள்ளார் எனலாம். ஆன்மீகம், பக்தி, இசை ஆகியன ஒன்று சேர்ந்து சுவாமிகளின் பாடல்களிலே நறுமணம் கமழுகின்றன.

"இராமபிரானைக் குழந்தையாகவும், சிறு பிள்ளையாகவும், வீரனாகவும், பிராணநாதனாகவும், எஜமானாகவும், தோழனாகவும், பரப்பிரமமாகவும் மனதில் பாவனை செய்து கொண்டு, தாம் கோசலை, தசரதன், விசுவாமித்திரன், சீதை, லக்ஷ்மணன், அனுமான் ஆகியோரின் ஸ்தானத்திலிருந்து அனுபவித்து தம் அனுபவங்களைக் கீர்த்தனை ரூபமாகப் பொழிந்தனர்" எனப் பிரபல இசை ஆய்வாளரும் கலைஞருமான டி. எஸ். பார்த்தசாரதி இவர் இராமபிரானை எவ்வாறு நோக்கினார் எனக் கூறியிருப்பவை மனங்கொளற்பாலன.

சில முக்கியமான உசாத்துணை


Krishnaswamy, S.V., Thiyagaraja Saint and Singer, Bangalore, 1968.

Raghavan, V., The Spiritual Heritage of Tyagaraja, Madras, 1957.

Sambamoorthy, P. (i) The Great Composers, Book II, Madras, 1976.

(ii) South Indian Music, Vol. II, Madras, 1975.

பார்த்தசாரதி, டி. எஸ். (தமிழ் மொழி பெயர்ப்பாசிரியன்) ஸ்ரீ தியாகராஜ சுவாமி கீர்த்தனைகள், சென்னை, 1976.

The Journal of the Music Academy, Madras.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா கும்பாபிஷேகக் கிரியைகள்

பிரம்மஸ்ரீ சோ. பாலசுப்பிரமணியக் குருக்கள்

ஆலயம் எமது வாழ்வில் இன்றியமையாத ஒரு ஸ்தானம் ஆகும். இதனாற்றான் கோவில் இல்லாதவூரில் குடியிருக்க வேண்டாம் என்றும் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்றும் முதுமொழிகள் கூறுகின்றன. பரிணாம வளர்ச்சியில் விலங்கு நிலையில் இருந்து வளர்ந்த மக்களைத் தெய்வ நிலைக்கு உயர்த்தவே கோவில்கள் கட்டப்பட்டன. இவ்வாறு மக்கள் வழிபாடு செய்யவெனக் கோவில்களைப் புதிதாக கட்டப்படும் போதும் ஏற்கனவே கட்டிய கோவில்கள் கால மாற்றங்களினால் பழுதடைந்து அல்லது சிதிலமடைந்து அல்லது மாசு படும் போதும் சில கிரியைகள் செய்யப்படுகின்றன. அவை பின்வருமாறு:-

(1) ஆவர்த்தம் (2) அனாவர்த்தம்
(3) அந்தரீதம் (4) புனராவர்த்தம்

## (1) ஆவர்த்தம்

கோவில் ஒன்றைப் புதியதாக கட்டி அதில் வழிபடவென வடித்த புதிய மூர்த்தியைப் பாலப் பிரதிஷ்டை செய்து அதனைப் புதிய கோவிலின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து அம் மூர்த்திக்கு அபிஷேகம் செய்வது ஆவர்த்தம் எனப்படும்.

## (2) அனாவர்த்தம்

இயற்கை அழிவுகளான பூகம்பம், மண்சரிவு ஆகியவற்றாலும், தீயினால் எற்பட்ட சேதம் போன்றவற்றாலும், கோவில் கட்டடங்கள் அழிந்து போனாலும், யுத்த சூழல், இனக்கலவரம் போன்ற காரணங்களால் தினப் பூசைகள் இல்லாது இருந்த கோவில்களைப் புதுப்பித்து அபிஷேகம் செய்வதையே அனாவர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

## (3) அந்தரிதம்

பூசைகள், வழிபாடுகள் தொடர்ச்சியாக நடைப்பெற்று வந்த பொழுதிலும் கோவில் உட் பிரகாரத்தில் அல்லது அக்கோவிலின் திரு வீதிகளில் உள்ள வீடுகளில் யாராவது மரணித்து விட்டால். கோவிலைப் பிராயச் சித்தம் செய்ய வேண்டும். அதனையே அந்தரிதம் என்றும் "சம்புரோக் ஷணம்" என்றும் கூறப்படும்.

## (4) புனராவர்த்தம்

ஒர கோவிலில் நித்தியப் பூசைகள், மகோற்சவங்கள் ஆகியவை தொடர்ச்சியாக நடைபெற்று வந்தாலும். அக்கோவிலின் இராசகோபுரங்கள், விமானம், கர்ப்பக்கிரகம் என்பவற்றின் சுதைச் சிற்பங்களிற் பழுதுகள் இருந்தாலும், கோவில் மண்டபங்கள், மதிற்சுவர்கள், கூரைகள் பழுதடைந்தாலும் விக்கிரகங்களையும் அவற்றின் இயந்திரத் தகடுகளையும் பீடங்களையும் ஒன்று சேர்த்துள்ள மருந்து பழுதடைந்தாலும் அவைகளைப் பழுது பார்க்குமுன் அம் மூர்த்திகளைப் பாலஸ்தாபனம் செய்து மேற்கூறிய திருத்தங்களைச் செய்த பின்னர் வர்ணம் தீட்டிய பின் மீண்டும் மூர்த்திகளை அந்தந்த ஆலயங்களில் பிரதிஸ்டை செய்த பின் கும்பாபிஷேகஞ் செய்வதையே 'புனராவர்த்தனம்' என்பர்.

## மகா கும்பாபிஷேகம் என்றால் என்ன?

யாகசாலையில் கும்பத்திலே மூர்த்தியை ஆவாகனஞ் செய்து அதற்குப் பாவனாபிஷேகம், பூஜை என்பன செய்து ஹோம குண்டங்களில் அக்கினியிலே மூர்த்திகளை எழுந்தருளச் செய்து அவ் அக்கினியில் உள்ள மூர்த்திகளுக்கு ஆகுதிகள் செய்து விசேஷ திரவியங்களை அர்ப்பணித்த ஹோமத்திலே மூலிகைகள், பலகாரங்கள், பால், தயிர், இளநீர், அமுதுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனுகு, ஜவ்வாது, நெய், என்பவற்றை இட்டு அக் ஹோம குண்ட அக்கினியில் உள்ள மூர்த்திகளை ஹோமஞ் செய்த வரிசைப்படி அந்தந்த மூர்த்திகளிடத்திற் செய்து அவ் அவ் ஸ்தானங்களில் சமர்ப்பித்துக் ஹோமகுண்ட மூர்த்திக்குப் பூர்ணாகுதி கொடுத்துப் பின்பு ஹோமகுண்ட மூர்த்தியைப் பிரதான குண்டத்தில் மந்திரப்பூர்வமாக எழுந்தருளச் செய்து கும்பத்தில் உள்ள மூர்த்திக்கு விசேஷ பூஜை செய்து வீதி வலம் வந்து கும்பத்தில் உள்ள மூர்த்தியை மந்திரப் பூர்வமாக விக்கிரக மூர்த்தியில் எழுந்தருளச் செய்த பின் கும்பப் புனித நீரை விக்கிரகத்திற்கு அபிஷேகம் செய்வதனையே மகா கும்பாபிஷேகம் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## கும்பாபிஷேகக் கிரியைகள்

கும்பாபிஷேகக் கிரியைகளில் சில முக்கிய கிரியைகள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| 1. திரவிய நியாஸம் | 2.கர்ப்ப நியாஸம் |
| 3. கணேச பூசை | 4. அனுக்ஞை |
| 5. கிராமசாந்தி | 6. பிரவேசபலி |
| 7. சாந்தி ஹோமம் | 8. திசாஹோமம் |
| 9. ரக்ஷோக்ன ஹோமம் | 10. வாஸ்து சாந்தி |
| 11. நவக்கிரகமகம் | 12. மிருத்சங்கிரகணம் |
| 13. அங்குரார்ப்பணம் | 14. ரக்ஷாபந்தனம் |
| 15. ஜலாதிவாசம் | 16. தான்யாதிவாசம் |
| 17. நயனோன் மீலனம் | 18. கிராம பிரதக்ஷிணம் |
| 19. சயனாரோபணம் | 20. அக்கினி கார்யம் |
| 21. நாமகரணம் | 22. பிம்பசுத்தி |
| 23. பிம்ப பிரதக்ஷிணம் | 24. கர்ப்பக்கிருக தவின்யாஸம் |
| 25. ரத்ன நியாஸம் | 26. யந்திரஸ்தாபனம் |
| 27. பிம்பஸ்தாபனம் | 28. அஸ்டபந்தனம் |
| 29. ஷடத்துவ நியாஸம் | 30. சாங்கோபாங்க பிரத்தியங்க நியாஸம் |
| 31. ஸபர் சாகுதி | 32. யாத்ரா தானம் |
| 33. கும்ப உத்வாசனம் | 34. நவத நுகல்பனம் |
| 35. சகளீகரணம் | 36. ஆவாகனம் |
| 37. கும்பாபிஷேகம் | 38. ஆசிர்வாதம் |
| 39. ரக்ஷாவிசர்ஜனம் | 40. அவபிருதம் |
| 41. ஆசார்யோத்சவம் | 42. மண்டலபூசை |
| 43. மண்டலபூஜோசம் | 44. மண்டலபூர்த்தி |

### அனுக்ஞை

மகா கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாச்சாரியார் அதனை நடத்தும் தகுதியைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இம் பிரதம சிவாச்சாரியார் ஆலய மூர்த்தியின் அருளுடன் சர்வ போதகர், சாதாகாசாரியர், குருமார், வழிபாடு செய்ய வந்த மக்கள் ஆகியோரான சகலரிடமும் இந்த மஹா கும்பாபிஷேகத்தை நடாத்த இறைவன் இறைவியின் அனுமதியுடன் அந்த சிவாச்சாரியார் அதற்கென நியமனம் செய்யப் பெறும் உத்தரவுக் கிரியையே அனுக்ஞை என்று அழைக்கப்படும்.

### தனபூஜை

இப்பூஜையில் பல திரவியங்களை வைத்துப் பூஜிக்கப்படும். அவ்வாறு பூஜிக்கப்பட்ட திரவியங்களை யாகம் கட்ட 02 பாகமும் (பகுதி) அபிஷேகத்திற்கென 01 பாகமும், சிவாச்சார்ய தக்ஷணையாக 02 பாகமும், மூர்த்திக்கு 01 பாகமும், வேதம், திருமுறை ஓதுவோருக்கு 01 பாகமும் சகல தானங்களுக்கும் 01 பாகமும், சிற்பி முதலானோருக்கு 01 பாகமும், பிராமண போஜனம், மகேஸ்வர பூஜை முதலானவற்றுக்கு 01 பாகமும் யாக திரவியங்களுக்கு 01 பாகமுமாக பதினொரு பாகங்களாப் பிரித்து வைக்கப்படும்.

### விநாயகர் பூசை

பிரதம சிவாச்சாரியார் குரு வணக்கம் செய்த பின்பு விக்கினங்களைப் போக்கும் விநாயகரை வேண்டி விசேஷ வழிபாடுகளை நடாத்துவார். இது விநாயகர் பூசை எனப்படும்.

### கிராம சாந்தி

கும்பாபிஷேகம் நடைபெறும் கோவிலை அண்டிய பகுதியில் அசுர, ராக்ஷதர் முதலியவர்களைத் திருப்தி செய்யவென இப்பூசை நடைபெறும்.

### பிரவேச பலி

கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் பைரவர், காளி, இயக்கர், ராக்ஷதர் முதலானோரைத் திருப்திப் படுத்தச் செய்யும் கிரியையே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்சோக்கிர ஹோமம்

வாஸ்து புருஷன் என்ற அசுரன் இறைவனிடம் சாகாவரம் பெற்றவன் என்றும், எங்கே யாகம் நடைபெற்றாலும் அதைத் தடுப்பதே அவ் அசுரனின் வேலை என்றும் ஒரு ஐதீகம். ஆதலால் 'பாசு பதாஸ்தம்' 'அஹோராஸ்திரம், "பிரத்தியங்கிராஸ்திரம்" 'சிவாஸ்திரம்' முதலான நால்வரையும் நான்கு திக்குகளையும் காவல் செய்யும் வழிபாடு இடம் பெறும். இவைகளைத் தொடர்ந்து சிவனை நடுநாயகராகக் கொண்டு அஷ்ட பைரவர், அசிதாங்க பைரவர், சண்டபைரவர் முதலானவர்களைப் பூசித்து அசுர, ராக்ஷதர்களின் தொல்லைகள் நீங்கக் காவல் செய்யும் படி வேண்டுவதுவே 'இரட்சோக்கிர ஹோமம்' என்று கூறப்படுகிறது.

## வாஸ்த்து சாந்தி

வாஸ்து புருஸனாக எண்ணி வைக்கோலை ஆள் உருவமாகக் கட்டிப் பூசைசெய்து, நீற்றுப்பூசனியை வெட்டிப் பலி கொடுத்துப் பின்னர் ஹோம அக்கினியில் அதனைப்பற்ற வைத்துக் கோவில் வீதியில் அது இழுத்துச் செல்லப்பட்டு ஈசான மூலையில் போடப்படும். இவ்வாறு செய்யும் பொழுது பூமி சுத்தம் அடைகிறது. இதையே வாஸ்து சாந்தி என்பர்.

## மிருத் சங்கிரஹணம்

இக்கிரியை என்பது புனித மண்ணை பூமியில் வெட்டி எடுப்பது ஆகும். அவ்வேளை பூமா தேவியின் அதிபதியான இந்திரனையும் காவல் தெய்வங்களான அட்டத்திக்குப் பாலகர்களையும் பிரார்த்தித்த பின்னரே இம் மண்ணை யாகசாலையில் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள சந்திரகும்பத்தின் கீழ் வைக்கப்படும்.

## அங்குரார்ப்பணம்

பிரதம சிவாச்சாரியார், மற்றும் ஏனைய குருமார், எஜமான் போன்றோர் கும்பாபிஷேகத்தைப் பக்தி பூர்வமாகச் செய்கிறோம் எனச் சங்கற்பித்து வலது கையில் காப்புக் கட்டும் நிகழ்ச்சி இதுவாகும். இதன் மூலம் பிரதம குருக்களும் ஏனையோரும் கும்பாபிஷேகம் பூர்த்தியாகும் வரையில் தோஷங்கள், தீட்டுக்கள் ஆகாமல் காக்கப்படுகிறார்கள்.

## கும்பஸ்தாபனம்

இக்கிரியை குடஸ்தாபனம் என்றும் அழைக்கப்படும். கும்பாபிஷேகம் முடிவுறும் வரையில் இறைவனைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து வழிபடுவர். "யோகஜம்" என்னும் சிவாகம நூலில் கும்பத்தை எவ்வாறு உடலாகப் பாவித்து வழிபடல் வேண்டும் என்று கூறப்படுகிறது.

குடத்தின் நுனிப்பாகத்தில் சிவதத்துவ ருத்திரனையும், நடுவில் வித்தியாதத்துவ விஸ்ணுவையும், அதன் அடியில் ஆன்ம தத்துவப் பிரம்மாவையும் பூஜித்து சப்த தாதுக்களும் ஜீவனும் உண்டாகச் சுத்திகரிக்கப்பட்ட குடத்திற்குப் பூசை செய்யப்படும்.

கும்பம் மாமிச உடலாகவும், அதனுள் உள்ள தண்ணீர் (கங்கை நீராயின் உத்தமம்) இரத்தமாகவும், அவற்றுள் இடப்பட்ட இரத்தினங்கள் சுக்லமாகவும் கருதப் படுகின்றன. கும்பத்திலுள்ள தர்ப்பைக் கட்டு நாடியையும், குடத்தைச் சுற்றி வைத்துள்ள முப்புரி நூல்களை நரம்புகள் எனவும் (சிலர் இதனை சரஸ்வதி, இலக்குமி, ரௌத்ரி என்றும்), வஸ்த்திரத்தையும் தோலாகவும், குடத்தின் மேலுள்ள தேங்காயை முகமாகவும் அத் தேங்காயில் உள்ள மாவிலைகளைச் சிவபெருமானின் ஜடாபாரங்கள் என்றும் சிவாகமங்கள் கூறுகின்றன.

இவ்வாறு கும்பத்தை மங்கள வாத்தியங்கள் முழங்கப் பூசை செய்யும் பொழுது அந்தக் கும்பமானது சர்வ தேவர்களும் உள்ள பூரண கும்பமாகிறது.

## கலா கர்ஷணம்

மேற் குறிப்பிட்டபடி எந்த மூர்த்தியை எவ் ரூபத்தில் ஆவாகனம் செய்கிறோமோ அம்மூர்த்தியை அக் கும்பத்தில் வழிபடுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுதல் வேண்டும். இதனைத் தொடர்ந்து மங்கள வாத்திய சகிதம் கும்பம் வீதி வலம் வந்து யாகசாலையில் வைக்கப்படும்.

## யாகபூஜை

மாவிலை, தோரணம், பூமாலை, கமுகு, கரும்பு முதலியவற்றால் நன்கு அலங்கரிக்கப்பட்ட யாகசாலையில் இந்திரன் முதல் விஸ்ணுவரை 10 திசைகளிலும் (36 பாகை வித்தியாசத்தில் ஒவ்வொருதிசை) காப்பாளர் விளங்குவார். நிவிர்த்தி முதலான நான்கு கலைகளும் நாலு பக்கமும் விளங்க அட்டத்திக்குப் பாலகர்களான இந்திரன், அக்கினி, எமன், நிருத்தி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோர் வாயில் காப்போராகவும் அக்கினியின் வடக்கிலே சிவசூரியனும் நிருத்திக்குக் கிழக்கில் யாக பலனைத் தந்தருளும் வாஸ்துபுருஸனும், வாயுவுக்குத் தெற்கில் மஹா லக்ஷ்மியும், வாயுவின் வலது புறத்தே யாக விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானும், ஈசானத்து மேற்குப்புறத்தில் சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் ஆவாகித்து நவ குண்டங்களோடு கும்பங்கள் யாக பூசைக்காக வைக்கப்பட்டிருக்கும். இவ்யாகசாலையின் நடுவில் வேதிகை குண்டம் அமைக்கப்பட்டிருக்கும். கும்பாபிஷேகத்திற்கு இவ்யாகசாலையே முக்கியமாகும். இவைகளுக்குத் தினமும் பாவனாபிஷேகம், நியாஸம், பூஜை, ஹோமம் என்பன இடம் பெறும். இவ்வாறு செய்யும் பொழுது அக்கினி பகவான் அம் மூர்த்திகளுக்கு அதன் பலனைச் சமர்ப்பிப்பார். ஒன்று, மூன்று, ஐந்து, ஒன்பது என்ற எண்ணிக்கையில் யாக குண்ட விதானம் அமைக்கப்பட்டிருக்கும். இதனைச் சுற்றிப் பதினாறு, இருபத்திநான்கு, முப்பத்திரண்டு பதங்களாகப் பல பதங்களையும் அமைப்பர்.

## தூபிஸ்தாபனம்

இதை மூலஸ்தாபனத்தினதும் பரிவாரமூர்த்திகளினதும் விமானக்கலசம் வைத்தல் என்பர்.

## பிம்பஸ்தாபனங்கள்

ஆதிமூலவரின் கர்ப்பக்கிரகத்துள் பீடத்தில் ஒவ்வொரு கடவுளுக்குமுரிய யந்திரத்தகடு வைக்கப்பட்டு பிம்பஸ்தாபனம் (மூர்த்தி) செய்யப்பட்டு, அதன் பின் இவ்வாறு கோவிலில் உள்ள மற்றைய மூர்த்திகளும் ஸ்தாபனம் செய்யப்படும்.

## அஸ்டபந்தனம்

பிம்பஸ்தாபனம் செய்த பின்பு பீடத்தையும் ஒன்று சேர்த்து வைப்பதற்கு ஏதுவாக அஸ்டபந்தன மருந்து சாத்தப் படுகிறது. எட்டுப் பொருட்களான, சுண்ணாம்புக்கல், கற்பொடி, குங்கிலியம், கொப்பரக்கு, காவிக்கல், செம்பஞ்சு, உலர்லிங்கம் வெண்ணெய் என்பனவே அவையாகும்.

## எண்ணெய்க்காப்பு

மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்து வைப்பதற்கு ஏதுவாக இருக்கும் மருந்து இறுகி இருப்பதற்காகவே நல்லெண்ணெய் சாத்தப்படுகிறது. "எண்ணெய்க்காப்பு" (தைலாப்பியங்கம்) நல்லெண்ணெய் சாத்துவதையே குறிக்கும். பக்தர்கள் விக்கிரகங்களைத் தொட்டும் எண்ணெய் சாத்தலாம். இதன் பின் மூர்த்திகளையும் கோவிலையும் சுத்தம் செய்ய வேண்டும். அதன் பின் ஆசாரமான வேதியர் களைத் தவிர வேறெவரும் விக்கிரங்களைத் தொடவோ, அன்றிக் கர்ப்பக்கிரகத்தினுள்ளோ செல்வது தகாது என்று எமது சிவாகமங்கள் கூறுகின்றன.

## ஸபர் சாகுதி

இக் கிரியைகளின் பின்பு ஆதிமூலவருக்குக் காப்பு கட்டிக் கிரியை களுக்கான மந்திரங்களைச் சொல்லித் தர்ப்பை நுனியினால் பிரதம குருவானவர், மூலமூர்த்தியின் சகல அங்கங்களிலும் தொடுவார். அவ்வாறு செய்வதன் மூலம் மூர்த்தி உருவ அமைப்பை மீண்டும் பெறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் குறிப்பிட்ட யாகசாலையில் செய்யப்பட்ட ஹோமங்களையும், அதனால் ஏற்பட்ட ஆற்றலையும் மூல பிம்பங்களிடத்தில், தர்ப்பைக்கயிறு, அல்லது நூல் மூலம் சேர்ப்பிக்கப்படும். மின் ஆற்றலைச் செப்புக் கம்பி மூலமாகச் செலுத்துவதற்கு இது ஒப்பமாகும். இக்கிரியையே 'ஹபர் சாகுதி' என அழைப்பர்.

## குடமுழுக்கு

ஆலயத்தினுள் எந்த எந்த இடத்தில் மூர்த்திகள் வைக்கப்பட வேண்டுமோ, அவ் அவ் இடத்தில் ஸ்தாபனம் செய்யப்பட்டதன் பின், யாகசாலையில் பூரண கும்பங்கள் பூரணத்துவம் கொண்டு விளங்குகின்றன. அப் பூரண கும்பங்கள் எந்த மூர்த்திக்கு எந்தக் கும்பம் வைத்துப் பூஜிக்கப்பட்டதோ அவற்றை வீதிவலம் வந்த பின் அம்மூர்த்தியின் மேல் அபிஷேகம் செய்யப்படும். அப்பொழுது சகல கலைகளையும் கொண்ட மூர்த்திகளாக அவை பின்னர் விளங்கும். அதன்பின் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்ட மூர்த்திகளை முதலில் தேவர்கள் தரிசிப்பதற்காகக் கர்ப்பக்கிரகங்களின் கதவுகள் பூட்டப்படும்.

இதன் பின்னர் பசு, சிவாச்சாரியார்கள், வேதபாரகர்கள், கண்ணாடி, பூரணகும்பம், தீபம், கன்னிப் பெண், சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தர்கள் முதலான 'தசதர்சனம்' (10) நடைபெறும். குருவின் ஆசியும், குருவழிபாடும் இதன் பின் நடைபெறும். அதன் பின்னர் 'எஜமான் அபிஷேகம்' நடைபெறும். கும்பாபிஷேகப் பலனைத் தீர்த்த மூலம் சகலருக்கும் இதன் பின் வழங்கப்படும்.

## மகா அபிஷேகம்

கும்பாபிஷேகம் முடிந்ததும் கும்பாபிஷேகம் நடைபெற்ற மூர்த்திகளுக்கு வழமையாக நடக்கவிருக்கும் முதல் பூஜையாக இது அமையும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய வழிபாடு

திருமதி லலிதா நடராஜா

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று கருதிய நம் ஆன்றோர்கள் தாம் வாழும் பகுதிகளில் எல்லாம் ஆலயங்கள் அமைத்து அஞ்சலி செய்து வந்துள்ளனர். "திருக்கோவில் இல்லா ஊர் திருவில்லாவூர்" என்ற திடநம்பிக்கை இந்துக்களுக்குண்டு. இதனால் இந்து மதத்தினதும் இந்துப் பண்பாட்டினதும் ஆதார சுருதியாகத் திகழ்பவை ஆலயங்களே. இந்த அண்ட சராசரங்களையெல்லாம் இயக்கி, அணுவிலும் அணுவாக – எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் இறைவன். அவன் எல்லாவற்றையும் கடந்தவன். எல்லாவற்றுள்ளும் உள்ளவன். அதனாலேயே, கடவுள் எனப்படுகின்றான். நாவலர் பெருமான் "கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும் ஆலயத் திருமேனிகளிலும், மெய்யடியார் திருவேடத்திலும் தயிரில் நெய் போல விளங்கி நிற்பார். மற்றைய இடங்களில் பாலில் நெய் போல விளங்காது நிற்பார் "என்று விளக்கியுள்ளார். எனவே, கடவுள் தன்னடியார்கட்கு அருள் செய்வதற்காக விரும்பி வெளிப்பட்டு உறையும் இடங்களே கோவில்கள். இதனாலேயே இவை தேவகிருகம், தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவ பவனம், தேவஸ்தானம் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. பரம் பொருளை அடியார்கள் சேவிப்பதற்கான இடம் என்பதால் சேத்திரம் எனவும் பெயர்பெறுவன. ஆன்மாக்கள் இறையழகிலே, இறை அன்பிலே, அதன் அருளிலே திளைத்து நிற்கும் இடமே ஆலயம்.

*"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்கு மிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்த பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"*

என்ற திருநாவுக்கரசர் தேவாரம், நாயன்மார்கள், எவ்வளவில் ஆலய வழிபாட்டினை விரும்பினர் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இவ்வாறு அடியார்கள் வழிபாடாற்றும் ஆலயங்கள் தவமும், செபமும், தியானமும், பூஜையும், பிரார்த்தனையும் செய்வதற்கு ஏற்ற புனிதமான இடங்கள் இந்து மக்களது வாழ்க்கையினின்று பிரிக்க முடியாத அளவில் – அவை சமூக நிறுவனங்களாகச் செயற்பட்டு வந்துள்ளன. பொது வழிபாட்டுக்கும் கூட்டுப் பிரார்த்தனைக்கும் ஏற்ற திருத்தலங்களிலே ஆண்டு முழுவதும் விழா நிகழ்வுகளை ஒழுங்கு செய்து வழிபடுகின்றனர் பக்த கோடிகள். அவர்களது அன்றாட வாழ்க்கையும் ஆலயத்துடன் பெரிதும் தொடர்புற்றுள்ளது. இதனால் சமூக வாழ்வு அருளுணர்வும் தெய்வீக நம்பிக்கையும் உடையதாக அமைகின்றது. அன்பும் அறமும் தழைத்தோங்க ஆலயங்களே நிலைக்களனாய் அமைந்தன. முன்னர் மன்னர்கள் உவந்தளித்த அருட்கொடைகளினால் மனிதரது அன்றாட வாழ்க்கைக்கு ஆலயங்கள் பெரிதும் பயன்பட்டன. கோவில் அமைப்புக்கும் பரிபாலனத்துக்கும் பெரும் தொகையான கைவினைஞர்களதும், கலைஞர்களதும், தொழிலாளர்களதும் சேவை அவசியமாயிற்று. எனவே, அவர்கட்குப் படியளக்கும் பெரும் கடமைகளையும் ஆலயங்கள் செய்தன. கோவிலைச் சார்ந்த திருமடங்களும் சத்திரங்களும் உண்டியும் உறையுளும் நல்கின. அஞ்ஞான இருள் நீக்க, அறிவொளி பரப்பிய ஆலயங்கள் அன்னதானத்துடன் வித்தியா தானமும் நல்கின. பெரும் கோவில்களில் தருக்கமும் சாஸ்திரம் தொடர்பான விவாதங்களும் இடம் பெற்று மக்களது அறிவுப் பசியைப் போக்கின. ஆதுலர் சாலையாகவும் ஆலயங்கள் விளங்கின. வெள்ளம், புயல் போன்ற இயற்கை உற்பாதங்களின் போது தஞ்சமும் அபயமும் நல்கின. மக்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைகேட்டு முறை செய்யும் நீதி மன்றங்களாகவும் அவை விளங்கின. தனது கொடுக்கல் வாங்கல்களின் மூலம், அவை மக்களுக்குச் சேவையாற்றும் வங்கிகளாகவும் அமைந்தன.

அது மட்டுமல்லாது இந்துக்களது கட்டிடக் கலை வளர்ச்சிக்கும் சிற்பக் கலை வளர்ச்சிக்கும் அவை பெரிதும் துணை புரிந்தன. ஓவியம், பண்ணிசை, தவில், நாதஸ்வரம், ஆடற்கலை, நாடகக் கலை என்ற கவின் கலைகளை வளர்க்கும் கலாலயங்களாக அவை இந்துக்களது வாழ்விலும் பண்பாட்டிலும் அடிக்கல்லாய் அமைந்தன.

ஆரம்பத்தில் இயற்கை வடிவில் இறைவனைத் தரிசித்த இந்துக்கள் யாக வடிவிலே இறைவனை வழிபட்டனர். தென்னாட்டில் பூசை முறை இருந்தமைக்கான குறிப்புகள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களில் உள. இதிகாச, புராண காலத்திலேயே இறைவனை விக்கிரகத்தில் அமைத்து வழிபடும் முயற்சியும், ஆலயங்களில் அவற்றைப் பிரதிஷ்டை செய்து வழிபடும் முயற்சியும் ஆரம்பித்தன. ஆலய அமைப்பு, ஆலய வழிபாட்டு முறை பற்றி விளக்கவே ஆகமங்கள் தோன்றின. இதிகாச காலத்திலேயே ஆலய வழிபாடு இந்து சமயத்தின் இன்றியமையாத கூறாயிற்று. தமிழ் நாட்டிலே பக்தி வெள்ளம் பெருக்கெடுத்தோடிய பல்லவ காலத்திலே, நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலம், தலமாகச் சென்று அவற்றின் தல, மூர்த்தி, தீர்த்த, விருட்சக் கீர்த்திகளை எடுத்தியம்பினர். மன்னர்கள் ஆதரவில் நூற்றுக்கணக்கான ஆலயங்கள் நிறுவப்பட்டன. பல்லவ மன்னர்கள், குடைவரை கோவில்களையும் கற்றளிகளையும் அமைத்து, ஆகமம் வல்ல வேதியர்களைப் பூசைக்காக நியமித்தனர். தமிழர் வரலாற்றின் பொற் காலமாம் சோழர் காலத்தில் ஆலய அமைப்பு உச்சம் பெற்றது. அவர்களாட்சிக் காலத்தில் நிலவிய அமைதியும், சுபீட்சமும் ஆலயங்களின் தொகையும், சேவையும் பெருகக் காரணமாகின. சோழப்பெரு மன்னர்கள் உவந்தளித்த பெருங் கொடைகள் – அவற்றின் சேவைகளைப் பெருக்கிச் சமூக வாழ்வின் மையமாக்கின. குடவோலை நடத்தல், நீதி வழங்கல் போன்ற பொது நிர்வாக வேலைகளுக்கு ஆலயங்கள் பயன்பட்டன. அக்காலத்தில் அவை தொழில் வழங்கும் நிறுவனமாக, வங்கியாக, கல்விக் கூடமாக, சொத்துரிமை நிலையமாக, கலைக் கூடமாக, கிராமப் பொதுச் சேவை அளிக்கும் நிலையமாக, சமூகத்துக்குப் பல்வகைப் பணியாற்றின. சோழர் காலத்தை அடுத்து ஏற்பட்ட மகமதியப் படையெடுப்புகளால், இந்து ஆலய வழிபாட்டிற்குப் பெரும் இடர் ஏற்பட்டது. எனினும் விஜய நகரப் பேரரசின் எழுச்சியும் ஆதீனங்கள், மடங்களின் எழுச்சியும் ஆலயங்களின் சமூக உறவுகளை உறுதி யாக்கின. ஆனால் தொடர்ந்து வந்த ஐரோப்பிய ஆட்சி ஆலயத்தின் சமூக சேவைகளைத் தகர்த்து விட்டது. ஆனால் சுதந்திரப் போராட்டக் காலத்தில் தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள் அவை அழிந்துபடாமல் பாதுகாத்தன.

ஆகமம் அறிந்த தபசிகள் இன்று ஆலய அமைப்பில் பெரும் பங்கு கொள்கின்றனர். "படமாடும் கோவில்" எனப்படும் ஆலயங்கள் ஆகம முறைப்படி நாகரம் வேசரம், திராவிடம் எனப்படும் பாணிகளில் அமைக்கப்படுகின்றன. "நடமாடும் கோவில்" எனப்படும் மனிதனது உடலமைப்பை ஒத்ததாகவே ஆலயங்கள் அமைக்கப் படுகின்றன. ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் தோற்றத்தில் ஆலயம் அமைக்கப்படுகின்றது. மூலஸ்தானம் சிரசினையும், அர்த்த மண்டபம் கழுத்தினையும், மஹாமண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றினையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜகோபுரம் பாதங்களையும் குறிப்பன எனப்படுகின்றது. ஆகம முறைப்படி அமைக்கப்படும் ஆலயங்களில் நித்திய – நைமித்திய கிரிகைகளும், காமிக– நிஷ்காமிக பூஜைகளும் ஆகம முறைப்படியே நடத்தப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலுக்குச் செல்லும் முன் நீராடி, துவைத்துலர்ந்த ஆடைகளை அணிந்து, பூசைப் பொருட்களுடன் இறை நாமங்களை உச்சரித்தபடி – திரிகரண சுத்தியுடன் செல்ல வேண்டும். திருக் கோவிலை அண்மித்ததும் கோபுர தரிசனம் செய்து, அதன் பின் உட்புக வேண்டும். பின் கொடிமரம், பலிபீடம், மூலமூர்த்திக்குரிய ஊர்தி என்பவற்றை வணங்கிய பின் கொடிமரத்துக்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். திரியாங்க நமஸ்காரமும், ஏகாங்க நமஸ்காரமும் இரு பாலாருக்கும் உரியவை. கருவறையில் உள்ள மூர்த்தியையும் முன் உள்ள ஊர்தியையும் வணங்கி – பின் துவார பாலகர்களையும் வினாயகரையும் வழிபட்ட பின், பூசையின் பலனைத் தரும்படி சண்டேசுவரரை வணங்கி ஆச்சாரியரிடம் பிரசாதத்தினைப் பெற வேண்டும். அதன் பின் அமைதியாக அமர்ந்து, சிறிது நேரம் இறை நாமங்களை உச்சரித்த பின் வீடு திரும்பலாம். நித்திய பூசை அவசியம்.

காலையில் திருவீதியை வலம் வருவதால் நோய் நீங்கும். உச்சிப் பொழுதில் வலம் வருவதால் விரும்பிய சித்தி கிட்டும். அந்தியில் வலம் லருவதால் மோட்சமும் சித்திக்கும். இவ்வாறு ஆலய வழிபாடு, கொடிய வினைகளை அறுத்து எம்மை உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்றது. ஆனால் நாமோ நமது அறியாமையாலும், அலட்சியப் போக்கினாலும் ஆலயச் சூழலையும், ஆலய வழிபாட்டையும் மாசுபடுத்துகிறோம். ஆசாரமில்லாது ஆலயத்திற்குப் போதல், வெற்றிலை, பொடி போடுதல், வீண் வார்த்தை பேசுதல், நிர்மாலியங்களையும் கோபுரம் – தூபி என்பவற்றின் நிழல்களையும் மிதித்தல் என்பன ஆலயச் சூழலை மாசுபடுத்துவன. பயபக்தியோடு கைக்கொள்ள வேண்டிய கோவில் உற்சவங்களைக் கேளிக்கைகளாக மாற்றி வருகின்றோம். ஒலி பெருக்கிகளின் விரசமான பாடல்களை அளவு மீறிய சத்தத்துடன் ஒலிபரப்புகின்றோம். இதனால் பக்தியும் பவ்வியமும் கெடுகின்றன. சில ஆலயங்களில் சாதிச்சண்டைகள் நிலவ – தாழ்த்தப்பட்ட குலத்தவர் அனுமதிக்கப் படுவதில்லை. இது மகா கொடுமை. மகாத்மா காந்தி "தீண்டாமை வாழ்ந்தால் இந்து மதம் அழியும்" என்று அன்றே எச்சரித்திருந்தார். ஆனால் இன்றும் தீண்டாமை தொடர்வதை யிட்டு நாம் நாணுதல் வேண்டும். "தத்துவம் அஸி" என்ற உபநிடத வாக்கியம் "நீ அதுவாகிறாய்" எனப் பொருள்படுவது ஒவ்வொரு மனிதருள்ளும் இறைவன் கலந்திருக்கின்றான் என்பதே அதன் விளக்கம் – எனவே, மக்கள் சேவையே மகேசன் சேவையாய் அமைகின்றது. சுவாமி விவேகானந்தர் இதைத்தான் " கடவுளை அடையச் சிறந்த மார்க்கம் மனிதனுக்குச் சேவை செய்வதே" என்று வலியுறுத்தினார். எனவே, ஆலய வழிபாடு அர்த்தமுள்ளதாகவும், சமூகத்துக்குச் சேவை செய்வதாகவும் இருக்க வேண்டும். இதை நிலைநிறுத்துவதில் இந்துக்களாகிய நாமனைவரும் முனைந்து நிற்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் ஆத்மீக வழிபாடும்

*திருமதி பார்பதி கண்மணிதாசன்*

சனாதன தர்மத்தின் ஒரு கிளையாகிய இந்து சமயத்தின் வழிபாட்டு இயலிலே இறைவனை உருவிலே கண்டு ஆலயத்துள் வைத்து வழிபாடு செய்வது பழமையான பண்பாட்டின் விழுப்பமாகும். "உள்ளம் பெருங்கோயில்" என்றும், "காயமே கோயிலாக" என்றும், "நினைப்பவர் மனமே கோயிலாய்க் கொண்டவன்" என்றும் கூறிய திருமுறைகளின் பெருமொழிகள் நம் இதயத்தால் சிந்திக்கத் தக்கவை.

வேத கால நூல்கள் முதல் சமகால நூல்கள் வரை ஆலய வழிபாட்டைப் பல கோணத்தில் ஆராய்ந்து சீராய்த் தெளிவு படுத்தி உள்ளன.

ஆலயம் என்பது ஆத்மா லயப்படும் இடம். (சம காலத்தில் ஆசை லயப்படும் இடம்.) அமைதி இழந்த ஆத்மா சாந்தியடையும் தனியிடமே சந்நிதானம். முதற்கண் ஆலய அமைப்பைக் காண்போம். காயமே கோயில். ஒரு மனிதனின் உடல் அமைப்பே ஆலயமாகும்.

| | | |
|---|---|---|
| தலை | – | மூலஸ்தானம் |
| கழுத்து | – | அர்த்த மண்டபம் |
| மார்பு | – | மகாமண்டபம் |
| வயிறு | – | நிருத்த மண்டபம் |
| ஆண்கோசம் | – | நந்தி முதலான வாகனங்கள் |
| பெண்குறி | – | பலிபீடம் |
| முதுகுத்தண்டுவடம் | – | கொடித்தம்பம் |
| மூலம் (மூலாதாரம்) | – | தம்ப விநாயகன் |
| தொடைப்பகுதி | – | தரிசன மண்டபம் |
| கணுக்கால் | – | கோபுரமண்டபம் |
| பாதம் | – | கோபுரம் |
| பாதவிரல்கள் | – | கோபுர கலசங்கள் |

இதில், நெற்றிச்சுழி முனை (பொட்டு வைக்குமிடம்) பிரம்மஸ்தானம். அதிலே மூலவிக்கிரகத்தை யந்திரங்களின் மேல் நிறுத்துவார்கள்.

*இரண்டு கண்கள் – இரண்டு சரவிளக்கு*
*சகஸ்திரம் (மூளை முகிலம்) – கமல விளக்கு*

மகாமண்டபத்துள் அமைந்த சபை எனப்படும் மண்டபம் இருதய ஸ்தானம் எனப்படும். அது ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து (சவாசனம்) உறங்கும்பாது உதாரணமாக மேற்கே தலை வைத்து கிழக்கே கால் இருந்தால் இருதயம் இடப்பக்கமாக அமைந்ததால் அவ்விடம் வடபால் சார்ந்த இருதய ஸ்தானமாகும். இம்மண்டபத்திலே சிவன் ஆலயங்களில் அம்பாளின் உற்சவ மூர்த்தம் (எழுந்தருளி மூர்த்தம்) இருக்கும். அம்பாள் ஆலயத்தில் அம்மண்டபத்தில் சிவன் இருப்பார். இந்நிலை கணவனின் இதயத்தில் மனைவியும் மனைவியின் இதயத்தில் கணவனும் இருக்கும் உயர்நிலைத் தத்துவம். நிருத்த மண்டபம் கிரியைகள் செய்யுமிடம். மனிதனின் வயிறு ஜீரணமான கிரியைகள் செய்யுமிடம். அம் மண்டபத்துள் சிறிய யாககுண்டம் இருக்கும். அதுபோல் மனிதனின் வயிறு உதராக்கினி.

ஆண்கோசம் – நந்தி முதலான இறைவனின் வாகனங்கள். இவை பசு எனப்படும். உயிர் என்றும் அழைப்பர்.

பெண்யோனி – பலிபீடமாகும். இது தளை குடும்ப வாழ்வில் மாயைக்குள் மனித மனம் பலியாக்கப்படுகிறது. பலிபீட பூஜையில் நெய்வேத்தியம் வைத்தபின் அப்பலி கல்லைக்கழுவி நேரே இறைவனை நோக்கி கற்பூரதீபம் காட்டப்படும். மாயையிலிருந்து மாய்ந்த ஆத்மா அருட்புனலில் தோய்ந்தபின் உயிர் பதியை நோக்குகின்றது. இதுவே நந்தி முதல் பலிபீடம் வரையிலான தத்துவம்.

கொடித்தம்பம் – மனிதனின் முள்ளந்தண்டு வடத்தைக் குறிக்கும். கொடித்தம்பத்திலுள்ள முப்பத்து இரண்டு வளையங்கள் முள்ளந்தண்டிலுள்ள முப்பத்து இரண்டு இழையங்களே. அம்முள்ளந்தண்டிலுள்ள மேற்பகுதி தலையிலுள்ள நரம்புமுடிச்சோடு தொடர்பு பெற்று மூளை முகிலத்தில் இணைந்து இருக்கும். முள்ளந்தண்டிலுள்ள மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்த நாடிகள் மேல் நோக்கிச் செல்லும். அவ்வேளை மூளை முகிலம் விழிப்படைய சடைமுளையம் தொழிற்படும். இதுவே கொடித்தம்பத்தில் சுற்றப்படும் கொடிச்சீலை, தர்ப்பைக் கயிறு, பூச்சரம் ஆகியன. கொடி ஏறியபின் இறைவன் வெளி உலா வருவார். பண்டைய காலங்களில் தமிழகம் எங்குமுள்ள ஆலயங்களில் கொடிமரம் கோபுரத்துக்கு வெளியே அமைக்கப்பெற்றிருந்தது. பின் ஆகம சிற்ப சாஸ்திர விதிக்கமைய தம்ப மண்டபத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

ஆலயத்தை அமைக்கும்போது தகுதி வாய்ந்த சிற்பாசாரியின் மூலம் நிலத்தைத் தெரிவு செய்து கர்ப்பக்கிரகத்தை அமைக்குமிடத்து ஆழமான குழிவெட்டி நடுவிலேயுள்ள பிரமஸ்தானத்தில் செப்புக் குழாயை நிறுவி அதை மத்தியாக வைத்து ஆலயம் அமைக்கப்படும் கருவறை, தூபி வரையுமாக கட்டப்பட்டு ஏனைய மண்டபங்களும் அமைக்கப்பெற்று மூலஸ்தானத்தின் நடுவிலே செப்புக் குழாயுள்ள இடத்தில் சிங்காசனம் வரையிலான நீளமான செம்புக் கம்பியை உள்ளே இட்டு அதைச் சிங்காசனத்தின் மேலே தொடர்புபடுத்தி இருப்பார்கள். அப்புதிய ஆலயத்துக்கான விக்கிரகத் தெரிவு ஒரு ஸ்தபதியின் மூலம் நடைபெறும். அதற்கான கருங்கல் தெரிவிலே,

*ஆண்கல் – வெங்கல ஓசை – ஆண் விக்கிரகங்கள்*

*வெண்கல் – உடைந்த வெண்கல ஓசை – பெண் விக்கிரகங்கள்*

*அலிக்கல் – உடைந்த தவிலோசை – பீடம், ஆசனக்கறக்கள் முதலியன*

இவ் விக்கிரகங்களைக் கருங் கல்லிலே செய்வார்கள். காரணம் கல்லிலே நெருப்பு, நீர், ஆகாசம், மண், காற்று ஆகிய ஐம்பூதங்கள் அடங்கியுள்ளன. உதாரணம்: கல்லிலே நெருப்புத் தோன்றியது. கல்லின் உள்ளே தேரைகள் உயிர்வாழும். கல்லில் செய்த விக்கிரகங்களை உயிருள்ளதாக மாற்ற கருவறையிலுள்ள சிங்காசனத்தில் யந்திரத் தகட்டின் மேல் நிறுத்துவர்.

செம்புக் குழாய்
செம்புக் கம்பி
செம்பு, தங்க யந்திரங்கள்
நவரத்தினக் கற்கள்
] உயிரோட்டம் மிகுந்தவை மின்சக்தி உடையவை

அஷ்டபந்தனம் எனும் எட்டு வகையான மருந்துகளை இடித்து அல்லது காய்ச்சி விக்கிரகத்துக்கும் பீடத்துக்குமாக பந்தனம் பண்ணுவார்கள். மூலஸ்தானத்தின் தூபியிலே நிறுத்தப்படும் செப்புக் கலசம் வானில் உள்ள மின்சக்தியை உள்வாங்கும்.

செப்புக் கலசம்
சபையிலுள்ள செப்புக்கலசம்
கொடிமரத்திலுள்ள செப்புக் கவசங்கள்
கோபுரத்திலேயுள்ள செப்புக் கலசங்கள்
] உயிரோட்டம் மிகுந்தவை மின்சக்தி உடையவை

கலசத்தினுள் வைக்கப்படும் யந்திரம் கருங்காலிக்கட்டை, வரகரிசி. இவை இடிதாங்கி எனப் பெயர்பெறும். மின்னல்களால் ஏற்படும் இடிகளைத் தடுத்து ஆலயத்தைக் காப்பாற்றும் சக்தி இவைகளுக்கு உண்டு. தூபிகளிலும் கோபுரங்களிலும் செப்புக் கலசங்கள் வைக்கப்பட வேண்டும். (சமகாலத்தில் எவர்சில்வர் மூலாம் பூசி அழகுக் கலசங்கள் வைக்கப்படுகின்றன.) செம்புகளில் கலசம் செய்வதன் காரணம் வான் மண்டலத்தில் இருக்கும் மின்சக்தியை ஈர்த்து பூமியின் ஊடாக ஏற்கனவே கர்ப்பக்கிரகத்தின் நடுவில் நிறுத்தப்பட்ட செம்புக்குழாயின் ஊடாக நீரிலிருந்து வரும் மின்சக்தியோடு, இணைந்து அதீத சக்தியை ஆலயத்துள் பரப்புகின்றது. இத்தகைய மின்சக்தியோடு ஆலயதுள் கூறப்படும் மந்திரங்களின் ஒலித்திரள், தீபங்களின் ஒலிக்கூறுகள் ஒன்றாகக் கலக்கின்றன. ஆக மேற்குறித்த நிகழ்வுகள் மெய்ஞ்ஞான வழிபாடாக இருந்தாலும் அவை முழுமையான விஞ்ஞான வெளிப்பாடாகும். இத்தகைய சக்தி கொண்ட ஆலயத்துள் மனிதன் இறைவனை வணங்கச் செல்கின்றான். வீட்டிலிருந்து நீராடி தோய்த்து உலர்ந்த எளிமையான ஆடைகளை அணிந்து கையிலே பூசைப் பொருட்களுடன் ஆலயத்துக்கு விரைகின்றான். ஆலயத்துக்குச் செல்லும் போது வெறும் கையோடு போகக்கூடாது என்பர். அதன் உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதெனில் "வெறுங்கையோடு போகாதே நம்பிக்கையோடு போ" என்பதே தத்துவம். ஆலய வீதியை அண்மித்ததும் நீருள்ள இடத்தில் முதலில் தன்னை சுத்தம் செய்யவேண்டும். இதுவே வழிபாட்டுக்கு முன் நடைபெறும் அங்க சுத்தியாகும். முதலில் கால் கழுவ வேண்டும். கால் கழுவும் போது புறங்காலினூடாக நீர்விட்டு கழுவ வேண்டும். அதன் பின் இரண்டு கைகளையும் நன்கு கழுவ வேண்டும். அடுத்து தேகத்திலே தெளித்துக் கொள்ள வேண்டும். பின் மூன்று கைத் தண்ணீரை வாயிலிட்டு வாயை நன்கு அலம்பிக் கொள்ள வேண்டும். அதன்பின் மூன்று கைத்தண்ணீரை உள்ளே குடிக்க வேண்டும். இக்கழுவு முறையினால் உள்ளும் புறமும் சுத்தமடைகின்றன.

கால் கழுவும்போது காலினால் செய்த பாவம் நீக்கம். கை கழுவும்போது கையினால் செய்த பாவம் நீக்கம். தேகத்தில் தெளிக்கும் போது காயத்தினால் செய்த பாவம் நீக்கம். வாயை அலம்பும் போது வாக்கினால் செய்த பாவம் நீக்கம். உள்ளே குடிக்கும்போது மனத்தினால் செய்த பாவம் நீக்கம். (தற்போது இவையெல்லாம் தெளிவாக நூல்களில் எழுதாமையினாலும் தெரிந்து ஆழ்ந்து சொல்லாமையினாலும் இந்து சமய மக்கள் சம்பிரதாயத்துக்கு கால் கழுவும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.) மேற்படி சுத்தம் செய்தபின் கோபுரத்துக்கு முன்னதாக கைகளை உயர்த்தி இறைவனை வணங்க வேண்டும். கைகளை மேலே உயர்த்தும்போது இறைவா நீ பெரியவன். நான் சிறியவன் என்ற தத்துவமும் ஆழமான நீர் நிலையில் வீழ்ந்த ஒருவன் கால்களையோ தலைகளையோ தூக்கிப்போட்டுக் காப்பாற்றுங்கள் என்று சொல்ல மாட்டான். கைகளை உயர்த்தியே காப்பாற்றுங்கள் என்று சொல்வான். அதேபோல் "பிறவிப் பெருங்கடலில் அமிழ்ந்து போகும் என்னைக் காப்பாற்று இறைவா" என்ற தத்துவமே உயர்ந்தது. அதன்பின் தூல லிங்கமாகிய கோபுரத்தைத் தரிசனம் செய்து ஆலயத்துள் செல்லும்போது வழமையாக வாயிற்படியை வணங்கிவிட்டே செல்ல வேண்டும். இதன் காரணம் விளங்காமல் பலர் இருக்கலாம். மூலஸ்தானத்திலே இருக்கும் கல் விக்கிரகம் மதிக்கத்தக்கது. இங்கிருக்கும் படிக்கல் மிதிக்கத்தக்கது. மிதிக்கின்ற கல்லையும் வணங்குகின்றார்களே என்று கேலி செய்யலாம். ஆனால் அதன் உண்மை என்ன? நாம் இறைவனிடத்தில் இகபோக சுகங்களை வேண்டுவோம். ஆனால் மகான்களும் ஞானிகளும் இறைவனின் பதத்தன்மையே வேண்டுவர். அத்தகைய ஒரு மகான் "படியாய்க் கிடந்துன் பவளவாய் காணேனே" என்ற ஆழ்வாரின் வாக்கிற்கு ஒப்ப யாரோ ஒரு மகான் திருக்கோயிலின் ஒரு படியாய் இருக்கலாம் என்ற உயரிய நோக்கைக் கருத்திற் கொண்டு அப்படியை நாம் மிதித்துச் செல்லும்போது அம்மகானை மிதித்துச் செல்வது போன்றது என்ற அச்ச உணர்வே அப்படியைத் தொட்டு வணங்குவதாகும். அதன் பின் உள்ளே சென்று கொடித் தம்பத்திற்கு முன்னால் உள்ள தரிசன மண்டபத்தில் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்வர். இதில் ஆண்கள் எட்டு உறுப்புகளாகிய தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்த வணங்குதல் வேண்டும். பெண்கள் ஐந்து உறுப்புக்களாகிய தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு ஆகிய உறுப்புக்கள் நிலத்திலே பொருந்த வணங்குதல் வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்யும்போது இரண்டு கைகளையும் நீட்டி மடக்கி நீர் நிலைகளில் நீந்தும் பாவனைபோல் வணங்குதல் வேண்டும். இதன் காரணம் "பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார் இறைவனடி சேராதார்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய பிறவிப் பெருங்கடலை நீந்துகின்ற பாவனையே ஆகும். இவை விஞ்ஞான ரீதியாக ஆலயத்தில் இருக்கின்ற மின்னியல் சக்தி உடலிலே ஊடகமாகும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும்போது மார்பும் வயிறும் நிலத்திலே படக்கூடாது என்பதை ஆன்றோர் கவனத்தில் கொண்டு இருக்கிறார்கள். காரணம் ஆலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற மின்னியல் சக்தி வயிற்றுப் பகுதியிலுள்ள கர்ப்பப்பையையும் மார்பகச் சுரப்பியையும் பாதிக்கக்கூடும் என்பதால் பெண்களுக்கு பஞ்சாங்க நமஸ்காரத்தை ஏற்படுத்தினர். அதன்பின் முதற்கண் விநாயகரை வணங்குதல் வேண்டும். விநாயகரை வணங்கும்போது இரண்டு கைகளையும் முஷ்டியாகப் பிடித்து கைகளை மாறி வலதுகை முஷ்டி நெற்றியின் இடது கன்னத்திலும் இடது கை முஷ்டி வலது கன்னத்திலும் குட்டுதல் வேண்டும். குட்டும் இடத்தைக் கன்னச்சுழி என்பர். குட்டும்போது மும்முறை குட்டுதல் சித்தாந்த விதி. ஆனால் ஆகமங்களில் ஐந்து தரம் குட்ட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் உண்மை விதி யாதெனில் யானை முகத்தை உடைய கணபதிக்கு முன் குட்ட வேண்டும் என்பது விதி. "குட்டுப் பட்டிடல் நன்றாம்" என்ற இம்முதுமொழி மாறி "குட்டுப்பட்டாலும் மோதிரம் போட்டவன் கையால் குட்டுப்பட்டிடல் நன்று" என்று அறியாமையால் மருவியுள்ளது. விநாயகருக்கு உரிய முகம் யானை முகம். யானை மும்மதத்தை உடையது. கன்னமதம், கபோதமதம், கரடமதம். இம்மதம் வெறியாகும் போது யானையை அடக்குகின்ற பாகன் அங்குசத்தால் யானையின் மத்தகத்திலே தாக்குவர். தாக்கியவுடன் அங்குசத்தால் யானையின் செவியைத் திருகி இழுப்பர். அவ்வேளை அம்மதம் வலிமை கெட்டு யானை நெறிப்பட்டு அடங்கும். இதேபோல் மனிதனும் மும்மலங்களை உடையவன் ஆணவம், கன்மம், மாயை இம்மும்மலங்களும் வலிமைகெட மும்முறை குட்டுதலும் உடன் அக்கைகளை மாறியபடியே செவிகளைப் பிடித்து தோப்புக்கரணம் இடுதலும் ஆகும். இதைக் கந்த புராணத்திலே அனந்தன் சாபம் நீங்கும் படலத்தில் பத்தாம், பதினோராம் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

*"இத்திறம்படு மெல்லையில் நின்றிடு*
*மத்தலைச் சுரர் யாவரும் அன்பூறிக்*
*கைத்தலத்தைக் கவித்தம தாக்கியே*
*தத்த மத்தகம் தாக்கினர் மும்முறை" –10*

*"இணைகொள் கையை எதிரெதிர் மாற்றியே*
*துணைகொள்வார் குழைதொட்டனர்*
*மும்முறை"*

என்ற இரு பாடலும் இதற்கு எடுத்துக் காட்டாகின. விஞ்ஞான ரீதியாக இரண்டு கன்னச்சுழிகளிலும் குட்டும்போது இடை பிங்களை சுழிமுனை என்னும் மூன்று நாடிகள் தொழிற்படுகின்றன. இவை ஞாபக சக்திக்கு வழிவகுக்கும். அதன் பின் ஆலயத்தை மும்முறை வலமாக வந்து தரிசன மண்டபத்தில் ஆண்கள் வலது பக்கமாகவும் பெண்கள் இடது பக்கமாகவும் நிற்றல் வேண்டும். அவ்வேளை ஆலயத்திலே திரை இடப்பட்டிருக்கும். மனமாகிய இறையொளி தெரியுமிடத்தில் மாயை என்னும் திரை அதை மறைத்திருக்கும். அதற்குள் இறைவன் மறைந்திருப்பான். திரை நீங்க தீபங்கள் காட்டப்படும். மாயை நீங்க இறைவனின் காட்சியைக் காணலாம்.

தூபம் காட்டல் – இறைவன் அருவமானவன்
அடுக்குத் தீபம் – இறைவன் எண்ணுதற்கரிய ஜோதி வடிவானவன்
ஐந்துதிரித் தீபம் – இறைவன் ஐந்து வடிவாய் காட்சி தருகிறாய் (பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன்)
மூன்று திரித் தீபம் (வில்வதீபம்) – இறைவன் மூன்று வடிவானவன் (பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்)
கும்ப தீபமும் ஐந்து தட்டுகளும் – கும்பம் – பிரம்மம்
ஐந்து தட்டு – ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம்
ஒற்றைத்திரி தீபம் – இறைவன் ஒருவனே
கற்பூரதீபம் – இறைவன் உடன்தோன்றி மறைபவன்
பஷ்மரட்சை (விபூதி அணிதல்) – பூ, விபூதி, நீர் மூன்றையும் தொட்டு ஓங்காரமாகக் காட்டி மூன்றாவது தடவை கற்பூரத் தட்டின் அடியிலே இடப்படும். (தற்போது கற்பூர ஒளியை விபூதியைப் போட்டு அணைத்து விடுகிறார்கள்.) இதன் தத்துவம் பூபோன்ற உடம்பு ஓர்நாள் நீறாகும். அதை நீரிலே கரைப்பர். அவ்வேளை ஆத்மா ஒளியிலே கலக்கட்டும். ஓங்காரமாகக் காட்டல் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் பிறப்பு. இடைச்சுழி நடுமத்திய வாழ்வு. கடைவட்டம் இறப்பு.
கண்ணாடி – மனிதா நீ கண்ணாடியாக இரு என்பதாகும்.
குடை – மனிதா நீ நிழலாக இரு என்பதாகும்
வெண்சாமரை – மனிதா நீ மானமுள்ளவனாக இரு.
விசிறி – மனிதா இறைவனைத் தவிர யாருக்கும் அடிமையாய் இராதே.
ஆலவட்டம் – மனிதா புகழோடு வாழ்.
கொடி – மனிதா கொடி போன்று உன்பெயர் பட்டொளி வீசிப் பறக்கட்டும்.
பன்னீர் – புகழ் மணம் உலகெலாம் பரவட்டும்.

இறைவனின் கருணைக்குப் பாத்திரமாகிய மனிதன் கண்ணாடி போன்று வாழ வேண்டும். கண்ணாடியில் நாம் நம்மைப் பார்த்து அலங்கரிப்பதுபோல மற்றோர் கண் நம்மைப் பார்த்து வாழவேண்டும். கண்– நாடி – அளத்தல். மற்றவர் நம் தூய வாழ்வைக் கண்டு திருந்துதல். குடை நிழலுக்குப் பாத்திரமானது. இறையன்பன் எல்லார்க்கும் நிழலாய் இருத்தல் வேண்டும். வெண்சாமரை ஓர் முடி இழந்தாலும் உயிர்வாழா கவரிமான்போல், மான உணர்வோடு இறை வாழ்வோடு வாழ வேண்டும். சில பேர்க்கு சில பேர் விசிறி எனபர். விசிறி அடிமையின் சின்னம். இறை அடியான் "நாமார்க்கும் குடியெல்லோம்" என்ற அப்பர் வாக்கிற்கு ஒப்ப வாழுதல் வேண்டும். ஆலவட்டம் ஆள் – வட்டம். மனிதர்களிடையே பெரு மனிதராக மனிதருக்குள் மாணிக்கமாக நீ வாழவேண்டும். (ஞானிகள், மகான்களுடைய வாழ்க்கை இதற்கு எடுத்துக் காட்டு) கொடி கண்ணாடியாக வாழ்ந்து நிழலாக இருந்து மானமுள்ளவனாக வாழ்ந்து அடிமையாய் இராமல் மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் மாமனிதராக இருந்தால் உலகமாந்தர் தலைவணங்கும் மங்காத புகழ்கொண்ட கொடியோடு வாழ்ந்தால் உனது பெயர் பன்னீர்போல் எங்கும் புகழ் மணம் வீசும்.

அர்ச்சனை - இறைவனின் நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்தல். அதன்பின் பஞ்சாராத்தி காட்டுதல். இறைவனின் நாமத்தைச் சொல்ல அவனின் திருவருள் சக்தி என்ற ஒளிக்குள் நாம் கரைந்து ஒன்றாகின்றோம். கற்பூரம், ஆத்மா, அதில் பற்றிய ஒளி, இறைவன். ஜீவாத்மா, பரமாத்மாவோடு கரைதல். அப் பஞ்சா ராத்தியைப் பின் அடியார்கள் தொட்டு வணங்குதல். அவ்வொளியை அகக்கண் காண ஊனக்கண் கண்டு உணர்வைடைதல். ("முக்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள். அகக்கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" என்ற திருமூலரின் பாடல் சிந்தை கொள்ளத்தக்கது.) அதன்பின் பஞ்சபுராணம் பாடுதல். பஞ்சபுராணம் பாடும் ஓதுவார் மூர்த்திக்கு கைகழுவ நீர் கொடுத்த பின் பாடுதலே சிறப்புடையதாகும். (தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், வாழ்த்து. இதில் திருப்புகழ் பிற்காலத்தே சேர்க்கப்பட்டவை. விரும்பினால் திருப்புராணத்தின் பின் திருச்சிற்றம்பலம் கூறி திருப்புகழ் பாடலாம். திருப்புராணம், பெரியபுராணம் மட்டுமே பாடுதல் வேண்டும். நிறைவில் "வான்முகில் வழாது பெய்க" எனும் வாழ்த்து கட்டாயம் இடம்பெறல் வேண்டும்.) பின் பரிவார ஆலயங்களில் பூஜை நிறைவுபெற்று சண்டேசுவரர் பூசை நடைபெறும். சண்டேசுவரர் பூசையில் பூஜையின் பலன்களை அவரிடம் ஒப்புவித்து மெதுவாக கையைத் தட்டிக் கொள்ளுதல். இதில் இரண்டு தத்துவங்கள் அடங்குகின்றன.

1. நித்திய தியானத்தில் இருக்கின்றவரை சற்றே அசைத்து எமது பிரார்த்தனையை நிறை வேற்றும்படி கூறுதல்.
2. ஆலயத்துள் வரும்போது வெறும் கையோடு வராமல் நம்பிக்கையோடு வந்தோம். ஆலயத்தை விட்டு இறுதியாகச் செல்லும்போது ஆசையோடு எதையும் கையிலே பற்றிக் கொள்ளாமல் வெறுங்கையோடு போகின்றேன். ஆனால் நம்பிக்கையுடன் போகின்றேன் என்பதே. இதில் கடைசியாக மூன்றுதரம் மணி அடிப்பதற்கும் சண்டேசுவரருக்கும் சம்பந்த மில்லை. பூசை தொடங்குவதற்கு முன் அடித்தல். அதேபோல் நிறைவிலும் மூன்றுதரம் மணி அடித்தல். அதேபோல் நிறைவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுதரம் மணி அடித்து நிறைவு செய்தல்.

ஒரு தரம் அடித்தல் – உலக நன்மைக்காக
2ம் தரம் அடித்தல் – கிராம நன்மைக்காக
3ம் தரம் அடித்தல் – ஜனங்களின் நன்மைக்காக

காண்டாமணியை அடித்தல். தீய எண்ணம் விலகவும் நன்மையான சிந்தனை நமக்குள் விழிக்கவும் அடிக்கப்படுவது இதுவே அசுரர்கள் விலகவும் தேவர்கள் வரவும் அடித்தல் என்பதாகும். சண்டேசுவரர் பூசை நிறைவின் பின் குருக்கள் ஐயாவினால் கட்டாயம் ஒரு நற்சிந்தனை வழங்கப்பட வேண்டும். (பிற சமய குருமார்கள் பூஜை நிறைவேறியபின் மக்களுக்கு நல்லாசி வழங்கி நற்சிந்தனை வழங்குவர். அதன்பின் விபூதி வழங்குதல். விபூதி மேலான அனுபூதி. குருக்கள் அவர்கள் தன் திருக்கையினால் நம் நெற்றியிலே அணியும்போது தலைதாழ்த்தி வலது கையினால் வாயை மூடி விபூதியை நெற்றியில் அணிந்த பின் அவரின் திருவடியை தொட்டு வணங்குதல் வேண்டும். இதில் உயர்வு, தாழ்வு பார்த்தல். வயது வித்தியாசம் பார்த்தல், தவிர்த்தல் வேண்டும். விபூதியை நம் கையில் தரும்போது இடதுகை கீழாகவும் வலதுகை மேலாகவும் வைத்து தலை தாழ்த்தி விபூதியைப் பெற்றுக் கொண்டபின் இரண்டு கண்களிலும் ஒற்றி வணங்கிய பின் நிமிர்ந்து கீழே சிந்தாவண்ணம் நெற்றியில் அணிதல் வேண்டும். அணிந்த மீதி விபூதியை கவனமாக வீட்டிற்குக் கொண்டு சென்று அணிதல் நன்று. விபூதியின் பின் தீர்த்தம் வழங்கப்படும். தீர்த்தம் வினைகளை, பாவங்களைத் தீர்க்கும். தீர்த்தம் அருந்த வினைகளைத் தீர்த்தோம் என்ற உணர்வு தோன்றும். தீர்த்தம் வழங்கும்போது வலது கை மேலாகவும், இடது கை கீழாகவும் வைத்து ஆணவத்தன்மை உடைய ஆட்காட்டி விரலை பெருவிரலாகிய பதியோடு மடித்து மூன்று விரல்கள் நிமிர்ந்து நிற்க உள்ளங்கையில் தீர்த்தத்தை வாங்கி மெதுவாக அருந்துதல் வேண்டும். ஆணவம் இறைவனின் அடியில் வலிமைகெட மனம், வாக்கு, காயம், சுத்தி பெறும். பெருவிரல் இறைவன். ஆட்காட்டிவிரல் ஆணவம். மடங்கி வலிமைகெடல் எனப்படுவது.

இந்நீரிலே இறைவனுக்கு உகந்த பத்திரங்களையிட்டு பத்திரப்படுத்திக் கொடுத்தால் அது மருந்துக்குச் சமமாகும்.

விநாயகர் – அறுகுத் தீர்த்தம்
சிவன் – வில்வைத் தீர்த்தம்
அம்பாள் – வேப்பிலைத் தீர்த்தம்
முருகன் – கடம்புத் தீர்த்தம்
விஷ்ணு – துளசி தீர்த்தம்
ஆஞ்சநேயன் – துளசி தீர்த்தம்

பஞ்சாமிர்தம், பால் தீர்த்தமல்ல. நெய்வேத்திய பிரசாதங்களே. இவை வழங்கியபின் சந்தனம் வழங்கப்படும். சந்தனம் சிவத்தின் அடையாளம். குளிர்ச்சியை உடையது. சந்தனத்தை மோதிர விரலால் நெற்றியில் சுழி முனையில் வேல் போன்ற அடையாளமாக மேல்நோக்கி இடவேண்டும். (மோதிர விரலால் வைத்தல் சூரியன் மேட்டை உடையது. அவ்விரலுக்கும் மூளைக்கும் தொடர்புண்டு. கல் வைத்த மோதிரம் அவ்விரலில் அணிதல் அதீத சக்தியைக் கொடுக்கின்றது. அவ்விரலால் சந்தனம் வைத்தால் அது அதிக சக்தியைக் கொடுக்கும். சந்தனத்தின்மேல் குங்குமம் வைத்தல். குங்குமம் சத்தியின் அடையாளம்.

குங்குமம் – சக்தி – வல்லமை. நிறம் – செந்நிறம் இரத்தத்தன்மை உடையது. பெண்கள் கட்டாயம் குங்குமம் இடுதல் வேண்டும். குங்குமம் பெண்களுக்கு கட்டாயமானது. பிரசாதங்களை மருந்துபோல் பெற்றுக்கொண்டு ஆலயத்தில், அமைதியாக சற்று நேரமிருந்து வீடு செல்லுதல் வேண்டும். ("சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில் தவமுறை, தியானம் வைக்க அறியாத" என்ற திருப்புகழ் சிந்திக்கத் தக்கது.) ஆலயத்தில் நாம் கொடுக்கும் பூசைப் பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் இருந்து நமக்களிக்கப்படும் பிரசாதங்கள் யாவும் உயரிய தத்துவம் உடையவையே.

வெற்றிலை – வெறுமை – இலை, மனம், ஆலயத்துள் செல்லும்போது வெறுமை நிலையில் இருத்தல் வேண்டும்.

பாக்கு – முற்றிய இதயத்தை குறிக்கும். மனம் பாக்காக பக்குவப்பட்டுவிட்டால் வலிமை அடைந்துவிடும்.

வாழைப்பழம் – வெறுமை நிலையில் மனம் இருந்து பாக்காகப் வலிமை பெற்றால் வாழ்வு கனிந்துவிடும். வாழைக்கனி வாழ்வு கனி. (மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம்" என்ற சுந்தரரின் பாடல் சிந்தை கொள்ளத்தக்கது.)

அரிசி – உமி – ஆணவம், முளை – கன்மம், தவிடு – மாயை அரிசி. ஆன்மா. ஆணவம், கன்மம், மாயை நீங்கிய ஆன்மா ஞானாக்கினியில் பக்குவம் ஆவதுபோல் அரிசி நெருப்பிலே வேகி பக்குவமான அன்னம் ஆகின்றது.

தேங்காய்– மட்டை – மாயை, தும்பு – கன்மம், ஒடு – ஆணவம் தேங்காய் உடைக்கும்போது நீர் வழிந்து விடும். நல்ல தேங்காய் துருவி பிழிந்து பயன்பெறும். நல்ல ஆத்மா சோதனைக்குள்ளாக்கப்படும். தேங்காய் உடைத்து தும்மை எடுத்தல். குடுமித்தும்பு எடுபட மூன்றுகண் தெரியும். கன்மமாகிய தும்பு நீங்க மனம் வாக்கு காயம் வெளிப்படும். தேங்காய் எண்ணெய் – துருவிப் பிழிந்து நெருப்பிலிட்டு நீர் வற்றக் காய்ச்சிய பின்பு சுடர் விட்டுப் பிரகாசிக்கும். சோதனைகளில் துவண்டு பக்குவப்பட்ட ஆத்மா சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

கற்பூரம் – எரிந்து மீதமில்லாமல் காற்றில் கலந்து விடுகின்றது. தூய ஆத்மா இறை அருளோடு கலந்து விடுகிறது.

ஊதுபத்தி – எரிந்து புகையைப் பரப்பி தான் சாம்பலாகி விடுகின்றது. மனிதப் பிறவி தியாக சிந்தையால் நலம் விளைத்து அழிந்து விடுகின்றது.

மலர்கள் – பூவுக்குள் காணுதற்கரிய மணம் இருப்பதுபோல் சீவனுக்குள் காணுதற்கரிய சிவமணம் கலந்திருக்கும்.

பொங்கல் – அரிசி, சக்கரை, பால், கற்கண்டு, கனிவர்க்கம் தனித்தனியாக இருந்து ஒரு பானையில் ஒன்றாகக் கலந்து இனிக்கும் பொங்கலாக மாறுவதுபோல் ஆலயத்துக்கு வெளியே பலவகைப்பட்ட மக்கள் ஒன்றாக ஆலயதுக்குள் வந்தால் அவர்கள் பிரிக்க முடியாத இனிக்கும் இறை அடியார்களாவர்.

எனவே மேற்குறித்த ஆலய வழிபாட்டின் தத்துவங்கள் ஆத்மா நெறிப்பட உதவும் வழிபாடாகும். வழிபாடு என்பது ஆலயத்தோடு கலந்த ஆத்மா பேரின்பப் பெருவாழ்வில் இரண்டறக் கலந்து இன்பமுற ஆன்றோர்கள் வகுத்த நெறிகளாகும். மேற்குறித்த அனைத்துத் தத்துவங்களும் பஞ்ச பூதங்களின் உட்பொருளே, ஆழ்ந்து சிந்தித்தால் அகம் மலரும். ஆத்மா பலம் பெறும். இறைவழிபாட்டைக் கடைப்பிடித்து பொருள் உணர்ந்து இருள் நீங்கி அருள்பெற்று வாழ்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் ஆன்மீகம்

தமிழ்மணி. கே. வெள்ளைச்சாமி

ஆன்மீகம் என்பது சமய மெய்யறிவோடும் மெய்யுணர்வோடும் சம்பந்தப்பட்ட விடயமாகும். உலகிலுள்ள மக்களனைவரும் ஏதோவோர் சமயத்தைச் சார்ந்தவர்களாகவிருப்பர். அவ்வாறு சமயத்துக் குட்பட்டவர் அவரவர் சமய வழிபாடுகள் சமயக் கிரியைகள், சமய அனுட்டானங்களை மேற்கொண்டு வருவர். ஆரோக்கியமான, வளமான சமுதாய வளர்ச்சிக்கும், கட்டுக் கோப்பான வாழ்க்கை முறைக்கும் நெறிமுறை தவறாத வாழ்வுக்கும் சமயங்கள் பங்களிப்புச் செய்கின்றன.

உடலை வளர்ப்பதற்கும் கிரமமான உடல் அபிவிருத்திக்கும் போஷாக்கான உணவை உட்கொள்வது போல, உள்ளம் சிறப்படைய – மனம் பக்குவமடைய இறையுணர்வும் மெய்யறிவும் மிக்க அவசியம். இதனைக் கொடுப்பது – வளர்ப்பதும் சமயமே.

மனித மனம் கோணலாகி சமூகத்தில் பெருந்தீங்குகளைச் செய்யாது ஒழுக்கமும் சீலமும் உள்ள சமுதாய அமைப்பை உருவாக்கக் கூடிய பலமும் சக்தியும் சமயத்திற்கேயுண்டு.

சமய நெறி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை முதலிய நற்பண்புகளை வளர்க்க முடியும். உடல் வளர்ச்சியும் உளவளர்ச்சியும் சமமாக விருத்தியடையும் போது சமநிலை பேணப்படும். அப்போது தனிப்பட்டவரிடையேயும் சமூகங்களுக்கிடையேயும் மன அமைதியும் சமாதானமும் பெருகி உயர்ந்ததும் உன்னதமானதுமான நிலை தோன்றும்.

மக்களின் வாழ்க்கை நெறியை வளப்படுத்தும் சமயஞ் சார்ந்த ஆன்மீக நெறி மலையக மண்ணில் வளர்ந்து வருவதற்கான அடையாளம் காணப்படுகின்றது. தமிழ் மக்கள் மலையக மண்ணில் கால்பதித்து சுமார் நூற்றெண்பது ஆண்டுகளாகின்றன என்பர். இக்கால வளர்ச்சிக்கான சமய அறிவும் மெய்யறிவும் ஏனைய வட கிழக்குப் பகுதிகளோடு ஒப்பிடும்போது நிறைவைத் தருவதாக இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வர். நாம் உடல் வளர்ச்சி பெற்றுள்ளோம். உள, மன வலிமையைத் தரக்கூடிய சமய மெய்யறிவைப் பெறுவதில் பின் தங்கியுள்ளோம். இதனைப் பெற்றுக் கொள்ள இப்போது மலையத்தில் வழிவகைகள் வகுக்கப்படுகின்றன என்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

மக்களிடையே சமய அறிவு வளர்ச்சிக்குக் காரணமாகவும் துணையாகவும் அமைபவை, ஆதாரமாகவிருப்பவை கோயில்கள், மடாலயங்கள், சமய நிறுவனங்கள் என்பனவற்றுடன் அறிஞர்கள், யோகிகள், ஞானிகள், மதப்பிரசாரகருமாவர். இந்த வகையில் நமக்குக் கிடைத்த உதவிகள் மிகக்குறைவே. மலையகப் பெருந் தோட்டங்களில் உள்ள கோயில்களில் பெரும்பாலும் நித்திய நைமித்திய பூசைகள் இடம் பெறுவதும் குறைவு. கோயில்களில் அர்ச்சகராக இருப்போரின் சமய அறிவு வளர்க்கப்பட வேண்டும். நமது மக்களிடையே எழுத்தறிவு குறைவாகக் காணப்படுவதும், வழிபாட்டு முறைகளிலும் சமய அனுட்டான முறைகளிலும் பயிற்சி குறைவாய் இருப்பதும் வழிபாட்டு மேம்பாட்டிற்கான சூழல் இல்லாதிருப்பதும் சமய அறிவு வளர்ச்சிக்குத் தடைகளாகக் கருதலாம். பூசைகளைச் செய்வோர் வழிபாட்டிற்குரிய மந்திரங்களை அறியாதிருப்பதும் மற்றோர் காரணமாகும்.

நகர்ப்புறங்களிலுள்ள ஆலயங்கள் தனிப்பட்ட அறங்காவலர் மூலமாகவோ, தர்மகர்த்தா சபைகள் மூலமாகவோ நிதி பற்றாக்குறையன்றி நடைபெறுவதால் நித்திய நைமித்திய பூசைகள் தவறாமல் இடம் பெறுகின்றன. சிவாச்சாரியார்கள் இருந்து வேத நெறிப்படி வழிபாட்டு முறைகளையும் சமயக் கிரியைகளையும் கிரமமாக நடத்தி வருவதால் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிக்க உதவியாக இருக்கின்றது. சென்ற இரு தசாப்தங்களில் மலையகப் பெருந்தோட்ட மக்களிடையே விழிப்புணர்ச்சி தோன்றி இறை வழிபாட்டில் ஈடுபடும் மக்களுக்கு உதவியாயிருக்க, ஆலயங்களைப் புதிதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவியும் பழைய ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்து வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. ஆன்மீக வளச்சிக்கான பாதையமைப்பதில் ஏற்பட்டுள்ள நல்ல சகுனம் என்று இதைக் கருதலாம்.

பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த மக்கள் கால்நடையாகக் கதிர்காமம் சென்று, காவடி எடுத்து, செதில் குத்தி, பக்தி சிரத்தையுடன் வழிபாடியற்றிய காலமொன்று வளமாக இருந்தது. ஆனால் இன்று போக்குவரத்து வசதிகளும் பிறவசதிகளும் கூடியிருந்தும் முன்னைய ஆர்வம் இப்போது குறைந்துள்ளதாகத் தெரிகிறது. ஸ்ரீ இராம கிருஷ்ண மடம் கோயில் வளவுக்குள்ளே இருந்தது பக்கதர்களுக்கு மன நிறைவைக் கொடுக்க, மிஷனின் நிறைவான உதவி களையும் பெற்றனர். நாட்டின் சூழ்நிலை காரணமாக மலையக மக்கள் கதிர்காமம் செல்வது குறைவு என்று சொல்லப்படுகின்றது.

மலையக மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு பலதசாப்தங்களாக உதவி வருவது மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானமாகும் என்றால் யாரும் மறுக்க முடியாது. பஞ்சரதத்தேர் பவனிவரும் மாத்தளை நகருக்கு இலங்கையின் பல முனைகளிலிருந்தும் பக்தர்கள் வந்து அம்மனின் அருளாசியைப் பெறுவர். மாத்தளை மாநகர் இலக்கியச் செழிப்பும் சைவச் செழிப்பும் கொண்ட மக்களையுடைய மாநகர். "மாத்தளை மாசி மகம் காணாத கண் என்ன கண்ணே" என்று போற்றும் அளவுக்குச் சிறப்புப் பெற்ற தலமாகும்.

மேலும் கண்டி, கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம், ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார், ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம் நுவரெலிய ஸ்ரீ காயத்திரிதேவி ஆலயம், சீதையம்மன் ஆலயம், இறம்பொட ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம் என்பனவற்றுடன், வத்தேகம, கம்பளை, நாவலப்பிட்டி, மஸ்கேலியா, பொகவந்தலாவை, இராகலை, பதுளை, பண்டாரவளை, ஹப்புதளை போன்று இன்னும் பலவிடங்களிலுள்ள ஆலயங்களும் பக்தியை வளர்ப்பதில் பங்களிப்புச் செய்கின்றன.

ஆன்மீக வளர்ச்சிக்கு நாவலப் பிட்டியில் இருந்த அமரர் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பணியும் தொண்டும் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். நாவலப்பிட்டியிலும் மலையகத்திலும் நாடு பூராவிலும் அவரின் அருந்தொண்டு போற்றுதற் குரியதாகவிருந்தது. நுவரஎலிய காயத்திரி தேவி ஆலய சுவாமி முருகேசு அடிகளார் அவர்களின் ஆன்மீகத் தொண்டும் போற்றுதற் குரியதாகும்.

ஆலய நிர்வாகிகள் காலத்துக்குக் காலம் நடைபெறும் உற்சவங்களில் கலந்து கொள்ள சமய இலக்கியப் பெரியார்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்து சமய அறிவையும் இலக்கிய அறிவையும் பெருக்குவதற்கு துணையாக இருந்துள்ளனர். இந்த வகையிலும் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் முன்னிற் பதை பெருமையாகச் சொல்லாம்.

மலையகத்தில் ஆன்மீகவுணர்வைத் தூண்டிய அரசியல் பிரமுகர்களில் முக்கிய இடத்தை, முன்னால் இந்து கலாசார அமைச்சராகவிருந்த திரு. பி. பி தேவராஜ் அவர்கள் பெறுவார். கண்டியிலும் பிற இடங்களிலும் இந்து சமய விழாக்களையும் சாகித்ய விழாக்களையும் நடத்தி மறு மலர்ச்சியை ஏற்படுத்தியவர் அவர்.

மலையக மண்ணில் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்துவதில் மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் கௌரவ வே. இராதாகிருஷ்ணன் முனைப்பாக இருந்து செயல்படுகிறார். இவரும் இந்து சமய விழாக்கள் சாகித்திய விழா போன்றவற்றை எடுத்து சமயப்பணி செய்கிறார். மத்திய மாகாணத்தில் உள்ள கோயில்களை புனருத்தாரணம் செய்தல், தெய்வச் சிலைகள் வழங்குதல், இந்து சமயக் கருத்தரங்குகளை நடத்துவித்தல் போன்ற பணிகள் பக்தி மார்க்கப் பணிக்குப் பொருந்துணையாக விருக்கிறது. இந்தச் சமயத்தில் முன்னாள் மத்திய மாகாண இந்துசமய விவகார அமைச்சராகவிருந்த திரு. பி. புத்திரசிகாமணி அவர்களின் பணியும் நினைவு கூரத்தக்கது.

கொழும்பு இந்து கலாசார அமைச்சு அறநெறிப்பாடசாலைகளை இணைத்து, இலவசமாகப் புத்தகங்களை வழங்கி, இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய ஆசியர்களுக்கும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் கருத்தரங்குகள் நடத்தி வருவதுடன் சமயப் போட்டிகளையும் நடத்தி பரிசளித்து வருகின்றது. மாணவர் ஆசிரியரிடையே ஆன்மீக உணர்வைத் துண்டுவதில் குறிப்பிடத்தக்க சேவை யாற்றுகிறது.

கொழும்பு விவேகானந்த சபையும் பரீட்சைகளை நடத்தி நீண்ட காலமாக மலையக மாணவரின் சமய அறிவை வளர்ப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

மலையக மண்ணில் ஆன்மீகத்தை வளர்ப்பதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இன்னும் பல நிறுவனங்களின் சேவையையும் குறிப்பிட்டாக வேண்டும். கொழும்பு சின்மயாமிஷன், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன், பிரம்மகுமாரி இராஜயோக நிலையங்கள், ஸ்ரீ சத்திய சாய் பாபா அமைப்புக்கள் மத்திய மாகாண இந்து கலாச்சார நிலையம், கண்டி இந்து இளைஞர் மன்றம், நுவரஎலிய இந்து கலாசார பேரவை, நாவலப்பிட்டிய ஆன்மீக வளர்ச்சி மன்றம் இவை போன்று மலையகத்தில் விரவி நிற்கும் பல மன்றங்களும் உதவி வருகின்றன. ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் அருளாளர் சுவாமி ஆத்மகணானந்தர் மலையகத்தில் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து அருளுரை வழங்குவதுடன் இலவசமாக ஆன்மீகப் புத்தகங்கள் வழங்குகிறார். மேலும் வறிய மாணவர்களுக்கு பண உதவி செய்து வருவதையும் நானறிவேன்.

மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு கொழும்பு சின்மயா மிஷனை தன்னுடன் இனைத்து கொண்டு அவர்களது பணியைப் பெற்றுக் கொடுக்கிறது. மக்கள் மனத்தில் புது வேகத்தையும், புத்துணர்வையும், விழிப்புணர்வையும் சின்மயா மிஷன் ஏற்படுத்தி வருகின்றது. சுவாமி குருதேவர் சின்மயானந்தா அவர்களின் அருளாசியுடன் அமைக்கப்பட்ட இறம்பொட ஸ்ரீ அனுமான் தேவாலயம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. இராமாயணக் கதை – இராமாயணத்துடன் தொடர்புபட்ட இலங்கை, நுவரஎலியாவில் சீதையம்மன் ஆலயம் என்பன மலையக மக்களின் உள்ளத்தில், நாடி நரம்புகளில் இரத்தத்தோடு இரத்தமாக ஊறி மக்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி வருகின்றது. மேற்படி மிஷனைச் சேர்ந்த சுவாமிகளின் சேவை மலையக ஆன்மீக வளர்ச்சிக்கு பசளையிட்டுத் தண்ணீர் பாய்ச்சி வருகின்றது. இறம்பொட ஆலய சுவாமி ஸ்ரீதரானந்தஜி அவர்கள் கோயிலை அண்டிய பிரதேசங்களில் சமயப்பணி புரிகிறார். கொழும்பு சின்மயா மிஷனில் சேவையாற்றும் பிரமச்சாரி ரமணசைதன்ய சுவாமி ஆன்மீக முகாம்களை அமைத்து பேருரைகள் நிகழ்த்துவதுடன் ஆன்மீக வகுப்புகளையும் நடத்தி வருகிறார். வத்தேகம பாரதி வித்தியாலயத்தில் அண்மையில் ஜோதி 2001 என்ற தலைப்பில் பெப்ரவரி மாதம் ஆன்மீக முகாம் ஒன்றை நடத்தினார். மேலும் இராஜவெல்ல தேசிய பாடசாலை, நக்கில்ஸ் தமிழ் வித்தியாலயம், கந்தகெட்டிய தமிழ் வித்தியாலயம், பாரதி வித்தியாலயம் என்பனவற்றில் மாத்ரு பூசை நடத்தி பெருந்திரளான மாணவர் பெற்றோர்களுக்கு ஆசியுரை வழங்கினார். மத்திய மாகாண இந்து கலாச்சார அமைசு இலங்கை சின்மய மிஷன் அனுசரணையுடன் இந்து சமய ஆசிரியர்களுக்கு கண்டி, மாத்தளை, நுவரஎலியா முதலிய இடங்களில் கருத் தரங்குகள் நடத்தி இந்து சமய, ஆன்மீக அறிவை வழங்குவதில் முன்னின்று உழைப்பது பாராட்டுக்குரிய விடயமாகும்.

மலையகம் ஆன்மீக வளர்ச்சியில் சிறிது சிறிதாக தன்னை வளப்படுத்திக் கொள்ள உறுதுணையாக இருக்கும் அனைவரையும் உளமாரப் போற்றுகிறேன். காலப் போக்கில் எல்லோருடைய பங்களிப்பாலும் முயற்சியாலும் மலையகம் ஆன்மீகத்தில் உன்னத நிலைக்கு உயர்த்தப் படும் என்று திடமாக நம்பலாம். ஒரு புதிய அத்தியாத்தை ஆன்மீகத்தில் தொடங்கி வைத்த அனைவருக்கும் எமதுள்ளத்தில் ஊறும் நன்றிப் பெருக்கு என்றும் மாவலியாக ஓடிக் கொண்டிருக்கும்.

*அற வாழ்வு மலர*
*ஆன்மீகம் தழைக்கட்டும்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிற் கலைகள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

தமிழருடைய வரலாற்றை நோக்குமிடத்து, அவர்கள் வாழ்விலே கோயில் ஒரு முக்கிய இடம் வகித்து வந்திருப்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. இக் கோயில்கள் அவர்களுக்கு ஆன்மீக பலத்தையும் தெய்வீக உணர்வினையும் ஊட்டுவனவாக மட்டு மன்றி அவர்கள் பண்பாட்டினைப் புலப்படுத்துவதுடன் அதனைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களாகவும் அமைந்துள்ளன. சிற்பம், ஓவியம், கட்டிடம் ஆகிய கலைகளின் பயனாகவும், இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகளை வளர்ப்பனவாகவும் கோயில்கள் திகழ்ந்தன. கோயில்கள் வளர்த்த கலைகளையே இங்கு "கோயிற்கலைகள்" என்னுந் தொடர் மூலமாகக் குறிப்பிடுகின்றோம்.

தமிழ் நாட்டில் எவ்வாறு கோயில்கள் தமிழர் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடையனவாக ஆயிற்றோ அதே போன்று, ஈழ நாட்டிலும் கோயில்கள் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. சோழப் பெருமன்னர் காலத்திலே கங்காநதியும் கடாரமும் மாத்திரமின்றி ஈழநாடு உட்படப் பல நாடுகள் அப்பெருமன்னர்களின் பேரரசிற்குட் படலாயின [1]. சோழர் ஈழ நாட்டினை வெற்றி கொண்ட பொழுது, நாட்டின் தலைநகரம் அநுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு மாற்றப்பட்டு அது "ஜநநாத மங்கலம்" எனப் பெயர் பெறலாயிற்று. தென்னகத்திலே "பெரிய கோயில் உட்படப் பல கோயில்களைக் கட்டிப் புகழடைந்த சோழப் பெரு மன்னனாகிய முதலாம் இராஜராஜன் பொலநறுவையிலும் அழகிய சிறிய சிவாலயம் ஒன்றினைக் கட்டினான் என வரலாறு கூறுகின்றது. மாதோட்டம் என இன்று அழைக்கப்படும் மகாதித்தத்தில் சோழப்பேரரசின் அதிகாரிகளுள் ஒருவனாகிய தாழிகுமரன் என்பவனால் இன்னொரு கோயில் கட்டப்பட்டதென அறிகிறோம்.[2] தென்னகத்துக் கோயில்கள் பெற்றிருந்த சிறப்பு நிலைபற்றி வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடும் கூற்றுக்கள் சிலவற்றைப் பலரும் உதாரணங்களாக எடுத்தாளுவதுண்டு அத்தகைய கூற்றுக்களுள் ஒன்று :

> "As landholder, employer, and consumer of goods and services, as bank school and museum, as hospital and theatre, in short, as a nucleus which gathered round itself all that was best in the arts of civilised existence and regulated them with the humaneness born of the spirit of Dharma the medieval Indian temple has few parallels in the annals of mankind.

சோழர் காலத்துத் தென்னகத்துக் கோயில்கள் பற்றி அவ்வரலாற்றுப் பேரறிஞர் கூறிய இக்கூற்று அக்காலத்து ஈழத்துக் கோயில்களுக்கும் பொருந்துவதாக அமைந்திருக்கலாம். ஆனால், பிற்காலத்திலே ஈழத்துக் கோயில்கள் நெருங்கிய சமூகத்தொடர்பு கொண்ட நிலையை இதே அடிப்படையிலே விளக்க முடியாது. அதற்கு வேறு பல காரணங்களைக் கூறலாம். சோழர்காலக் கோயில்கள் பண்பாட்டினை வளர்க்கும் இடங்களாக அமைய, ஈழத்துப்பிற்கால தமிழர் கோயில்கள் பண்பாட்டைப் பாதுகாக்கும் இடங்களாக அமைய வேண்டிய நிலை ஏற்பட்டது. போர்த்துகேயருடைய வருகையுடன் ஈழத்துத் தமிழர் கோயில்களுக்குப் பேராபத்து நிகழ்ந்தது. திருக்கேதீஸ்வரம், திருக் கோணேஸ்வரம் போன்ற பிரபலமான சைவக்கோயில்கள் தகர்க்கப்பட்டு கோட்டைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டன. திரு. க. வேலுப்பிள்ளை தனது நூலாகிய யாழ்ப்பாணவைபவ கௌமுதியில் இப்பண்பாட்டுச் சூறையாடல் பற்றிப் பல இடங்களிலே குறிப்பிட்டுள்ளார்.

"மன்னார்க் கோட்டைக்குத் திருக் கேதீச்சரத்தினின்று கல்லெடுத்துக் கொண்டு வரப்பட்டது. அக்காலம் அக்கோயில் சீரணமடைந்து கிடந்தது."[4]

"சைவ ஆலயங்கள் சமய அலுவலிற் பறங்கியர் யாழ்ப்பாணத்தாரைத் திடீரெனப் புண்படச் செய்த வேறொரு கருமத்தை இழைத்து விட்டார்கள். அது யாதெனில், இந்நாட்டில் ஆங்காங்கு விளங்கிய சைவசமய ஆலயங்களை ஒன்றும் விடாது இடிப் பித்தமையாம். ஒலிவேறா யாழ்ப்பாணத்தில் பெரிதும் சிறிதுமான 500 சைவ ஆலயங்களை இடிப்பித்தானென்றதை அவனுக்கோர் புகழ்ச் செய்தியாகப் பறங்கியர் எழுதி வைத் திருக்கின்றனர்."[5]

இவ்வாறு போர்த்துக்கேயர் காலந் தொடக்கமாகச் சைவக்கோயில்களின் நிலை இக்கட்டான நிலையிலேயே இருந்தது. அழிவுறும் நிலையிலிருந்த தம் பண்பாட்டினைப் பாதுகாப்பதற்குத் தமிழ்ப் பெரியோர்கள் வேறு பல உத்திகளைக் கையாண்ட போதிலும், கோயிலை நிலைக்களனாகக் கொண்டு தம்போராட்டத்தினை நடத்தினர். அழிந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன புதிய கோயில்கள் கட்டப்பட்டன. ஆனால் முன்னர் கோயில்களோடு தொடர்புற்றிருந்த சில கலைகள் மறக்கப்பட்டதும் கைவிடப்பட்டதும் தவிர்க்க முடியாதாகி விட்டது.

## 2. கோயில்கள் கலைவளர்க்கும் நிறுவனங்களாகிய வரலாறு

சமண, பௌத்த போதனைகள் ஒரு காலகட்டத்திலே தமிழ் மக்கள் மனத்தைக் கவர்ந்தன ஆனால் அச்சமயங்கள் போதித்த தீவிர துறவறம் பெண் வெறுப்பு கலைவெறுப்பு ஆகியன வெகுசனத் தொடர்பற்றன வாயமைந்தன. சாதாரண பொதுமக்கள் எல்லோருமே துறவறத்திலீடுபட முடியா திருந்தது. இறையனார் களவியலுரைகாரர் குறிப்பிட்டதுபோல் சாதாரணமக்கள் யாவரும் உலகியல் வாழ்வை விரும்புபவர் களாயிருந்தனர்.[6] இத்தகைய சந்தர்ப் பத்திலேயே சாதாரண பொது மக்களோ டொட்டாத போதனைகளுக்கெதிரான பக்தி யியக்கம் சம்பந்தர், அப்பர் போன்றோருடைய தலைமையிலே நடைபெற்றது. தீவிர துறவறத்துக் கெதிராக சாதாரண பொதுமக்கள் யாவருமே மனதில் இறைவனை நினைப்பது மட்டுமன்றிக் கோயிலிலே சென்று இறைவனை வழிபட்டாற் போதுமென்றநிலை உருவாக்கப்பட்டது. அது மாத்திரமின்றி இறைவனே பெண்ணைப்பாகமாகக் கொண்டிருக்குங் காரணத்தாலே, தீவிர பெண்வெறுப்பு அவசியமற்றதெனச் சுட்டிக் காட்டப்பட்டது. இன்னும், இறைவனே கலைகளின் நாயகனாகவும், கோயில்கள் அத்தகைய கலைகளின் இருப்பிடமாகவும், பாடியும் ஆடியும் இறைவனை வழிபடலா மெனவும் கூறப்பட்டதாலே தமிழ் மக்கள் மத்தியிலே கோயிற் கலைகளுக்கு அளப்பிலா மதிப்பு ஏற்படவும் வாய்ப்பேற்பட்டது.

*"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி*
*அறிவழிந்திட் டைம்மேலுந்தி*
*அலமந்த போதாக அஞ்சேலென்*
*றருள் செய்வான் அமருங்கோயில்*
*வலம்வந்த மடவார்கள் நடமாட*
*முழவதிர மழையென்றஞ்சி*
*சிலமந்தி அலமந்து மரமேறி*
*முகில் பார்க்குந் திருவையாறே"*

என்னும் சம்பந்தருடைய பாடல்[7] அக்காலத்தில் கோயிலைச்சுற்றிப் பெண்கள் நடனமாடும் மரபினை விளக்கி நிற்கின்றது. இவ்வாறு இசை, நடனம் போன்ற கலைகள் முற்காலக் கோயில்கள் பேணிவளர்த்த கலைகளாக அமைந்தன. இவ்வாறு பொது மக்களைக் கவர்கின்ற இசை, நடனம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகளைக் கவருங் கோயில்கள் பொதுமக்களைக் கவர்ந்தது வியப்பன்று. இதனாலே சைவ, வைணவ அடியார்கள் தமிழ் நாட்டிலுள்ள தலங்களனைத்தையும் பாட முற்பட்டனர். ஈழநாட்டிலிருந்த கோணேஸ்வரம், கேதீச்சரம் ஆகியனவும் இவ்வடியார்களாலே பாடப்பெற்றன. திருக்கோணேஸ்வரத்தைச் சம்பந்தர் பாடினார். அத் தலங்களையெல்லாம் ஈழநாட்டுக்கு வராமலே இவ்வடியார்கள் பாடியதாக வழக்குண்டு. விசா, பாஸ்போர்ட் என்ற சம்பிரதாயங்கள் இல்லாத காலத்திலே இவ்வடியார்கள் தமிழ் நாட்டுக்கு மிக அண்மையிலுள்ள ஈழநாட்டுக்கு அந் நாட்களிலே வந்து போவது அவ்வளவு கடினமான காரியமாயிருந்திருக்காது.

"மாவின்கனி தூங்கும் பொழில்
மாதோட்ட நன்னகரில்"

என்று சுந்தரர் பாடுவது[8] நேரிலே கண்டுபாடுவது போலத்தானமைகின்றது. இவ்வாறு அவ்வடியார்கள் பாடுவதை நோக்குமிடத்து ஈழத்துக் கோயில்களும்,

"பண்பாட்டு நிலையங்களாகவும், இசை, நடனம், நாடகம், ஆகியவற்றைப் போன்ற நுண்கலை நிலையங்களாகவும் அமைந் திருந்தன"[9] என்று கூறுதல் தவறாகாது. இக் கோயில்களும் சோழர்காலக் கோயில்களைப் போன்று பல நுண்கலைகளை வளர்ப்பவனாக அமைந்திருக்கலாம். ஆனால் காலஞ்செல்ல, நாம் ஏற்கனவே குறிப்பிட்ட காரணங்களுக்கு ஏற்ப நிலைமைகள் மாறியிருக்கலாம்.

## 3. ஈழ நாட்டுக் கோயில்களோடு தொடர்புடைய கலைகள்

1. ஈழ நாட்டிலே வாழுந் தமிழருடைய கோயில்களில் இன்றும் பல கலைகள் பேணிவளர்க்கப்பட்டு வருகின்றன. சோழர்காலக் கோயில்களைப் போல அவை இயங்காவிடினும், இந்நாட்டு வரலாற்று மாற்றங்களுக்கேற்றபடி ஈடுகொடுத்துச் சிலகலைகளையேனும் இந்நாள்வரை கோயில்கள் பாதுகாத்தும், வளர்த்தும், வருவது கண்கூடு. இப்பகுதியில் அக்கலைகள் பற்றி விபரம் விளக்கமாகக் கொடுக்கப்படுகின்றது.

2. கூத்து

யாழ்ப்பாணத்திலே இன்றுஞ் சில கோயில்களிலே கூத்தாடும் வழக்கம் உண்டு. பருத்தித்துறையிலே நெல்லண்டை என்னு மிடத்திலேயுள்ள பத்திரகாளியம்மன் கோவில் முன்றலிலே இன்றும் நேர்த்திக் கடனுக்காக கூத்து அல்லது நாடகம் ஆடும் வழக்கம் இருந்து வருகின்றது. சோழர் காலத்திலே கூத்து அல்லது நாடகம் கோயில்களுடன் தொடர்புடைய ஒரு கலையாக அக்காலச் சாசனங்கள் சான்று பகருகின்றன. அச்சாசனச் சான்றாதாரங்களை ஆராய்ந்த வரலாற்றாசிரியர் ஒருவருடைய கருத்து இவ்வாறமைகின்றது.

> "முதலாவது இக்கலையின் செயற்பாடு மிக நெருங்கிய முறையிலும், முழுமையாகவும் கோயில்களுடன் தொடர்புடைய தாயமைந்தது. இரண்டாவது இக் கோயில்களிலே கொண்டாடப்பட்ட விழாக்களிலே இவை மேடை யேற்றப்பட்டன. மூன்றாவது நாடகங்கள் பலவகைப்பட்டனவாயிருந்தன. அவற்றுட் பெரும்பாலான, ஆரியக்கூத்து, சாக்கைக் கூத்து, சாந்திக் கூத்து என்பனவற்றைச் சார்ந்தனவாகவே அமைந்தன. நான் காவது, இக்கூத்துக்களின் நடிகர் களுடைய உலகியல் தேவைகள் மானியங்களினாலே பூர்த்தி செய்யப் பட்டன. ஐந்தாவது, இந்நடிகர்கள் ஒரு குழுவாகவே செயற்பட்டனர்."[10]

ஈழ நாட்டிலே கூத்துக்கள் கோயில்களுடனே தொடர்புற்றிருந்து வருகின்றன என்பதற்குச் சில அறிஞர் களுடைய கூற்றுக்களை இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகக் காட்டலாம். நாட்டுக் கூத்துப் பற்றி எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை,

> இக்கூத்துக்களெல்லாம் ஒரு கோயில் நேர்த்திக்கடனுக்காக ஆடுபவை. அதனால், அக் கூத்தில் முக்கியமான கூத்தராக வருபவர் தத்தம் கூத்துக்கு வேண்டிய கோலங்களை அணிந்து கொண்டு மத்தளக்காரர், பிற் பாட்டுக்காரர், அண்ணாவியார் ஆகியோருடன் அக்கோவிலுக்குள்ளே போவர். அங்கு சுவாமிக்கு பூசை முடிந்ததும் அண்ணாவியார் தாளம் போட அக்கடவுளரின் தோத்திரமாயமைந்த பாடல்களைப் பாடி வழிபடுவர்.[11]

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு கோயிலிலே வழிபாடு முடிந்த பின்னரே அண்ணாவியார் கூத்தினைத் தொடக்கி வைப்பது வழக்கம். அதன் மூலம் கூத்து ஆடுவதற்கு வேண்டிய அரங்கம் அல்லது களரி அல்லது மேடை கோயில் வீதியிலே அமைக்கப்படும் என்பது பெறப்படுகின்றது. இப்பொழுது நாட்டுக் கூத்துக்களுக்குப் பெயர்போன இடங்களுள் முக்கியமாக விளங்கும் மட்டக்களப்பிலே கூத்து "அரங்கேற்றத்துக்கான உயர்ந்த மண்மேடை பெரும்பாலும் ஊர்க்கோயில் வீதியிலமைக்கப்படும்."[12] வடமராட்சிப் பகுதியில் நாகர் கோயில் என்னுமிடத்திலுள்ள நாகதம்பிரான் கோயில், அக்கோயிலோடு தொடர்புடைய வரலாற்றுக் கதையொன்றினை ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்தில் அங்கு நடக்கும் திருவிழாவிலே கூத்தாக நடித்துக் காட்டுவது வழக்கம். கப்பற்றிருவிழா என்பது அங்கு நடக்குந் திருவிழாக்களில் ஒன்று. அன்று கப்பல் ஒன்றினைக் கட்டி, பறங்கிக்காரரைப் போலக் கோலமணிந்து, பறங்கியர் அவ்வூர் இளைஞரைப் பிடித்துத் தம் கப்பலில் ஏற்றிப் பின்னர் நாகதம்பிரான் அருளால் இறக்கிவிட்ட வைபவத்தை மக்கள் முன்னிலையில் பாட்டுப்பாடி நடித்துக்.காட்டுவது ஆண்டு தோறும் அக்கோயிலிலே நடக்கும் நிகழ்ச்சியாகும்.[13]

### 3. நடனம்

நடனக்கலை பண்டைய காலந் தொட்டே ஒரு கோயிற் கலையாக விளங்கி வருகின்றது. கோயிலைச் சுற்றி நடன மாதர்கள் ஆடி வழிபட்டதாகச் சம்பந்தரின் பாடலொன்றின் மூலமாக அறிவதை முன்பு குறித்துள்ளோம். இந்நடனமாதர் தம்மைக் கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு அடிமைகளாக அர்ப்பணித்து அக்கோயிலண்டையிலே வாழுவது வழக்கமாயிருந்தது. அதனால் இத்தகைய நடனமாதர்கள் பற்றிய பல சுவையான வரலாற்றுத் தகவல்களையும் விபரங்களையும் நீலகண்ட சாஸ்திரி போன்ற வரலாற்றாசிரியர்கள் தம் நூல்களிலே குறிப்பிட்டுள்ளனர்.[14]

ஈழநாட்டிலே, யாழ்ப்பாண மாவட்டத்தில் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில், நல்லூர்க் கந்சுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றிலே நடனமாதர்கள் தேவரடியார்களாக இருந்தார்களென அறிகிறோம். இன்று எந்தக் கோயில்களிலுமே காண முடியாத இந்நிகழ்ச்சி இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே யாழ்ப்பாணக் கோயில்களிலே நடைமுறைகளிலிருந்ததாக எம். டீ ராகவன் குறிப்பிடுவர்.[15] வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் தேவ தாசிகள் இருந்தார்களென்றும், அவர்களுட் கனகி என்பவள் முறைகேடாக நடந்த காரணத்தினால் (ஆரம்பத்திலே பக்தி சிரத்தையுடன் இறைத் தொண்டாக நடனமாடிக் கோயில்களிலே வாழ்ந்த பெண்கள், காலகதியில் ஒழுக்கக் கேடுடையரானார் என நீலகண்ட சாஸ்திரி,[16] காட்மன்[17] போன்றவர்கள் குறிப்பிடுவர்.) அக்கோயிலைச் சார்ந்த நட்டுவச் சுப்பையனார் அவளின் ஒழுக்கக்கேடுகளைப் பரிகசித்து கனகி புராணம் என்னும் நூலை எழுதினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அந்நூலைப் பதிப்பித்த வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் குறிப்பிடுவர்.[18]

இன்று ஈழநாட்டிலே நடனக்கலை சிறுபான்மைக் கலையாக மாறியமைக்கு மேற்குறிப்பிட்ட சில தேவதாசிகளின் ஒழுக்கக் கேடே காரணமாயமைந்தது. இன்று நடனக்கலை ஒரு வகையிலே வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர்களாலேயே மேற் கொள்ளப்படுகின்றது. இந்நடன அரங் கேற்றங்களும் குறிப்பிட்ட ஒரு சிலரை அழைத்து வசதியான மண்டபங்களிலே நடத்தப்படுகின்றன. முற்காலத்தில் கோயில்கள் இக்கலையை வளர்த்தும் பேணியும் வருங்கால், சாதாரண பொது மக்கள் யாவருமே இக்கலையைக் கண்டு களிக்கவும், இக்கலையின் நுணுக்கங்களை உணர்ந்து இரசிக்கவும் முடிந்தது. இக்கலையை மேற் கொண்ட பெண்களும் அது தேவ கலை என்று மதித்தும், அழகியல் கலையுணர்வு கொண்டும் ஆடி மகிழ்ந்தனர். இக்கலையை மேற்கொண்ட பெண்களின் ஒழுக்கக் கேடுகளால் ஈழநாட்டுக் கோயில்களிலே பெண்கள் நடனமாடுவது வெறுக்கப்பட்டது. ஆரம்பத்திலே "சின்ன மேளம்" (நாதஸ்வரத்திற்குத் துணையாக வாசிக்கப்படும் தவில், பறை போன்ற மேளங்களைப் போலன்றி, மென்மையான ஒலி கொடுக்கும் மேளவகை இந்நடனங்களுக்கு வாசிக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது போலும்) என்று அழைக்கப்பட்டு வந்தது இக்கலை. காலகதியில், "சின்னமேளம்" என்றாலே இழிவான கலையென்று கருதப்பட்டு வந்தததின் காரணம் நடனக்கலையின் குறைபாடல்ல. அதனை ஆடியவர்களின் குறைபாடேயாகும். (" The objection is not so much to the dancing as to the dancers themselves, for most of these women are reputed to be prostitutes")[19]

### 4. இசைக் கருவிக் கலை

கோயில் வழிபாட்டிலே உபயோகிக்கப் படுங் கருவிகளுள்ளே நாதசுரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஈழநாட்டின் எல்லாக் கோயில்களிலுமே நாதசுரம் வாசிப்பது வழக்கமாயுள்ளது. சில கோயில்களிலே ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்களிலே வாசிப்பதற்கென சில நாதஸ்வர வித்து வான்கள் விரதம் பூண்டுள்ளமையை நாம் அறிவோம். மங்கள வாத்தியம் எனப் புகழ்கொண்ட இக்கருவி பக்தியையும் இசையையும் ஒருங்கே சேர்க்க வல்லது. ஒரு நாள் முழுவதும் இறைவன் சந்நிதானத்திலே நாதசுரம் எவ்வாறு பயன்படுகின்றது என்று இசைப்பேரறிஞர் திரு. பி. எஸ். வீருசாமிப் பிள்ளை பின்வருமாறு கூறுவர்.

> "அனுதினமும் இரவு நான்காம் சாமத்தில் சங்கு முழங்க துயிலெழுப்பும் பணியில் நாதசுரம் மூன்று மணிநேரம் நடைபெறுவது முறை. பூபாளம், பௌளி, புறநீர்மை, கோபிகா, வசந்தம் இராகங்களுடன் பலவித துதிப் பாடல்களும் வாசிக்க நேரும். இதைத் தொடர்ந்து நடைபெறும் காலை வழிபாட்டின்போது பிலகரி, கேதாரம், ஆரபி, தன்யாசி ராகங்களின் ஆலத்தியும் பாட்டுக்களும் கேட்கலாம். நடுப்பகல் வழிபாட்டுக்கும் புறப்பாட்டுக்கும் ஸ்ரீராகம், சாவேரி, மத்திமாவதி, மணிரங்கு, மோகனம், வாசிப்பது முறை. அந்தி நேரத்தில் மங்கள ஆரத்திக்கு சங்கராபரணம், கல்யாணி நாட்டைக் குறிஞ்சி ராகங்கள் உகந்தவை. இரவில் நடைபெறும் வழிபாட்டில் காம்போஜி, தோடி, பைரவி ராகங்கள் ஒலிக்கும். இரவு நேரப் புறப்பாட்டில் வடக்குப் பிரகாரத்திலிருந்து சன்னதி வரை, ஊஞ்சல், லாலி முதலிய பாடல்களைத் தொடர்ந்து ஆண்டவன் பள்ளியறையை அடைந்ததும் நீலாம்பரியில் தாலாட்டு நடைபெறும்".[20]

இவ்வாறு ஒரு நாளிலே இறைவன் வழிபாட்டிலே நாதசுரம் எவ்வித பணியைச் செய்கின்றதென விளக்கும் அப்பேரறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் திருவீதி உலாவின்போது அக்கருவியின் பணிபற்றி அழகுடனும் விளக்கத்துடனும் விபரிக்கின்றார். இவ்வாறு ஈழநாட்டிலுள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் எந்நாளும் நாதசுரம் வாசிக்கப்படுவதில்லை. ஆனால், திருவிழாக் காலங்களிலே ஈழத்தின் நாதசுர வித்துவான்கள் பங்கு பற்றி இந்த முறையிலே வாசிப்பதுண்டு. இவ்விடத்தில் ஆண்டவன் திருவீதி உலாவின்போது நாதசுரம் இசைக்கப்படும் முறையை இசைப் பேரறிஞர் வீருசாமிப்பிள்ளை வர்ணிப்பதில் ஒரு பகுதியைச் சுவைக்காக இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

> ''ஆண்டவன் உலாப் புறப்படுமுன் மண்டகப்படி தீபாராதனை நேரத்தில் நாதசுரத்தில் தேவாரம் ஒலிக்கும். உடனே தவில் வீறிடும். தவிலில் அலாரிப்பு கண்டநடையில் வாசித்தவுடன் அண்டைச் சுற்றுப் புறங்களில் உள்ளவரும் விமானத்தை ஏந்திச் செல்லும் சேவகர் களும் அலறிக் கொண்டு ஓடோடி வருவார்கள். பிரகாரங்களைச் சுற்றி வலம் வரும்போது நாட்டை ராகம் கணீரென ஒலிக்கும். சதுத்ரகதி அமைத்துக் கொண்டு துரித காலத்தில் மல்லாரி வாசிக்க வேண்டும்.
>
> தேர் புறப்படும்போது வராளி ராகத்தில் தேர் மல்லாரி வாசிக்கும் ஒரு வழக்கமுண்டு. ''ஆண்டவன் தீய கணங்களை மல்லுக்கு இழுத்துத் தீமையை அகற்றும் திருவிளையாடல்'' என்று அறிஞர்கள் அதன் இலக்கணம் கூறுவதுண்டு. கண்கூடாக ஒரு நாதசுரவித்வான் மற்றொரு வித்வானுடன் மல்லாரி வாசிக்கும் போட்டியில் ஈடுபடுவதுண்டு. மூளையைக் குழப்பும் இசை நுணுக்கங்களும் இடக்கான தாளப் போக்கும் மல்லாரி வாசிப்பில் கேட்டு ரசிக்க மக்கள் பேரானந்தம் அடைவார்கள்''.[21]

இவ்விபரங்களையெல்லாம் அறிந்து கொண்டு ஈழநாட்டுப் பிரபலம் வாய்ந்த தலங்களின் திருவிழாக்களிலே நாதசுர இசைக்கருவியின் நாதத்தைக் கேட்கும் போது நாம் இரட்டிப்பு மகிழ்ச்சியடையலாம்.

உடுக்கு என்னும் இசைக்கருவி இன்று ஈழநாட்டிலே கிராமியப் பண்பு வாய்ந்த இசைக்கருவியாகவே கருதப்படுகின்றது. இது போலவே ''பறை'' எனப்படுங் கருவியுங் கருதப்படுகின்றது. இக்கருவிகளை பெரும்பாலும் அம்மன் கோயில்களிலும், வைரவர், ஐயனார் போன்ற ''சிறு'' தெய்வங்களின் கோயில்களிலும் இசைப்பது வழக்கம். கிராமியப் பண்பு மலிந்த பாடல்களுக்குத் துணையாக உடுக்கு வாத்தியம் வாசிப்பதை நாம் அம்மன் கோயில்களிலே காணலாம். கரகம், காவடி போன்ற கிராமிய நடனங்களுக்கும், அம்மன் கோயில்களிலே ஆடப்படும் காத்தவராயன் கூத்துக்கும் இக்கருவி துணை வாத்தியமாகின்றது. அம்மன் கோயில்களிலே பறையொலி கேட்பது பற்றிப் பேராசிரியர் வித்தியானந்தனின் கூற்றினை இங்கு காட்டுதல் பொருத்தமாகும்.

> ''ஈழத்திலே தமிழர் வாழும் பகுதிகளிலே வடமாகாணத்திற் பல இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்கள் இருக்கின்றன. எனினும் மட்டக்களப்புப் பிரதேசத்திலோ எல்லா ஊர்களிலும் கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன. வைகாசி மாதம் பிறந்து விட்ட தென்றால் கிழக்கிலங்கையின் பட்டி தொட்டியெல்லாம் பறையொலி முழக்கமும், குழல் நயஓசையும் உருக் கொண்டு தெய்வமாடும் ஓங்காரக் கூச்சலுமானவொரு கலகலப்பான சூழல் நிலவுவதைக் காணலாம்''.[22]

இக்கருவிகளை விட சங்கு, சேமக்கலம், பேரிகை, தப்பட்டை போன்ற இசைக் கருவிகளும் ஈழநாட்டுக் கோயில்களிலே பயன்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருடைய கோயில்கள் வளர்த்த கலைகள் பல. அக்கலைகளிலே பெரும் பாலானவை இன்று அருகிவிட்டன. பண்பாட்டுச் சூறையாடல், எம்மிடையே ஏற்பட்ட பல வருத்தமுறத்தக்க நம்பிக்கைகள், கொள்கைகள், ஒழுக்கங்கள் ஆகியன இக்கலைகள் மறைந்து போவதற்குக் காரணங்களாயின. எனினும் ஈழத்து ஒரு சில கோயில்களேனும் பண்பாட்டுப் பாரம் பரியத்தைப் பேணுவன வாயமைந்துள்ளமை ஓரளவு ஆறுதல் நல்குகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. Nilakanta Sastri K. A. The Cholas, University of Madras 1955 p173
2. ibid.
3. Ibid., 654
4. வேலுப்பிள்ளை, க. யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918.54
5. மேற்படி ப. 82
6. இறையகனார் அகப்பொருள், கழக வெளியீடு 1953 ப 10 பெண் என்னுஞ் சொற்கேட்டுத் தலையாயினாரும் இடையாயினாரும் நீங்க. "கடையாயினார் எத்திறத்தானும் நீங்கார் என்னை. பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்து வருகின்றமையின்" என்று உரைகாரர் கூறுவர்.
7. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் பன்னிரு திருமுறைப் பதிப்பு வெளியீடு 1961 பக் 25–26
8. சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம் பன்னிரு திருமுறைப் பதிப்பு வெளியீடு. 1958 ப. 183
9. Krishnamuri, S. R., A Study on the Cultural Developments in the Chola Period. Annamalai University. 1996. p 132
10. Ibid., p79.
11. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. ஈழத்து வாழ்வும் வளமும், பாரி நிலையம் 1962 ப 83
12. கந்தையா வீ. சீ. மட்டக்களப்பு தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் யாழ்ப்பாணம், 1964 ப, 52
13. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க., முன் குறிப்பிட்ட நூல் ப 31 34
14. Nilakanta Sastri. Ibid., 554 Krishnamurti, S. R., Ibid. pp 69-77.
15. Raghavan. M. D., Tamil Culture in Ceylon, Kalai Nilayam Limited. Undated.p 264
16. Nilakanta Sastri. Ibid., p554
17. Cartman. Rev. James. Hinduism in Ceylon, M. D. Gunasena & Co. Ltd., Colombo. 1957 pp. 104-5
18. கனகி புராணம், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கத்தின் பதிப்புரையைப் பார்க்க.
19. Cartman, Ibid., p104
20. வீருசாமிப்பிள்ளை, இசைப் பேரறிஞர் பி. எஸ். "வழிபாட்டில் இசைக் கருவிகள்" தமிழிசை வெள்ளிவிழா சிறப்பு மலர், தமிழ் இசைச் சங்கம், சென்னை, 1967 ப, 179
21. மேற்படி ப. 181.
22. வித்தியானந்தன், கலாநிதி சு., வீ. சீ. கந்தையா பதிப்பித்த கண்ணகி வழக்குரை. (காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் 1968) நூலுக்கு வழங்கிய அணிந்துரை, ப XIX



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதம்; அன்றும் இன்றும்

## - ஒரு வரலாற்று நோக்கு -

பேராசிரியர் க. அருணாசலம்

பரந்துபட்ட இப்பூவுலகின் பல்லாயிரம் ஆண்டுகளைக் கொண்ட நீண்ட கால வரலாற்றில் காலத்துக்குக் காலம் செழித்தோங்கிய நாகரிகங்கள் சிந்துவெளி, எகிப்து, பபிலோனியா, சீனா, அகிரியா, சால்டியா, கிறீஸ், ரோம் எனப் பலவாகும். கால வெள்ளத்தைக் கடந்து நிலைத்து நிற்பவை சில; காலத்துக்குக் காலம் ஏற்படும் நெருக் கடிகளையும் சவால்களையும் புறங்கண்டு மேன்மேலும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருப்பவை இன்னுஞ் சில. இது போன்றே இவ்வுலகில் இந்து, சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம், பார்சி, யூதம், கொன்பூசியஸ், ஷாமா, தாஒ முதலிய நூற்றுக் கணக்கான சமயங்கள் காலத்துக்குக் காலம் தோன்றியுள்ளன1. அவற்றுள் கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து, பௌத்தம் ஆகிய சமயங்களே இன்று உலகப் பெருஞ் சமயங்களாகப் பெருஞ் செல் வாக்குடன் திகழ்கின்றன; சில சமயங்கள் முற்றாக அருகிவிட்டன; பல சமயங்கள் அருகிக் கொண்டு வருகின்றன; இன்னும் சில மிகக் குறைந்த எண்ணிக்கையினரினாற் பின்பற்றப்படுகின்றன.

உலகப் பெருஞ் சமயங்களுள் மிக்க தொன்மையையும் மிக நீண்ட கால வரலாற்றையும் பரிணாம வளர்ச்சியையும் கொண்டு விளங்குவது இந்து மதம். தனியொருவரால் தோற்றுவிக்கப்படாததாய் இயற்கை வழிபாட்டிலிருந்து பரிணமித்து வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், பல்வகைத் தரிசன சாத்திரங்கள், புராண – இதிகாசங்கள், தோத்திரங்கள், தத்துவ நூல்கள் என அளவிலாக் கலை – இலக்கியச் செல்வங்களையும் தத்துவ நோக்குகளையும் சமய நெறிமுறைகளையும் சிந்தனைக் கருவூலங்களையும் பலவகை வழிபாட்டு முறைகளையும் தன்னகத்தே கொண்டு உயிர்த்துடிப்புடன் மிளிர்கின்றது.

இந்து மதம் தனது நீண்ட கால வரலாற்றில் காலத்துக்குக் காலம் பல நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்துள்ளது; வளர்ச்சியையும் தேய்வையும் ஏற்றமிகு காலங்களையும் இருண்ட காலங்களையும் விரிவையும் ஒடுக்கத்தையும் கண்டுள்ளது; காலத்துக்கு காலம் வெவ்வேறு பெயர்களைக் கொண்ட முதன்மைத் தெய்வங்களையும் சமயப் பிரிவுகளையும் பெற்றுள்ளது. இந்திரன், அக்கினி, வருணன், மித்திரன், பிரஜாதிபதி, மத்தரிசுவன், சிவன், விஷ்ணு, பிரமா, சக்தி, முருகன், விநாயகர் முதலிய தெய்வ வழிபாடுகளும், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணபத்தியம், வீரசைவம், காளாமுகம், காபாலிகம் முதலிய உட்பிரிவுகளும் இவ்வகையில் நோக்கத்தக்கவை.

உலகின் ஏனைய மதத்தினருடன் ஒப்பிடுகையில் இந்து மதத்தினருக்குச் சுதந்திரம் அதிகம் எனலாம். தாம் கடைப் பிடிக்க விரும்பும் சமய உள்அமைப்புகளைத் தெரிதல், வழிபடுமுறைகளைத் தேர்ந் தெடுத்தல், மத அனுட்டானங்களைக் கடைப்பிடித்தல் முதலியவற்றில் இந்துக் களுக்குச் சுதந்திரம் அதிகம் காணப்படுகிறது. இதனாலேயே சமய அறிஞர்கள் சிலர் "இந்துக்களாக வாழ்வது எளிது" எனக் கூறியுள்ளனர்.

இந்து மதம் பற்றிக் கூறவந்த அறிஞர் ஒருவர், "....... இம்மதம் போற்றும் இறைவன் தொடக்கமும் முடிவும் அற்றவன். எனவே இத்தகைய இறைவனைப் போற்றும் மதமும் ஆதியும் அந்தமும் அற்றது". இக்கூற்று முற்றிலும் பொருத்தமானதே. இவ்வாறு ஆதியும் அந்தமும் இல்லாததைச் 'சநாதநம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். இம்மதத்தைச் சுட்டநேரிடும் வேளைகளில் புராதன நூல்கள் 'சநாதந தர்மம்', 'சநாதநமதம்' எனக் குறிப் பிடுகின்றன'' 2. எனவும் 'சநா' என்பது முதுமைப் பொருளையும் 'தந' என்பது புதுமைப் பொருளையும் உணர்த்துவதனால் இது 'சநாதந' மதமாகி முதுமையும் புதுமையும் ஒருங்கிணைந்ததான வேறெங்கும் காண்டற்கும் கற்பனையிலும் நினைத்தற்கும் அரியதானதொருநிலையைக் குறிப்பிட்டு நிற்கும் தொடக்கமற்றவாறு தொன்மை வாய்ந்ததாயும் முடிவற்றவாறு எல்லையற்ற எதிர்காலம் வரையும் நிலவ வல்லதாயும் குறிப்பிடப்படும் சமயம் சநாதநமான இந்து மதமொன்றே ....."3 எனவும் ".......இந்துவாகப் பிறந்து இந்துவாக இறப்பவனின் வாழ்க்கையை நுணுகி ஆராயின் வாழ்க்கையும் சமயமும் எவ்வாறு பின்னிப் பிணைப்புண்டு நிற்கின்றன என்பதை உணரமுடியும். இவ்வாறு பிணிப்புற்று இருப்பதனாலேயே இந்து மதம் என்றும் வாழும் மதமாகத் திகழ்கின்றது. மதத்தை வளர்த்தல் வேண்டும் என முனைந்து ஒருவரும் செயற்படாதே இந்துக்கள் வாழும் வரை மதமும் வாழந்து வரும்'' எனவும் கூறியுள்ள கருத்துகள் ஆழ்ந்த சிந்தனைக்குரியவை.

மேற்கண்ட கூற்றுகள் உண்மையின் ஒரு புறத்தைக் காட்டுபவை; பெருமிதமும் உற்சாகமும் அளிப்பவை; எனினும் உண்மையின் மறுபுறத்தை மறுதலிப்பவை; இந்து மதத்தின் பல்லாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கூர்ந்து நோக்குமிடத்துச் சில கால கட்டங்களில் இந்து மதம் அழிவின் விளிம்பிற்கே சென்றுள்ளதையும் காலத் துக்குக் காலம் தோன்றிய பெரியார்களினதும் இயக்கங்களினதும் ஒப்பற்ற பணிகளால் அழிவிலிருந்து காப்பாற்றப் பட்டதையும் அவதானிக்கலாம்.

இந்து மதத்தின் மிக முற்பட்ட காலக் கூறுகள் பலவற்றைச் சிந்துவெளி நாகரிகத்திலே காணமுடிகின்றது. எனினும் சிந்துவெளி நகரங்களின் அழிவுக்கும் நாகரிகத்தின் சிதைவுக்கும் நடோடிகளாக வடஇந்தியாவிற்குள் நுழைந்த ஆரியரே காரணம் என்பர். 5 "வச்சிராயுதம் ஏந்திய வேதகால ஆரியக் கடவுளான இந்திரன் மட்பாண்டத்தை உடைப்பது போல எதிரிகளை வென்றான்'' என வேதங்கள் இந்திரனின் வீரத்தைப் புகழும்.

சிந்துவெளி நாகரிகத்தின் சிதை வினையடுத்து வட இந்தியாவிலே வேதகாலத்தில் வேதநெறிதழைத்தோங்கிக் கொண்டிருந்த பொழுது கி. மு. ஆறாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இந்து மதத்திற் பிராமணரின் ஆதிக்கம் மேலலோங்கியது; வேள்விகளும் யாகங்களும் உயிர்க் கொலைகளும் பெருகின; ஊழல்கள் மலிந்தன; சாதிகள் கிளைவிட்டுப் பல்கிப் பெருகத் தொடங்கின; மக்களின் நாளாந்த வாழ்வில் உயிர்த் துடிப்புடன் பயிலப்பட்ட மொழிகள் புறக்கணிக்கப்பட்டு சமஸ்கிருதமொழி 'தேவபாஷை' என்ற நிலைக்கு உயர்த்தப் பட்டது. சமய நடவடிக்கைகளில் அம்மொழியே முக்கியத்துவம் பெற்றது; ஒழுக்கமும் தூய வாழ்வும் அகிம்சையும் புறக்கணிக்கப்பட்டன; பூவுலகத் தேவர்கள் எனப் பிராமணர் தம்மை உயர்த்திக் கொண்டனர். அடிப்படையிற் பொது மக்கள் சகலவழிகளிலும் பிராமணரிலிருந்தும் இந்து மதத்திலிருந்தும் ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தனர். மக்கள் வாழ்க்கைக்கும் மதத்திற்குமிடையிலான பிணைப்பு அருகலாயிற்று.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே மேற்கண்ட நிலைமைகளை எதிர்த்துக் கி. மு. ஆறாம் ஐந்தாம் நூற்றாண்டுகளளவில் மகாவீரரும் கௌதம புத்தரும் புதிய வாழ்க்கை நெறிகளை வகுத்த போது அவை முறையே சமண, பௌத்த மதங்களாகப் பரிணமித்து வெற்றிவாகை சூடின இந்து மதம் செல் வாக்குடன் திகழ்ந்த நாடுகள் பலவற்றில் சமணமும் பௌத்தமும் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. இந்து மதம் அழிவின் விளிம்பிற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லலாயிற்று கி. பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலான தமிழக வரலாறு, ஏனைய தென்னிந்திய நாடுகள், வட இந்திய நாடுகள், இலங்கை உட்பட்ட தென்கிழக்காசிய நாடுகள் ஆகியவற்றின் சமய வரலாறு ஆகியவற்றைக் கூர்ந்து நோக்குமிடத்துப் பிராமணிய மதமாக விளங்கிய இந்துமதம் ஒதுக்கப்பட்டுச் சமண, பௌத்த மதங்கள் எவ்வாறு வேகமாகப் பரவிப் பல நூற்றாண்டுகள் செல்வாக்குடன் திகழ்ந்தன என்பதையும் காலப்போக்கில் சமண மதம் அருகியதையும் பௌத்த மதம் இந்தியாவிற் செல்வாக்கிழந்த போதும், இந்தியாவிற்கு வெளியே இந்து மதம் செல்வாக்குப் பெற்றிருந்த இடங்கள் பலவற்றில் இந்து மதத்தைப் புறந்தள்ளி வெற்றிவாகை சூடி இன்றளவும் பெருஞ் செல்வாக்குடன் திகழ்ந்து வருவதையும் உலகின் நாற்பெருஞ் சமயங்களுள் ஒன்றாகத் திகழ்வதையும் அவதானிக்கலாம்.

வேத காலத்தை அடுத்துப் புராண இதிகாச காலங்களிலும் அதனையடுத்து வந்த காலப்பகுதிகளிலும் இந்து மதம் இந்தியாவின் பெரும் பகுதியில் மீண்டும் செல்வாக்குப் பெறலாயிற்று. தென்னிந்தியாவைப் பொறுத்த வரை இந்து மத வரலாற்றில் கி. பி. ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரையுள்ள காலப்பகுதி மிக முக்கியமானதாகும். ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்திற் பெருஞ் செல்வாக்குடன் திகழ்ந்த சமண, பௌத்த மதங்களை வீழ்ச்சியுறச் செய்த சைவ, வைணவ பக்தி இயக்கம், இந்து மதத்திற்குப் புத்துயிரையும் ஒளியையும் பாய்ச்சியது. பக்தி இயக்கத்தின் செல்வாக்குத் தமிழகத்துடன் மட்டும் நில்லாது ஏனைய தென்னிந்திய நாடுகளிலும் வட இந்தியாவிலும் இந்து மதத்தினை வளப்படுத்தியதோடு அமையாது இலங்கையிலும் ஏனைய தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்து மதமும் இந்துப் பண்பாடும் பரவ வழிவகுத்தது; பௌத்த மதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது. தமிழகத்திலே அடுத்தடுத்துப் பல்லவ, பாண்டியப் பேரரசுகளும் சோழப் பேரரசும் தோன்றி யமையும் ஆரம்பத்திற் சமண மத ஆதரவாளர்களாக விளங்கிய பல்லவ பாண்டியப் பேரரசர்கள் பக்தி இயக்கத்தின் வீறார்ந்த செயற்பாட்டினால் இந்து மதத்திற்கு மாறியமையும் சோழப் பேரரசர்கள் பரம்பரையாக இந்து மதத்தின் தீவிர ஆதரவாளர்களாக விளங்கியமையும் சோழப் பேரரசு கடல்கடந்த நாடுகள் பலவற்றில் ஆதிக்கம் செலுத்திப் பலம் பெற்றுத் திகழ்ந்தமையும் பல்லவ, பாண்டிய, சோழ, விசயநகரப் பேரரசர்கள் மேற்கொண்ட ஒப்பற்ற சமயப் பணிகளும் நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் ஆச்சாரியர்களதும் செயற் பாடுகளும் இந்து மதம் மீண்டும் எழுச்சியுற வழிவகுத்தன.

நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் பக்தி வைராக்கியமும் அவர்கள் மேற்கொண்ட சமய நெறிமுறைகளும் அன்று தொட்டு இன்றுவரை போற்றப்படுகின்றன; பின்பற்றப் படுகின்றன. பக்தி இயக்கம் ஏற்படுத்திய செல்வாக்கினால் ஆட்சியாளர் தனது கடமைகளுள் சமயப்பணியும் மிக முக்கியமான ஒன்றாக அமையலாயிற்று. தமிழகத்தினதும் இந்தியாவினதும் பிரமாண்டமான கோயில்கள் பல மேற்கண்ட காலப்பகுதிகளிலேயே நிர்மாணிக்கப்பட்டன.

முஸ்லிம் படையெடுப்புகள் காரணமாக ஏறத்தாழ கி. பி. பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலிருந்து தொடர்ச்சியாக வட இந்தியாவில் இந்து மதமும் இந்து பண்பாடும் பெரும் சோதனைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகித் தேய்வுற்றுக் கொண்டிருந்த சமயத்தில் அவற்றை அழியவிடாது பாதுகாத்து உயிர்த்துடிப்புடன் விளங்கச் செய்த பெருமை தென்னிந் தியாவுக்கே உரியது. பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தென்னிந் தியாவிலும் அலைமேல் அலையாக இடம் பெற்ற முஸ்லிம் படையெடுப்புகள் காரணமாக இந்து மதமும் இந்துப் பண்பாடும் அழியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை எட்டிக் கொண்டிருந்தன. இந்துமதப் பாதுகாப்பையே முக்கியமாகக் கொண்டு தோன்றி எழுச்சியுற்ற விசயநகரப் பேரரசினாலும் வீரசைவ இயக்கத்தினாலும் அவை அழிவிலிருந்து பாதுகாக்கப்படலாயின. எனினும் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பல இலட்சக் கணக்கான கோடிக்கணக்கான இந்துக்கள் முஸ்லிம்களாக மாற்றியமையைத் தடுக்க முடியவில்லை. காலப்போக்கில் இவ் எண்ணிக்கை கோடிக்கணக்காகப் பெருகியது மல்லாமல் பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய இஸ்லாமிய நாடுகளாகவும் பரிணமிக்கலாயின.

இந்து மதத்திலும் இந்துக்கள் மத்தியிலும் 'காலம்' காலமாக இடம் பெற்று வந்த குறைபாடுகள் பல 'உள்ளிருந்தே கொல்லும் வியாதி' யாக இந்து மதத்தின் வளர்ச்சிக்குத் தடையாகவும் சமண, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் பரம்பலுக்குச் சாதகமாகவும் விளங்கி வந்துள்ளமையை வரலாற்றின் மூலம் அறியலாம்.

பதினாறாம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரான்சியர் முதலிய மேலை நாட்டினரின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியதும் இந்துக்களுள் கணிசமான தொகையினர் கிறிஸ்தவர்களாக மாறலாயினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சி நிலை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து திட்டமிட்ட முறையிற் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முயன்றனர். இந்துக்களின் அன்றைய நிலைமை கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முயன்றவர்களுக்குப் பெருமளவு சாதகமாகக் காணப்பட்டது. இது பற்றி ஆய்வாளர் ஒருவர், "இந்து மதம் தன் விழுமியங்களை இழந்து, வேத உபநிடத உயிர் நிலைகளை மறந்து, அர்த்த மற்ற நம்பிக்கைகளுக்கும் கிரியைகளுக்கும் ஆட்பட்டு, பிராமணர்களுக்குச் சிறப்புரிமைகளைச் சொரிந்து, தீண்டாமை. உடன்கட்டையேறல், பால்ய விவாகம், விதவை மணமறுப்பு முதலானவற்றுடன் பிணியுண்டு கிடந்தமை, புதிய தாராண்மைச் சமத்துவக் கண்ணோட்டத்தில் கேலி செய்திடப் படத்தக்கதாயும், தம்மதம் பரப்பக் கருதிய மேலைத் தேயத்தினருக்கு வெகு வாய்ப்பானதாகவும் இருந்தது" எனக் கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது.

ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், இராமகிருஷ்ண சங்கம் முதலிய நிறுவனங்களினதும் ஆறுமுகநாவலர் முதலிய தனிப்பட்டவர்களினதும் முயற்சியினாலேயே பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து மதம் பேரழிவிலிருந்து தப்பிப் பிழைத்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் இலட்சக் கணக்கான இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாறியமை இந்து மதத்திற்கு ஏற்பட்ட இழப்பேயாகும்.

கடந்த சில தசாப்தங்களாக இந்தியா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து பல்வேறு காரணங்களினால் உலகின் பல்வேறு பாகங்களிலும் கணிசமான தொகை இந்துக்கள் குடியேறியுள்ளனர். இலங்கையில் இன்று பெரும் அலவங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பினும் உலகெலாம் பரவிக் கொண்டிருக்கும் இந்துக்கள் இந்து மத வளர்ச்சியின் பொருட்டு ஆங்காங்கே இந்து மத விழாக்களை நடத்தி வருகின்றனர். உலக இந்து தமிழ் கலாசார மாநாடுகள் கூட்டுகின்றனர். சஞ்சிகைகள் பல வெளியிடுகின்றனர். சுவாமி விவேகானந்தரின் புகழ்பூத்த சிக்காகோ சொற்பொழிவின் நூற்றாண்டு விழா உலகின் பல பாகங்களிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிற்சலாந்து முதலிய நாடுகளில் இந்துக் கோயில்கள் பல கட்டப்பட்டுள்ளன; கட்டப்படுகின்றன. அடிக்கல் நாட்டு விழாக்கள் இடம் பெறுகின்றன. பழைய கோயில்கள் புனருத்தாரணம் செய்யப் படுகின்றன. மேலைத் தேயத்தவர்கள் சிலரும் இந்து மதத்தாற் கவரப்பட்டு இந்துக்களாக மாறியுள்ளனர். இவற்றை நோக்குமிடத்து முன்னர் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத அளவிற்கு இந்து மதம் உலக வியாபகம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. மறுமலர்ச்சியும் வளர்ச்சியும் காண்கிறது என நாம் இறும்பூதெய்தலாம். ஆயின் இத்தகைய நிலமைகள் தற்காலிகமானதே எனலாம். இவை நீடித்த நிலைப்பேற்றை இந்து மதத்துக்கு ஏற்படுத்துமா என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகிறது. இத்தகைய தற்காலிகமான சலசலப்புகளும் விழாக்களும் மாநாடுகளும் தடல்புடல்களும் எத்தனை நாட்கள் நிலைக்கக் கூடியன? இந்து மதத்தின் வியாபகத்துக்கும் வளர்ச்சிக்கும் நிலைப்பேற்றுக்கும் எந்த அளவுக்கு உதவக் கூடியன?

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, கனடா முதலிய நாடுகளில் அகதி முகாம்களிலும் பிற இடங்களிலும் வாழும் இந்துக்கள் உட்பட அந்நியர்களுக்கெதிராகத் தீவிரவாதச்சுதேசிகள் அடிக்கடி மேற்கொண்டு வரும் தாக்குதல்கள், இடம் பெறும் கொலைகள், முகாம் எரிப்புகள், ஆர்ப் பாட்டங்கள் முதலியனவும் மேலைநாடுகள் சில பிற நாட்டினரைத் திருப்பி அனுப்ப மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளும் இந்து மதத்தின் உலக வியாபகம் பற்றி எதிர்கால நம்பிக்கையை ஊட்டக் கூடியனவா?

இவ்விடத்தே ஒரு கணம் இந்து இடைக்கால வரலாற்றைத் திரும்பிப் பார்த்தல் நலம். வட இந்தியாவின் இடைக்கால இந்து மதவரலாறு எத்தகையது? தென்னிந்தியாவிலே பல்லவ, பாண்டியப் பேரரசுகள், சோழப்பேரரசு, விசய நகரப் பேரரசு முதலியன செல்வாக்குடன் திகழ்ந்த காலக்கட்டங்களில் இந்து மதமும் இந்து பண்பாடும் தமிழகம், தென்னிந்தியா, வடஇந்தியா முதலிய எல்லைகளையும் கடந்து இலங்கை, பர்மா, கம்போடியா, சயாம், வியட்னாம், மலாயா, சிங்கப்பூர், பாலித்தீவுகள் முதலிய தென்கிழக்காசிய நாடுகளில் எல்லாம் பரவி வியாபகம் பெற்றுப் பல நூற்றாண்டுகள் செல்வாக்குடன் திகழ்ந்தன. ஆயின் அந்நாடுகளில் இந்து மதத்தின் இன்றைய நிலை யாது? புதை பொருளா ராய்ச்சியாளருக்கே இன்று ஆராய்ச்சி விருந்தாக இந்து மதமும் இந்துப் பண்பாடும் பல நூற்றாண்டுகள் நிலவியதற் கடையாளமான புதைப்பொருட்களும் கட்டிட அழிபாடுகளும் பிற வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன என்ற நிலையே காணப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலட்சோப லட்சம் இந்துக்கள் கடல்கடந்து இலங்கை முதல் றீயூனியன் வரை நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளுக்கும் தீவுகளுக்கும் சென்று குடியேறினர். இன்று அவர்களது நிலை என்ன? இலங்கையிற் குடியேறியோருள்ளும் கணிசமான தொகையினர் பல்வேறு காரணங்களாற் கிறிஸ்தவர்களாகவும் பௌத்த சிங்களவர்களாகவும் மாறியுள்ளனர். தென் ஆபிரிக்கா, ரிறினிடாட், பிஜி முதலிய இடங்களில் குடியேறியோர் நாளடைவில் பிற மதத்தினராகவும் பிற இனத்தினராகவும் மாறியுள்ளனர். பொருளாதாரப் பிரச்சினை யுடன் தாய்மொழிக் கல்வி வசதியின்மை, பிற மதத்தினர் அளிக்கும் சலுகைகள், பெரும்பான்மை மதத்தவராலும் இனத்தவ ராலும் சிறுபான்மை மதத்தவரும் இனத்தவரும் ஆக்கிரமிக்கப்படுதல் முதலியன இவற்றுக்கு முக்கிய காரணங்கள் எனலாம்.

உலகம் முழுவதும் பரந்து வாழும் இந்துக்கள் தாயகம் திரும்ப நேரிட்டாலோ மேலைத் தேயத்தவர்களால் ஒடுக்கப்பட நேரிட்டாலோ இனமும் மதமும் மாற நேரிட்டாலோ பிற மத பண்பாட்டம்சங்களால் ஆக்கிரமிக்கப்பட நேரிட்டலோ இந்நாடுகளின் இந்து மத வரலாறு தென்கிழக்காசிய நாடுகளின் இந்து மத வரலாறாக மாற மாட்டா என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கடந்த சில தசாப்தங்களில் உயர்வகுப்புகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இந்து மதமும் இந்துப் பண்பாடும் பொதுக் கற்கை நெறியாகவும் சிறப்புக் கற்கை நெறியாகவும் இடம் பெற்று வருவதும் ஆய்வுகள் பல இடம் பெறுவதும் இந்து மத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரங்களுக்கென இலங்கை அரசாங்கத்தால் தனி அமைச்சாக இந்து கலாசார அமைச்சு ஏற்படுத்தப்பட்டுத் துடிப்புடன் செயற்படுகின்றமையும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருவது உண்மைதான். ஆயின் மறுபுறம் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்து மதத்தின் இன்றைய நிலை மகிழ்ச்சிக்குரியதா? இதுவரை அழிக்கப்பட்ட இந்து ஆலயங்களையும் நித்திய பூசைகளின்றிப் பூட்டப்பட்ட நிலையிலுள்ள ஆலயங்களையும் அகதி முகாங்களாக மாறியுள்ள ஆலயங்களையும் மனங் கொளல் வேண்டும். நெருக்கடி மிக்க இன்றைய சூழ்நிலையிலும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அங்குமிங்குமாக இந்துக்கள் பலர் கிறிஸ்தவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றமையும் அவதானத்திற்குரியது.

சமயத்துக்கும் வாழ்க்கைக்கும் நெருங்கிய பிணைப்பேற்படும் போது சமயம் வாழ்க்கை நெறியாக விளங்குகின்றது. காலமாற்றங்கள் வாழ்க்கை நெறியில் மாற்றங்களை ஏற்படுத்தும்போது சமய நெறிமுறைகளும் அநுட்டானங்களும் வளைந்து கொடுத்தல் அவசியமே. உலகிலேயே மிக நீண்ட காலப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்து மதத்தின் வரலாற்றுக் காலகட்டங்களைக் கூர்ந்து நோக்குமிடத்துக் காலமாற்றங்களுக்கும் அரசியல், பொருளாதார வளர்ச்சி நிலைகளுக்குமேற்ப நெகிழ்ந்து கொடுத்தும் காலந்தோறும் புதிய கருத்துகளை ஏற்றும் பரிணாமம் பெற்று வந்துள்ளதனை அவதானிக்கலாம். இந்து சமய நெறி முறைகளும் கருத்துகளும் அநுட்டானங்களும் காலத்துக்குக் காலம் எவ்வாறு மாறி வந்துள்ளன என்பதை வேதங்கள் உட்பட இந்திய மொழிகளில் எழுந்துள்ள சமய இலக்கியங்கள் புலப்படுத்தி நிற்கின்றன. இந்து மதத்தின் கடந்த கால வரலாற்றைக் கூர்ந்து நோக்கும்போது ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை காலந்தோறும் தனக்குப் புறம்பான அமைப்புகளிலிருந்தும் உள்வாங்கக்கூடிய புதிய சிந்தனைகளையும் கருத்துகளையும் நெறிகளையும் நல்ல அம்சங்களையும் ஏற்றுப் பரந்த கண்ணோட்டத்துடன் வளர்ந்து வந்துள்ளதனை அவதானிக்கலாம்.

இந்து மதத்தில் இன்றும் காணப்படும் முக்கிய குறைப்பாடுகள் யாவை? இன்று எதிர் நோக்கும் முக்கிய சவால்கள் யாவை? இந்து மதத்தினதும் இந்துக்களதும் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் பணிபுரியக் கூடிய பலம் வாய்ந்த நிறுவனங்கள் எத்தனை செயற்படுகின்றன? இந்து மதத்தின் சமுதாயக் கொள்கை யாது? இந்து மதத்தின் எதிர்கால வளர்ச்சியிலும் நிலைபேற்றிலும் ஆர்வமுள்ளவர்கள் சிந்திக்க வேண்டிய விடயங்கள் இவையாகும். சமயத்திற் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைப் போக்க முயல்பவர் சமயத் துரோகியல்லர். எமது மதம் எவராலும் அழிக்கப் பட முடியாதது; கால வெள்ளத்தைக் கடந்து நிற்பது; அது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும் எனக் குழந்தைத் தனமான வீம்பு பேசுவது, கடந்த கால வரலாற்று உண்மைகளைப் புரிந்து கொள்ளவும் நிகழ்காலப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் எதிர்கால நிலைமைகளை உத்தேசிக்கவும் தடையாக அமையும், அத்துடன் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதுமாகும்.

கிறிஸ்தவ மதப் பரம்பலிலிருந்து இந்து சமயத்தையும் இந்துப் பண்பாட்டையும் காப்பாற்றுவதற்காக உக்கிரமாகப் போராடி ஒப்பற்ற பணிகள் பல புரிந்தவர் நாவலர். சாதி ஏற்றத்தாழ்வு பற்றி நாவலர் கொண்டிருந்த கருத்தினைக் கண்டித்துள்ள ஆய்வாளர் பலர் காலத்தின் தேவையை நிறைவு செய்த வரலாற்று நாயகனான அவரது பணிகளைப் புகழத் தயங்கியதில்லை. அதே சமயம் நாவலரோ தம் மதம் பரப்ப முயன்ற கிறிஸ்தவர்களை மட்டுமன்றித் தமது காலச் சைவர்களின் போலித்தனங்களையும் ஏமாற்று வித்தைகளையும் சமயப் பற்றின்மையையும் ஊழல்களையும் தயை தாட்சண்யமின்றிக் கண்டிக்கத் தவறவில்லை”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கள் மத்தியில் மிக நீண்ட காலமாக நிலவிவரும் மிக முக்கிய குறைபாடுகளுள் ஒன்று பிறப்பின டிப்படையிலான சமூக ஏற்றத் தாழ்வாகும். பிறப் பினடிப்படையிலான சாதிப்பிரிவினை இந்து மதத்தினைக் காலத்துக்குக் காலம் எந்த அளவிற்குப் பாதித்துள்ளது என்பதனை இந்து மத வரலாறு தெளிவுபடுத்தி நிற்கிறது. சமூக சமத்துவமற்ற சாதி வேறுபாடுகளையும் அதனால் ஏற்பட்ட ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கொடுமைகளையும் நாம் மூடிமறைக்க முயன்றாலும் அவற்றின் பாதகமான விளைவுகளை இதுவரை தடுத்து நிறுத்த முடியவில்லை".

சமண, பௌத்த மதங்களின் தோற்றக் காலம் முதல் இன்றுவரை பிற மதங்களுக்கு மாறிய மாறிக் கொண் டிருக்கின்ற இந்துக்களுள் அதிக எண்ணிக்கையினர் இந்து சமூகத்திற் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின் தள்ளப்பட்டோரே என்பதனை இந்து மத வரலாறும் இந்தியச் சமூக வரலாறும் காட்டி நிற்கும். இஸ்லாமிய, கிறிஸ்வ மதங்கள் வேகமாகப் பரவத் தொடங்கிய போது சாதி ஏற்றத் தாழ்வுகளினாலும் வறுமையினாலும் பாதிக்கப்பட்ட அதிக அளவு இந்துக்களே அம்மதங்களுக்கு மாறினர். ஏறத்தாழ இன்றும் இதே நிலைமையே காணப்படுகிறது".

மகாவீரர், கௌதம புத்தர் முதலியோர் காலத்திலிருந்து பக்தி இயக்க காலம் ஊடாக இன்றுவரை சாதி ஏற்றத் தாழ்வுகளைக் கண்டித்து அதற்கெதிராகப் போராடியும் சாதி ஏற்றத் தாழ்வுகள் முற்றாக அகன்ற பாடில்லை. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்துக் களுள் 2370க்கும் மேற்பட்ட சாதிகள் காணப்பட்டமையை இந்தியச் சமுதாய வரலாறு சுட்டிக்காட்டுகின்றது.

இந்து மதத்தில் மிகுந்த பற்றுறுதி கொண்டவரும் இந்திய விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணித்தவருமான மகாத்மா காந்தி, "தீண்டாமை வாழ்ந்தால் இந்து மதம் அழியும்" என அன்றே எச்சரிக்கை செய்தார். யுகப்பெருங் கவிஞனும் தீவிர இறை பக்தனுமான பாரதியும் சாதிக் கொடுமை களைக் கண்டித்ததுடன் சாதிவேறுபாடுகளை அகற்றவும் அயராது பாடுபட்டார். எனினும் இன்றுவரை இக்குறைப்பாடு தீர்க்கப் படவில்லை. இந்துமத நிறுவனங்கள் எதுவும் இதனை அகற்றத் தீவிரமாகச் செயற்பட்ட தில்லை. மாறாகச் சாதி பிரிவுகளைத் தொடர்ந்தும் கட்டிக்காக்கவே முயலுகின்றன. சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சமயம் துணை நிற்கவேண்டுமேயன்றிச் சமுதாயப் பிரச்சினைகளை உருவாக்கவும் வளர்க்கவும் தூண்டுதலாக அமையக்கூடாது.

இந்து மதத்திலே சமூகசேவை முக்கியத்துவம் பெறாமை மிக முக்கியமான ஒரு குறைபாடாகும். இந்து மதத்தின் புகழ்பூத்த உபதேச தத்துவ நூலான பகவத்கீதை பரிபூரணமான சமுதாய சேவையை வற்புறுத்துகின்றது. எனினும் நடைமுறையில் இத்தகைய சமுதாய சேவையை இந்து மத நிறுவனங்கள் எந்த அளவிற்கு மேற்கொள்கின்றன? பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றி வீறுடன் செயற்பட்ட இந்து மத இயக்கங்கள் பல இந்து மதத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் நிலை பேற்றுக்கும் வெவ்வேறு வழிகளிற் பணியாற்றியுள்ளமை மறுக்க முடியாதது. எனினும் அவை தமது இலக்கினை இதுவரை முழுமையாக எட்டவில்லை.

இன்றைய இந்துமத நிறுவனங் களுள் இராமகிருஷ்ண இயக்கமே இந்தியா என்ற எல்லையைக் கடந்து உலகளாவிய தாகவும் தன்னல மறுப்புடனும் தூய சேவை மனப்பான்மையுடனும் ஆத்மீக, சமூக, கல்வித் துறைகளிற் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றி வருகின்றது; காலத்தின் தேவையையும் போக்கையும் உணர்ந்து நவீன சிந்தனை களையும் முற்போக்கு அம்சங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கிச் செயற்பட்டு வருகின்றது; உலகிலே தனக்கென்றொரு தனியிடத்தைப் பெற்றுள்ளது.

இந்து மதத்திற்குப் புத்துயிரூட்டி உலகெலாம் அதன் புகழ் பரப்பிய சுவாமி விவேகானந்தர் "விதவைகளின் கண்ணீரைத் துடைக்க முடியாத மதத்தில் எனக்கு நம்பிக்கையில்லை" எனவும், "கடவுளை அடையச் சிறந்தவழி மனிதனுக்குச் சேவை செய்தலே" எனவும் "தரித்திர நாராயணனைத் தரிசிப்பவன் யான்" எனவும் கூறியமையும் இராமகிருஷ்ண பரமகம்சரும் விவேகானந்தரும் விபுலானந்தரும் "சமயத்தின் நோக்கம் பொது மக்களின் வாழ்க்கையை நெறிபடுத்துவதாகவும் தனி மனிதனுக்கன்றிச் சமுதாயத்திற்கு விமோசனமளிப்பதாகவும் அமைதல் வேண்டும்" என ஒரே குரலில் வற்புறுத்தியதுடனமையாது அதற்கேற்பத் தாமும் வாழ்ந்து காட்டியமையும் மனங்கொள்ளத்தக்கவை.

இடைக்காலத்திலிருந்து இன்றுவரை இயங்கி வரும் மடங்களும் ஆதீனங்களும் நவீனயுகத்தை எட்டிப் பார்க்கத் தயங்கு கின்றன; நவீன சிந்தனைகளையும் முற்போக்கு அம்சங்களையும் கண்டு அஞ்சுகின்றன. அப்பாவி மக்களின் துன்பங்களையும் அவலங்களையும் கண்டும் வாளாவிருக்கின்றன.

சாதிக் கொடுமை, வறுமைக் கொடுமை, சீதனக் கொடுமை, வன்செயல்கள், இயற்கை அனர்த்தங்கள் முதலியவற்றுக் கிலக்காகி வீடு வாசல், சொத்து சுகம் முதலிய அனைத்தையும் இழந்து ஒரு நேர உணவுக்கும் வழியின்றி மக்கள் அல்லலுறும் போது முன்வந்து உதவிகள் புரியும் பிற மதங்களின் பால் மக்கள் ஈர்க்கப்படும் நிலையைப் போக்க இன்று கூடச் சிறப்பித்துக் கூறக் கூடிய அளவிற்கு இந்துமத நிறுவனங்கள் ஆவன செய்கின்றனவா?

இந்துசமூகத்திற் காலம் காலமாக நிலவிவந்த பால்ய விவாகக் கொடுமை, கைம்மைக் கொடுமை, உடன்கட்டையேறுதல், விதவைகள் மணமறுப்பு, தேவதாசிமுறை முதலியவற்றால் பெண்குலம் அனுபவித்த இன்னல்கள் எண்ணற்றவை. பிரித்தானி யராட்சிக் காலத்தில் இக் கொடுமைகளைச் சட்டமூலம் அகற்ற முனைந்தபோது அன்றைய வைதிகர் பலர் எதிர்த்து நின்றனர். இன்றும் கூட இந்தியாவில், குறிப்பாக வட இந்தியாவில் இக்கொடுமைகள் முற்றாக அழியவில்லை என்பதை அங்கு அடிக்கடி இடம் பெறும் சம்பவங்களும் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இடம் பெறும் மதமாற்ற நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

மேற்கண்ட கொடுமைகள் அப்பட்டமான பெண் அடிமைத் தனத்தின் வெளிபாடுகளே. இன்று நிலவும் சீதனக் கொடுமை, அதனடியாகப் பிறக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் முதலியவற்றால் வாடிவதங்கும் இந்துப் பெண்களின் அவலங்களைப் போக்க இந்து மத நிறுவனங்கள் உருப்படியாக ஏதாவது செய்கின்றனவா? அல்லது அவைப் பற்றிச் சிந்திக்கின்றனவா? பெண் விடுதலை பற்றிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் மேலோங்கி வரும் இக்காலக்கட்டத்தில் இந்து மதமோ நிறுவனங்களோ அவற்றை அலட்சியப் படுத்தாது ஆவன செய்யமுயலுதலே விவேகமானதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

யுத்தக் கொடுமைகள், வன் செயல்கள், இயற்கை அனர்த்தங்கள் முதலியற்றால் அப்பாவி மக்கள் அல்லற்படும் பொழுது ஒரு "சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம்" ஓடோடி முன்வந்து செய்யும் பேருதவிகளைப் போன்ற செயற்பாடுகளை இந்து மதத்தைச் சேர்ந்த எத்தனை நிறுவனங்கள் செய்கின்றன? உலகப் பெருஞ் சமயங்களுட் பலவகையிலும் முதன்மை பெற்றுத் திகழ்வதும் பலம் வாய்ந்த நிறுவன மயப்படுத்தப்பட்டதுமான சமயம் கிறிஸ்தவமாகும். கிறிஸ்தவர்கள் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மதமாற்ற நடவடிக்கைகள் இந்து மதத்தைக் கணிசமான அளவு பாதித்துள்ளமை அலட்சியப்படுத்த முடியாததொன்றாகும்.

இன்றைய நவீன யுகத்தில் இந்து மதம் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களுடன் சங்கமித்தல் அவசியமாகும்.

"பழமையும் புதுமையும் துவைதமும் அத்வைதமும் பௌதீக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானக் காட்சியும் மேற்றிசையறிவும் கீழ்த்திசைச் சமயமும் மனமொடுங்கிய தியான நிலையும் மன்பதைக்குத் தொண்டு செய்தலும் சமரசப்படவேண்டிய காலமிது" (சுவாமி விபுலானந்தர்)

### சான்றாதாரம்

1. உலக சமயங்கள் பற்றிச் சுவாமி விபுலானந்தர் மிக விரிவாகத் தமது ஆக்கங்களில் நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றுள் ஒரு சில வருமாறு; Ancient Thoughts For Modern Man. (1992) கட்டுரைகள்; விஞ்ஞானதீபம், ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம், நாகரிக வரலாறு, எகிப்திய நாகரீகம், யவன புரத்துக்கலைச் செல்வம், உலக புராணம், திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி.
2. கைலாசநாதக் குருக்கள், கா., 1986, இந்துப் பண்பாடு - சில சிந்தனைகள் பக். 12,
3. மேலது நூல். பக். 16.
4. மேலது நூல் பக் 31.
5. மார்ஷல், வீலர், தீக்சித், கோசாம்பி, நீலகண்ட சாஸ்திரி முதலிய அறிஞர்களின் கருத்துகள் இவ்வகையில் நோக்கத்தக்கவை.
6. இதேபோன்ற குறைபாடுகள் கிறிஸ்தவ மதத்திலும் நிலவியபோதே புரட்டஸ்தாந்து மதம் முதலிய கிறிஸ்தவ மதப் பிரிவுகள் தோன்றியமை ஒப்பு நோக்கத்தக்கது.
7. தில்லைநாதன், சி., இந்து தர்மம், 1991 – 1992 பக். 3
8. 1993ஆம் ஆண்டு ஜுலைமாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் சுவிற்சலாந்தின் சூரிச் நகரின் அல்விஸ்கல்ரி என்ற இடத்தில் சுவிஸ் இந்து மாமன்றத்தினர் பிரமாண்டமான முறையில் நடத்திய 'உலக இந்து மாநாடு' பற்றிய பெருமித உணர்வுடன் எழுதப்பட்ட கட்டுரை (தினகரன்; வாரமலர் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை) தினகரன் வாரமலரில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
9. இவ்வகையில் அவரது 'யாழ்ப்பாணச் சமயநிலை' என்னும் கட்டுரை விதந்து கூறத்தக்கது.
10. இதுபற்றி இக்கட்டுரையாசிரியர் பிறிந்தோரிடத்தில் விரிவாக நோக்கியுள்ளார். ஆழமைம் பாரதியார் சிந்தனைகள், 1984, பக். 257–280.
11. அருணாசலம். க., பாரதியார் சிந்தனைகள், 1984, பக். 149–179.
12. இவைபற்றி இக்கட்டுரையாசிரியர், 'சுவாமி விபுலாநந்தரின் சமய சிந்தனைகள்' எனும் நூலில் விரிவாக நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
13. அருணாசலம் க பாரதியார் சிந்தனைகள், 1984, பக். 257–280.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயக் கல்வி மரபு

*பேராசிரியர்* சோ. சந்திரசேகரன்

மேலைநாட்டுக் கல்விக் கொள்கைகள் பரம்பரைக் காரணியும் சூழல்காரணியும் மனித வளர்ச்சியில் முக்கிய பங்கு கொள்வதாக விளங்குகின்றன. இவ்விரு காரணிகளும் இணைந்து மனிதனின் உடல் – உள – மனவெழுச்சி வளர்ச்சிக்குக் காரணமாகின்றன. இந்துமதக் கோட்பாட்டில் தனியாளின் விருப்பு என்ற மற்றொரு காரணியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. அக்கோட்பாட்டில் பரம்பரை எனப்படும் பிறப்புரிமைக் காரணிகள் மனித வளர்ச்சியில் கொள்ளும் பங்கு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மக்கள் தமது முற்பிறப்பில் செய்த வினைகள் காரணமாகத் தாமே இப்புவியில் மீண்டும் பிறக்கின்றார்கள்; முன்னையப் பிறப்பின் கர்மவிதிகள் இப்பிறப்பில் மனித வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன.

எனவே தனியாட்கள் தமக்குத் தாமே வாரிசாகவும் தமது பிறப்பினைத் தமது வினைப்பயனால் விளைவிப்பவர்களாகவும் இருக்கின்றார்கள்; இவ்வகையில் இப்பிறப்பில் ஒருவனுடைய உடல்நிலையும் சமூக அந்தஸ்தும் அவனது முற்பிறப்பின் வழியாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது; அவை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை. பிறப்பு முன்னைய கர்மவினையுடன் தொடர்புபட்டது. இக் கர்மவினை, பிறப்பவனை மட்டுமன்றி பிறப்பவரின் பெற்றோரையும் சார்ந்தது; இப்பிறப்பினை நிர்ணயிப்பது ஒருவனது முற்பிறப்பின் கர்மவினை மட்டுமன்றி அவனது பெற்றோர்களின் கர்மவினையுமாகும்.

இந்து சமய நோக்கில் ஒருவனுடைய சுற்றாடல் அவன் தனது வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளத் தேவையான வாய்ப்புகளை வழங்குகின்றது. அவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளச் சுற்றாடலில் உள்ள வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள உரிமையுடையவர்கள். அவ்வளங்கள் தம்மீது செல்வாக்குச் செலுத்துவதை அனுமதிக்கும் உரிமையுடையவர்கள்; அவர்கள் எதனைச் சிந்திக்கவும் எதனைச் செய்யவும் சுதந்திரமுடையவர்கள்; இந்நிலையில் தமது அறியாமை, கெடுதியான எண்ணங்கள் காரணமாக தீயனவற்றைச் செய்யவும் சிந்திக்கவும் முடியும். அவர்கள் பெறுகின்ற வேதநூல் அறிவினூடாகவே அவர்களுடைய அறியாமையைக் களைய முடியும் என்பது இந்து மதக் கோட்பாடு; அவர்களுடைய உள்ளுணர்வை நன்கு கிரகிப்பதாலும் அறியாமையையும் அதன் தீங்குகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும். இந்து மதக் கோட்பாடுகளை மானசீகமாகக் கடைப்பிடிப்பதன் மூலம் மனிதன் தனது பாதையை மாற்றிக் கொள்ள முடியும்; சரியான சிந்தனை, சரியான நோக்கு என்பவை படிப்படியாக மனிதனில் மாற்றத்தைக் கொண்டு வர உதவும் என்பதும் இந்து சமய வேதநூல்கள் காட்டும் வழிமுறைகளாகும்.

இந்து தர்மத்தின்படி கற்றலில் இரு வகையுண்டு. முதலாவது வகை யதார்த்த உலகிலிருந்து கற்றுக் கொள்வது; இது வெளிநிலைப்படுத்தப்பட்ட கல்வியாகும். இவ்வாறான கல்வி அறிவுக்குச் சூழலே மூலாதாரமாகும்; இவ்வறிவைப் பெறுவதற்கான வழிமுறை சுற்றுப்புற வெளி உலகுடன் அனுபவரீதியாகக் கொள்ளும் இடைத் தொடர்பும் வேத நூல்களைப் பயில்வதுமாகும். இரண்டாவது வகையான கல்வி ஒருவன் தன்னையே அறிவதும் உணர்வதுமாகும்; இது உள்நிலைப் படுத்தப்பட்ட கல்வியாகும்; இவ்வகை அறிவுக்கான மூலாதாரம் ஒருவனின் ஆத்மீக உணர்வுகளேயாகும்; அதனைப் பெறுவதற்கான வழி தியான முறைகளாகும் என்பது இந்துத் தத்துவம்.

மாணவர்கள் சில கட்டுப்பாடுகளுக்குட்படும் போதே சிறப்புறக் கற்கின்றார்கள்; கடும் உழைப்புடன் கண்ணீர் விட்டுக் கற்றாலே கல்வித் தேர்ச்சியைப் பெறலாம்; இக்கருத்து இந்து சமய வேதநூல்களில் தொடர்ச்சியாகக் காணப்படுவதொன்று; வேண்டுமென்றோ, தெரியாமலோ விதிமுறைகளை மீறும் மாணவர்கள் பெற்ற தண்டனைகள் அவற்றில் குறிப்பிடப் படுகின்றன. மனு தர்மம் கூறுவதாவது 'குற்றமற்ற மனிதனை எங்கும் காண முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனைகளைக் கொண்டே உலகில் ஒழுங்கை நிலைநாட்ட முடியும்; தண்டனைகள் சட்டமாக்கப்படல் வேண்டும்'.

மனித வளர்ச்சி முக்கியமான கட்டுப்பாடுகளையும் தண்டனைகளையும் யார் விதிக்கலாம்? மக்கள் மீது அரசனும், பிள்ளை மீது பெற்றோரும், மாணவன் மீது ஆசிரியரும் தண்டனை விதிக்கக் கடப்பாடுடையவர்கள். அவ்வாறான தண்டனை, குற்றம் செய்யப் பட்டவுடன் விதிக்கப்பட வேண்டியதொன்று; தண்டனையை வழங்க உரிமையுடைய மற்றொரு சக்தி இவ்வுலகை ஆளும் மகாசக்தி; இத்தண்டனை வாழ்வு முடிந்த பின்னர் வழங்கப்படுவது; உடனடியாக வழங்கப்பட மாட்டாது; உலகம் நீதி, தர்மத்தின் அடிப்படையில் இயங்குவது; மக்களுக்கு எது உரியதோ அது கிட்டும்; காலதாமதம் ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி பெறுவது தர்மமே! இந்நிலையில் மனிதன் சில கட்டுப்பாடுகள் இருந்தால் மட்டுமே கல்வித் தேர்ச்சியைப் பெறுவான்; தீயன அகற்றி நல்லவற்றைச் செய்வான் என்பது இந்து தர்மக் கோட்பாடு.

தியான முறைகளினூடாக அக உலகின் உண்மைகளை அறிய முயலும் மனிதன் யோக நிலையைப் பயன்படுத்த முடியும். புலன்களை அடக்கித் தியான முறை மூலம் இடைவிடாது மனதை ஒருமுகப் படுத்தித் தன்னை உணர முடியும். இவ்வாறான உள்நிலைப்படுத்திய தியான முறைகள் வயது வந்தோர் பயன்படுத்துவது; புற உலகைப் பற்றி மனிதன் அறிய முயல்வது தனது குமரப் பருவத்திலாகும் என்று இந்து தர்மக் கோட்பாடு கூறுகின்றது.

மனிதனின் கல்வி வாழ்க்கைக் கட்டங்களைப் பொறுத்தவரையில் பிள்ளைகள் பருவம் எய்து முன்னர் ஏற்படும் வளர்ச்சிக் கட்டங்கள் பற்றி விரிவாக ஒன்றும் சொல்லப்படாத நிலையில், பருவம் எய்திய பின்னர் ஒரு குருவின் கீழ் வேதநூல்களைக் கற்பது பற்றி இந்து தர்மம் விரிவாகக் கூறுகின்றது. வேத நூல்களைக் கற்கத் தொடங்கும் நிலை மனிதனின் இரண்டாம் பிறப்பு எனக் கூறப்படும். மாணவ பருவத்தில் பிள்ளைகள் வேதங்களையும், கடமைகளையும், சடங்குகளையும் தியான முறைகளையும் பயில்வர். அடுத்த பிறப்பில் உயர்வாகப் பிறக்கத் தேவையான கர்மவினைகளைப் பெறத் தியான முறைகள் அவனுக்கு உதவும். இரண்டாவதாக கிரஹஸ்த நிலை பற்றியும் மூன்றாவதாக துறவற நிலை பற்றியும் இந்து மதக் கோட்பாடு எடுத்துக் கூறுகின்றது. ஒவ்வொரு வாழ்க்கைக் கட்டமும் அடுத்த கட்டத்துக்கான ஆயத்த நிலையாக அமைவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய உளநூல் கருத்தின்படி தனியாள் வேறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. கல்விச் செயற்பாடு அவற்றுக் கேற்ப ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும் என்பது இன்றைய கல்வியாளர் முடிவு. பண்டைய இந்து தர்ம மரபின்படி தனியாள் வேறுபாடு, வர்ணம், பால், உடலியல்கூறுகள், வயது, தனியாள் நடத்தை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுவது. நவீன உளவியல் ஆய்வுகள் இத் தனியாள் வேறுபாடுகளை மேலும் விரித்துக் கூறும் முறையில் வளர்ச்சியடைந்துள்ளன.

இத்துடன், இந்து தர்ம மரபின்படி ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கென கற்றறிந்த குழு ஒன்றினைத் தயாராக வைத்திருத்தலும் வேண்டும். வர்ணாச்சிரம தர்மத்தின்படி இக் குழுவினர் பிராமண குலத்தவராகவே இருந்து வந்துள்ளமையையும் காணமுடிகின்றது. சடங்குகள், கிரியைகளை நடாத்துவதிலும் புனிதமான நூல்களைக் கற்றுத் தேர்வதிலும் இவர்களுக்குச் செயல்முறை சார் பயிற்சியே வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆட்சியாளர்களைச் செயற்படத் தூண்டும் வல்லமை இந்தக் கற்றறிவாளர் குழுவுக்கே இருந்து வந்துள்ளது. கூறப்பட்ட விதத்திலான சடங்குகளை செய்து விதித்துரைக்கப்பட்ட விதத்தில் நடத்தையை வகுப்பதன் மூலம் ஆட்சியாளரையும் மக்களையும் நன்னெறிப் படுத்துவதில் இந்த ஆலோசனை யாளர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இவர்களின் பங்களிப்பு இந்நாளில் வெளிஉறவு அமைச்சரகம் ஆகவும் அமைச்சரவையின்உப குழுவின் வடிவாகவும் ஆலோசனை வழங்கும் விஷயத்தில் தொடர்ந்தும் இருந்து வருவதைக் காணலாம். மக்களின் சேமநலனை முன்னிறுத்தி ஆட்சி நடாத்தப்படவேண்டும் என்பதில் இந்து தர்மக் கல்வியும், இன்றைய கல்வியும் வேறுபடவில்லை என்பது அவதானிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் சமுதாயமும்

பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரன்.

சமயம் என்ற சொல்லுக்குச் சமைத்தல் அதாவது பக்குவப்படுத்துதல் என்பது பொருள். விலங்கு நெறியினின்று மாற்றி மனிதனைப் பக்குவப்படுத்தும் வாழ்க்கை நெறியே சமயம் எனலாம்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியைச் சொல்வது சமயம்.

உயர்ந்த குறிக்கோளை உணர்த்தவே சமயம்!
எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்.

என்ற தொல்காப்பியர் நூற்பாவால் (தொல். பொருள் 27) உலகம் இன்பம் அடைவதே சமயத்தின் குறிக்கோளென்பது பெறப்படும்.

சைவ சமயத்தின் தனிச் சிறப்புக்களாகப் பல உள்ளன. அவற்றுள் இன்றியமையாத பண்புகளாக ஐந்தினைக் கூறுவார் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள்.

உயர்ந்தோர் தாழ்ந்தோருக் குழைத்தல், கைம்மாறற்ற பணி, பிறப்பு வேற்றுமை பாராட்டாமை, எவ்வுயிரையும் தன் உயிர்போல் பாவித்தல் என்பவை சைவ சமயத்தின் தலையாய பண்புகள்.

*நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன் கடன் அடியேனையும் தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே.*

என்று பணி செய்து வாழ்ந்தவர் நாவுக்கரசர். திருவீழிமிழலையில் வாசி இல்லாக் காசு பெற்றார் வாகீசர்; வாசியுள்ள காசு பெற்று 'வாசி தீரவே காசு நல்குவீர்' என்று வேண்டிப் பெற்றார் ஞானசம்பந்தர். இருவருக்கும் பொற்காசு நல்குவதில் ஏன் இந்த வேறுபாடு?

*"கைத் தொண்டு செய்யும் கடப்பாட்டினால்"*

என்று நாவுக்கரசரின் உழவாரப் பணியின் சிறப்பைக் காரணம் காட்டுவார் சேக்கிழார்.

*அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்*
*இன்ப நிலை தானே வந்து எய்தும் பராபரமே*

என்று உருகுகின்றார் தாயுமானவர்.

மக்களுக்குச் செய்யும் தொண்டு மகேசனுக்குச் செய்யும் தொண்டு என்பது சைவ சமயக் கொள்கை.

மக்களனைவரும் நடமாடும் கோவில்கள் எனப்படும். மக்களுக்குச் செய்யும் தொண்டு கோயிலில் உள்ள இறைவனுக்குச் சேரும்; கோவிலுக்கு மட்டும் செய்யப்படும் எதுவும் மக்களைச் சென்று சேராது. 'அவர் இவர் என்னாது யார்க்கும் இடுவதே மிகச் சிறந்த அறம்' என்பதைப்

*படமாடும் கோவில் பகவற்கு ஒன்றீயில்*
*நடமாடும் கோவில் நம்பர்க்கு அங்கு ஆகா*
*நடமாடும் கோவில் நம்பர்க்கு ஒன்றீயில்*
*படமாடும் கோவில் பகவற்கு அதாமே*

என்பர் திருமூலர்.

நம் சைவ சமய குரவர்கள் நமக்கு வழி காட்டிகளாக வாழ்ந்தவர்கள். அவர்கள் இச்சமுதாயத்திற்காக ஆற்றிய பணி புகழுக்காக அன்று !

கோயிலில் ஒரு விளக்குப் போட்டால் கூட விளக்கில் தன் பெயரை எழுதி வைக்கும் இக்காலத்தில், அப்பூதியடிகள் தான் செய்த திருப்பணிகளுக்கெல்லாம் நாவுக்கரசர் பெயரை வைத்தமை சிந்திப்பதற்குரியது!

*"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"*

என்பது நம் சமயம் வலியுறுத்தும் வாழ்வியல் நெறி.

*சாத்திர மோதும் சதுர்களை விட்டு நின்*
*மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்*
*பார்த்த இப்பார்வை பசுமரத்தாணிபோல்*
*ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே.*

என்று திருமூலரும்.

*சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்*
*பாத்திரம் சிவனென்று பணிதிரேல்*
*மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே.*

என்று திருமூலர் வழிநின்று நாவுக்கரசரும் சமய ஒற்றுமையை வலியுறுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனது அருட் சோதியில் கலக்க வேண்டுமெனில் சாதி, சமய வேறுபாடுகளைத் துறக்க வேண்டுமென்பதைச்

*சாதி சமய சழக்கை விட்டேனருள்*
*சோதியைக் கண்டேனடி*

என்று பாடிப் பரவுவார் வள்ளலார்!

சைவ சமயத்தின் உயிர் நாடியான கொள்கை 'அன்பே சிவம்' என்பதாகும்.

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.*

என்பர் திருமூலர். அன்பு, சிவம் என்பவை இரண்டு பொருளல்ல. அன்பே சிவம் என்பதை உணர்ந்தவர் சிலரே. அவர்களே ஞானிகள். அவர்களே கடவுள் தம்மை பெற்றவர்கள் என்கிறார்.

அன்பினில் விளைந்த ஆரமுதமென இறைவனைப் பாராட்டுவார் மணிவாசகப் பெருந்தகை.

*"யாம் இரப்பவை பொன்னும் பொருளும்*
*போகமும் அல்ல நின்பால்*
*அன்பும் அருளும்"*

என்று முருகப் பெருமானை வேண்டுவார் பரிபாடலாசிரியர்.

பிரகலாதன் முன் இறைவன் தோன்றி "என்ன வரம் வேண்டும்" என்று கேட்ட பொழுது பெரும் புகழோ, அரசுரிமையோ, செல்வமோ அவன் வேண்டவில்லை. எலும்பற்ற புழுவாய்ப் பிறக்கினும் அன்புடன் வாழ வரம் கேட்டான்.

*என்பு பெறாத இழிபிறவி எய்திடினும் நின்*
*அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள்*

என்றதாகக் கம்பன் கூறுவான்!

தானங்களில் சிறந்ததாக அன்னதானத்தையே நம் சமயங்கள் போற்றுகின்றன. "ஏழைக்கு இறைவன் ரொட்டி வடிவில் காட்சியளிக்கிறான்" என்பார் அறிஞர் பெர்னாட் ஷா.

*மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.*

என்கிறது மணிமேகலை.

*மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*
*அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்.*

என்று அடியார்களுக்கு அன்னதானம் செய்வதே சைவராயினார் செய்ய வேண்டிய தலையாய அறமென்பர் சேக்கிழார்.

*இம்மையேதரும் சோறும் கூறையும்*
*ஏத்தலாம் இடர் கெடலுமாம்*

என்று நம்பியாரூரன் இறைவனைப் பணிவதால் இம்மையில் உணவும், உடையும் மறுமையின்பமும் கிடைக்குமென்று நமக்கு வழிகாட்டுகின்றார்!

மிகப் பெரிய அளவில் வழிபாடும் அபிஷேகமும் அன்னதானமும் செய்ய இயலாவிடில் குற்றமில்லை; ஏதேனும் ஒரு பச்சிலையை இறைவனுக்குச் சூடுவதும், ஒரு கைப்பிடிப் புல்லைப் பசுவுக்குப் போடுவதும், உண்ணும் உணவில் ஒரு கைப்பிடியைப் பிறருக்கு வழங்குவதும் கூடச் சிறந்த அறமே என்பதை

*யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை*
*யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை*
*யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி*
*யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே.*

என்று எளிமையாக அறிவுறுத்துவார் திருமூலர்.

இறைவனை அடைதற்குரிய வழி "எல்லையில்லாதோர் அடிமை பூணுதலே". இருள்சேர் இருவினையை நீக்கி அருள் நிலை காட்டும் வழியை,

*மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்*
*விதையை வித்திப்*
*பொய்ம்மையாம் களையை வாங்கிப்*
*பொறையெனும் நீரைப் பாய்ச்சித்*
*தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும்*
*வேலியிட்டுச்*
*செம்மையுள் நிற்பராகிற் சிவகதி*
*விளையுமன்றே*

என்பர் வாகீசர்.

"சைவ சமயமே சமயம்" என்று தாயுமானவர் போற்றுதற்குக் காரணம்,

*எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன்*

என்ற நிலையில் சமய உணர்வும் சமுதாய உணர்வும் பின்னிப் பிணைந்திருப்பதை அறிந்தால் புதியதோர் உலகம் காண்பதுறுதி !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமன் என்னும் அறிவுக்கடல்

எல். கே. சுபாஸ்சந்திரபோஸ் *(சிவகங்கை)*

இராமாவதார நோக்கம் நிறைவேறத் துணைநின்ற பெருமக்களில் முதல் வரிசையில் இருப்பவர் அனுமன். இராம பெருமானுக்குத் துணை நின்று. அனுமன் ஆற்றியுள்ள பணி அளவிடற்கரியது. இராமதூதன் என்று அனுமனை எல்லோரும் குறிப்பிட்டாலும், தன்னை இராமதொண்டன் என்றே கருதிப் பணிகள் செய்தவர். இராமபிரானுக்குத் தொண்டனாக இருந்து பணியாற்றுவதைப் பெரும் பேறாகக் கருதிப் பெருமைப்பட்டவர் அனுமன்.

அசோக வனத்தில் சிறையிலிருந்த செல்வியை அனுமன் சந்தித்த போது "நீ யார்" என்று சீதாதேவி வினவ, "யான் அவர்தம் பண்ணைக்கு ஒருவன் எனப் போந்தேன் ஏவல் கூவல் பணிசெய்வேன்" என்று கூறி அனுமன் பெருமைப்படுகிறார். இராவணனிடம் தன்னை அறிமுகப்படுத்தும்போதும், "அன்னவர்க்கு அடிமை செய்வேன் நாமமும் அனுமன் என்பேன்", என்று கூறி மகிழ்கிறார். தூதனாய்த் தொடங்கி தொண்டனாய்த் தொடர்ந்து, தெய்வமாய் உயர்ந்த நிலையை அனுமனின் வரலாற்றில் காணலாம். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழ்ந்தவர் அனுமன்.

அனுமன் தூய தொண்டுக்கு எடுத்துக்காட்டு. பயன் கருதா உழைப்புக்குச் சான்று; அடக்கம் என்னும் ஆலவிருக்ஷத்திற்கு ஆணிவேர். உடல், பொருள், ஆவி அனைத்தையும் இராமனுக்கே அர்ப்பணித்து மகிழ்ந்தவர். இராவண வதத்திற்குப் பெருந்துணை நின்று வெற்றி குவித்தவர். "ஒருவில்" என்று உயர்வாகச் சிறப்பிக்கப்பட்ட இராமர் திருக்கரத்தில் மரணப்படுக்கையில் கிடந்த நேரத்தில் வாலி, இராமனை நோக்கி "அனுமனை நின்கை தனு (வில்) என நினைதி" என்று கூறியது எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தைகள் என்பது புரிகிறது.

வீரம் மட்டுமின்றி விவேகமும் நிறைந்தவர் அனுமன். அவரின் பேரறிவாற்றலைப் பார்த்த மாத்திரத்திலேயே கணித்ததால் இராமபிரான் அனுமனுக்கு "சொல்லின் செல்வன்" என்ற பட்டத்தை வழங்கிப் பாராட்டினார். "இல்லாத உலகத்து ஈங்கிவண் இசைகள் கூற கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி சொல்லாலே தோன்றிற்றன்றே யார் கொல் இச் சொல்லின் செல்வன்" என்பது இராமமூர்த்தியின் திருவாக்கு. வசிட்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெறுவது எளிதான செயலா? இராமபிரான் காரணமின்றி அனுமனை "சொல்லின் செல்வன்" என்று கூறுவாரா? மாட்டார். அவ்வாறெனின் அனுமனின் அறிவாற்றலை இராமபிரான் எவ்விதம் அறிந்தார் என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா?

இராமரும் அனுமனும் ரிஷ்யமுக பர்வதத்தில் அப்போதுதான் முதன் முதலில் சந்திக்கிறார்கள். "நீ யார்" என்று இராகவன் வினவியதற்கு "மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க்கெல்லாம் நஞ்செனத் தகையவாகி நளிரிரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கள்ள யான் காற்றின் வேந்தர்க்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன் நாமமும் அனுமன்" என்று விடை கூறினார். இதனைக் கேட்ட மாத்திரத்திலே அனுமனது அறிவாற்றலை இராகவன் அளந்து பார்த்து விட்டார். அறிவு அறிவைப் பாராட்டியது.

முதலில் இராமனைப் புகழ்ந்து பின்னர் தன்னை அறிமுகம் செய்த அனுமன், தாய், தந்தை தனது திருநாமங்கள் அனைத்தையும் சுருங்கச் சொல்லி விளக்கம் தந்துவிட்டார். அஞ்சனை வயிற்றில் உதித்தனால் ஆஞ்சனேயர், காற்றின் மைந்தன் எனவே மாருதி, (மாருதி–காற்று–வருணபகவான்) இந்திரன் வச்சிராயுதம் கொண்டு தாக்கியதால் அநு (கள்ளம்) முறியப் பெற்றது. எனவே அனுமன் இப்படிச் சமத்காரமாகப் பதில் சொன்ன பாங்கு அனுமனின் அறிவுத் திறத்தை அறிய வைத்தது. அதனால் தான் சுருதி நாயகன், சொல்லின் செல்வன் என்று பட்டம் தந்து பாராட்டினார்.

அனுமனின் அறிவு, ஆற்றல், குணநலன்கள் அனைத்தையும் சீதாதேவியும் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். "அறிவு ஈதே; உரு ஈதே; ஆற்றல் ஈதே; ஐம்புலத்தின் செறிவும் ஈதே; தேற்றம் ஈதே; தேற்றத்தின் நெறியும் ஈதே; நினைவு ஈதே; நீதி ஈதே என்பன சீதையின் பாராட்டுக்கள். அறிவு, ஆற்றல், உருவம், ஐம்புலத்தின் செறிவு, செயல், தேற்றம், நெறி, நினைவு, நீதி இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் ஓர் உருக் கொண்டால் எப்படி இருக்குமோ அதுதான் அனுமன்.

சீதையைத் தேடிச் சென்று கண்டு மீண்டு வந்த அனுமன் இராமனுக்குச் செய்தி கூறிய பாங்கு அவரை அறிவின் சிகரமாக நமக்குக் காட்டுகிறது. சீதை பற்றிய நல்ல செய்தி எப்போது வரும், எப்போது வரும் என்று ஏங்கித் தவித்திருக்கும் இராமனைச் சந்தித்ததும் அனுமன் கூறிய முதல் வார்த்தை "கண்டனன்" என்பதாகும். இது சாதாரண வார்த்தை அல்ல. இராமனின் உயிர்க்காக்கும் மாமருந்தாகிய வார்த்தை. இது அனுமனின் மாமருந்தாகிய வார்த்தை. இது அனுமனின் மனோதத்துவ ரீதியிலான அணுகுமுறையில் வெளிவந்த வார்த்தை. "கண்டனன்" என்னும் சொல் ஆயிரம் சந்தேகங்களை அரைநொடியில் தீர்த்து வைத்த அற்புதமான வார்த்தை. இதைத் தவிர வேறு எந்தச் சொல்லை; எத்தனை சொல்லை முதலில் கூறியிருந்தாலும் அது இராமனின் இதயத்தைக் குளிர வைத்திருக்காது. காணச் சென்றது சீதையை எனவே சீதையை என்று தொடங்கி இருந்தால் கண்டேன் என்றும் முடிக்கலாம்; இனிக் காணவே முடியாது என்றும் முடிக்கலாம்; காணவில்லை என்றும் முடிக்கலாம்; அரக்கன் கொன்று விட்டான் என்றும் முடிக்கலாம்; தின்று விட்டான் என்றும் முடிக்கலாம். இப்படி எப்படி வேண்டுமென்றாலும் முடிக்கக் கூடிய சொல்லைச் சொல்லாமல் "கண்டனன்" என்று கூறியதால் வேறு வினாவுக்கே வழியில்லாமல் போய்விட்டது. அத்தனை அறிவாற்றலுடன் கூடிய வார்த்தை இது.

"கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்" என்று அனுமன் தொடர்ந்து செய்திகளைக் கூறுகிறார். கண்களால் தானே காண முடியும். கண்டனன் என்கிற வினைமுற்றிலேயே கண்களால் என்பதும் அடங்கி விடுகிறதே. பின் ஏன் கண்டனன்...... கண்களால் என்று அனுமன் கூறுகிறார். அறிவாளிகள் தேவையற்ற வார்த்தைகளைப் பயன்படுத்த மாட்டார்கள். அப்படி என்றால் "கண்களால்" என்ற சொல்லுக்குள் சிறப்பான கருத்து எதுவும் வைத்துள்ளாரோ? ஆம் அரிய கருத்து – அழகிய கருத்து – ஐயப்பாட்டை நீக்கும் அற்புதக் கருத்து – "கண்டனன் கற்பினுக்கு அணியை கண்களால்" சீதாதேவி கற்பினுக்கு அணியாகத் திகழ்கிறார் என்பதை அவளுடைய கண்களாலேயே கண்டு கொண்டேன் என்பதே அந்த அற்புதமான கருத்து. அவள் கற்பின் திறத்தில் ஐயம் எழத் தேவையில்லை என்று இராமனது சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முத்தான கருத்து. அது மட்டுமல்ல. கண்களே மாதர்தம் கற்பு நெறியை அளக்கும் கருவியாகத் திகழ்கிறது என்று உலகத்திற்கு வழங்கிய உன்னதமான கருத்து. என்னே அனுமனின் அறிவாற்றல்.

இறைவனை "வாலறிவன்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. "அன்பும் அறிவுமே சிவம்" என்பார் ஆன்றோர். இறைவன் அறிவின் சொரூபமாகத் திகழ்கிறான். அறிவின் உருவாகத் திகழும் ஆஞ்சநேயரும் இறைநிலையில் வைத்து வணங்கி வழிபடும் உயர்நிலை எய்துகிறார். நம்மை என்றும் காக்கும் நாயகனாகத் திகழ்கிறார். "ஐந்திலே ஒன்று பெற்றான் ஐந்திலே ஒன்றைத் தாவி ஐந்திலே ஒன்றாறாக ஆசிரியர்க்காக ஏகி ஐந்திலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலார் ஊரில் ஐந்திலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்" என்று ஆஞ்சநேயரைப் போற்றிப் பாடுகிறார் கம்பர் பெருமான். ஆஞ்சநேய வழிபாடு உலகெங்கும் பரவிக் காணப்படுகின்றது. திருமால் திருஅவதாரத் தோற்றங்களில் உள்ள சிவ சொரூபங்களை ஆஞ்சநேயர் பெற்று இறைநிலையில் திகழ்வதை நாம் புராண வாயிலாக அறியலாம்.

இராவணன் அழிவுக்குப் பின் எதிர்த்து வந்த சதகண்ட ராவணனை வதைப்பதற்கு ஆஞ்சநேயர் பஞ்சமுகத் தோற்றத்துடன் செல்கிறார். குரங்கு, நரசிங்கம், கருடன், வராகம், குதிரை ஆகிய பஞ்சமுக ஆஞ்சநேயராக உருவம் தாங்கி சதகண்ட ராவணனை வதம் செய்கிறார். இதனைப் பாராட்டி ஆஞ்சநேயருக்கு இரத்தினமாலை ஒன்றை இராமன் பரிசளிக்கிறார். பஞ்சமுக ஆஞ்சநேயர் தோற்றத்தில் திருமால் அவதார சொரூபங்களான நரசிங்கம், வராகம் போன்றவையும் கருடமுக தோற்றமும் ஆஞ்சநேயரை நமக்குத் திருமாலாகவே எண்ணத் தோன்றுகிறது.

கிருஷ்ணாவதாரத்தில் பார்த்த சாரதியாக வந்த பரந்தாமன் தனது தேரின் மீது ஆஞ்சநேயரைக் கொடியாகப் பறக்க விட்டு உயர்வு தந்தார். ஆஞ்சநேயரின் அறிவுநெஞ்சம் கிருஷ்ணரையும் ருக்மணியையும் இராமன்– சீதையாகவே கண்டு ஆனந்தித்தது. தூய தொண்டனாகப் பணியாற்றி இராம நாமத்தின் மகிமையை உலகறியச் செய்து தெய்வ நிலைக்கு உயர்ந்து வழிபடு கடவுளாகத் திகழும் ஆஞ்சநேயரின் திருவடிகளைச் சரணம் அடைந்தால் எல்லா நன்மைகளையும் எய்தி வாழ்வாங்கு வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி போகிற பாதை...!

தென்கச்சி சுவாமிநாதன்

ஓர் ஊரில் ஒரு சந்நியாசி இருந்தார்.
அவர் ஒரு நாள் ஒரு கனவு கண்டார்.
அந்தக் கனவிலே அவர் சொர்க்கத்துக்குப் போனார்.
இவர் அங்கே போன சமயம்.........
அங்கே ஒரு பெரிய திருவிழா நடந்து கொண்டிருக்கிறது.
தெருவெங்கும் அலங்கார வளைவுகள்.........
வாசலெங்கும் மாவிலைத் தோரணங்கள்..........
வண்ணமயமான விளக்குகள்.......
வழியெங்கும் வாச மலர்கள்........
வீடெல்லாம் விழாக் கோலம்.
வெளியெல்லாம் ஒளி வெள்ளம்
இவ்வளவு கோலாகலமாக....... பிரமாண்டமாக அந்தத்
திருவிழா நடந்து கொண்டிருக்கிறது.
அது என்ன திருவிழா என்பது இந்தச் சந்நியாசிக்குப் புரியவில்லை.
எதிரே வந்துகொண்டிருந்த ஒருவரிடம் விசாரித்தார்.
"என்ன விசேஷம் இங்கே ?"
"உனக்குத் தெரியாதா விஷயம் ? இன்றைக்கு இறைவனுக்குப் பிறந்த நாள்......... அதைத்தான் எல்லாரும்
சேர்ந்து கொண்டாடுகிறோம் !"
"ஓ... அப்படியா ? "
"ஆமாம்........ இதற்காக பிரமாண்டமான ஊர்வலம்
ஒன்று....... இன்னும் சற்று நேரத்தில்....... இந்த வழியாக
வரப்போகிறது. அந்த ஊர்வலத்திலே இன்றைக்கு
இறைவனே கலந்து கொள்ளப் போகிறார்!"
சந்நியாசி உடனே ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றுகொண்டார்.
ஊர்வலம் வந்துகொண்டிருக்கிறது.
முதலில் ஒரு குதிரை வந்தது. அதன் மீது ஒருவர்
உட்காந்திருந்தார். அவருக்குப் பின்னால் நிறையப்பேர் கூட்டமாக வந்துகொண்டிருந்தார்கள்.
"இவவளவு பேர் இவரைப்பின் தொடர்ந்து வருகிறார்களே........
யார் இவர்?"
என்று விசாரித்தார்.
ஒரு மதத்தின் பேரைச் சொல்லி........
"இவர் அந்த மதத்தின் தலைவர்........ அவரைப் பின்பற்றுகிற கூடம்தான் பின்னால் வந்து கொண்டிருக்கிறது!"
– என்றுவிவரம் சொல்கிறார்கள்.
இவர்களுக்கு அடுத்தபடியாக இன்னொரு குதிரைமீது
ஒருவர் வருகிறார். அவருக்குப் பின்னாலும் ஏகப்பட்ட கூட்டம்
"இவர் யார்?" என்று கேட்டார் சந்நியாசி
இன்னொரு மதத்தின் பேரைச் சொல்லி......
"இவர் அந்த மதத்தின் தலைவர்........ அவருடைய வழியைப் பின்பற்றுகிறவர்கள் அவர் பின்னால் கூட்டமாக
வருகிறார்கள் !" – என்றார்கள்.
இப்படி........ ஒவ்வொருவராக குதிரை மீது வந்து கொண்டே இருக்கிறார்கள்.
அவர்களைப் பின்பற்றியும் ஒவ்வொரு கூட்டம் வந்துகொண்டேயிருக்கிறது.
அந்தப் பெரிய ஊர்வலம் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கிறது.
கடைசியாக அது முடிந்தது.
அதன் பிறகு கொஞ்சநேர இடைவெளிக்குப் பிறகு ஒரு வயதானஆள் குதிரை மீது வந்து கொண்டிருக்கிறார்.
ஆனால் அவருக்குப் பின்னால் யாருமே இல்லை.
அவர் பரிதாபமாக........ தனியாக வந்து கொண்டிருக்கிறார்.
அவர் அந்த ஊர்வலத்தைச் சேர்ந்தவரா........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையா..... என்பதே தெரியவில்லை.
"இவர் யார் ? இவர் ஏன் இப்படி தனியாக வந்து கொண்டிருக்கிறார்?"
என்று கேட்டார் சந்நியாசி.
"என்ன இப்படிக் கேட்கிறீர்கள் ? இவர்தான் கடவுள்!
இவருக்குத்தான் இன்றைக்குப் பிறந்த நாள் ! முன்னால் போகிற ஊர்வலம் பூராவும் இவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காகத்தான் !" என்றார்கள்.
இதைக் கேட்டதும் சந்நியாசிக்குத் தூக்கிவாரிப் போட்டது.
இதுவரையில் கனவு கண்டு கொண்டிருந்த அவர் இப்போது விழித்துக்கொண்டார்.
அதன் பிறகு எழுந்து உட்கார்ந்து கொண்டு அவர் சிந்திக்க ஆரம்பித்தார்.
அவருக்கு ஒரு உண்மை புரிந்தது.
இன்றைய மக்கள் யாவரும் பக்தி மார்க்கத்தில் போகிறதாக நினைத்துக் கொண்டு பாதை மாறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.
கடவுளைப் பின்பற்றுவதாக நினைத்துக் கொண்டிருக்கிற பக்தர்கள் உண்மையிலேயே கடவுளுக்குப் பின்னால் இல்லை.
அவர்கள் எல்லாரும் ஒவ்வொரு மதத்தின் பின்னால்
ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறார்கள்.
இன்னமும் கொஞ்சம் இயல்பாக இதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.
உண்மைக்குப் பின்னால்தான் நான் போய்க்கொண்டிருக்கிறேன்
என்று நிறையப்பேர் சொல்லுகிறார்கள்.
ஆனால் அந்த உண்மை அனாதையாகப் போய்க் கொண்டிருக்கிறது.
இது தான் இன்றைய உலகம்.
இந்தக் காலத்திலேயும் ஓர் ஊர்வலம்.
ஒரு பெரிய மனிதனுக்குப் பிறந்தநாள் விழா.
அவர் குதிரை மீது ஏறி முன்னால் போய்கொண்டிருக்கிறார்.
அவர் பின்னால் ஒரு நூறு பேர் போகிறார்கள்.
எல்லாரும் பணம் கொடுத்து ஏற்பாடு பண்ணப்பட்டவர்கள்.
கொஞ்சத்தூரம் நடந்ததும் கால் வலிக்க ஆரம்பித்தது.
ஒவ்வொருவராக ஒதுங்க ஆரம்பித்தார்கள்.
ஒரு கட்டத்தில்........
குதிரையில் போகிறவர் தற்செயலாகத் திரும்பிப் பார்க்கிறார்.
பின்னால் யாருமே இல்லை.
எல்லாரும் ஓடிப்போய்விட்டார்கள்.
ஒரே ஒரு ஆள் மட்டும் ரொம்பவும் விசுவாசமாகப் பின்னால்
நடந்து வந்து கொண்டிருந்தான்
"நீ வீட்டுக்குப் போகவில்லையா?"
என்று கேட்டார் குதிரை மீது இருந்தவர்
இதற்கு அந்த ஆள் சொன்னான்:
"நீங்க அந்தக் குதிரையையும்....... அதற்குண்டான
வாடகைப் பணத்தையும் கொடுத்துட்டீங்கன்னா ........
நான் போயிடுவேன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

*"மகத்தான மனிதர்களாக வாழ்வதைவிட பூரணமான மனிதர்களாக வாழ்வதே மகத்தானது"*

பூரண மனிதப் பண்புகள் படைத்தவனின் வரலாறே காவியமாகும்

பூரணமான மனிதனே நீ யார்?

புராணங்கள் கூறும் படிதினாறு குணங்களைப் பெற்றவனே பூரண மனிதன்.

1. குணவான் : நற்பண்புகள் உடையவனாக இருக்கவேண்டும்.
2. வீர்யவான் : நல்ல பண்புகளோடு எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் இருக்க வேண்டும்.
3. தர்மஜ்ஞன் : தர்மத்தை அறிந்தவனாக இருக்கவேண்டும்.தர்மத்தின்வகையறிந்து செயல்பட வேண்டும். தர்மத்தின்படி நடக்கவேண்டும். தர்மத்தின் 'நெளிவு சுளிவு' களை அறிந்திருக்க வேண்டும்.
4. க்ருதக்ஞன் : நன்றி அறிந்தவனாக இருக்க வேண்டும்.
5. சத்திய வாக்கு : உண்மையான வாக்கு உள்ளவன். சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுபவன்.
6. த்ருட விரதன் : விரதத்தில் உறுதிப்பாடு உடையவன். தந்தை சொல் தட்டாமல் ஏகபத்தினி விரதம் கொள்பவன்.
7. சாரித்ரேண : நல்ல நடத்தையுள்ளவன். நல்ல நடத்தையே சரித்திரம் / வரலாறு என்பதை உணர்ந்தவன்.
8. சர்வபூதஹிதன் : எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்பவன். மனிதர், தேவர், முனிவர், கழுகு, கரடி, குரங்கு போன்ற எல்லா உயிரினங்களிடமும் அன்பு பூண்டு இனியவே செய்பவன்.
9. வித்வான் : வித்வத் (புலமை) உள்ளவன். பல வகை வித்தைகளையும் குருமார்களிடம் கற்றுத் தேர்ந்தவன்.
10. சமர்த்தன் : சாமர்த்தியசாலியாகவும் இருப்பவன். புலமையைச் சரியான முறையில் பயன்படுத்தும் திறமையும், உலகியல் அறிவும் கொண்டவன்.
11. பிரியதர்சனன் : காட்சிக்கு இனியவன். எளிதில் பார்க்கக் கூடியவனாகவும், இனிய தோற்றம் உடையவனாகவும் இருப்பவன்.
12. ஆத்மவான் : தன்னை உணர்ந்தவன். தனது திறமைகளையும் ஆற்றல் களையும் அறியும் திறமை பெற்றவன்.
13. ஜிதக்குரோத : கோபத்தை வென்றவன். தன்னுள் இருக்கும் கோபத்தை வென்றவனுக்குப் புறப்பகைவர்களை வெல்வது எளிது.
14. த்யுதிமான் : காந்தி (மேனி ஒளி) படைத்தவன். தன் மேனி ஒளியில் மற்றவர்களை கவர்பவன்.
15. அநசூயக : பொறாமை இல்லாதவன்.
16. (பிப்யதி தேவாஸ்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே) ஆக்ரோஷ: இனிய சுபாவம் உள்ளவன் என்றாலும் நன்மையை செய்ய ஆக்ரோஷம் கொள்பவன்.

*நன்றி இராமாயணம்.*

காலத்தை வென்று நிலைத்து வாழும் காவியம் படைக்கும் மனிதனாகத் திகழ்வதற்கு இப்பதினாறும் இன்றியமையாதவைகள். இவையனைத்தும் பெற்ற பூரண மனிதனாக விளங்கியவன் இராமன். அந்த இராமனே மகிழ்ச்சியால் மார்போடு அணைத்துக் கொண்ட அந்த ஆஞ்சனேயனின் புகழ்பாடி அருள் பெறுவோமாக.

*மு. பாரிவள்ளல், ஆம்பூர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

திருச்சிற்றம்பலம்

*ஔவைப் பிராட்டியார் அருளிய*

# விநாயகர் அகவல்

*ஆசிரியப்பா*

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூக்ஷிக வாகன !
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளத்தினிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக ! விரைகழல் சரணே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குரு ஸ்தோத்ரம்

அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம் /
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

அக்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்ஜன சலாகயா /
சக்ஷுருன்மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

குருர்ப்ரம்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேச்வரகா: /
குருரேவ பரம்ப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

ஸ்தாவரம் ஜங்கமம் வ்யாப்தம் யத்கிஞ்சித் ஸசராசரம் /
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

சின்மயம் வ்யாபியத் ஸர்வம் த்ரைலோக்யம் ஸசராசரம் /
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

சைதன்ய: சாச்வத: சாந்தோ வ்யோமாதீதோ நிரஞ்ஜன்:/
பிந்துநாதகாலாதீத: தஸ்மை ஸ்ரீ குரவே நம://

சைதன்ய: சாச்வத: சாந்தோ வ்யோமாதீதோ நிரஞ்ஜன: /
பிந்துநாதகலாதீத: தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

ஞானசக்திஸமாரூட: தத்வமாலாவிபூஷித: /
புக்திமுக்திப்ரதாதா ச தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

அநேகஜன்ம ஸம்ப்ராப்த – கர்மபந்தவிதா ஹினே /
ஆத்மக்ஞான ப்ரதானேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

ஸோஷணம் பவஸிந்தோஸ்ச க்ஞாபனம் ஸாரஸம்பத: /
குரோ: பாதோதகம் ஸம்யக் தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

ந குரோரதிகம் தத்வம் ந குரோரதிகம் தப: /
தத்வக்ஞானாத் பரம் நாஸ்தி தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

மன்னாத: ஸ்ரீ ஜகன்னாத: மத்குரு: ஸ்ரீ ஜகத் குரு: /
மதாத்மா ஸர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம: //


குருராதிரனாதிஸ்ச குரு: பரமதைவதம் /
குரோ: பரதரம் நாஸ்தி தஸ்மை ஸ்ரீ குரவே நம: //

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஸ்ச ஸகா த்வமேவ /
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவதேவ //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஷ்டகம்



ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம் நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ முனி ப்ரவரார்சித லிங்கம் காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம் புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனகமஹாமணி பூஷித லிங்கம் பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷஸுயக்ஞ விநாசன லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம் பங்கஜஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசன லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம் பாவைர்ப் பக்திபிரவேச லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம் ஸர்வ ஸமுத்பவகாரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசன லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம் ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகமிதம் புண்யம் யப்படேத் சிவஸந்நிதௌ
சிவலோக மவாப்னோதி சிவனே ஸஹ மோததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீராம ஸ்தோத்திரம்



1. ஆபதாமபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வஸம்பதாம் /
   லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோபூயோ நமாம்யஹம் //

2. ஆர்த்தானாமார்த்திஹந்தாரம் பீதானாம் பீதி நாசனம் /
   த்விஷதாம் காலதண்டம் தம் ராமசந்த்ரம் நமாம்யஹம் //

3. ஸந்நத்த: கவசீ கட்கீ சாபபாணதரோ யுவா /
   கச்சன்மமாக்ரதோ நித்யம் ராம: பாது ஸலக்ஷ்மண: //

4. நம: கோதண்டஹஸ்தாய ஸந்தீருத்சராய ச /
   கண்டிதாகிலதைத்யாய ராமாயாபந்நிவாரிணே //

5. ராமாய ராமபத்ராய ராமசந்த்தராய வேதஸே /
   ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம: //

6. அக்ரத: ப்ருஷ்டதச்சைவ பார்ச்வதச்ச மஹாபலெள /
   ஆகர்ண பூர்ணதந்வாநெள ரக்ஷேதாம் ராமலக்ஷ்மணெள //

7. ஸ்ரீராமசந்த்ர: ச்ரிதபாரிஜாத:
   ஸமஸ்தகல்யாணகுணாபிராம: /

8. ஸீதாமுகாம்போருஹஸஞ்சரீகோ
   நிரந்தரம் மங்களமாதனோது. //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆஞ்சநேய நாமாவளிகள்



1. அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்

2. வீர மாருதி கம்பீர மாருதி
தீர மாருதி அதிதீர மாருதி
கீத மாருதி ஸங்கீத மாருதி
தூத மாருதி ராம தூத மாருதி
தாஸ மாருதி ராமதாஸ மாருதி

(வீர மாருதி)

3. ஜய ஹனுமான் ஜய ஹனுமான்
மாருதி ராயா ஜய ஹனுமான்
வாயு குமாரா ஜய ஹனுமான்
வானர வீரா ஜய ஹனுமான்
ஸ்ரீ ராமபக்த ஜய ஹனுமான்
ஸ்ரீ ராமபக்த ஜய ஹனுமான்

4. ஆஞ்ஜனேய ரகுவீர, ராமதூத மாம்பாஹி
ஆஞ்ஜனேய மமபந்தோ, ஆஞ்ஜனேய தயசிந்தோ
ஆஞ்ஜனேய ரகுராம, ஆஞ்ஜனேய பரம்தாம.

5. ராம லக்ஷ்மண ஜானகி
ஜெய்போலோ ஹனுமானகி

(ஐந்து முறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ இராமஜெயம்

# ரம்பொடை பக்த ஆஞ்சநேயர் புகழ் மாலை

நமஸ்துதே! நமஸ்துதே! நமஸ்துதே!
ராம்போத ஆஞ்சனேயா நமஸ்துதே!
ஆஞ்னேயா நமஸ்துதே ஜய ஆஞ்சனேயா நமஸ்துதே!

வாயு புத்ரா நமஸ்துதே! ஜய மாருதி நமஸ்துதே!
வீர மாருதி நமஸ்துதே! ஜய ராம பக்தா நமஸ்துதே!
ஆஞ்சனேயா நமஸ்துதே! ராம்போத பக்த ஆஞ்சனேயா நம்ஸதுதே!

தேவ தேவ நமஸ்துதே! ஜய தேவ சுந்தரன் நமஸ்துதே!
அனுமனே நமஸ்துதே! ராம்போத அனுமனே நமஸ்துதே!
ஆஞ்சனேயா நமஸ்துதே! பக்த ஆஞ்சனேயா நமஸ்துதே!
ஆஞ்சனேயா நமஸ்துதே! ராம்போத பக்த ஆஞ்சனேயா நமஸ்துதே!

மங்களம் மங்களம் ஆஞ்சனேயா மங்களம்!
மங்களம் மங்களம் வாயுபுத்ராய மங்களம்!
மங்களம் மங்களம் ஜய மாருதி மங்களம்!
மங்களம் மங்களம் ஸ்ரீ ராமபக்தா மங்களம்!
மங்களம் மங்களம் ராம்போத பக்த ஆஞ்சனேயா மங்களம்!
மங்களம் மங்களம் ராம்போத பக்த ஆஞ்சனேயா மங்களம்!
மங்களம் மங்களம் ராம்போத பக்த ஆஞ்சனேயா ஜெய மங்களம்!
மங்களம் மங்களம்ராம்போத பக்த ஆஞ்சனேயா சுப மங்களம்!

எஸ். கிருஷ்ணகுமார் சர்மா,
*ஸ்ரீ பக்த ஆஞ்சனேயர் ஆலயம்,*
*ரம்பொடை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கள ஸ்லோகங்களும் சாந்தி பாடல்களும்

1. ஓம் ஸர்வேஷாம் ஸ்வஸ்திர் பவது
ஸர்வேஷாம் சாந்திர் பவது
ஸர்வேஷாம் பூர்ணம் பவது
ஸர்வேஷாம் மங்களம் பவது
ஸர்வே பவந்து ஸுகின:
ஸர்வே ஸந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பச்யந்து
மா கஸ்சித் துக்கபாக் பவேத்

2. ஓம் அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய
ம்ருத்யோர் மா அம்ருதம்கமய
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

3. ஓம் பூர்ணமத: பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ணமேவா வசிஷ்யதே
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

*ஸ்வஸ்தி வாக்கியம்*

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேன மார்க்கேண மஹீம் மஹீஷா:
கோ ப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து
காலே வர்ஷது பர்ஜன்ய: ப்ருதிவீ ஸஸ்ய ஸாலினீ
தேஸோயம் க்ஷோபரஹிதோ ப்ராஹ்மணா:
ஸந்துநிர்ப்பயா:




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருள் பொழியும் ரம்பொடை அனுமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 years
CHINMAYA MOVEMENT
1951 - 2001







DESIGNED AND PRINTED BY UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TELE/FAX : 330195.
PUBLISHED BY CHINMAYA MISSION SRI LANKA, NO. 21/1, DE KRETSER PLACE, COLOMBO 4. SRI LANKA.
EDITOR : N. SOMAKANDHAN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org